சாட்சியைப் பிடுங்கி உனக்குக் கொடுத்துவிடுவேன்" என்று அழைத்தான் என்பது இதன் கருத்து. தன் வசப்பட்டோர் தீ நெறியிற்புக்கு நரகத்தை யடைவாராதலின், அவர்களை அங்ஙனம் நரகத்திற் சேர்ப்பதற்குக் காரணமாகி நின்றவன் அவனே யாவன்; ஆதலின், அவன், 'புலைநரகுக் கேதுவாய் நின்றான்' என்று பெயர் கூறப்பட்டான். இவன் அங்ஙனம் அக்காரியத்தை நிச்சயமாக முடிக்கக் கூடியவனாதலின் வார்த்தையை உயர்த்திக் கூறினான். இது பற்றியே ஆசிரியர், 'எடுத்து என்னுடனே போதுவா வென்றான்' என்றார்.

" இல்லெனின்மைச் சொற்கையடைய, வன்மைவிகற்பமு மாகாரத்தொடு, வன்மையாகலு மியல்புமாகும்" என்னும் (நன்-மெ-பு-30 ஆம் சூ) விதிப்படி 'இல் சூது' என்பது இயல்பாயிற்று. நளனை-உருபுமயக்கம். தன்-என்பது இங்கு ஆறும் வேற்றுமை உடைமைப் பொருளில் வந்தது. தருகின்றேன்-தெளிவு பற்றி எதிர்காலம் நிகழ்காலமாயிற்று.

புஷ்கரன், நளனோடு சூதாடச் செல்லல்.

204. புன்னை நறுமலரின் பூந்தா திடையோதுங்கும்
கன்னி யிளமேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேய்க்கு நாடன் கவறாடப் போயினான்
கோல்லேற்றின் மேலேறிக் கோண்டு.

[இ-ள்.] (கலி அவ்வாறு கூறியவுடனே அதற்கிசைந்து) நறு-நல்ல, புன்னைமலரின்-புன்னைப் புஷ்பங்களினுடைய, பூந்தாது இடை-அழகிய மகரந்தங்களின் நடுவில், ஒதுங்கும்-நடந்து செல்கின்ற, கன்னி-கன்றை யீனாததாகிய, இளமேதி-இளமையான எருமைகளின், கால் குளம்பு-பாதங்களின் குளம்புகள், (அம்மகரந்தங்கள் படிவதனாலே) பொன் உரைத்த-பொன்னை உரைக்கப்பட்ட, கல்-உரைகல்லை, ஏய்க்கும்-நிகர்த்திருக்கின்ற, நாடன்-நாட்டை யுடையவனாகிய புஷ்கரன், கொல்-(எதிர்த்தாரைக்) கொல்கின்ற, ஏற்றின் மேல் - எருதின்மேல், ஏறிக்கொண்டு - ஆரோகணித்துக் கொண்டு, கவறு ஆட-(நளனோடு) சொக்கட்டான் ஆடுதற்கு, போயினான்-போனான்; [எ-று.]

புன்னைமரக் காமிகுந்த நாட்டையுடைய புட்கரன், நளனோடு சூதாடுவதற்கு, எருதின்மேலேறிக் கொண்டு புறப்பட்டான் என்பது இதன் கருத்து. இது, தகாத செய்கை எனினும், புஷ்கரன், பேராசைக் குணத்தினால் இதற்கிசைந்தான். புன்னைமரங்களின் அடியில் அவற்றின் மலர்களிலிருந்து உதிர்ந்த மகரந்தம் பாவிக் கிடக்கும்; அவற்றினிடையில் எருமைகள் செல்லும்போது அவற்

றின் குளம்பில் அம்மகரந்தம் பொன்னிறமாக இடைவிட்டு ஆங்காங்கே கீற்றுக்களாகப் படியும். அப்படி வரிவரியாக மகரந்தம் படியவே அக்குளம்பு, பொன்னைக் கோடு கோடாக உரைத்துப் பார்க்கும் உரைகல் போன்றிருந்ததென்க. புன்னைக்காடு கடற்கரைச் சார்பாயுள்ளது; இங்கு புஷ்கரன் நாட்டை, அப்புன்னை மிகுந்த நாடெனக் கூறியதால், அந்தப் புஷ்கரன், கடற்கரையைச் சார்ந்த ஒரு சிறிய நாட்டிலுள்ள சிற்றரசன் என்பது பெறப்படும். இவன், கொல்லேற்றின் மேலேறினான் என்று கூறியதனால் இப்புஷ்கரனும் மிகக் கொடியன் என்பது விளங்கும். கலிபுருஷனே எருதாகிப் புஷ்கரனைச் சுமந்து வந்தானென்று பாரதம் கூறுகின்றது.

கன்னி-ஈனாத எருமை, கன்னி, இள என்பவைகளை ஒரு பொருட் பன்மொழியாகக் கொண்டு, கன்னி என்பதற்கு இளமையெனப் பொருள் கூறினும் அமையும். கன்னி என்பது-இளமை, அழகு முதலியவற்றை உணர்த்தும்போது உரிச்சொல்; பெண்ணை உணர்த்துங்கால் பெயர்சொல்.

இதுவுமது.

205- வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னொழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து.

[இ-ள்.] (இன்னும் அவ்வாறு புறப்பட்டுச் சென்ற அந்தப் புஷ்கரன்) வெம்கண்-வெவ்விய கண்களையும், சினம்-கோபத்தையுமுடைய, விடையின்மேல் ஏறி-அந்த இடபத்தின்மீது (மேலே சொல்லியபடி) ஏறி, கங்கை-கங்கா நதியின், திரைநீர்-அலைகளோடு கூடிய ஜலமானது, கால் ஏறி-வாய்க்கால்களிற் பாய்ந்து, கரைஏறி-கரையிலும் ஏறிப்புரண்டு, செம்கதிர்-சிவந்த கதிர்களிலுள்ள, பைம்பொன்-பசும்பொன் போன்ற நெற்கள், ஒழிய-மறைய, போதும்-செல்கின்ற, புறம்-பக்கத்திலுள்ள, பணைசூழ்-மருதநிலம் சூழ்ந்த, நல்நாடு-நல்ல தேசமானது, பின் ஒழிய-தனக்குப் பின்னே நீங்கியிருக்கும்படி, (அதாவது நகரம் பின்புறமாகத் தான் முன்னே) பெயர்ந்து-அதைவிட்டுத் தாண்டி, போந்தான்-சென்றான்; [எ-று.]

மேற்கூறியபடி சென்ற புஷ்கரன் அந்த எருதின் மேலேறித் தன் நாடு பின்னொழிய அதைவிட்டு நீங்கிச் சென்றான் என்பது இதன் கருத்து. முன் பாட்டிற் கூறிய பிரயாணத்தையே இதிலும் ஆசிரியர் வேறொரு வகையாகக் கூறினார். இவ்வாறு கூறுவதும் ஒருவகைக் கவிவழக்காம். கங்கை வெள்ளமானது கால்வாய்களிலேறிக் கரைபுரண்டு பெருகி மருத நிலத்திலுள்ள செந்நெற்கதிர்கள் தனக்குள் மூழ்கப் பாயுமென்க. இங்கே ஒழிய என்பது,

மறைய என்னும் பொருளில் வந்தது. கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கினும், அவ்வெள்ளங் குறைந்தபின் மீண்டும் தலையெடுக்கும்; அதனால் மிகுந்த சேதமின்றாம். ஆதலின், இங்ஙனம் பாயும் வெள்ளத்தைச் சிறப்பாகவே கூறுவது வழக்கம். இனி, வெள்ளத்தால் பயிர்கள் சேதமாயினும் அதனையும் ஒரு வெள்ளச் சிறப்பாகவே கூறுவது இயற்கையாதலின் ஒழிய - என்பதற்கு, நெற்கள் அழிய எனப் பொருள் கூறினும் இழுக்காகாது. 'பொன்னொழியப் போதும்' என்பதற்குப் 'பொன்போன்ற நெல் அல்லது பொன் தவிர மற்றவைகளை அடித்துக் கொண்டுபோகும்' எனப் பொருள் கூறுவாருமுளர். வெள்ளம் கேடு செய்யுங்கால் நெல் முதலிய மெல்லிய வஸ்துக்களை விட்டுச் செல்லுதல் என்றுமில்லையாதலின் அது பொருந்தாதென்க. காலேறி என்பதற்குக் காற்று மோதுவதினால் எனப் பொருள் கூறினும் அமையும். 'நன்னாடு பின்னொழிய' என்பதற்குத் 'தன்னுடைய நல்ல நாடானது பின்னே தன்னைவிட்டு நீங்கும்படி' எனவும் பொருள் விரிக்கலாம்; பின்னே இவனுடைய நாட்டையும் நளன் கைப்பற்றிக் கொள்வதால் இது பொருந்துமென்க.

பொன்-நெல்லுக்கு உவமையாகு பெயர்.

நளனிடம் புட்கரன் சேர்தலும், அவன்
வரவைப்பற்றி நளன் விசாரித்தலும்.

206. அடற்கதிர்வேன் மன்ன னவனேற்றின் முன்போய்
எடுத்தகோடி யென்னகோடி யென்ன—மிடற்சூது
வெல்லுங் கோடியென்றான் வெங்கலியா லங்கவன்மேல்
செல்லுங் கோடியோன் தெரிந்து.

[இ-ள்.] (அவ்வாறு புறப்பட்டுப் போன புஷ்கரன் மாவிந்த நகரம் போய்ச் சேர்ந்து நளனுக் கெதிரில் 'சூதுக்கொடி பிடித்து நிற்க) அடல்-பகைவரைக் கொல்லுகின்ற, கதிர்-பிரகாசம் பொருந்திய, வேல்-வேலாயுதத்தைத் தாங்கிய, மன்னன்-அரசனாகிய நளன், அவன்-அந்தப் புஷ்கரனுடைய, ஏற்றின் முன்போய்-எதிருனெதிரிற் சென்று, (அவனை நோக்கி) எடுத்த கொடி-நீ உயர்த்திப்பிடித்த துவஜமானது. என்ன கொடி-எவ்வித காரணத்தா லேற்பட்ட துவஜம், என்ன-என்று வினவ, வெங்கலியால்-கொடிய கலி புருஷனுடைய தூண்டுதலால், அங்கு-அவ்விடத்தில், அவன்மேல் செல்லும்-அந்த நளனிடம் சூதாடச் செல்கின்ற, கொடியோன்-தீயோனாகிய புஷ்கரன், தெரிந்து -(நளனுடைய உள்ளக் கருத்தை) உணர்ந்து, (அதாவது அவன் பிரியத்தோடு வினவிய குறிப்பால் அவனுக்கும் சூதாட்டத்தில் விருப்பமுண்டென்பதைத் தெரிந்து அவனுக்கு மேலும் விருப்பமுண்டாகும்படி) மிடல் - பலமான,

சூது-சூதாட்டத்தில், வெல்லும்-பிறரை வெல்லுகின்ற, (அதாவது வெல்லுதற் கறிகுறியான) கொடி என்றான் - கொடி இதுவாகும் என்று கூறினான்; [எ-று.]

புஷ்கரன் தன்னாட்டை விட்டுப் புறப்பட்டுப்போய் நளனுக்கு முன்னே நின்றான்; அப்போது நளன் அவனிடமுள்ள சிலகுறிப்புக்களால், 'இவன் சூதாடவந்தவனே' என்று மனதில் நிச்சயித்துக்கொண்டு, தானும் சூதாட்டத்தில் விருப்பமுடையவனாய், அவன் பிடித்துவந்திருந்தசூதாட்டக்கொடியைச் சுட்டிக்காட்டி, அவனிடத்தில், 'இக்கொடி எதன் பொருட்டாக ஏற்பட்டது' என்று வினவினான். அதற்கந்தப் புஷ்கரன், 'கவறாட்டத்தில் என்னை வெல்வாரெவருமிலர் என்பதற்கறிகுறியாக இக்கொடி எடுக்கப்பட்டதாகும்' என்று கூறினான் என்க. புஷ்கரன் செல்லும்போதே சூதாட்டத்தின் வெற்றிக் கறிகுறியாகிய கொடியைப் பிடித்துக்கொண்டே போயிருந்தான். அதனாலேயே நளன் கொடியின் காரணத்தை வினவினான். இக்கொடியின் குறிப்பால் முன்னரே நளனுக்குப் புஷ்கரன் கவறாட வந்தவனென்பது தெரியும்; எனினும் தனக்கு அதன்மேலுள்ள விருப்பால் அவன் தெரியாதவன் போன்று வினவினான். ஒரு பொருளின்மேல் விருப்புடையார் அதனைக் கண்டவுடன் அதன் இயற்கை தமக்குத் தெரியுமெனினும் தெரியாதவர்போல், 'இஃதென்ன' வென்று அதனை வைத்திருப்போரிடம் வினவுதல் உலக இயற்கை. இங்கே நளனுக்குக் கவறாட்டத்தில் விருப்ப மேற்பட்டது கலியின் செய்கையா லென்க. நளனுக்குக் கவறாட்டத்தில் விருப்ப மிருந்ததென்பது, "கொடியோன் தெரிந்து மிடற்சூது வெல்லுங்கொடி என்றான்" என்பதால் உணரப்படும்.

அடல்-தொழிற் பெயர். கதிர்வேல்-இரண்டாம் வேற்றுமைத் தொகை. வேல் மன்னன்-என்பது மஃதே. எடுத்த-பெயரெச்சம், அவன்மேல் என்பதில், மேல்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. செல்லும்-பெயரெச்சம். தெரிந்து-வினையெச்சம்.

நளன், புஷ்கரனைச் சூதாட்டத்திற்கு
அழைத்தல்.

207. என்றேத மிதுவாயின் மெய்ம்மையே எம்மோடு
வான்றோய் மடற்றெங்கின் வான்றேறல்—தான்றேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட வென்றான் துணிந்து.

[இ-ள்.] (புஷ்கரன் அவ்வாறு சொன்னவுடனே) வான்தோய்-ஆகாயத்திற் படியும், மடல்-மடல்களையுடைய, தெங்கின் - தென்னமரங்களினின்று வடியும், வான்-சிறந்த, தேறல்-மதுவை, வாளை-வாளைமீன், தான் தேக்கி-தான் குடித்து வயிற்றில் நிரப்பி, மீது

ஆடி-மேலே குதித்து ஆடி, வயல் வீழ்ந்து-மீண்டும் வயலிலே வீழ்ந்து, உழக்கும்-சேற்றைக் கலக்குகின்ற (மருத நிலச் சிறப்பை யுடைய), நல்நாடன்-நல்ல நாட்டையுடையவனாகிய நளன், தணிந்து-தானும் சூதாடுதற்கு உறுதிகொண்டு, இது மெய்மையே ஆயின்-இஃதுண்மையாயிருக்குமானால், ஏன்றோம்-(நாம் இச்சூது விளையாட்டைச் செய்வதற்கு) இசைந்தோம்,(ஆதலின்), எம்மோடு-எம்முடனே, சூதாட-நீ கவறுருட்டுவாயாக, என்றான்-என்று கூறினான்; [எ-று.]

புஷ்கரன் அவ்வாறு இறுமாப்புக்கொண்டு, 'என்னைச் சூதில் வெல்வார் எவருமில்லை என்பதற்கறிகுறியாகும் இந்தக்கொடி' என்று கூறியவுடனே, நளன், 'இவனைக் கவறுருட்டத்தில் வென்று தோல்வியடையச் செய்து இவனுடைய அகங்காரத்தை அடக்க வேண்டும்' என்று கருதி அவனை நோக்கி, "அப்படியாயின் நீ எம்மோடு சூதாட வருவாயாக" என்று அழைத்தானென்க. நளன் இவ்வாறுதானே ஆத்திரங்கொண்டு அழைக்கும்படி செய்யக்கருதியே புஷ்கரன் அவ்வாறு அகங்கரிப்பான வார்த்தையைக் கூறினான். மருத நிலத்தின் வயலோரங்களிலுள்ள தென்ன மரங்கள் விண்ணுற வோங்கி வளர்ந்திருக்கும்; அவற்றினின்றும் வடியும் மது கீழே ஒழுகும். அதனை, வயல்களிலுள்ள வாளைமீன் பருகும்; அங்ஙனம் பருகவே அதற்குக் களிப்புண்டாம். அக்களிப்பினால் அது மேலே துள்ளி விளையாடி மீண்டும் கீழே பாய்ந்து சேற்றைக் கலக்குமென்க. இதில் நிடத நாட்டின் வளத்தை விளக்கினர் ஆசிரியர்.

ஏன்றோம் என்பதில், ஏல்-பகுதி, இதனீற்றுலகரம் றகரமாகி ஏற்றோம் என்றாய் மெலித்தல் விகாரம் பெற்று ஏன்றோம் என வந்தது. 'இதுவாயின் மெய்மையே' என்பது, 'இது மெய்மையே ஆயின்' என மாற்றுக.

மந்திரி முதலானோர் சூதாடக் கூடாதென்று
நளனைத் தடுத்தல்.

208. காதல் கவறுடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

[இ-ள்.] (நளன் இவ்வாறு புஷ்கரனைச் சூதாடக் கூப்பிட்ட வுடனே, அது கூடாதசெய்கை யெனத் தெரிந்த மந்திரி முதலியோர், அதனைத் தடுக்கத் துணிந்தவர்களாய் அந்நளனை நோக்கி) போதில்-தாமரை மலரில், சினை ஆமை-கருக்கொண்ட ஆமைகள், வைகும்-தங்கியிருக்கின்ற, (மருத நிலச்சிறப்பையுடைய)திருநாடா-

அழகிய நிடதநாட்டை யுடையவனே!, காதல்-பெண்ணாசை, கவறு ஆடல்-கவறுடுதல், கள் உண்டல்-மதுவைப் பருகுதல், பொய் மொழிதல்-பொய் கூறுதல், ஈதல் (பிறர் யாசகர்கோ மற்றையர் கோ) கொடுத்தலை, மறுத்தல்-தடுத்தல், (ஆகிய) இவை-இக்காரியங்களே, செம்மை-நீதியை, நினையாமை-கருதாமையை, பூண்டார்-தமக்குரிய குணமாகக்கொண்டவர்களுடைய, நெறி-ஒழுக்கமாம்.

நளனுடையமந்திரி முதலியோர், 'காதல் கவறாடல் முதலியன நீதியைக் கைவிட்டவர்களுடைய ஒழுக்கமாம்' என்றாரென்க. இது வும் அடுத்த மூன்று செய்யுட்களும் குளகமாதலின், ஈற்றுச் செய் யுளில் எடுத்துக்கொண்ட விஷயங்கள் கொண்டு முடிக்கப் படும்.

காதல், கவறாடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் என்பவற்றின் எண்ணும்மைகள் தொக்கன. செவ்வெண் ணின் தொகைவிகாரத்தால் தொக்கது. 'இவை செம்மை நினை யாமை பூண்டார் நெறி' என்றமையால் "நின்னைப்போன்ற உத்தம னுக்கு ஆகாதனவாம்" என்பது பெறப்படும். இவ்வாறு கூறியத னால், மந்திரி முதலியோர், 'நீ கவறாடாதே' என்று குறிப்பித்தார் என்பது பெறப்படும்.

இதுவுமது.

209. உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் மொன்றலல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

(இ-ள்.) சூது-கவறாட்டமானது, உரு-மனிதரின் அழகை, அழிக்கும்-கெடுக்கும், உண்மை-சத்தியத்தின், உயர்வு-மேம் பாட்டை, அழிக்கும்-போக்கிவிடும், வண்மை-ஈகையையுடைய, திரு-செல்வத்தை, அழிக்கும்-கெடுக்கும், மானம்-கௌரவத்தை, சிதைக்கும்-அழிக்கும், மருவும்-கூடுகின்ற, ஒருவரோடு-ஒருவ ரிடத்தே, (ஏற்படும்) அன்பு-பிரியத்தை, அழிக்கும்-கெடுத்து விடும், (இந்தச் சூதினாலே வருங்கேடு) ஒன்று அல்ல-ஒன்றுமாத் திரமன்று, (இவ்வாறு பல உண்டாகும்; ஆதலின்) தக்கோர்-மே லோர்கள், புரிந்து-விரும்பி, பொருவரோ-இத்தகைய சூதாட்டத் தில்) எதிர்ப்பார்களோ, (எதிர்க்க மாட்டார்கள் என்றபடி;) [எ-று.]

சூதாடுவோன், தன்னிடமுள்ள ஆடையாபரணங்களையும் பந்தயமாக வைத்தாடித் தோற்று விடுவானாதலின் அவனுடைய அழகு போய்விடும். அந்த ஆட்டத்தில் அவன் ஜெயம் பெற வேண்டி அநேகம் பொய்களைக் கூறுவானாதலின் அவனிடம் சத்தி யம் நிலைக்க மாட்டாது. "ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கு

முண்டாங்கொல் நன்றெய்தி வாழ்வதோ ராறு'' என்ற திருக்குறளின்படி கவறுடுவோன் ஒன்றை ஜெயித்து அடுத்த நிமிஷத்திலேயே ஜெயித்ததற்கு நூறுபங்கு அதிகமான பொருளை இழப்பானாதலின் அவனிடம் எவ்வளவு ஐசுவரியங்களிருந்தாலும் அழிந்துபோகும். சூதாட்டத்தில் வெற்றி தோல்வியின் பொருட்டு அவ்விளையாட்டை யுடையார், ஒருவரை யொருவர் மரியாதை கெடப்பேசியும், அடித்தும் கலகஞ் செய்துகொள்வது இயற்கையாதலின், கவறுடுவோனிடத்தில் கௌரவமென்பதே யிராது. சூது, சிநேகிதனுக்கும் வஞ்சனை செய்யச் சொல்லுமாதலின், அதனை யுடையாரிடத்தே சிநேகிதமென்பதே யிராது. இவை தவிர இன்னும் இச்சூதினால் வருங்கேடுகள் பலவுள. அதனாலேயே ஆசிரியர் 'ஒன்றல்ல' என்றார். பொருள் பெரும் பான்மையும் கொடைக்கே உரியதாதலின், 'வண்மைத்திரு' என்று அதனைச் சிறப்பித்தார் ஆசிரியர்.

உருவழிக்கும், உயர்வழிக்கும், திருவழிக்கும், மானஞ் சிதைக்கும், அன்பழிக்கும் என்பன இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்க தொகைகள். ஒருவரோடு என்பதில், 'இடத்தில்' என்னும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு வரவேண்டிய இடத்தில் 'ஓடு' என்னும் மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு மயங்கி வந்தது; இங்ஙனம் வருவது உருபுமயக்கமெனப்படும். ஒன்றல்ல-எதிர்மறை யெச்சம். 'பொருவரோ' என்பதில் ஓகாரம் எதிர்மறைப் பொருளது.

இதுவுமது.

210. ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல சேன்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு.

(இ-ள்.) ஆயம்-(சூதாடு கருவியாகிய) பாச்சிகையை, பிடித்தாரும்-(சூது விளையாடும் பொருட்டுக் கையில்) பிடித்தவர்களும், அல்லல்-துன்பத்தையுடைய, பொதுமகளிர்-தாசிகளுடைய, நேயம்-உறவை, பிடித்தாரும் - பற்றினவர்களும், நெஞ்சிடை - மனதில், மாயம் - வஞ்சகத்தை, பிடித்தாரின் - கொண்டவர்களினின்றும், வேறு அல்லர்-வேறாக மாட்டார்கள், என்று-என்பதாக விளக்கி, வடித்தார் - (நன்மை தீமைகளை ஆராய்ந்து தீமையைத் தள்ளி நன்மையைத்) தேர்ந்தெடுத்த மேலோர்களுடைய, இன்-இனிமையான, நூலோர்-சாஸ்திரங்களைக் கற்றவர்களின், வழக்கு-பேச்சானது, உரைப்பது அன்றே-சொல்லுகிறதல்லவா? ஆதலின் சூது கூடாது;) [எ-று.]

மனதில் வஞ்சனையுள்ளவர்கள், பிறரை மோசத்திற்குள்ளாக்கி அவர்களுடைய பொருளைக் கவர்தல் முதலிய பாதகங்களைக் கூசாது

செய்வர்; இவர்களைப் போலவே கவறாட்டத்தில் விருப்ப முடைய வர்களும், தாசிகளின் நேயம் பற்றினவர்களும் அவ்வாட்டத்தை நடத்தும் பொருட்டும், தாசிகளை மகிழ்விக்கும் பொருட்டும் பொருள் தேடவேண்டிப் பாதகங்களைச்செய்வர், ஆதலின், இவர் அவருக்கு உவமை கூறப்பட்டார். தாசிகளிடம் சேர்வார்க்குத் துன்பமே விளைதல் இயற்கை யாதலின், 'அல்லற் பொது மகளிர்' என்றார் ஆசிரியர். இதற்கு 'அல்லலுக்குக் காரணமாகிய பொதுமகளிர்' என்று பொருள் விரிக்கவேண்டும். "வடித்தாரின் நாலோர் வழக்கு, ஆயம்பிடித்தாரும், அல்லற் பொது மகளிர் நேயம் பிடித்தாரும் நெஞ்சிடையே மாயம் பிடித்தாரின் வேறல்லர் என்றுரைப்பது ஆதலின், சூதை விரும்பலாகாது" என்பது இச்செய்யுட் பொருளாம்.

ஆயம்-சூதாடுகருவி. நெஞ்சிடையே என்பதில், ஏ-அசை, 'மாயம் பிடித்தாரின் வேறல்லர்' என்றதனால் 'அவர்களோடு சேர்ந்தவர்களே' என்பது பெறப்படும். பிடித்தாரின் என்பதில், இன்-ஐந்தாம் வேற்றுமை நீக்கப்பொருளது. அன்றே வினைப் பொருளைத் தரும் ஒரு வகை இடைச்சொல்.

இதுவுமது.

211. அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து.

[இ-ள்.] (இன்னும் அந்தச் சூதானது) அறத்தை-தர்மத்தை, வேர் கல்லும்-வேரைப்பெயர்க்கும், அருநரகில்-சேர்தற் கருமை யான நரகத்தில், சேர்க்கும்-(தன்னை ஆடுவோரைக் கொண்டு போய்) சேர்த்து விடும், திறத்தையே கொண்டு-வலிமையையே அடைந்து, அருளை-(தன்னை விரும்புவோரிடத்திலிருக்கும்) கிரு பையை, தேய்க்கும்-நாசப்படுத்திவிடும், மறத்தையே-கோபத் தையே, பூண்டு-பெற்று, விரோதம்-பகையை, செய்யும்-(தன்னைக் கொள்வோரிடத்தே) உண்டாக்கி விடும், (இத்தகைய) பொய்ச் சூதை-பொய் நிறைந்த சூதாட்டத்தை, மிக்கோர்கள்-உயர்ந்தவர் கள், தெரிந்து-அறிந்திருந்தும், தீண்டுவரோ-தொடுவார்களோ? (தொடமாட்டார்கள்) என்றார்-என்று சொன்னார்கள்; [எ-று.]

'காதல் கவறாடல் என்ற 208-ஆம் செய்யுளிலிருந்து, 'மந்திரி முதலானோர் என்னும் தோன்றா எழுவாய் கூட்டி' இச்செய்யுளிற் கொண்டு வந்து 'தீண்டுவரோ என்றார்' என்பதனோடு முடித்துக் கொள்ள வேண்டும். இச்செய்யுள் முன் அச்சுப் புத்தகங்களில்

200-ஆம் செய்யுளாகச் சேர்க்கப்பட்டிருந்த தெனினும், பொருண் முடிபிற்குத் தக்கபடி அதனை இங்கு மாற்றிச் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

சூதாடுவோரிடத்தில் தரும சிந்தனையே இராது; அதற்குப் பொருள் தேடும் பொருட்டுப் பொய், களவு, கொலை முதலிய பாதகத் தொழில்களை யெல்லாம் அவர்கள் செய்வார்கள்; அதனால் அவர்களுக்கு நரகஞ்சித்திக்கும். இன்னும் சூதாடுவோர்க்குக் கிருபை யென்பதே இராது; ஏனெனில் தோற்றுப்போனவர், கையி லொன்று மில்லாமற் கலங்கினாலும் அவர்களிடம் ஜெயங்கொண்டோர், தாம் ஜெயித்த பணத்தை வாங்குதற்கு அவர்களைப் பல வாறு துன்பப்படுத்தும் சுபாவம் இவர்களுக்குண்டென்க. இங்ஙனம் அருளில்லாமற் போகவே இவர்க்குப் பலபேரிடத்திலும் விரோதமே அதிகரித்திருக்கும். ஆதலால், இத்தகைய சூதைத் தக்கோர் விரும்பார் என்க. சூதில் பொய்யே அதிகரித்திருக்கு மாதலின், அதனை, 'பொய்ச்சூது' என்றார் ஆசிரியர். இன்னும் அதனைக் கையினாலும் தொடக்கூடா தென்பது தோன்ற அதன் இயற்கையை விளக்க, 'தீண்டுவரோ' என்றுங் கூறினார்.

'அறத்தை வேர்கல்லும்' என்ற தொடர் இரண்டாம் வேற்றுமை ஈருரு பேற்று வந்தது, 'பசுவைப் பாலைக்கறந்தான்' என்பது போல். 'அருநரகு' என்பதில் அருமை-சேரத்தகாத என்னும் பொருளில் நின்றது. தீண்டுவரோ என்பதில் ஓகாரம்-எதிர்மறைப் பொருளது.

நளன் மந்திரிகளின் சொல்லைத்
தடுத்துரைத்தல்.

212. தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினோம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று.

[இ-ள்.] (மேற்கூறியபடி மந்திரி முதலியோர் சொல்லக் கேட்டு) வரால்-வரால் மீன்கள், ஏற-மேலேறிப் பாய்வதனாலே, மேதி-எருமைகள், (பயந்தெழுந்து) கலக்கு-கலக்குகின்ற, அலை-அலைகளையுடைய, நீர்-நீர்வளம் மிகுந்த, நாடன் நிடதநாட்டை யுடைய நளமகாராஜன், கனன்று-(அவர்களைக்) கோபித்து, தீது வருக (சூதினால்) தீமையே வரட்டும், (அல்லது) நலம் வருக-நன்மையே வரட்டும், (இனி என்ன வந்தாலும் எனக்கது சம்மதமே) சிந்தையால்-மனதினால், சூது-சூதில், பொர-(அவனுடன்) எதிர்ப்பதற்கு, இசைந்து-(நாம்) சம்மதித்து, சொல்லினோம் - (சூது விளையாட வருவதாக) உரைத்தோம், (ஆதலின், நாம் அந்த வார்த்

தையினின்றும் பிசகமாட்டோம்; இனி) நீர்-நீங்கள், யாதும்-(என்னுடைய வார்த்தைகளில்) எதையும், விலக்கலீர்-தடுக்காதீர்கள், என்றான்-என்று கூறினான்; [எ-று.]

மந்திரி முதலியோர், சூதாடக் கூடாதென்று தடுத்துரைக்கக் கேட்ட நளன், தன்னுடைய கெட்ட காலத்தால் அவர்களின் சொல்லைக் கேளாமல் அவர்களைக் கோபித்து நோக்கி, "இதனால் நன்மைவரினும் சரி, தீமைவரினும் சரி; நான் முன்னே இவனுடன் சூதாட வருவதாக ஒப்புக்கொண்டுவிட்டேன்; ஆதலின், இனி, வாக்குத் தவறி அதனைத் தவிர்க்க மாட்டேன்; நீங்கள் இப்போது நான் செய்யும் எதையும் தடுக்க வேண்டாம்" என்று கூறினான் என்பது இதன் கருத்து. இனி, நளன், சத்தியந்தவறாத உத்தமனாதலின், தான் சொன்ன வாக்குத் தவறக் கூடாதென்று இங்ஙனம் தடுத்துரைத்தான் எனினுமாம். சத்திய முடையார் எதுவரினும் சொன்ன வாக்கை நிறைவேற்றுவதில் நோக்கமுடையவர்களா யிருத்தல் இயற்கை. அதனால் நளன், 'தீது வருக' 'நலம் வருக' என்று கூறினான்.

சொல்லினோம்-தன்மைப் பன்மை வினைமுற்று. யாதும்-என்பது சிறிதும் என்னும் பொருளில் நின்றது. விலக்கலீர்-எதிர்மறை ஏவற் பன்மை வினைமுற்று; விலக்கு பகுதி, அல்-(எதிர்மறை) இடைநிலை, இர்-விகுதி.

புஷ்கரன் சூதாட்டத்திற்குப் பந்தயங் கேட்டல்.

213. நிறையில் கவறாட னீநினைந்தா யாகில்
திறையிற் கதிர்முத்தஞ் சிந்தும்—துறையில்
கரும்பொடிய மள்ளர் கடாவடிக்கு நாடா
பொரும்படியா தென்றானப் போது.

[இ-ள்.] (அங்ஙனம், நளன், மந்திரிகளின் சொல்லைத் தடுத்துச் சூதாட்டத்திற்குத் துணியவே புட்கரன் அவனை நோக்கி) திறைஇல்-விலையில்லாத, கதிர்-பிரகாசம் பொருந்திய, முத்தம்-முத்துக்களை, சிந்தும் - சிதறுகிற, துறையில் - நீர்த்துறையிலே, மள்ளர் - உழவர்கள், கரும்பு - கரும்பை, ஒடியா - ஒடித்து, கடா-எருமைக் கடாக்களை, அடிக்கும்-அடித்து ஓட்டுகிற, நாடா-நாட்டையுடைய நளமகாராஜனே! நிறை இல் - எல்லையில்லாத, கவறு ஆடல் - சூதாடுவதை, நீ நினைத்தாயாகில்-நீ அப்படி எண்ணினையாயின், இப்போது இத்தருணத்தில், பொருப்படி-சூதாட்டத்தில் எதிர்க்கும்படியான பணயம், யாது என்றான்-எது என்று வினவினான்; [எ-று.]

மந்திரிகளின் சொல்லை நளன் அவ்வாறு தடுத்துக் கூறிச் சூதாட்டத்தில் துணிவுடையவனாயிருக்கவே, புஷ்கரன் அவனுடைய நோக்கத்தை யுணர்ந்து அவனைப் பார்த்து, "அப்படி நீ கவறாட நினைந்தாயாகில் அதற்கு வைக்கும் பந்தயம் யாது" என்று வினவினான் என்பது இதன் கருத்து. சூதாட்டத்தில் பொய்யே மிகுந்திருக்குமாதலின் 'நிறையில் கவறு' என்று இரு பொருள் தரக் கூறினார். நீர்த்துறையில் சங்கீன்ற முத்துக்கள் முதலியவை சிதறுமாதலின் அங்கே முத்துச் சிதறுதல் கூறப்பட்டது. பெரும்பாலும் எருமைக் கடாக்கள் நீரிலேயே சஞ்சரிக்கும்; உழவின் பொருட்டு அவற்றை ஓட்டும் மள்ளர்கள், பக்கத்து வயல்களிலுள்ள கரும்புகளை யொடித்து அவற்றாலடித்து நீர்த்துறைகளின் வழியாக ஓட்டுவார்கள். உயர்ந்த கரும்பையும் ஒடித்து அவற்றால் எருமைக் கடாக்களை அடித்தோட்டுவார் மள்ளர் என்றமையால் அந்நாட்டின் மருதநிலவளம் மிக்கதென்பது தானே போதரும்.

ஒடியா-செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். படியென்பது விதத்திற்குரிய பொருளின் மேல் நின்றது இலக்கணை.

நளனும் புஷ்கரனும் பந்தயம் வைத்தல்.

214. விட்டோளிர்வில் வீசி விளங்குமணிப் பூணாரம்
ஒட்டினே னுன்பணைய மோதென்ன—மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து.

[இ-ள்.] (அவ்வாறு கேட்டவுடனே நளன் புஷ்கரனை நோக்கி) விட்டு-இடைவிட்டு, ஒளிர்-பிரகாசிக்கின்ற, வில்-ஒளியை, வீசி-பரப்பி, விளங்கும்-தெரிகின்ற, மணி - இரத்தினங்களாலாகிய, பூண் ஆரம்-ஆபரணமாகியமாலையை, ஒட்டினேன்-பந்தயமாகச்சேர்த்தேன், உன்பணையம்-உன்னுடைய பந்தயத்தை, ஓது-நீ சொல்வாயாக, என்ன-என்று கூற, மட்டு அவிழ்-தேன் சொரிகின்ற, தார்-மாலையை யணிந்தவைகளும், மல் ஏற்ற-மல் யுத்தத்தைப் பொருந்தியவைகளுமான, தோளானும்-தோள்களையுடைய புஷ்கரனும், தன்-தன்னுடைய, கொல் ஏற்றை-பகைவரைக் கொல்லுந் திறமுள்ள எருதை, வான்-சிறந்த, பணையம் ஆக-பந்தயமாக, குறித்து-குறிப்பிட்டு (அதாவது காட்டி) வைத்தான்-முன்னே சேர்த்தான்; [எ-று.]

புஷ்கரன் அவ்வாறு கேட்டவுடனே நளன் தன்னுடைய இரத்தின ஹாரத்தைப் பந்தயமாக வைத்து, 'என்பணையத்திற்கு நான் இதனை வைத்தேன். உன்னுடைய பந்தயம் யாது?' என்று வினவ, அவன் தன்னுடைய எருதைப் பந்தயமாக வைத்தான் என்பது இதன் கருத்து. உயர்ந்த பிரகாசம் அடிக்கடி அதிகரித்தும் குறைந்தும் ஒளிக்கும்; அதுவே இடை விட்டுப் பிரகாசித்த

லாம். 'பூணாரம்' என்பதற்கு, 'பூணத்தக்க ஆரம்' எனவும் பொருள் கூறலாம். ஓட்டுதலாவது பொருந்த வைத்தல், 'மட்டவிழ்' என்பதற்கு, 'வாசனை விரிந்த' எனவும் பொருள் கூறலாம். அரசர் முதலிய வீரர்களுடைய தோள், மல்யுத்தஞ் செய்வதற்குரிய தாதலின், இங்குப் புஷ்கரனை, 'மல்லேற்றதோளான்' என்றார் ஆசிரியர். "மல்லேற்ற தோளான் வான்பணைய மாகத்தன், கொல்லேற்றை வைத்தான் குறித்து" என்றதனால் நளன் வைத்த பந்தயத்தினும் புஷ்கரன் வைத்த பந்தயம் மேலானதென்பது பெறப்படும். நளன் தான் வைக்கும் அதிகப் பந்தயத்தைப் பார்த்து ஆத்திரங்கொண்டு அடுத்த முறைகளில் அளவற்ற பொருள்களைப் பந்தயம் வைக்கும் பொருட்டே புஷ்கரன் இவ்வாறு முதலிலேயே உயர்ந்த பணையம் வைத்தானென்க. எவ்வளவு பந்தயம் வைத்தாலும் கலியின் உதவியால் தனக்கே ஜெயங்கிடைக்குமென்னும் உறுதி புஷ்கரனுக்கேற்பட்டிருந்தமையின் அவன் இவ்வாறு பெரிய பந்தயம் வைத்தானெனினும் பொருந்தும்.

விட்டு - வினையெச்சம், ஒளிர் - பெயரெச்சம். வீசி - வினையெச்சம், விளங்கும் பெயரெச்சம். ஓட்டினேன்-தன்மை யொருமை வினைமுற்று. அவிழ்தார்-வினைத்தொகை. தோளானும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சப் பொருளது. குறித்தல்-சுட்டிக் காட்டுதல்.

கலியின் உதவியால் பாச்சிகை, புஷ்கரனுக்கு
ஜெயமாகப் புரளுதல்.

215. காரேயுங் கூந்தலார் காரிகைமேற் காதலித்த
தாரேயுந் தோளான் தனிமனம்போல்—நேரே
தவறாய்ப் புரண்ட தமையனோடுங் கூடிக்
கவறாய்ப் புரண்டான் கலி.

(இ-ள்) (இவ்வாறு பந்தயம் வைத்து இருவரும் சொக்கட்டான் ஆடிய போது) கார்ஏயும்-மேகத்தை நிகர்த்த, கூந்தல் ஆர்-குழல் பொருந்திய, காரிகைமேல்-அழகு பொருந்திய தமயந்தியின்மேல், காதலித்த-ஆசைகொண்ட, தார் ஏயும் - மாலைபொருந்திய, தோளான் - புயங்களையுடைய நளனது, தனிமனம்போல், ஒன்றியான மனதைப் போல, நேரே-எல்லோருக்கும் முன்னிலையில், தவறாய்-தப்பாக, புரண்ட-நீதியைவிட்டுப் பிசகிய, (அதாவது நீதியைவிட்டுத்தவறிச்சூதாட்டத்தில் ஒழுங்கீனமான காரியத்தைச் செய்த) தமையனொடும்-(நளனுக்குத்) தமையன் முறைக்காரனாகிய புட்காரனுடனே, கூடி-சேர்ந்துகொண்டு, கலி-கலிபுருஷனானவன் (அவன் புரட்டுக்குத் தகுந்த) கவறாய்-பாச்சிகையாகி, புரண்டான்-

அவனுக்கு ஜெயமுண்டாகும்படியே) உருண்டு ஜெயத்தை உண்டாக்கினன், [எ-று.]

நளனுடைய மனம், இப்போது சூதாடக்கூடாதென்ற நீதியை விட்டுப் புரண்டபடியால், அது புஷ்கரனுடைய புரட்டான செய்கைக்கு உவமை கூறப்பட்டது. நளன் மனம், மந்திரி முதலியவர்களின் சொல்லைக் கேளாமல் தன் இச்சைபோலச் சென்றபடியால் அது, 'தனி மனம்' என்று சொல்லப்பட்டது. பொய்நிறைந்த சூதாட்டத்திற்குத் தகுந்தபடி புஷ்கரன், எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அவர்கட்கு முன்னிலையிலேயே, விருத்தம் (பாச்சிகைப்புரட்டில் காணப்படும் தொகை) ஒன்றாவீழ அதனை வேறொன்றாகக் கூறுதல். கட்டங்களை மாற்றுதல் முதலிய புரட்டுக்களைச் செய்தவனாதலின், 'நேரே தவறாய்ப் புரண்டதமையன்' என்றார் ஆசிரியர். இப்படி அவன் தவறு செய்பவனாயிருந்தும் மேலும் அவனுக்கு ஜெயமாகவே பாச்சிகை புரளும்படி கலிபுருஷன் தானும் அதிலேறிப் புரட்டிவிட்டான். இதுபற்றியே ஆசிரியர், 'கவறாய்ப்புரண்டான் கலி' என்றுங் கூறினார். இங்ஙனம் கலி புரண்டான் எனவே நளன் வைத்த பந்தயத்தைப் புஷ்கரன் ஜெயித்துக் கொண்டான் என்பது பெறும்.

'நேரே தவறாய்' என்பதற்கு, 'நேர் மாறாக' என்றும் பொருள் கூறலாம். தவறாய்-என்பதில் ஆகவென்னும் செயவெனெச்சம், ஆகியென்னும் செய்தெனெச்சமாய்த் திரிந்து வந்தது. தமையனோடும் என்பதிலுள்ள உம்மை-அசை நிறைப் பொருளது. காரேயும் என்பதற்கு, கரிய நிறம் பொருந்திய எனப் பொருள் கூறினும் அமையும்.

நளன் வேறு பொருள்களைப் பந்தயமாக வைத்துத் தோற்றல்.

216. வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்த பணைய முரையென்ன—வைத்தநிதி
நூறா யிரத்திரட்டி நூறுநா றாயிரமும்
வேறாகத் தோற்றானவ் வேந்து.

(இ-ள்)மேற்கூறியபடி, (புஷ்கரன் நளனிடத்தே முதற்பந்தயப் பொருளை ஜெயித்துக் கொண்டபின் நளனைப் பார்த்து) வைத்த-நீ பந்தயமாகச் சேர்த்த, மணிஆரம்-இரத்தினமாலையை, வென்றேன்-(நான்) ஜெயித்துக் கொண்டேன், (ஆதலின், இனி) மறுபலகைக்கு-பலகையிலாடப்படும் மற்றொரு விளையாட்டிற்கு, ஒத்த-பொருத்தமான, (அதாவது வைக்கத்தக்க) பணையம்-பந்தயப் பொருளை, உரை - சொல்லுவாயாக, என்ன - என்று சொல்ல, அவ்வேந்து-அந் நளமகாராஜன், வேறாக - முன்வைத்த பொருளி

னின்றும் வேறாக, (சிற்சில திரவியங்களை வைத்தான்; அப்படி) வைத்தநிதி-பந்தயமாகச் சேர்த்த பொருள், நூறாயிரத்து இரட்டி-இரண்டு நூறாயிரத்தையும், நூறுநூறாயிரமும்-கோடியையும் (அதாவது நூறு இலட்சத்தையும்) தோற்றான்-பந்தயம் வைத்து ஆடித் தோற்று விட்டான்; [எ-று.]

முன்னே வைத்த இரத்தின ஹாரத்தைத் தோற்றபின், புஷ்கரன் பந்தயங்கேட்டதற் கிசைந்து நளன் மேலும் வேறாக இரண்டு விதமான தொகைப் பொருள்களைப் பந்தயம் வைத்துத் தோற்றானென்பது இதன் கருத்து. நூறாயிரம்-இலட்சம்; நூறாயிரத்து இரட்டி-இரண்டு இலட்சம். நூறு நூறாயிரம்-நூறு இலட்சம்; அதாவது ஒரு கோடி. முன்வைத்த பொருளினின்றும் வேறாக இரண்டு லட்சம் பொன்னையும், ஒருகோடிப் பொன்னையும் இரண்டு விதப் பந்தயமாக வைத்தாடி நளன் தோற்று விட்டானென்க.

பலகை-சொக்கட்டானுடுங் கோடுகள் எழுதப்பட்ட பலகை. இஃது ஆகு பெயராய் அதிலாடப்படும் விளையாட்டை யுணர்த்திற்று. 'சிற்சில திரவியங்களை வைத்தான்' என்பது இசை யெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. நூறாயிரத் திரட்டி என்பதில் எண்ணும்மை தொக்கது.

இதுவுமது.

217\. பல்லா யிரம்பரியும் பத்துநூ றாயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றபின்—வில்லாட்கள்
முன்றோற்று வானின் முகிறோற்கு மால்யானை
பின்றோற்றுத் தோற்றான் பிடி.

(இ-ள்) பின்னும் (அந்நளன்) பல்லாயிரம்-அனேகம் ஆயிரமாகிய, பரியும்-குதிரைகளையும், பத்துநூறாயிரம்-பத்துலட்சம், சொல்ஆர்-புகழ் பொருந்திய, மணித்தேரும்-அழகிய இரதங்களையும், தோற்றதன்பின்-தோற்றபிறகு, வில்-வில்லைக் கரத்திற் பிடித்தவர்களாகிய, ஆட்கள்-காலாட்களையும், முன்தோற்று-முன்னேதோற்று, வானில்-ஆகாயத்தில்சஞ்சரிக்கின்ற, முகில்-மேகங்கள், தோற்கும்-(நிறத்தால்)தோல்வி யடையும்படியான; (கரிய நிறத்தையுடைய,) மால்-பெரிய, யானை-ஆண்யானைகளை, பின்தோற்று-அதற்குப்பின்தோற்று விட்டு, (அதன் மேல்)பிடி-பெட்டையானைகளை, தோற்றான்-பந்தயமாக வைத்து ஆடித் தோற்றுவிட்டான்; [எ-று.]

முன் பாட்டிற் கூறியபடி நளன் பல்வேறு வகையாக வைத்த நிதிகளை யெல்லாம் தோற்றபின், மேலும் பல்லாயிரக் கணக்கான குதிரைகளையும், பத்தி லட்சம் இரதங்களையும் தோற்றுப் பின்னர் காலாட்களையும் தோற்று, அதன்மேல் ஆண்யானைகளைத் தோற்றுப்

பின்பு பெட்டை யானைகளையும் தோற்றான் என்பது இதன் கருத்து. இதனால், இரதம், கஜம், துரகம், பதாதி என்னும் நால்வகைச் சேனைகளையும் நளன் தோற்றானென்பது பெறப்படும். இவற்றை நளன் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு ஆட்டத்திலும் பந்தயம் வைத்துத் தோற்றான் என்க. இவ்வாறு தோற்பதற்குப் பல ஆட்டங்கள் நிகழ்ந்தன வென்க. மணித்தேர்-என்பதற்கு இரத்தினத்தினால் செதுக்கப்பட்ட தேர் எனப் பொருள் கூறினும் பொருந்தும்.

சொல்-வார்த்தை; அஃதிங்குப் புகழ்மேனின்றது. மால்-கருமையெனினுமாம். முன் பாட்டிலுள்ள வேந்து என்பதே இதற்கும் எழுவாயாம்.

நளன் பணிப் பெண்களைத் தோற்றல்.

218. சாதுரங்கம் வென்றேன் தரும்பணைய மேதென்ன
மாதுரங்கம் பூணு மணித்தேரான்—சூதரங்கில் [குழற்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப் பின்னு
பூவையரைத் தோற்றான் பொருது.

[இ-ள்.] (மேற்கூறியபடி நளன் நால்வகைச் சேனைகளையும் தோற்ற பின்னர் புஷ்கரன் அவனை நோக்கி) சாதுரங்கம்-நான்கு பகுப்புக்களாகிய சேனைகளையும், வென்றேன்-நான் ஜயித்துக்கொண்டேன், (இனி அடுத்த ஆட்டத்திற்கு) தரும்-கொடுக்கத்தக்க, பணையம்-பந்தயப் பொருள், எது என்ன-யாதென்று வினவ, மா-சிறந்த, துரங்கம்- குதிரைகளை, பூணும்-பூட்டிச் செலுத்தத் தக்க, மணி-இரத்தினங்கள் பதித்த தேரான்-தேரையுடைய நளன், சூது அரங்கில்-கவறாடுகின்ற சபையில், பொருது-மேலும் புஷ்கரனோடு (கவறாட்டத்தில்) எதிர்த்து, (பந்தயமாக வைத்து) பாவையரை-சித்திரப்பதுமை போன்றவராகிய பெண்களை, செவ்வழி-நெய்தனிலத்திராகத்தையுடைய, யாழ்-வீணையிலுண்டாகின்ற, பண்ணின்-பாட்டை நிகர்த்த, மொழி-வார்த்தைகளையும், பின்னுகுழல்-பின்னிவிடப் பட்டிருக்கும் கூந்தலையும் (உடைய), பூவையரை-நாகணவாய்ப் புள்போன்ற பெண்களை, தோற்றான்-தோற்றுவிட்டான்; [எ-று.]

மேற் கூறியபடி நளன் சதுரங்க சேனைகளையும் தோற்றபின்பு, புஷ்கரன் மேலும் அவனை நோக்கி, 'அடுத்த ஆட்டத்திற்குப் பந்தயமேது' என்ன, அந்நளன், இனிமையான குரலையுடைய அடிமைப் பெண்களைப் பந்தயமாக வைத்தாடித் தோற்றானென்பது இதன் கருத்து. "பண்ணின் மொழிப்பின்னுகுழல் பூவையர்" என்றதனால் இங்குக் கூறிய பெண்கள் கீதசாஸ்திர முறைப்படி இனிய பாடல்களைப் பாடும் பணிப்பெண்க ளென்பது பெறப்படும்,

சதுரங்கம் என்பது சாதுரங்கம் என முதல் நீண்டது. சதுரங்கம்-நான்குவகை; இஃதாகு பெயராய் நான்கு பகுப்பான சேனைகளை யுணர்த்திற்று. நால்வகைச் சேனைகளாவன:—யானைப் படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பனவாம்; காலாள்-வாகனத்திலேறாமல் காலால் நடந்து யுத்தஞ் செய்யக் கூடிய வீரர்கள். பணயம்-பந்தயம்; அஃதாகு பெயராய்ப் பந்தயத் திற் குரிய பொருளை யுணர்த்தும். பாவையரை, பூவையரை என் பன ஒரு பொருள் குறித்த பல பெயர்கள்; இரண்டும் பெண்களைக் குறித்தே வந்தன. பாவை-வடிவம் பற்றி வந்த உவமை, பூவை-சொல்லோசை குறித்து வந்த உவமை. செவ்வழி-நெய்தனிலத் திராகம்; அது மற்றப் பண்களினும் மிக இனிமையுடையதாதலின் மிக்க இனிய குரலுடைய பெண்களின் மொழிக்குவமை கூறப்பட் டது; இதனானே அப்பெண்கள் இனிய குரலாரென்பது பெறப் படும். பாவையரை பூவையரை என்ற தொடர் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையுமாம்; பாவையராகிய பூவையரை என விரியும். ஏது-என்பதில் ஏ-முதலில் வினாவாயிற்று, "ஏ யிருவிழியும்" என்றதனால். பின்னுகுழல்-வினைத் தொகை. 'தோற்றான் பொருது' என்பது, 'பொருது தோற்றான்' என மாற்றிக் கொள்ளப்பட்டது. தோற்றான் படர்க்கையொருமை வினைமுற்று, பண்ணின் என்பதில் இன்-உவமையுருபு.

இதில் நளனுடைய செல்வமெல்லாம் புஷ்கரனைச்
சேர்ந்தமை கூறப்படுகிறது.

219. கற்பின் மகளிர்பா னின்றுந் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போல்—நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தாள் திரு.

[இ-ள்.] (மேற்கூறியவிதமாக நளன் எல்லாவற்றையும் தோற்ற பின்பு) கற்பின்-பதிவிரதா தருமத்தையுடைய, மகளிர்பால் நின்றும்-பெண்களினிடத்திலிருந்தும், (அதாவது அவர்களை விட்டு) தமை-தங்களை, கவட்டின்-வஞ்சனையினாலே, விற்கும் (பணங்கொடுப் பார்க்குப் பொய்யாக) விலைப்படுத்துகின்ற, மகளிர்பால்-விலைமாதர் களிடத்தில், மீண்டாற் போல்-(அப்பதிவிரதைகளின் நாயகர்கள்) திரும்பிப் போய்ச் சேர்ந்தாற் போல, நிற்கும்-நிலைபெற்ற, நெறி யானை-நல்லொழுக்க முடையவனை, மெய்ம்மை வாய்-சத்தியத்தி னிடத்தே, நின்றானை-நிலை பெற்றிருந்தவனாகிய நளனை, நீங்கி-விட் டுப்பிரிந்து, திரு-இலக்குமியானவள், சிறியானை-அற்பனாகிய புஷ் கரனை, சேர்ந்தாள்-அடைந்தாள்; [எ-று.]

நளன் தன்னிடமிருந்த பொருள்களை யெல்லாம் தோற்றபின், அவனிட மிருந்த செல்வமானது, ஒரு பதிவிரதையினிடத்தே சேர்ந்திருந்த நாயகன் அவளை விட்டுப் பரத்தையிடம் சேர்ந்தது போல மிருந்த சத்திய சீலனாகிய அந்நளனைவிட்டு அற்பனாகிய புஷ்கரனிடம் சேர்ந்ததென்பது இதன் கருத்து. 'மீண்டாற் போல்' என்றதால் அந்நாயகன் முன்னே பரத்தையிடம் சேர்ந்திருந்து அவள் சேர்க்கை கெட்டதென வுணர்ந்து அதன் காரணமாக அவளை விட்டுப் பதிவிரதையினிடம் சேர்ந்திருந்தவன், முன்னே பரத்தை கெட்டவளென உணர்ந்திருந்தும் அதனை மறந்து பதிவிரதையைப் பிரிந்து மீண்டும் அவளிடத்தே சேர்ந்தா னென்பதும் பெறப்படும். இதனானே அந்நாயகனிடத்தே ஓரிழிவைக் கற்பித்ததாம். "அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம், பூரியார் கண்ணு முள" என்றபடி ஐசுவரியம் கீழ்மக்க ளிடத்தும் சேர்ந்திருக்கத் தக்கது. அப்படியிருக்கும் அது உத்தமனாகிய நளனிடத்துச் சேர்ந்திருந்தும் அவ்வுயர்வைக் கருதாமல் மீண்டும் அற்பனாகிய புஷ்கரனிடத்திற் சேர்ந்தது. ஆதலின், இது மேற்கூறியபடி பதிவிரதையை விட்டுப் பரத்தையிடம் சேர்ந்த நாயகனுக்கு உவமை கூறப்பட்டது. இதனானே ஐசுவரியம் நிலையற்றதென்பதும், உயர்வு, தாழ்வு அறியாத தென்பதும் ஆதலின், அதனை அறிஞர் உலகத்தில் பெரிதாகக் கருதலாகா தென்பதும் பெறப்படும். இனி, "கற்பின் மகளிர்பா னின்றுந் தமைக் கவட்டின் விற்கு மகளிர்பான் மீண்டாற்போல்" என்பதற்குச் 'செல்வமானது பதிவிரதைகளை விட்டுப் பரத்தையரைச் சேர்ந்தாற்போல்' என்று பொருள் கூறினும் அமையும்; பெரும்பாலும் பரத்தையர்போல் ஒழுக்கங் கெட்டவரிடத்தே பொருள் மிகுந்து சேரலும், பதிவிரதைகள் போன்ற ஒழுக்கமுள்ளவரிடத்தே வறுமை அதிகரித்தலும் உலகவியற்கை யாதலின், இஃதொரு வகையிற் பொருந்து மென்க. எனினும், இது அச்செல்வத்திற்கு இழிகுணமே யாதலின், இச் செய்கை இங்கு தாழ்ந்த குணத்திற்கே உவமை கூறப்பட்டது. பரத்தையர் ஒரு நாளைக்கு ஒருவரிடத்தே பணம் வாங்கித் தேகத்தை விற்றலும் மெய்யன்போடு அதனை அவர்க்கு உரிமையாகச் செய்யமாட்டார்; உரிமை செய்வது போல் நடித்து அவர்களிடம் பொருள் கவர்வார்; ஆதலின், அவரைக் 'கவட்டின் விற்கும் மகளிர்' என்றார் ஆசிரியர்.

கற்பின் மகளிர் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்கதொகை. பால்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. நின்று ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளில் வந்த சொல்லுருபு. நின்றும் என்பதிலுள்ள உம்மை-அசை. கவடு-கவர், அதாவது இருபிரிவானது; ஆதலின் அஃதிங்கே அதைப் போல ஒரு நிலை

யின்றிப் பல விகற்பமாம் செயலுக்கு வந்தது; தாசிகள் மனம் ஓரே நிலையில் நில்லாதது. விற்கும்-பெயரெச்சம். நெறியானை-மெய்ம்மைவாய் நின்றானை-இருபெயரொட்டுப் பண்பு; நெறியானாகிய மெய்ம்மைவாய் நின்றவனை' என விரியும். வாய்-ஏழனுருபு. நெறியான், சிறியான் என்பன பண்புப் பெயர்கள். நின்றான்-வினையாலணையும் பெயர். நெறியானை, நின்றானை, சிறியானை என்பன இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்கள். நீங்கி-வினையெச்சம். சேர்ந்தாள்-உயர்திணைப்பெண்பாலொருமை வினைமுற்று. இலக்குமியே பொருளுக்கு அதிதேவதையாதலின் இங்கே திருவென்னுஞ் சொல் ஐசுவரியத்தை யுணர்த்தும். ஐசுவரியத்தின் செய்கையை இலக்குமியின் செயலாகவே கூறுதல் இயல்பு.

புஷ்கரன், நளனிடத்தில், தமயந்தியைப் பந்தயமாக வைக்கச் சொல்லல்.

220. மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேறல்—நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணையந்தா வின்று.

[இ-ள்.] (இவ்வாறு நளனுடைய ஐசுவரிய முழுதும் புஷ்கரனிடத்திற் சேர்ந்தபின் அவன் நளனை அவமானப் படுத்தக்கருதி அவனை நோக்கி) சினைச்சங்கின்-கருக்கொண்ட சங்குகளின், வெண்தலையை-வெண்மையாகிய தலையை, தேறல்-(தன்னிடத்திலிருந்து வடியும்) தேனினாலே, நனைக்கும்-நனைக்கின்ற, குவளை-நீலோற்பலங்களின், பணை-பருத்த, பைந்தாள்-பசியதாள்களையுடைய, குண்டு-சிறு குளங்களின், நீர்-நீரையுடைய, நாடா-நிடதநாட்டிற் கதிபதியா யிருந்த நளனே!, (நீ எல்லாவற்றையும் தோற்று விட்டதால் பந்தயத்திற்கு வேறு பொருளில்லை யென்று சஞ்சலப்படுகின்றாய்; உன் கவலையை நீக்கக்கூடிய சிறந்த பொருளொன்று உன்னிடமிருக்கின்றது; அங்ஙன மிருப்ப நீ ஏன் சஞ்சலப்பட வேண்டும்) மனைக்கு-ஒரு புருஷனின் வீட்டிற்கு, உரியார் அன்றே-உரியாராகிய மனைவிய ரல்லவா, (அக்கணவனுக்கு) வரும் துயரம்-வரக்கூடிய துன்பத்தை, தீர்ப்பார்-தீர்க்கத் தக்கவர், (ஆதலின்) இன்று-இப்பொழுது, (தமயந்தியைச் சுட்டிக் காட்டி) இவளை-(அப்பேர்ப்பட்ட உன் மனைவியாகிய) இத்தமயந்தியை, பணையம்தா-பந்தயமாக வைத்துக் கொடு, (என்று கூறினான்); [எ-று.]

நளன், எல்லாவற்றையும் தோற்று வலிமையற்று நின்றானாதலின், 'இனி எதை வேண்டுமானாலும் பயமின்றிச் சொல்லலா' மென்று தைரியங்கொண்டு, புஷ்கரன், அவனுக்கு அவமான முண்டாகும்படி இதஞ் சொல்வான் போல பரிகாசமாக அவனை நோக்கி,

"எல்லாவற்றினுஞ் சிறந்த பொருளாகிய உன் மனைவியிருக்க நீ ஏன் விசாரப்படுகின்றாய்? ஒரு புருஷனுக்குத் துன்பம் வந்த காலத்தில் அதனை நீக்கத் தகுந்தவள் மனைவியே ஆவள்; ஆதலின், இச்சமயத்தில் அவளைப் பந்தயமாக வை" என்று கூறினானென்க. சூதாடுவோர்க்கு எந்த இழுக்கான வார்த்தையையும் வாய் கூசாமல் பேசுவது இயற்கை யாதலின், இங்ஙனம் புஷ்கரன் நளனிடத்தில் மனைவியைப் பந்தயம் வைக்கும்படி சொல்லத் தகாத வார்த்தையைச் சொன்னான்: அவ்வாறு கூறியதிலும் அவளைப் பந்தயம் வைத்தாடினால் தான் ஜெயித்துக் கொள்வது நிச்சயமாயிருந்தபடியால் 'இவளைப் பணயந்தா' என்றும் கேட்டான். இது "எல்லாவற்றையும் தோற்ற உனக்கு மனைவி எதற்கு? அவளையும் எனக்குக் கொடுத்து விடு" என்னுங் கருத்தைக் குறிப்பால் உணர்த்தி நின்றது. இந்த நிலையில் எவ்வித இழிவான வார்த்தையைக் கூறினும் நளனால் தன்னை ஒன்றுஞ் செய்தல் இயலாதென்பது புஷ்கரனுடைய அபிப்பிராயம். சூதாட்டத்தில் புகுவோர் இதினும் கேவலமான நிலைமையை அடைவார்களென்பது இதனால் உணரப்படும். புஷ்கரன் இங்ஙனம் இழிவாகக் கூறினான் எனினும், 'மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்' என்றதினால் 'மனைவியர் புருஷரின் இன்பதுன்பங்களைப் பங்கிட்டனுபவிக்கக் கூடியவர்கள்' என்பதும், பதிவிரதைகளின் இலக்ஷணம் இன்னதென்பதும் விளங்கும். இன்னும் புஷ்கரன், "நாம் இச்சமயத்தில் குரோதமுண்டாகும் வார்த்தைகளைப் பேசினால் நளன் ஆத்திரங் கொண்டு மனைவியையும் பந்தயம் வைத்தாடுவான்; அப்படியானால் அவளையும் சொந்தமாக்கிக் கொள்ளலாம்" என்று பேராசை கொண்டு இங்ஙனம் உரைத்தானெனினும் அமையும்; 'சூதாடுவோர் தோற்ற காலத்தில் மனைவியையுங்கூடப் பந்தயம் வைத்தாடுவார்களென்பது உலகறிந்த விஷயம்; அதனால் ஒரு சமயம் நளன் தமயந்தியையும் வைத்தாடினும் ஆடுவான்' என்னும் நினைப்பும் புஷ்கரன் மனத்தில் உதித்ததனாலும் இங்ஙனம் உரைத்தானென்க. தருமர் சூதாட்டத்தில் திரௌபதியைப் பந்தயமாக வைத்தாடியது உலகப்பிரசித்தம்; ஆதலின், இந்த உறுதி புஷ்கரனுக் கேற்பட்டது என்பது பெறப்படும்.

குவளைகளுக்குப் பக்கத்தில் சினைச் சங்குகள் சஞ்சரிக்கும் போது அக்குவளைகளின் தேன் சிதறி அவற்றின் தலையில் வடியும். பணை-பருமை; இங்கே குவளைத்தாளின் செழிப்பை யுணர்த்த வந்தது. நளன் அச்சமயம் நாட்டைத் தோற்றிருந்தா னெனினும் முன் ஆண்டிருந்தமை பற்றிப் புஷ்கரன் இங்ஙனம் அவனைக் 'குண்டுநீர் நாடா' என்று பெயரிட்டுக் கூறினான். அன்றே-ஒருவகை வினாவிடைச்சொல்; இவ்வினா உறுதியை விளக்கும். பைந்தாள்-பண்புத்

தொகை, இன்று-காலப் பெயர். புஷ்கரன் என்னும் எழுவாயும், என்று சொன்னான் என்னும் பயனிலையும், பிறசொற்களும், பொருண்முடிபுக்குத் தக இதில் இசையெச்சமாக வருவித்துரைக்கப் பட்டன.

நளன் சூதாட்டொழிந்து நகரத்தை விட்டு வெளி
யேறத் துணிந்து தமயந்தியை அழைத்தல்.

221. இனிச்சூ தொழிந்தோ மினவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனனாடன் பொன்மகளே
நாம் போது மென்றா னளன்.

[இ-ள்.] (புஷ்கரன் இவ்வாறு கூறியவுடனே) நளன்-நளமகாராஜன், ('இனிச்சூதாடினால் மிக்க அவமானம்நேரும்' எனக் கருதிச் சூதாட்டத்தை விட்டு நீங்கிப் புஷ்கரனோடு ஒன்றும் மறுமொழி சொல்லாமல் தமயந்தியிடம் சென்று அவளை நோக்கி) கனி-பழங்களையுடைய, சூதம்-மாமரங்கள் நிறைந்த, வார்-நீண்ட, பொழிலின் கண்ணே-சோலையினிடத்தே, இனம்-கூட்டமாகிய, வண்டு-வண்டுகள், கிண்டி-குடைந்து கிளறி, பனிச்சு-அசைந்து, ஊத-ஊதுவதனால், பூ-புஷ்பங்களின், போது-மலரும் பருவத்தரும்புகளை, அவிழ்க்கும் - கட்டுவிட்டு மலரச்செய்கிற, புனல்-நீர்வளம்பொருந்திய, நாடன்-விதர்ப்ப நாட்டுக்கதிபனாகிய வீமராஜனது, பொன்-பொன்னாகிய, மகளே-குமாரத்தியே!, (நாம் கெட்டகாலத்தால் புஷ்கரனோடு சூதாடி எல்லாவற்றையும் தோற்றோம்; மேலேபந்தயம் வைக்கப் பொருளில்லாமையால்) சூது-சூதாட்டத்தை, ஒழிந்தோம்-விட்டு நீங்கினோம், (ஆதலின்) இனி-இனிமேல், (நகரத்திலிருப்பது தகாதாதலின் வேறே எங்கேனும் சேர்வதற்கு) நாம் போதும்-நாம் செல்லுவோம், என்றான்-என்று கூறினான்; [எ-று.]

புஷ்கரன் அவ்வாறு கூறத்தகாத வார்த்தையைக் கூறியவுடனே நளன், மிகவும் வருந்தி, "நாம் மந்திரிகளின் சொல்லையும் தடுத்துச் சூதாட்டத்தில் பிரவேசித்ததனால் நமக்கு இக்கதி நேர்ந்தது; புஷ்கரனும் உரைக்கத் தகாத மாற்ற முரைத்தான்; இதற்காக அவனை வெறுப்பதில் பயனில்லை; நம்முடைய கெட்ட விதியானது இந்நிலைமையை நமக்குண்டாக்கி விட்டது; இனி நாம் இச்சூதாட்டத்தைவிட்டு மனைவி மக்களுடன் இந்நகரத்தைவிட்டு வெளியேறிப் போதலே நன்று" என்று உடனே அந்தப்புரத்திற்குப் போய்த் தமயந்தியைக் கண்டு அவளிடத்தில், நடந்தது கூறி, "இனி நாம் வெளியேறி வேறெங்கேனும் போய்விடவேண்டும்; நீ என்னுடன் வருவாயாக" என்று அவளை அழைத்தானென்க. நளன் புஷ்கரனோடு சூதாடுவதையும், ஐசுவரியங்களையெல்லாம்

லொன்றன்பின் லொன்றாக அவனிடம் தோற்பதையும் தமயந்தி அப்போதைக்கப்போது பணியாளர்களால் கேள்விப்பட்டுக் கொண்டிருந்தாளெனினும், மகாபதிவிரதையாதலின், கணவன் செய்கையைத் தடுக்கலாகாதென மௌனமுற்றிருந்தாள். அத்தருணத்தில் நளன் சென்று சூதாட்டத்தின் முடிவைக் கூறி அவளை அவ்வாறு அழைக்கவே அவள் மறுமொழி கூறாமல் அவன் மொழிக் கிசைந்தாள்.

விதர்ப்பநாட்டில் கனிகள் மிகுந்த மாமரச் சோலையில் வண்டுகள் நெருங்கி மலரும் பருவத் தரும்புகளைக் குடைந்து ஊதும்; அதனால் அவ்வரும்புகள் கட்டுவிட்டு மலரும். இதனால் விதர்ப்ப நாட்டின் சிறப்புக்கூறப்பட்டது. இனி-மேல்வரும் காலத்தை யுணர்த்தும் பெயர்ச் சொல். ஒழிந்தோம்-தன்மைப்பன்மை வினைமுற்று. "மவ்வீறொற்றழிந் துயிரீறொப்பவும், வன்மைக்கின மாத் திரிபவுமாகும்" என்ற (நன்-மெ-பு-16-ஆம்-சூ) விதிப்படி சூதம் என்பது மவ்வீறுகெட்டுச்சூத-என நின்றது. பணித்து-என்னும் வினையெச்சம் பணிச்சு எனப்போலியாய் வந்தது. போதும்-உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று, 'ஆம் ஆம் என்பன முன்னிலையாரையும், எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும், உம் ஊர் கடதற இருபாலாரையும், தன்னொடு படுக்குந்தன்மைப்பன்மை" என்பது (நன்-வினை-13-ஆம்) சூத்திரம்; தாம் விகுதியையுடைய இம்மொழி, முன்னிலையிடத்தளாகிய தமயந்தியைக் கூட்டித் தன்மைப்பன்மைவினை முற்றாயிற்று. 'பூப்பெயர் முன்னினமென்மையுந் தோன்றும்" என்ற (நன்-உயி-பு 50-ஆம்-சூ) விதியால் 'பூபோது' என்பது, மெலி தோன்றப், 'பூம்போது' எனவந்தது. கண்ணே-என்பதில் ஏ-அசை. பொன்மகள்-இருபெயரொட்டுப் பண்புத் தொகை; தமயந்தி வீமனுக்குப் பொன்போலச் சிறப்புடையவளாதலின் பொன் எனப்பட்டாள். மகளே-என்பதில் ஏ-விளிவேற்றுமைச் சொல்லுருபு.

இதில், நளன் நகரத்தை விட்டுப் புறப்படல்
கூறப்படுகின்றது.

222. மேன்காற் சிறையன்னம் வீற்றிருந்த மேன்மலரைப்
புன்காகங் கோள்ளத்தான் போனற்போல்—தன்கால்
போடியாடத் தேவியோடும் போயினு னன்றே
கோடியானுக் கப்பார் கோடுத்து.

[இ-ள்] (அவ்வாறு கூறித் தமயந்தியும் அதற்கிசைந்த பின் நளன்) மெல்-மெல்லிய, கால்-பாதங்களையும், சிறை-சிறகுகளையும், (உடைய) அன்னம்-அன்னப் பறவையானது, வீற்றிருந்த-தங்கியிருந்த, மெல்மலரை-மிருதுவாகிய தாமரை புஷ்பத்தை, புன்-அற்பமாகிய, காகம்-காகமானது, கொள்ள (தனக்கிருப்பிடமாகப்)

பற்றிக்கொள்ள, தான்-அவ்வன்னந் தான், போனால் போல்-(அதை விட்டு நீங்கிச்)சென்றுவிட்டாற்போல, கொடியானுக்கு-தீயோனாகிய புஷ்கரனுக்கு, அப்பார்-(தன்னுடைய)அந்தப் பூமியாளுகையை, கொடுத்து-அளித்துவிட்டு, தன்கால்-தன்னுடைய பாதங்களிலே, பொடிஆட-புழுதிபடியும்படி, (பாதசாரியாய் நிலத்தில் நடந்து) தேவியொடும்-மனைவியாகிய தமயந்தியுடனே, போயினான் - (நகரை விட்டு நீங்கிப்புறப்பட்டுச்) சென்றான்;[எ-று.]

ஒரு அன்னமானது தானிருந்த தாமரைமலரை, அற்பமாகிய ஒரு காகம் கைக்கொள்ள அதனை விட்டுச் சென்றாற்போல, நளன், தன்னுடைய ஆளுகையைத் தாழ்ந்தவனாகிய புஷ்கரன் கொள்ளும்படி விட்டு மனைவியுடனே நகரத்தைவிட்டு வெளியேறிப்புறப்பட்டான் என்பது இதன் கருத்து. இங்ஙனம் உவமை கூறியதால், தாமரை மலருக்கு அன்னமே பொருத்தமுடையதாதல்போல நிடத நாட்டாளுகைக்கு நளனே பொருத்தமுடையவனென்பதும், காகம் அம் மலருக்குப் பொருத்தமுடையதாகாதது போலப் புஷ்கரன் அவ்வாளுகைக்குப் பொருத்தமுடையானல்லன் என்பதும் பெறப்படும். இதனால், நளன் நீங்கப் புஷ்கரன் செய்யும் அரசு சிறப்படையாதென்பது விளங்கும். அன்னத்தின் உயர்வுக்கேற்ப அதனை 'மென்காற்சிறை யன்னம்' என்றும், காகத்தின் இழிவுக்கேற்ப, அதனைப் 'புன்காகம்' என்றும் கூறினார் புலவர். அன்னமிருப்பது தாமரை மலரேயாதலின், 'அன்னம் வீற்றிருந்த' என்ற குறிப்பினால், 'மென்மலர்' என்பது தாமரை மலரெனக் கொள்ளப்பட்டது. புஷ்கரனுடைய இழிதன்மைக் கேற்ப அவன், 'கொடியான்' என்று பெயர் கூறப்பட்டான். நளன் எல்லாவற்றையும் இழந்து ஏறிச் செல்ல வாகனமின்றிக் காலாலே தரையில் சென்றானாதலின் அவனுடைய காலிற் புழுதி படிந்ததென்க. இதனால் அவன் மனைவியோடு நகரத்தைவிட்டு வெளியேறிச் சிறிது தூரம் சென்றான் என்பது கூறப்பட்டது. நளன் மனைவியோடு சென்றான் எனவே அவனுடைய பிள்ளைகளும்உடன் சென்றார்களென்பது கூறாமலே அமையுமாதலின், அவர்களும் போயினார்களெனக் கொள்க.

தான்-என்பது மூவிடத்துப் பெயர்களோடும் சேர்ந்து நிற்குங்கால் அசையெனப்படும்; அது படர்க்கைப் பெயரோடு மாத்திரம், அதைச் சார்ந்ததாய்ப் பிரிந்து தனியே வேறோரிடத்திலும் வரும்; அங்ஙனம் வருமிடத்து அது அப்படர்க்கைப் பெயராகவே கொள்ளப்படும்; ஆதலின், இங்கு வந்த, தான்-என்பதும், அங்ஙனம் வந்ததாதலின் படர்க்கையை உணர்த்தும் பெயரேயாம். தன்-என்பதும் வேற்றுமையில் இவ்வாறேவரும், 'கால்பொடியாட' என்பதை எழுவாய்த் தொடராகக்கொண்டு 'காலானது புழுதியிற்படிய'

எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். ஓடும்-உம்மை, அன்றே-அசை.

இதில் நளனது விதியின் வலி கூறப்படுகின்றது.

223. கடப்பா ரேவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன்—நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி.

[இ-ள்.] *கடுவினையை*-கடுமையான பழவினையை, (அதாவது முன் ஜன்மத்திற் செய்த தீவினையாலேற்பட்ட விதியை) *கடப்பார்*-தாண்டிச் செல்பவர், *எவர்*-யாவர்?, (ஒருவருமில்லை ஆதலின் தலைவிதிப்படியே நளன் இக்கதியை அடைந்தான்; இவ்வாறடைந்ததானது) *விதியின்வலி*-அவனுடைய தலைவிதியின் வல்லமையானது, *மாயத்தால்*-வஞ்சனையினாலே, *மன்னன்*-அந்நளமகாராஜன், *வீமன்*-வீமராஜனது, *மடம்*-இளமைபொருந்திய, *பாவை தன்னுடனே*-சித்திரப்பதுமைபோன்ற குமாரத்தியாகிய தமயந்தியுடனே, *வனத்தேசெல*-காட்டிற்செல்லும்படி, *நடப்பான்*-காலாலே தரையில் நடக்குமாறு, *பணித்து*-அவனை ஏவி, *சூழ்ந்தது அனைத்து*-சுற்றிக்கொண்டதை நிகர்த்ததாயிற்று; [எ-று.]

பழவினையாலேற்பட்ட விதியைக் கடப்பவரெவருமில்லை யாதலின், நளன் அவ்விதிப்படியே இவ்வித நிலைமையை அடைந்தான்; அவன் இவ்வாறானது, அவ்விதி வஞ்சனையால் அவனை இப்படி நடக்கும்படி செய்து சுற்றிக்கொண்டது போன்றிருந்தது என்பது இதன் கருத்து. இவ்வாறு கூறியதனால், 'உலகத்தில் விதியைக் கடப்பாரெவருமில்லை; எனினும், நளன் புத்தி சாதுரியத்தால் அதனை நீக்கிக் கொள்ளும் ஆற்றலுடையவன்; அப்படி யிருந்தும் இவ்வாறு விதிவயத்தனாயினன்; இதை ஆலோசிக்குமிடத்து இத்தகைய மதிநுட்பமுடையானை அவ்விதியே வஞ்சனையால் சிக்க வைத்துக்கொண்டது போன்றிருந்தது' என்பது பெறப்படும். விதி வலிதாதலின் அவனுடைய புத்தியை ஏமாற்றிவிட்டதென்க. இங்ஙனம் விதி வலி தென்பது, 'கடப்பாரெவரோ கடு வினையை' என்பதா லுணரப்படும்.

கடுவினை-முற்பவத்திற் செய்த தீவினை; அவ்வினைக்குத் தக்கபடி இப் பிறப்பில் அனுபவ முண்டாகும்; அவ்வனுபவம் கடவுளால் ஏற்படுத்தப்படும்; அதுவே விதியெனப்படும்; விதி என்பதற்குத் தேவகட்டளை யென்பது பொருள்; விதி அவ்வினையால் ஏற்படுவதாதலின், வினை யென்பதற்கு விதி யென்று பொருள் கூறப்பட்டது. வினை காரணவாகு பெயராய் அதனாலுண்டாம் செய்கையாகிய விதிக்காயிற் றென்க. எவர் என்னும் வினா எதிர் மறுத்தற்

பொருளில் நின்றது; இதனீற்றேகாரம்-அசை. நடப்பான்-வினை யெச்சம். முற்றெச்சமாகக் கொண்டு 'நடப்பவனாகிச் செல்ல' என விரிப்பினும் அமையும். மடம்-அறியாமை; இளமைப் பருவம் அவ் வறியாமையை யுடையதாதலின், அஃதிங்கே இளமை யென்னும் பொருளை விளக்கி நின்றது. பாவை-உவமையாகுபெயர். பாவை தன்னுடனே என்பதில் தன் - ஏ அசைகள். பணித்து - வினை யெச்சம். சூழ்ந்தது-தொழிற் பெயர்.

நளன் வெளியேறிப் போவதைக் கண்டு நகரமாந்தர் இரங்குதல்.

224. ஆருயிரின் றாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.

[இ-ள்.] (மேற்கூறியபடி நளன், மனைவி மக்களுடனே வெளி யேறிச் செல்லுங் காலத்தில், அம்மன்னனுக் குற்றதை நகரமாந்தர் உணர்ந்து மனங்கலங்கி அவனை நோக்கி) தம் கண்ணின்-தம்முடைய கண்களின், நீர் வார்த்து - நீரைச் சொரிந்து, கால் - தங்களுடைய பாதங்களை, கழுவா நின்று-அலம்பிக்கொண்டு (அதாவது குனிந்த படியே கண்ணீர் பாதங்களில் வடிய நின்று), ஆர் உயிரின்-(எங்க ளுடைய) அரிய உயிர்களின், தாயே-தாயாயிருப்பவனே!, அறத் தின்-தருமத்தினது, பெருந்தவமே-பெரிய தவ வடிவமானவனே!, பேர் அருளின்-பெரிய இரக்கத்தினது, கண்ணே-நேத்திரம் போன் றவனே!, பெருமானே-(எங்கள்) தலைவனே!, பார் இடத்தை-இந்தப் பூமியினிடத்தை, (அதாவது; இந்நாட்டின் ஆளுகையை) யார் காக்க-எவன் காக்கும்படி, (விட்டு), நீ யாங்குப் போவது-நீ எங்கே செல்வது, என்றார்-என்று சொல்லி வருந்தினார்கள்; [எ-று.]

நகரமாந்தர்க்கு நளன் உயிர்க்குயிரா யிருந்தவ னாதலின் அவர்கள் பிரிவுக்கு வருந்திக் கண்ணீர் வடித்து அவனை நோக்கி, "எங்களுயிர்க்குத் தாயானவனே! தருமத்தின் தவவடிவமானவனே! அருட் கண்ணே! எம் மிறைவனே! நீ இந்தப் பூமியை அற்பனாகிய புஷ்கரன் ஆளும்படி விட்டு எங்கே செல்கின்றாய்?" என்று கூறி னார்கள் என்பது இதன் கருத்து. நளன் குடிகளுக்குத் தாயைப் போன்றிருந்து அவர்களை ஆதரித்தானாதலின், அவர்கள் அவனை, "ஆருயிரின் தாயே" என்றார்கள். நளனாலேயே தருமம் விளங்கக் கூடியதாயிருந் ததனாலே, அஃது இவனை யடைதற்குத் தவஞ் செய்ததாகவும், அத்தவமே ஒருரு வெடுத்து வந்ததுபோல இவ னுதித்ததாகவும் பொருளாகும்படி இவன் 'அறத்தின் பெருந் தவமே' என்று கூறப்பட்டான். இனி 'அறத்தின் பெருந்தவமே' என்பதற்குத் 'தாய் தந்தையர் செய்த தர்மத்தினு லேற்

பட்ட பெரிய தவத்தின் உதித்தவனே' எனப்பொருள் கூறினும் அமையும். கண்ணாலேயே மனிதர் சிறப்புறுவர்; அதுபோல அருள் நளனாலேயே சிறப்படையும்; ஆதலின் அம்மாந்தர்கள் இவனைப் 'பேரருளின் கண்ணே' என்றுங் கூறினார்கள்; இங்ஙனம் கூறியவற்றால் நளன், மாந்தர்க்குத் தாய்போன்றவனென்பதும், தவவடிவமானவனென்பதும், மிக்க கிருபையுடையவனென்பதும் பெறப்படும். "பாரிடத்தை யார் காக்கப் போவது நீ யாங்கென்றார்" என்பதனால், 'இத்தகைய நற்குணங்கள் பொருந்திய நீ எவனைப் பூமியாளும்படி செய்து விட்டு எங்கே போகின்றாய்? நாங்கள் உன் பிரிவை ஆற்றுவோமோ! இந்த அற்பன் ஆளுகைக் கீழிருந்து வாழ்வோமோ' என்ற கருத்துக்கள் விளங்கும். 'யார் காக்கப் போவது நீ யாங்கு' என்பது ஓர் அதிசயவினா; இது, 'இந்த அற்பனைக் காக்க விட்டு நீ செல்வதெங்கே' என்று பொருள் தரும். 'யார்' என்னும் வினா 'அற்பன்' என்னும் பொருளை விளக்கி நின்றது. 'யார் காக்க' என்பது இவன் காக்கத்தகாத அற்பன் என்னும் பொருளைத் தருதலால் எதிர்மறையெச்சமெனப்படும். மாந்தர்கள் கண்ணீர் விட்டபடியே தலைவணங்கி நின்றார்கள்; அப்போது கண்ணீர் பாதத்தில் வடிந்தது; அவ்வாறு கண்ணீர்விட்டு நின்றதை அவர்கள் கண்ணீர் வார்த்துக் கால் கழுவியதாகக் கூறினார் ஆசிரியர்.

போவது-தொழிற்பெயர், கழுவாநின்று-வினையெச்சம், கழுவாநில்-பகுதி.

225. வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

[இ-ள்.] (மேலும் அவர்கள் நளனை நோக்கி இறைவ!) வேலை-சமுத்திரமானது, கரை இழந்தால்-எல்லையைத் தாண்டினாலும், வேதம்-வேதமானது, நெறி-சத்தியமார்க்கத்தினின்று, பிறழ்ந்தால்-பிசகினாலும், ஞாலம்முழுதும்-பூமிமுழுதும், நடு இழந்தால்-நடுநிலைமையைக் கைவிட்டாலும், செங்கோலவர்-சாயாதகோலை (அதாவது ஒழுங்கு தவறாத அரசாட்சியை) உடைய மன்னர்கள், சீலம்-நல்லொழுக்கத்தினின்றும், ஒழிவரோ-தவறுவார்களோ, செம்மை உரை - உண்மை வார்த்தைகளினின்றும், திறம்பா-வேறுபடாத, செய்கை - செய்கைகள், அழிவரோ-கெடப்பெறுவார்களோ, (அதாவது சத்தியந் தப்புவார்களோ; ஒரு போதும் இவற்றைக் கைவிடமாட்டார்கள்; ஆதலின் நீ ஒழுக்கந்தவறாதவனாதலின் தன்னைவிட்டு நீங்கி அன்னியனிடம் சேர்ந்த நகரத்தில் இருக்கக் கூடாதென்று செல்கின்றாய்; [எ-று.]

சமுத்திரம் கரை புரண்டாலும், வேதம் சன்மார்க்கத்தை விட்டு நீங்கினாலும், உலகத்தவ ரெல்லோரும் நடு நிலைமையை இழந்து விட்டாலும் செங்கோன்மன்னர் ஒழுக்கத்தையும் சத்தியத்தையும் கைவிட மாட்டார்கள்; ஆதலின், நீ தருமந் தவறாத செங்கோன் மன்னனாதலின், உன்னிடம் எத்தகையரையும் யுத்தத்தில் ஜயிக்கும் வன்மையிருந்தும், நீயே மனமிசைந்து சூதாடி எல்லாவற்றையும் தோற்று விட்டபடியால் யுத்தஞ்செய்து அவற்றைக் கைப் பற்றுதலும், இந்நகரத்திலிருப்பதும் நீதிக்கு விரோதமாமென்று கருதி இப்போது வெளியேறிச் செல்கின்றாய் என்பது இதன் கருத்து. சமுத்திரம் எல்லை கடவாது; வேதம் ஒழுங்கான மார்க்கங்களைக் கூறுவதன்றிக் கெட்ட மார்க்கங்களைக் கூறாது; செங்கோன் மன்னன் ஆட்சிக்குட்பட்ட உலகம் நடு நிலைமை தவற மாட்டாது; எனினும் ஒரு சமயம் இவைகள் தங்கள் இயற்கையை விட்டு நீங்கினும் நீங்கும், செங்கோன் மன்னர் மாத்திரம் எப்பொழுதும் சத்தியந் தவற மாட்டார்கள் என்க.

கரை இழந்தால், நெறிபிறழ்ந்தால், நடுவிழந்தால் என்பவற்றில் உயர்வு சிறப்பும்மைகள் தொக்கன. சீலம் ஒழிவரோ-ஐந்தாம் வேற்றுமைத்தொகை; நீக்கப் பொருளது. ஒழிவரோ அழிவரோ என்பன எதிர்மறைப் பொருளன; ஒழிய மாட்டார்கள் அழியமாட்டார்கள் என்னும் பொருளில் நின்றன. 'செய்கை அழிவரோ' என்பதில் சினைவினை முதலொடு முடிந்தது. இதுவும் அடுத்த செய்யுளும் குளகமாதலின் இதிலுள்ள விஷயங்கள் அடுத்த செய்யுளில் 'என்றுரைத்தார்' என வருவதனோடு சேர்ந்து முடியும்.

இதுவுமது.

226. வடியேறு கூரிலைவேன் மன்னாவோ உன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை எழுந்தருள்க வென்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து.

[இ-ள்.] (ஆயினும்) வடிஏறு - கூர்மைதங்கிய, கூர் - நுனி பொருந்திய, இலை-வெற்றிலை வடிவமான, வேல்-வேலாயுதத்தை யுடைய, மன்னா-அரசனே, ஓ-ஐயோ!, உன்றன்-உன்னுடைய, அடியேங்கட்கு - அடியார்களாகிய எங்களுக்கு, ஆதரவுதீர-(நின் மீதுள்ள) ஆசை பூர்த்தியடையும்படி, கொடி-துவஜங்கள் விளங்கா நின்ற, நகரில்-இந்தப்பட்டணத்தில், இன்று இருந்து-இன்றைக் குத் தங்கி, நாளை-நாளைக்கு, எழுந்தருள்க-புறப்பட்டுச்செல்வாயாக, என்று-என்பதாய், வென்று-பகைவர்களை ஜயித்து, இருந்த-இப்போது வாளாவிருந்த, தோளான்-புயங்களையுடைய நளனது, தாள் வீழ்ந்து-பாதங்களில் வீழ்ந்து பணிந்து, உரைத்தார்-கூறினார்கள்; [எ-று.]

நகரமாந்தர்கள் நளன்மீது மிக்க விசுவாச முடையவர்களா தலின் அவன் பிரிவுக்கிரங்கி மேற் கூறியபடி சொன்னதோடு மீண் டும் அரசனை நோக்கி, "மன்னனே! ஐயோ! எங்களுக்கு உன்னை விட்டுப் பிரிய இஷ்டமில்லை; எனினும் நீ அவசியம் வெளியேறியே தீரவேண்டும்; என்றாலும் நீ இன்று இங்கே யிருந்து நாளைக்குப் போகும்படி விரும்புகின்றோம்; ஆதலின் எங்கள் விருப்பப்படி இன்றைக்கு இந்நகரிலிருந்து நாளைக்குச் செல்வாயாக" என்று அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிக் கூறினார்கள் என்க.

வேல் வெற்றிலை வடிவமாக இருத்தலின் அதனை இலைவேல் என்று கூறுதல் மரபு. மன்னாவோ என்பதில் ஓ-இரங்குதற்பொரு ளில் வந்தது. அடியார்-பாதத்தைச் சார்ந்தவர்கள்; அதாவது பாதத்தை வணங்கக்கூடியவர்கள்; ஆதலின், 'அடியேங்கள்' என் பது, 'பாதத்தைச்சார்ந்தவர்கள்' என்று பொருள்படும். 'கொடி நகரில்' என்பதை, கொடு இ-நகரில் எனப் பிரித்துக் 'கொடி தாகிய இந்த நகரில்' எனப்பொருள் கூறினும் அமையும்; மன்னனை யிழந்த படியால் அவர்கள் அதனைக் கொடிய நகர் என்றாரென்க. எழுந்தருள்க என்பதற்கு எழுந்து கிருபை செய்க என்பது நேர் பொருள்; அஃதிங்கே எழுந்து செல்க என்னும் பொருள்; பயந்து நின்றது; பெரியோர் செயலை உரைக்குங்கால் அதனோடு அருள் என்னும் பதஞ்சேர்த்துரைத்தல் இயல்பு; உயர்வு குறித்து அவ் வாக்கியம் சேர்க்கப்படும். அருள்க வியங்கோள். நளன் தோள் முன்னே பகைவரை ஜயித்து அரசாட்சியைப் பெற்று விளங்கிற்று; இப்பொழுது சூதாட்டத்தில் அரசிழந்து போனபடியால் அத் தோள் யுத்தஞ் செய்தற்கியலாமலிருந்ததுபற்றி; "வென்றிருந்த தோளான்" என்றாராசிரியர்.

நளன், நகரில் ஒருநாளிருக்கலாமா வெனத்
தமயந்தியிடம் வினவுதல்.

227. மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—இன்றிங்
கிருத்துமோ வென்று னிளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனதில் வைத்து.

(இ-ள்.) (நகரமாந்தர்கள் அவ்வாறு கூறவே தமயந்தியும் மனம் வருந்தினாள்; அப்போது நளன்) மாநகர்வாய்-சிறந்த நகரத் தினிடமாக, நின்று-(மேற்கூறியபடி தனக்குமுன்னே) நின்று, உரு குவார்-மனங்கலங்குகின்ற நகரமாந்தர்களுடைய, கண்ணின் நீர் நோக்கி-கண்களிலிருந்து வடியும் நீரைப்பார்த்தும், இளங்குதலை- இளமையான மழலைச் சொற்களையுடைய, வாயாள்-வாய் பொருந்

தியவளாகிய தமயந்தியினது, வருத்தம்-வருத்தத்தை, தன்மனதில் வைத்து-தன்னுடைய மனத்திலிருத்திச் சிந்தித்தும், (அவர்க்குச் சிறிது தேறுதலுண்டாக்கவேண்டு மென்ற எண்ணம் தனக்கேற் பட்டபடியால் அவர்களுடைய விருப்பப்படியே அந்த ஒருநாள் இருந்து போகலாமெனக் கருதி) மன்றல்-வாசனை பொருந்திய, இளங்கோதை-இளமையான கூந்தலையுடைய தமயந்தியினது, முகம் நோக்கி-முகத்தைப்பார்த்து, இன்று - இன்றைக்கு, இங்கு-இவ் விடத்திலே, இருத்துமோ-இருப்போமா, என்றான்-என்று தமயந்தி திருமுகத்தை நோக்கி வினவினான்; [எ-று.]

நகரமாந்தர் ஒருநாள் அங்கே யிருந்து போகவேண்டு மென்று நளனைக் கேட்டுக்கொண்டபோது, தமயந்தி அவர்களுடைய பரிதாப நிலைமையையும் தனக்கும் தன்நாதனுக்கும் நேர்ந்த துன்பத்தையும் எண்ணி மனம் வருந்தினாள். அப்போது நளன் அவள் அவ்வாறு வருந்துவதையும், நகரமாந்தர்கள் கண் கலங்குவதையும் பார்த்து அவர்களுக்குச் சற்றுத் தேறுதலுண்டாகும்படி அங்கே ஒருதினம் இருந்து செல்லலாமெனக்கருதித் தமயந்தியின் முகத்தை நோக்கி, 'இவர்களின் விருப்பப்படி இங்கே இருப்போமா?' என்று வினவி னான் என்பது இதன் கருத்து. அந்நகரத்திலிருப்பது நீதியன்றெ னத் தெரிந்திருந்தும் நளனுக்கு அம்மனிதரைக் கலங்க விட்டுச் செல்ல மனமிசையவில்லை யாதலின், அவன் இவ்வாறு ஒருநாள் தங்கக் கருதி வினவினான் என்க.

இளங்கோதை-பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொ ழித்தொகை. நகர்வாய்-ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். உருகுவார்-வினையாலணையும் பெயர். இருத்தும்-உளப் பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று. இதில், தும்-எதிர்காலங் காட்டும்விகுதி; ஈற்றோகாரம் வினாப்பொருளில்வந்தது; வருத்தமோ என்பதிலுள்ள ஓகாரம்-அசை.

நகர மாந்தர்கள் நளனைக் கொண்டாடக் கூடா தென்று முரசறையும்படி புஷ்கரன் கட்டளை யிடல்.

228\. வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடி னார்தம்மைக் கொல்லேன்று—தண்டா
முரசறைவா யாங்கென்றான் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்த னழன்று.

[இ-ள்.] (நளன் செய்கை அப்படியிருக்கும்போது அவனை நகர மாந்தர்கள் கொண்டாடுகிறார்களென்பதை யுணர்ந்து) அரசு அறியா-அரசாட்சி முறைமையைத் தெரிந்துகொள்ளாத, வேந்தன்-மன்னனாகிய புஷ்கரன், முன்னே-முன்பு சூதாடுங்காலத்தில், முனிக்

தாங்கு நளனிடத்தே கோபித்துக்கொண்டதுபோல, அழன்று-இப்பொழுதும் கோபித்து, (உடனே முரசறைவோனை விளித்து அவனிடத்தில்) மாநகரில்-இந்தச் சிறந்த நகரத்தில், வண்டு ஆடும்-வண்டுகள் மகரந்தமுண்ணும் பொருட்டு நெருங்கி ஆடிக்கொண்டிருக்கின்ற, தார்-பூமாலையையணிந்த, நளனை-நளன் என்பவனை, கொண்டாடினார் தம்மை-உபசரித்தவர்களை, யாரேனும்-அவர்கள் எத்தகையராயிருந்தாலும், கொல் என்று-கொல்லக்கடவாயென்று (ஒரு கொலையாளிக்குக் கட்டளையிட்டு அவ்விஷயம் நகரத்தில் எல்லோருக்கும் தெரியும்படி) தண்டா-தடைப்படாத, முரசு-பேரிகையை, அறைவாய்-முழக்கக்கடவாய், என்றான் - என்று சொன்னான்; [எ-று.] (கொல்வமெனை என்பதும் பாடம்)

நளனை மேற் கூறியவாறு நகரமாந்தர்கள் உபசரிக்க அவன் அவர்களுக்குத் தேறுதல் சொல்லி ஒருநாள் அங்கே இருக்க நினைத்துத் தமயந்தியிடம் அப்படி யிருக்கலாமா வென்று வினவிக் கொண்டிருக்குஞ் சமயத்தில், அங்ஙனம் நகரமாந்தர் அவன் பொருட்டிரங்குவதைப் புஷ்கரன் உணர்ந்து அதற்காகப் பொறாமைகொண்டு, 'அவனைக்கொண்டாடுகிறவர்கள் எவர்களாயிருந்தாலும் அவர்களைக் கொல்லும்படி கொலையாளிக்குத் தெரிவித்து அதனை நகரத்தார் உணர்ந்துகொள்ளுமாறு எங்கும் பறையறைய வேண்டும்' என்று முரசறைவோனுக்குக் கட்டளையிட்டான் என்பது இதன் கருத்து. அந்தப் புஷ்கரன் ஆட்சி முறை தெரியாதவனாதலின், இங்ஙனம் அநியாயமான கட்டளையைப் பிறப்பித்தான்; அது குறித்தே ஆசிரியர் அவனை, 'அரசறியா வேந்தன்' என்றார். ஒருவருமே நளனை உபசரிக்கக் கூடாதென்பது தோன்ற அவன், "யாரேனும் கொல் என்று முரசறைவாய்" என்றான். புஷ்கரன் முன்னே சூதாட்டத்தில் அடிக்கடி நளனிடத்தே கோபஞ்செலுத்தி வந்தான், எனினும், அந்நளன் யாவற்றையுந் தோற்று வறிஞனானபோது இரக்கங்காட்ட வேண்டும்; அப்படி யிருந்தும் அவன் இரங்காமல் அத்தருணத்திலும் முன்போலவே கோபித்தான்; இது குறித்தே "முன்னே முனிந்தாங்கு அழன்று" என்றார் ஆசிரியர், இக்குணங்களால் புஷ்கரனது கொடுங்கோன்மை விளங்கும்; 'வண்டாடுந்தார்' என்ற விசேடணம் நளனுக்குக் கூறியது அவன் முன் இருந்த நிலைபற்றி யென்க; இவ்வாறு கூறுதல் உபசார வழக்கெனப்படும். எவர் தடுத்தாலும் கேளாமல் இக்கட்டளையை நிறைவேற்ற வேண்டு மென்பது தோன்றப் புஷ்கரன் முரசை, 'தண்டாமுரசு' என்று கூறினான்.

இச்செய்யுளில் பொருண் முடிபுக் கேற்ப, 'உடனே முரசறைவோனை விளித்து அவனிடத்தில்' என்பது முதலிய சில வாக்கியத் தொடர்கள் இசை யெச்சமாக வருவித் துரைக்கப்பட்டன, ஆங்கு-

அசை; இதற்கு 'அவ்விடம்' எனப் பொருள் கொண்டு, 'மனிதர் கொண்டாடும் அவ்விடத்தில்' என உரைப்பினும் பொருந்தும். இதில், 'முரசறைவாய்' என்று புஷ்கரன் முரசறைவோனுக்குக் கட்டளையிட்டான்; எனவே அவன் அங்ஙனமே அரச கட்டளைப் படி முரசறைந்தான் என்பதும் பெறப்படும்.

மேற்கூறியபடி பறையறைந்ததைக் கேட்ட
நளன் சொல்லுதல்.

229. அறையும் பறையரவங் கேட்டழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனவுரைத்தான்
மன்னகற்றுங் கூரிலைவேன் மன்.

[இ-ள்] (அவ்வாறு முரசறைவோன் பறை முழக்கியதைக் கேட்டுத் தமயந்தி தன் பேதைமைக் குணத்தினால் 'நமக்கும் புஷ்கரனால் இக்கதி நேர்ந்ததே' என்று வருந்தினாள்; அச்சமயத்தில் மேலும் அவன் பறை யறைந்து கொண்டே வந்தான்; அங்ஙனம்), அறையும்-அடிக்கப்படுகின்ற, பறை-முரசென்னும் வாத்தியத்தின், அரவம்-ஒலியை, கேட்டு-செவிக்கொண்டு, மன்-பகையரசர்களை, அகற்றும்-போரில் நிலைக்கொள்ளாமல் பாய்ந்து நீக்குகின்ற, கூர்-கூர்மையுள்ள, இலை-வெற்றிலை போன்ற, வேல்-வேலாயுதத்தையுடைய மன்-நளமகாராஜன், (விஷயத்தையுணராமல் புஷ்கரன் மீது மேற்கூறியபடி வெறுப்புற்று வருந்திய) பிறை நுதலாள்-இளஞ் சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய தமயந்தியினது, பேதைமையை-அறியாமையை, நோக்கி-பார்த்து, அழிந்து-மனங்கலங்கி, நைந்து-வருந்தி, முறுவலியா-புன்னகை புரிந்து, இந்நகர்க்கு-இந்த நகரத்திற்கு, (ஏற்பட்ட) ஈது-இத்துன்பமானது, என் பொருட்டா-என் நிமித்தமாக, (அதாவது என்னுடைய செய்கை காரணமாகவே) வந்தது-வந்துசேர்ந்தது,(ஆதலின்,நீ அறியாமையால் புஷ்கரன் மீது வெறுப்புற்று வருந்தாதே) என உரைத்தான்-என்று சொன்னான்.

மேற்கூறியவாறு பறையறைவோன் முரசறைந்ததைக்கேட்டுத் தமயந்தி இதன் உண்மையான காரணத்தை உணராமல், "இந்தப் புஷ்கரன் மகா கொடியன்; இப்படியும் முரசறைவித்தானே" என்று அவன்மீது வெறுப்புற்று வருந்தினாள்; அப்போது நளன் அம்முரசொலியைக் கேட்டதோடு அத்தமயந்தியின் உள்ளக் குறிப்பையும் உணர்ந்து அவள் பேதைமையினால், உண்மைக் காரணத்தையுணராமல் அவ்வாறு கருதி வருந்துகின்றாளென்று நினைத்து அதன் பொருட்டுத் தானும் வருந்தி, அக்கஷ்டத்திற் கேற்பட்ட உண்மைக் காரணத்தை அவளுக்குணர்த்தத் தொடங்கிப் புன்

சிரிப்புடன் அவளை நோக்கி, "காதலி! நீ புஷ்கரன் மீது வெறுப்புற்று வருந்துவது அறியாமையாகும்; இக்கஷ்டத்திற்குக் காரணம் நானே; நான் சூதாடப் போனதனாலேயே நமக்கும் நகர்க்கும் இத்துன்பம் நேர்ந்தது; இதுவும் நம் தலைவிதியால் ஏற்பட்டதாகும்; ஆதலின் நீ வருத்த மொழிவாயாக" என்று கூறினன் என்க. நளன் புன்சிரிப்புக் கொண்டது தமயந்தியின் பேதைமை குறித்தாம்; அழிந்துநைந்தது அவள் வருத்தத்திற்கும்,நகரத்தார் வருத்தத்திற்குமாக வெனக் கூட்டிப்பொருள் கொள்ளலாம்.

அழிதல்-உறுதிகெடல்; அது கலக்கத்தை யுணர்த்தி நின்றது. நைதல்-நசிதல்; அது வருந்துதலை யுணர்த்தி நின்றது; வருந்துதலாவது மனவேதனையடைதலாம். வேல், மன்னரை அகற்றுதலாவது: அவர் மேற் பாய்ந்து யுத்தஞ்செய்ய வொட்டாது துரத்துதலாம். பறை-வாத்தியப் பொதுப் பெயர்; அஃதிங்கே முரசை யுணர்த்தி நின்றது; 'அறையும் பறை' என்பதில் செயப்பாட்டுவினை, செய்வினையாக மாறி வந்தது; "செயப்படு பொருளைச் செய்தது போலத், தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுளுரித்தே" என்பது சூத்திரம். முறுவலியா-செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். முறுவலி-பகுதி; ய்-சந்தி; ஆ-வினையெச்ச விகுதி.

நளன், மனைவி மக்களொடு நகரை விட்டு வெளியேறிப் போதல்.

230. தன்வாயின் மென்மொழியே தாங்கினா னோங்குநகர்ப்
பொன்வாயில் பின்னாகப் போயினான்—முன்னாளில்
பூமகளைப் பாரினொடும் புல்லினான் றன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு.

[இ-ள்.] (அவ்வாறு கூறிய பின்பு இனி நகரத்தி லிருப்பது தகாதென்று) முன்னாளில்-இதற்கு முந்திய நாட்களில், பூமகளை-தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமியை, பாரினொடும்-பூமி தேவியுடனே, புல்லினான்-சேர்ந்திருந்தவனாகிய நளன், தன் மகனை-தன்னுடைய புத்திரனையும், கோமகளை-இராஜ குமாரத்தியாகிய தன் புத்திரியையும், தேவியொடு-தன் மனைவியான தமயந்தியுடனே, கொண்டு-அழைத்துக்கொண்டு, தன் வாயில்-தன்னுடைய வாயிலே, மெல்மொழியே-மிருதுவான வார்த்தையையே, தாங்கினான்-கொண்டு கூறியவனாகி, ஓங்கும் நகர்-உயர்ந்த அந்நகரத்தின், பொன் வாயில்-பொன்னாலியற்றப்பட்ட கோட்டை வாயிலானது, பின் ஆக-தனக்குப்பின்னே யிருக்கும்படி, (அதாவது கோட்டை வாயிலைக் கடந்து) போயினான்-அந்நகரை விட்டு நீங்கிப் போனான்; [எ-று.]

அதன்மேல் நளன், தன்பிரிவு குறித்து இரங்கினவர்களிடத்து மிருது வார்த்தைகளையே கூறி அவர்களைச் சமாதானப் படுத்தித் தன் மனைவி மக்களுடனே கோட்டை வாயிலைக் கடந்து திரும்பிப் பாராமல் போயினனென்பது இதன் கருத்து. தான் அங்கே தங்கினால் குடிகள் தன்னை உபசரிப்பார்களென்றும், அதை யுணர்ந்தால் புஷ்கரன் அவர்களை வருத்துவான் என்றும், தன்னால் குடிகளுக்கு வீண்கஷ்ட முண்டாகக் கூடாதென்றும் கருதியே நளன் சிறிது நேரங்கூட அங்கே தங்காமல் விரைந்து வெளியேறிச் சென்றானென்க. புஷ்கரன் பறையறைவித்ததே இவனை இவ்வாறு புறப்படும்படி செய்தது. துக்கமுடையவர் தொனி குறைந்தே பேசுவர்; ஆதலின் நளனும் துக்க மேலீட்டால் மெல்லிய வார்த்தைகளையே பேசி நகராந்தரக்குத் தேறுதல்கூறிச் சென்றான். 'பொன் வாயில் பின்னாகப் போயினான்' என்றதனால், 'பொற் கோட்டை வாயிலானது தன் பின்பக்கத்திலிருக்கும் படி அதற் கப்பால் வெளியேறிப் போயினான்' என்பது பெறப்படும். "முன் நாளில் பூமகளைப் பாரினொடும் புல்லினான்" என்பதை விஷ்ணுவெனக் கொண்டு, 'அந்த விஷ்ணுவே யென்னும் நளன், அவன் இராமாவதாரகாலத்தில் காட்டிற்குப் புறப்பட்டுப்போனது போலப்போயினான்' எனவும் உரைக்கலாம். 'இராமாவதார காலத்திற் காட்டிற்குப் புறப்பட்டதுபோல்' என்பது குறிப்பாற் கொள்ளப்படும். பூமகளுக்கும் பார்மகளுக்கும் நாயகன் விஷ்ணு; அரசர்களை இங்ஙனம் விஷ்ணு அம்சமாகக் கூறுவதும் ஒரு மரபு.

தாங்கினான்-முற்றெச்சம். மகனை, மகளை என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. ஓங்குநகர்-வினைத்தொகை நிலைத்தொடர்.

நளன் போயின பின் நகரமிருந்த நிலைமை.

231. கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முரசறைந்து
வெற்றியொடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்றும்
இழவு படுமாபோ லில்லங்க டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு.

[இ-ள்.] (நளன் அவ்வாறு சென்ற பிறகு மேற்கூறியபடி) புட்கரன்-புஷ்கர மன்னன், கொற்றவன் பால்-நளமகாராஜனிடத்தில், செல்வாரை-உபசாரம் புரியப் போகின்றவர்களை, கொல்வான்-கொலை செய்யுமாறு, முரசு அறைந்து-பேரிகையை நகரத்தில் முழக்குவித்து, வெற்றியொடு-சூதாட்டத்தில் அடைந்த ஜயத்துடனே, வீற்றிருப்ப-சிம்மாசனத்தில் பெருமையுடனே தங்கியிருக்க, (அக்காலத்தில் அப்பட்டணம்) முற்றும்-முழுதும், இழவுபடும் ஆறு

போல-இழவுண்டான விதத்தைப்போல்,(ஆகி) இல்லங்கள்தோறும்-வீடுகள் ஒவ்வொன்றிலும், குழவி-இளம் பிள்ளைகளும், பால்-பாலை, கொண்டு-வாயிற் கொண்டு, உண்டில-உட்கொண்டில; [எ-று.]

நளன்பாற் சென்றவரைக் கொல்லுமாறு முரசறைவித்துப் புஷ்கரன் வெற்றியுடன் சிம்மாசனத்தில் ஏறியிருக்க, அந்நளன் சென்ற பிறகு, அவன் பிரிந்த வருத்தத்தால் அந்நகரத்தில் இழவு பட்ட பாடாகக் குழந்தைகளும் பாலுண்ணாமலிருந்தன வென்பது இதன் கருத்து. துன்பம் நேர்ந்த காலத்தில் மனிதர் வருந்தும் போது குழந்தைகளும் முகம்வாடி ஆகாரங் கொள்ளாமல் கிடந்தல் இயல்பு. குழந்தைகள் தாங்களிருக்கு மிடத்திலுள்ள மனிதர்கள் எவ்வித நிலைமையை அடைகிறார்களோ அவ்வித நிலைமையையே (அதாவது சந்தோஷத்தை யடைந்தால் சந்தோஷத்தையும், விசாரத்தை யடைந்தால் விசாரத்தையும்) அடைவது உலக அனுபவம்; ஆதலின் வீடுகள் தோறும் இழவுபட்ட பாடாக மனிதர் வருந்தும்போது, குழந்தைகளும் முகம்வாடிப் பாலுண்ணாமற் கிடந்தனவென்க. இதனால், நகரமாந்தர் நளன் பிரிவு குறித்து வருந்தினமை கூறப்பட்டது.

கொல்வான்-வினையெச்சம். முரசறைந்து-பிறவினை தன்வினையாகமாறி வந்தது. வீறு-பெருமை; இதனோடு ஏழாம் வேற்றுமை இல் உருபு புணரும் போது இது வீற்றில் என்றாகும்; இது வருமொழி யோடு புணருங்கால் இல்லுருபு கெட்டோ, தொகுத்தலாகியோ வீற்று என நிற்கும்; இங்ஙனம் நின்றதனோடு இருந்தான் என்னும் வருமொழி புணர வீற்றிருந்தான் என்றாயது; ஆகவே வீற்றிருந்தான் என்பது பெருமையான நிலையில் இருந்தான் என்று பொருள்படும்; இழவு-தொழிற் பெயர்; அதாவது சாக்காடு என்பதாம்; இறந்தவரை மற்றையர் இழந்து விடுதலால் இது பெரும்பான்மையும் சாக்காட்டை யுணர்த்தியே நிற்கும். இங்கே நளனையும் அம்மனிதர் இழந்துவிட்டதால் இச்செய்கைக்கு அவ்விழவு உவமை கூறப்பட்டது. படுமாறு என்பது, படுமா என ஈறு தொக்கி நின்றது. தோறும்-பன்மையில் ஒருமையை விதந்து காட்டும் ஒருவகை இடைச்சொல்; இங்ஙனம் விதந்து காட்டிப் பன்மைப் பொருளையே உணர்த்தி நிற்கும். புட்காறும் என்பதில் உம்மை-அசை. குழவி-சாதியொருமை; இதில் சிறப்பும்மை தொக்கது. உண்டிலவே என்பதில் ஏகாரம் தேற்றம். உண்டில-உடன்பாட்டெதிர்மறை வினைமுற்று.

நளன் செல்லும்போது வழியில்
குழந்தைகள் கூறியது.

232. சந்தக் கழற்று மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி—எந்தாய்

வடங்தோய் களிற்றாய் வழியான தெல்லாங்
கடந்தோமோ வென்றார் கலுழ்ந்து.

[இ-ள்.] (அவ்வாறு நகரத்தார் வருந்த நளன் மனைவி மக்களுடனே சென்றபோது அவனுடைய பிள்ளைகள் நடக்க முடியாமல் அந்நளனை நோக்கி) சந்தம்-அழகு பொருந்திய, கழல்-வீர கண்டையை அணிந்த, தாமரை-தாமரைமலர்போன்ற பாதங்களும், சதங்கை-பாதகிண்கிணியை, அணி-அணிந்த, பைந்தளிரும்-பசுமையான தளிர்போன்ற பாதங்களும், நோவ - வருந்தியதனால், பதைத்து-உடல் துடித்து, உருகி-நெஞ்சங் கலங்கி, கலுழ்ந்து-அழுது, எந்தாய்-எமது தந்தையே!, வடங்தோய்-கச்சைக்கயிறு கழுத்திற் சேர்ந்திருக்கின்ற, (அதாவது கழுத்தில் கச்சைக் கயிற்றை அணிந்த) களிற்றாய்-யானையை யுடையவனே!, வழியான தெல்லாம்-வழி முழுவதையும், கடந்தோமோ-நாம் தாண்டி வந்து விட்டோமோ?, என்றார்-என்று வருத்தம் பொறுக்கமுடியாமல் வினவினார்கள்; [எ-று.]

பிள்ளைகள் அரண்மனையில் மிக்க சௌக்கியத்துடனிருந்தவர்களாதலின் நெடுந்தூரம் நடக்க முடியாமல் நொந்து அழுது தந்தையிடம் இங்ஙனம் உரைத்தார்கள். ஒரு காரியத்தால் வருந்துவோர் அக்காரியம் தீர்ந்துவிட்டதோ இல்லையோ என்ற சந்தேகத்தால் அதன் முடிவையே சிந்தித்துக்கொண்டு 'அஃதாகிவிட்டதா? இவ்வளவுதானா?' என்று அடிக்கடி வினவுதல் மனிதர் இயற்கை யாதலின், நடத்தற்கஞ்சிய குழந்தைகளும், 'இன்னும் நெடுந்தூரம் நடக்கவேண்டுமோ' என்ற அச்சத்தால், 'வழியான தெல்லாம் கடந்தோமோ' என்று கேட்டார்கள். 'என்தாய்' என்பதற்கு, 'எமது தாயே' என்றும், களிற்றாய்-என்பதற்கு, 'யானையையுடைய தந்தையே' என்றும் பொருள் கொண்டு, அப்பிள்ளைகள் தாயையும் தந்தையையும் விளித்து அங்ஙனம் கூறினார்கள் எனினும் அமையும். பயங்கரமாகிய காட்டு மார்க்கஞ் செல்லுங் காலத்தில் அவ்விடத்தின் விசேஷங்களைப்பற்றி வெளிவர்த்தமானங்களை அறிந்த ஆண் மக்களிடமே வினவுதல் கிரமமாதலின், இரண்டு விளிகளையும் தந்தைக்கே ஏற்றி அப்பிள்ளைகள் அவனிடமே வினவினார்கள் என்பதே சிறப்புடைத்தாம்; இனிப் பெண்குழந்தை தாயை விளித்துரைத்த தென்றும், ஆண் குழந்தை தந்தையை விளித்துச் சொன்னதென்றும் கொள்ளலுமொன்று; அங்ஙனங் கொள்ளுமிடத்து இருவர் வினைகளும் ஒரு தன்மையனவாய் 'என்றார்' என்னும் பயனிலையோடு முடிந்த வென்க. 'களிற்றாய்' என்றதனால், 'நீ யானையையுடையவனா யிருந்தும் எங்களை இவ்வாறு நடக்கும்படி செய்தனையே' என்ற வினைக்குறிப்பும் ஈண்டு தொனிக்கும்.

கழல் ஆண்குழந்தை பாதத்திற்கும், சதங்கை பெண் குழந்தைபாதத்திற்குமாம். தாமரை, தளிர் இரண்டும் பாதங்கட்கு உவமையாகு பெயர்கள்; இவற்றுள்ளும் தாமரை ஆண்குழந்தை பாதத்திற்கும், தளிர் பெண்குழந்தை பாதத்திற்குமாம். எந்தாய்-என்னும் விளி, தந்தைக்குக் கொள்ளும் போது எந்தை ஈற்றை காரம் ஆய் எனத் திரிந்து வந்ததெனவும், தாய்க்குக் கொள்ளும் போது ஈறு இயல்பாய் வந்ததெனவும் கொள்ளவேண்டும்; 'இம் முப்பெயர்க் கண் இயல்பும் ஏயும், இகர நீட்சியும் உருபாமன்னே''. "ஐயீறு பொதுப் பெயர்க்கு ஆயும் ஆவும், உருபாம் அல்லவற்றாயு மாகும்" என்பன (நன்-பெ-48-49-ஆம்) சூத்திரங்கள். களிற்றான் என்பது இறுதி யவ்வாய்க் களிற்றாய் என விளியாயிற்று; (நன்-பெ-50-ஆம்) சூத்திரம் பார்க்க. வழியானது என்பதில், ஆனது முதல் வேற்றுமைச் சொல்லுருபு. வழியானதெல்லாம் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலின் வழியென்னும் பெயர் செயப்படு பொருளாயிற்று. "ஒருமையிற் பன்மையும் பன்மையினொருமையும், ஓரிடம் பிறவிடம் தழுவலு முளவே" என்னும் (நன்-பொ-29-ஆம்) சூத்திரவிதி பற்றி 'வழியானதெல்லாம்' என்பதில் ஒருமையிற் பன்மை வந்தது; இது வழுவமைதியின்பாற்படும்.

மக்கள் கூறியதைக் கேட்டு நளன் வருந்துதல்.

233. தூயதன் மக்க டுயர் நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதுந்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் துயராற் புலர்ந்து.

[இ-ள்.] (அங்ஙனம் அவர்கள் கூறியவுடனே) செம்மை-நன்மையையே, புரிவான்-செய்பவனாகிய நளமகாராஜன், தூய-பரிசுத்தமுள்ள, தன்-தன்னுடைய, மக்கள்-அந்தப்பிள்ளைகளின், துயர்-துன்பத்தை, நோக்கி-பார்த்தும், சூழ்கின்ற-வளைகின்ற, மாயவிதியின்-வஞ்சனையாகிய விதியினது, வலி நோக்கி-வல்லமையை எண்ணியும், (அவற்றாலேற்பட்ட) துயரால்-மனவியாகுலத்தினாலே, புலர்ந்து-நெஞ்சுலர்ந்து, யாதும் (அச்சமயத்தில் செய்வது) எதுவும், தெரியாது-தோன்றாமல், சித்திரம்போல்-(எழுதப்பட்ட) உருவத்தைப் போல, நின்றிட்டான்-நின்றான்; [எ-று.]

மக்கள் கஷ்டத்தையும், அக்கஷ்டத்தை உண்டாக்கிய தலைவிதி வலிமையையும் நோக்கி நளன் துயரமுற்று ஒன்றுந்தோன்றாமல் சித்திரம்போல் அசைவற்று நின்றான் என்பது இதன் கருத்து. தூய தன் மக்கள் என்றதனால் அவர்கள் அத் துன்பத்தை அடையக் கூடாதவர்கள் என்பது பெறப்படும். ஆதலின், நளன், "இப்போர்ப்

பட்ட பிள்ளைகளும் துன்பத்தை அடைகின்றார்களே; இது விதி வலியினாலேயே ஏற்பட்டது; அதனால் இதனை நீக்குதல் அரிதாம்'' என்று இருதன்மைகளையும் நோக்கி வருந்தி ஒன்றுஞ் சொல்ல வியலாது நின்றானென்க. விதி மனிதர்க்குத் தெரியாமல் வஞ்சனையாக வந்து அவர்களைப்பற்றி வருத்தக் கூடியதாதலின், அதனை "சூழ்கின்ற மாயவிதி'' என்றார் ஆசிரியர். சித்திரம்-படத்தில் வரையும் உருவம்; அஃதசையாமலிருப்பது போல நளனும் வாய் பேசாமலும், அவயவங்களை அசைக்காமலும் நின்றதனால் அதனை அவனுக்குவமை கூறினார் புலவர்; மிகுந்த துக்கத்தால் மனிதர் அசைவற்று நின்று விடுதல் உலக இயற்கை.

விதியின் வலிநோக்கி என்பதில் நோக்குதல் எண்ணுதற் பொருளில் வந்தது; இத்தகைய இடங்களில் உபயோகிக்கப்படும் நோக்கம் நோக்கானோக்கம் எனப்படும். யாதும்-என்பதில் உள்ள உம்மை இழிவு சிறப்புப் பொருளது. நின்றிட்டான் என்பதில் இடு துணைவினை யெனப்படும்; இதனை அசைநிலையெனவுங் கூறுவர் பண்டைய விலக்கண நூலார்.

தமயந்தி தன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தந்தை
வீட்டிற் சேருமாறு நளன் அவளிடம்
கூறுதல்.

234. காத லிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் றிருநகர்க்கே மீளேன்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான்.

[இ-ள்.] (மேற்கூறியபடி ஒன்றுந் தோன்றாமல்நின்ற அந்நளன் அச்சமயத்தில் தனக்கோரெண்ணம் உதித்தமையால்) விண்ணவர் முன்-தேவர்களுக்கெதிரில் (முன்னே) தாமம்-மணமாலையை, புனைவாளை-(தனக்குச்) சூட்டியவளாகிய தமயந்தியை, (நோக்கி) மாதராய்-அழகுள்ளவளே!, காதல்-அன்புள்ள, இருவரையும்-நம்முடைய இரண்டு பிள்ளைகளையும், கொண்டு-நாம் அழைத்துக்கொண்டு, கடும்-கடுமையாகிய, சுரம்-(இனிமேல் எதிர்ப்படும்) பாலை நிலத்தில், போக்கு-போதல், ஏதம் உடைத்து-குற்றமுடையதாம், (ஆதலின்) இவரைக்கொண்டு-இப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, வீமன்-உன் தந்தையாகிய வீமராஜனது, திரு-அழகிய, நகர்க்கே-நகரத்துக்கே, நீ மீள் என்றான்-நீ திரும்பிச்செல்வாயாக என்று கூறினான், [எ-று.]

நளன் பிள்ளைகள் படுங்கஷ்டத்தைப் பார்த்து, "இனி இவர்கள் பாலை நிலங்களிலும் காடுகளிலும் நடந்து வந்தால் இன்னும்

அளவில்லாத கஷ்டங்களை அடைவார்கள்; அவர்களோடு தமயந்தியும் பெண்பாலாகையால் மிக வருந்துவாள்; ஆதலின் இவர்களை வீமராஜனுடைய நகர்க்கனுப்பி விட்டால் இவர்கள் சௌக்கியமாயிருப்பார்கள்; நாம் எங்கேனும் செல்லலாம்" என்று கருதி அவளை நோக்கி 'நீ குழந்தைகளை அழைத்துக் கொண்டு உன் தந்தை வீட்டிற் கேகுவாயாக' என்று இவ்வாறு கூறினான் என்க. மாமனில்லஞ் சேர்ந்திருத்தல் அறிவுடையோர்க் கழகன்றாதலின், அவன் தானும் அங்குச் செல்வதற்கு விரும்பவில்லை. மனைவி மக்களை மாத்திரம் எப்படியேனும் அங்கே அனுப்பிவிட யோசித்தான். அதனாலேயே அவர்களுக்குப் பிரயாணத்தில் அச்சமுண்டாகும்படி மேலே பாலைநிலம் வருவதாகக் குறித்து "இனி மேல்வரும் பாலைநிலத்திற் போதல் குற்றமுடைத்து" என்று கூறினான்; இதனால் அவர்கள் பயந்தேனும் சென்றுவிடுவார்கள் என்பது அவன் கருத்து.

போக்கு-தொழிற் பெயர்; போ-பகுதி, கு-தொழிற்பெயர் விகுதி. மாதர்-அழகு, அதனையுடையாள்-மாதராள்; இது, ஈற்றுளகரம் யகரமாய் விளியாயிற்று. நகர்க்கே என்பதில் ஏகாரம் பிரிநிலை; வேறெங்கும் செல்லலாகாது என்பது இதனால் விளங்கும். மீளல் தாங்கள் அப்போது செல்லும் மார்க்கத்தைவிட்டு வீமன் பதிக்கேகும் மார்க்கத்திற் றிரும்புதல். 'விண்ணவர்முன் தனக்குத் தாமம் புனைவாள்' என்றதனால் அவள் தேவரையும் விரும்பாமல் தன்னையே விரும்பித் தனக்கு மாலையிட்டதால் தன்னுயிரனையாள் என்பது குறிப்பால் அமையும்; இப்பேர்ப்பட்டவளையும், கஷ்டத்தால் அவன் பிரிய நினைத்தான் என்பது தோற்றவே அங்ஙனம், "விண்ணவர் முன்தாமம் புனைவாளை மீள் என்றான்" என்றார் ஆசிரியர். தான்-அசை. புனைவாள்-இறந்த காலம் எதிர்காலமாக மாறி வந்த காலவழுவமைதி.

தமயந்தி நளனைப்பிரிய மனமிசையாது கூறல்.

235. குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து.

[இ-ள்.] (நளன் அவ்வாறு கூறியவுடனே தமயந்தி அதற்கிசையாமல்) நோக்கால்-நேத்திரங்களால், மழை-மாரியைப் போன்ற கண்ணீரை, பொழியா-சொரிந்து, நொந்து-வருந்தி, (அந்நளனை நோக்கி) கொற்றவனே-அரசனே!, குலமகளுக்கு-நல்ல வம்சத்திற் பிறந்த பெண்ணுக்கு, குற்றம் இல்-குறைவில்லாத, காட்சி-தோற்றத்தையும், குதலை-மழலைச் சொற்கள் பொருந்திய, வாய்-வாயையு

முடைய, மைந்தரையும்-புத்திரர்களையும், பெற்றுக் கொள்ளலாம்-பெற்றுக் கொள்ளுதல் ஆகும், கோ-சிறந்த, காதலனை, ஆசைக்குரியவனாகிய கணவனை, பெறலாமோ-(இழந்துவிட்டால் பின்பு) அடையலாகுமோ, (முடியாது; ஆதலின், நான் உன்னைவிட்டு நீங்கிச் செல்லமாட்டேன்) என்று உரைத்தாள்-என்றுசொன்னாள்; (எ-று.)

நளன் அவ்வாறு தமயந்தியை நோக்கி, "நீ குழந்தைகளை அழைத்துக்கொண்டு உன் தந்தை வீட்டிற்குச் செல்வாயாக" என்று சொன்னவுடனே, அவள் குலமகளாதலானும், கணவனைத் தவிரத் தனக்குச் சிறந்த பொருள் வேறில்லை யென்று கருதும் இயற்கை யுடையளாதலானும், "பிள்ளைகள் கஷ்டம் சகிக்காமல் அழிந்தாலும் அழியட்டும்; நாம் அவர்கள் பொருட்டுக் கணவனை விட்டு நீங்குதல் கூடாது" என்று உறுதி கொண்டு அந்நளனை நோக்கி "மன்னனே! பிள்ளைகள் தவறிப்போய் விட்டாலும் அவர்களை மீண்டும் பெற்றுக் கொள்ளலாகும்; கணவனை யிழந்தால் பெற முடியாது; ஆதலின் நான், இப்பிள்ளைகளின் சௌக்கியத்தை உத்தேசித்து உன்னைவிட்டு நீங்க மாட்டேன்" என்று கூறினாள் என்க. குலமகளிர் பிள்ளைகளை யிழந்துவிட்டாலும் கணவனுடனிருந்தால் அத்தகைய பிள்ளைகளை மீண்டும் பெற்றுக்கொள்ளுதற் கேதுவுண்டு; அக்கணவனை யிழந்தாலோ அப்பிள்ளைகளையும் பெறுதல்முடியாது; கணவனையும் அடைதல் முடியாது; இருவகை நஷ்டமும் ஆம்; மேலும் பதிவிரதைகள் கணவனைத்தவிர வேறெதையும் தங்கட்குச் சிறந்த பொருளாகக் கருதாத இயற்கையுடையவர்கள் ஆதலின், அவ்வியற்கையின்படியே தமயந்தி இவ்வாறு கூறினாள்.

மைந்தரையும் என்பதிலுள்ள உம்மை-உயர்வு சிறப்புப் பொருளது. பெறலாமோ என்பதில் ஓ-எதிர்மறைப் பொருளது. காதலன்-காதலுக்குரியவன். குலமகளுக்கு என்பதில், நான்காம் வேற்றுமைக் குவ்வுருபு கர்த்தாப் பொருளில் வந்தது. மழை-கண்ணீர்க்கு உவமையாகு பெயர்.

நளன் பிள்ளைகளின் உயர்வைத் தமயந்திக்குக் கூறல்.

236. கைதவந்தா னீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா னெத்தனையுஞ் செய்தாலும்—மைதீர்
மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் மூர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து.

[இ-ள்.] (தமயந்தி அவ்வாறு சொல்லக் கேட்ட நளன் அவளை நோக்கி) மாதராய்-அழகுடையவளாகிய தமயந்தியே!, (நீ இவ்வாறு குழந்தைகளை ஒரு பொருளாக மதியாமல் உரைப்பது தகாது; மனிதர்க்குப் பிள்ளைகளே சிறந்த பொருளாவார்) கை

தவம்-வஞ்சனையை, நீக்கி-அகற்றி, கருத்தில்-மனதில், கறை-குற்றத்தை, அகற்றி-(சேராமல்) விலக்கி, செய் (மனிதர் நற்கதி யடைதற்குச்) செய்யக்கூடிய, தவம் - தவத்தினை, எத்தனை - எவ்வளவு, செய்தாலும்-இயற்றினாலும், மைதீர்-குற்றம் நீங்குவதற்கு ஏதுவாகிய, மக - மக்களை, பெறா - பெறாத, மானிடர்கள் - மனிதர்கள், வானவர்தம்-தேவர்களுடைய, ஊர்க்கு-ஊராகிய சுவர்க்க பதவியில், போந்து-சென்று, புக-நுழைய, பெறார்-ஏதுவை அடையமாட்டார்கள்; [எ-று.]

மக்களைப் பெறாதவர்கள் எத்தகைய தவத்தைச் செய்தாலும் தெய்வலோக பதவியை அடையமாட்டார்கள் என்பது இதன் கருத்தாம். புத்திரரைப் பெறாதவர்க்குப் 'புத்' என்ற ஒரு நரகம் ஏற்படுமென்பதும், பெற்றார்க்கு அஃதின்றி நற்பதவி கிடைக்குமென்பதும் நூற்களின் துணிபு; "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப், பண்புடை மக்கட் பெறின்" என்ற திருக்குறளால் இஃதுணரப்படும். நடிப்பின்றி மனத்தூய்மையோடு செய்யுந் தவமே சிறந்ததாம்; ஆதலின், நளன் "கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கறை அகற்றிச் செய்தவம்" என்றான். மக்களே தாய் தந்தையரின் துன்பங்களை எவ்வகையினும் அகற்றக் கூடியவர்களாவர்; இது பற்றியே "மைதீர்மக" என்றும் கூறினான்; இவற்றால் அவன், "இல்லறத்தார்க்கு மக்களே சிறந்த பொருளாவர்; ஆதலின் பிள்ளைகளைக் காப்பாற்றுதலே சிறப்புடைத்தாம்" என்பதை விளக்கிக் காட்டினான்.

கைதவந்தான், செய்தவந்தான் என்பவற்றிலுள்ள தான் இரண்டும் அசைகள். செய்தவம் - வினைத்தொகை. தனை - எல்லையளவைக் குறிக்கும் பெயர். எத்தனையும் என்பதிலுள்ள உம்மை அசை. செய்தாலும் என்பதன் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. மக-என்பது ஆண், பெண் ஆகிய இரு வகுப்புக்கும் பொதுவாம். வானவர்தம் என்பதில் தம்-அசை. புகப்பெறார் என்ற தொடர் ஒரு சொன்னீர்மைத்தாய் நுழையார், என்ற பொருள் தந்து நிற்கும். மைதீர்மக-என்பதற்குக் 'குற்றமற்ற பிள்ளைகள்' எனவும் பொருளுரைக்கலாம். இச் செய்யுளும், அடுத்த இரண்டு பாட்டுக்களும் குளகம்; ஆதலின், 238, ஆம் செய்யுளில் முடிபு கூறப்படும்.

இதுவுமது.

237. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

[இ-ள்.] இன் அடிசில் (தாய் தந்தையர் உண்ணும்) இனிய சோற்றில், புக்கு-புகுந்து, அளையும்-கலந்து அதனைக் குழப்புகின்ற, தாமரைக்கை-தாமரைமலர் போன்ற கரங்களையும், பூநாறும்-மலர் மணம் பரிமளிக்கின்ற, செய்யவாய்-சிவந்த வாயையும் (உடைய), மக்களை-பிள்ளைகளை, இங்கு-இவ்வுலகத்தில், இல்லாதவர்-அடையப் பெறாதவர், பொன் உடையரேனும்-பொன்னையுடையவர்களாயிருந்தாலும், புகழ் உடையரேனும்-கீர்த்தியை உடையவர்களாயிருந்தாலும், மற்றும்-பின்னும், என் உடையரேனும்-எதையுடையவர்களாயிருந்தாலும், உடையரோ-(அவற்றை) உடையவர்களாவார்களோ, (ஒருகாலத்திலும் ஆகமாட்டார்கள்); [எ-று.]

பிள்ளைகளில்லாதவர் பொருளுள்ளவர்களாயிருந்தாலும், கீர்த்தியுடையவராயிருந்தாலும், வேறு எவ்வகைச் சிறப்புடையவர்களாயிருந்தாலும் அவற்றை உடையவர்களாக மாட்டார்கள் என்பதாம். ஏனெனில், பொருள், கீர்த்தி முதலிய சிறப்புக்களெல்லாம் பிள்ளைகளினாலேயே சிறப்படையும்; பிள்ளைகளில்லாவிடில் மேற்கூறிய சிறப்புக்களெல்லாம் அமையப் பெற்றவர்களையும், 'பிள்ளையில்லாப் பாவிகள்' என்று பலர் பழிப்பர்; இஃதொன்றினாலேயே அத்தனை சிறப்புக்களும் மங்கிவிடும். தாய் தந்தையர் உண்ணும் உணவில் குழந்தைகள் கையிட்டுக் குழப்புவார்கள்; அங்ஙனம் குழப்பிய உணவை யுண்ணுதல் அப்பெற்றோர்களுக்குத் தேவாமிர்தத்தையுண்பதிலேற்படும் இனிமையைக் காட்டினும் மேலான இனிமையைத் தருவதாகும்; ஆதலின், அஃதிவ்வாறு இனிமையுடையதென்பதை யுணர்த்துதற்கே நளன், "இன்னடிசில் புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய் மக்கள்" என்றான். திருவள்ளுவரும் இதனை விளக்கி, "அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள், சிறுகை யளாவிய கூழ்" என்றார். அளைதல்-கலத்தல்; அஃதிங்கு கலந்து பிசைதற் பொருளில் வந்தது. குழந்தைகளின் வாய்-தாமரைமலர்; சண்பகப்பூ ஆகியவற்றின் வாசனையை யுடைத்தாயிருத்தல் இயல்பு; ஆதலின், அது பூநாறும் செய்யவாய் என்னப் பட்டது.

உம்மைகள் மூன்றும் உயர்வு சிறப்புப் பொருளன. மற்று-பிறிதென்னும் பொருளில் வந்தது, "வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே" என்பது (நன்-இடை 14-ஆம் சூத்திரம்) உடையரோ என்பதில் ஓகாரம் எதிர் மறுத்தற்பொருளில் வந்தது. இல்லாமை அடையப்பெறாமை யென்னும் பொருள்படுமாதலின், இங்கு மக்களைச் செயப்படு பொருளாக்கி இரண்டனுருபு விரிக்கப் பெற்றமையால் 'இல்லாதவர்' என்பதற்கு 'அடையப் பெறாதவர்' என்று பொருளுரைக்கப் பட்டது.

238. சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிங்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.

[இ-ள்.] முன்னம் - முன்பக்கத்திலே, குறுகுதலை-குறுகிய தலையையுடைய, கிங்கிணி-சதங்கைகளை யணிந்த, கால்-பாதங்களை யுடைய, கோ-சிறந்த, மக்கள்-பிள்ளைகளின், இன்முகத்து-இனிமை யான முகத்தினிடமாகவுள்ள, பால்வாய்-பாலருந்தும் வாயின்கண் உண்டாகிய, சிறு-மெல்லிய; குதலை-மழலைச்சொற்களை, கேளா-கேளாத, செவி-காதுகள், சொன்ன (உயர்வாகக்) கூறிய, கலையின்-சாஸ்திரங்களின், துறை அனைத்தும்-நல்ல மார்க்கங்க ளெல்லாவற் றிலும்-தோய்ந்தாலும், படிந்தாலும், (அதாவது அம்மார்க்கங்களை யெல்லாம் கேட்டாலும் அது), என்ன பயன் - என்ன பிரயோ சனத்தை, உடைத்து ஆம் - உடையது ஆகும், (அதனால் ஒரு பயனுமில்லை. ஆதலின் மக்களை எல்லாவற்றினும் சிறந்த பொரு ளாவர்; நான் சொன்னபடி நீ இவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அழைத்துச் செல்வாயாக என்று கூறினான்)

மக்களுடைய மழலை வார்த்தைகளைக் கேளாத செவிகள், பல உயர்ந்த சாஸ்திரக் கேள்விகளைக் கேட்டாலும் ஒரு பயனுமில்லை யென்பது இதன் கருத்து. மக்களில்லாதவர் எவ்வளவு சாஸ்திரங் களைக் கற்றிருந்தாலும் சிறப்படைய மாட்டார்கள். எனவே, சாஸ் திரக் கேள்விகளைக் காட்டினும், மக்கள் குதலைச்சொற்களைக் கேட் டலே மனிதர்க்குச் சிறப்புடைத்தா மென்பது பெறப்படும். இதனை, "குழலினிது யாழினி தென்பதம் மக்கள், மழலைச் சொற் கேளாதவர்" என்னும் திருக்குறள் செய்யுளா னுணர்க. இதனால், சாஸ்திரஞான மில்லாதவனா யிருந்தாலும் பிள்ளைகளை யுடைய வனே உலகத்திற் சிறந்தவ னென்பது விளங்கும்.

236 ஆம் செய்யுளில் வருவித்துரைத்த நளன் என்னும் எழு வாயுடனே இச்செய்யுளினீற்றில் கூறினான் என்ற பயனிலை கூட்டி முடித்துக்கொள்க. இடையில் பல சொற்றொடர்கள் பொருண் முடிபுக்குத்தக இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. தோய்ந்தாலும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. என்ன பயனுடைத்தாம்-எதிர்மறை யெச்சம்; பயனில்லை என்ற பொருள் பயந்து நின்றது. சதங்கையின் முன் பக்கத்தின் நுனியில் சிறிய கடுகுபோன்ற உருவம் செய்யப்பட்டிருக்கும்; அதுவே இங்கு, 'குறுகியதலை' என்று கூறப்பட்டது. கிங்கிணி-திரியாமல் வந்த வடசொல்; கிண்கிணி-திரிந்து வந்ததாம். 'இன் முகத்து'

என்பதைப் 'பால்வாய்' என்பதனோடு கூட்டிக் கொள்க. குதலைக்குச் சிறுமையாவது மென்மை.

மக்களைச் சிறப்பித்துக் கூறிய நளனுக்குத் தமயந்தி கூறுதல்.

239. போற்றரிய செல்வம் புனனாட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்குந் தோற்றாதே—ஆற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்றா ளெழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன்.

[இ-ள்.] (மேற்கூறியபடி நளன் சொல்லக் கேட்டு) எழில்-அழகு பொருந்திய, கமலம்-தாமரை மலராகிய, செம்பதிக்கு-செம்மையான இடத்தில், வீற்றிருந்த-பெருமையோடு தங்கியிருந்த, தேன்-தேன்போலும் இனிமை வாய்ந்த இலக்குமியை நிகர்த்த தமயந்தி, (அந்நளனை நோக்கி) ஆற்றலாய்-(பகைவரை ஜயிக்கும்) வல்லமையுடையவனே!, (நீ சொல்லுகிறபடி பிள்ளைகளைச் சிறந்த பொருளைப்போலக் காப்பாற்றுதல் எனக்குச் சிறந்த கடமையாயினும், அவர்கள் பொருட்டு உன்னைவிட்டு நீங்க எனக்கிஷ்டமில்லை; முதலில் நான் உன்னைப் பிரியாமலிருந்து கொண்டே பின்னர் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்; இவ்வாறு செய்தற்கு என்மனத்தில் ஒரு யோசனை உதிக்கின்றது; அதன்படி செய்தால் உன்னுடைய விருப்பமும் என்னுடைய விருப்பமும் நிறைவேறும்; ஆதலின், அதனைக் கூறுகின்றேன் கேட்பாயாக; நீ என்னையும் பிள்ளைகளையும் பிரிந்து வேறெங்கேனும் செல்லாமல்) எம்பதிக்கே-எங்களுடைய நகரத்திற்கே, (எங்களுடன்) போந்தருளுக-வரக்கடவாயாக; (அப்படி வருவாயாயின் நம் மனவியாகூலம் தீர்வதோடு) போற்றரிய-(எப்பொழுதும் ஒரே நிலையில் நிற்கும்படி) காப்பாற்ற முடியாத, செல்வம்-நம் ஐசுவரியமானது, புனல்-நீர்வளம் மிகுந்த, நாட்டொடு-தேசத்துடனே, போக-நம்மை விட்டு நீங்கும்படி, தோற்றமையும்-(நீ சூதாடி அவற்றைத்) தோற்றுவிட்டதும், யாவர்க்கும்-(அங்கே) எவர்க்கும், தோற்றாது-தெரியமாட்டாது. என்றாள்-என்றுரைத்தாள்; [எ-று.]

நளன் அவ்வாறு கூறியதைக்கேட்ட தமயந்தி அவனை நோக்கி, "புத்திரரைக் காப்பாற்றுவது எனக்கு முக்கியமானதாயிருந்தாலும் நான் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்; ஆதலின் நீயும் எங்களுடன் எம்மூர்க்கு வரவேண்டும்; அப்படி வந்தால் நமக்குள் ஏற்பட்டிருக்கிற எண்ணங்கள் நிறைவேறித் திருப்தியே உண்டாகும்; அதுவுமன்றி நீ சூதாட்டத்தால் நாடிழந்த இழிவும் அங்கே எவர்க்கும் தெரியாமலிருக்கும்" என்று கூறினாள் என்பது இதன் கருத்து.

நளன் வேறெங்கேனும் பிரிந்து சென்றால் அப்பிரிவால் தனக்கு மிக்க துயருண்டாவதோடு, அவன் சூதாட்டத்தால் ஐசுவரியங்களை யிழந்த செய்கை-தன் தந்தை நகரில் வெளிப்பட்டு அவனுக்கும் இழிவுண்டாகுமென்று கருதித் தமயந்தி இவ்வாறு உரைத்தாளென்க. நளன் தாழ்வு வேறிடங்களில் வெளியானாலும் பாதகமில்லை; மாமன்வீட்டில் வெளியானால் அதுமிக இழிவாம்; ஆதலின் அதைக் குறிப்பிட்டுக் காட்டினால், அதைச் சிந்தித்தாயினும் தன் இழிவு அங்கே தோன்ற திருத்தற்பொருட்டு அவன் இசைந்து அங்கே வருவானென்று கருதியே அவள் அதனையும் அவன் மனத்திற் படும்படி விளக்கிக் காட்டினாள்.

செல்வம் ஒரு நிலையில் நில்லாததாதலின் தமயந்தி அதனைப் 'போற்றரிய செல்வம்' என்றாள். போற்று தல்லீறுகெட்ட முதனிலைத் தொழில்பெயர்; 'போற்றரிய' என்பது 'போற்றுதல் அரிய' என விரியும். நாட்டொடும் என்பதிலுள்ள உம்மை அசை. தோற்றமையும் என்பதிலுள்ள உம்மை--எதிரது தழுவிய எச்சப் பொருளது; 'இனிமேல் நமக்கு மனைவியாகூலம் தீர்வதோடு, முன்னே ஐசுவரியத்தைத் தோற்றமையும் யாவர்க்கும் தோற்றாது' என்று பொருள் தரும்; இதனை இழிவு சிறப்புப் பொருளதாகவுங் கொள்ளலாம். 'தோற்றாதே' என்பதின் ஏகாரம்-அசை. 'எம்பதிக்கே' என்பதின் ஏகாரம்-பிரிநிலை; அருளு கென்றாள் என்பதில் அகரந் தொக்கது. செம்பதிக்கே என்பதன் ஏகாரம்-அசை; பிரிநிலையெனலுமாம், இதிலுள்ள குவ்வுருபு மயங்கி ஏழாம்வேற்றுமை இடப் பொருளில் வந்தது; தேன்-இருமடியாகு பெயர்; இஃதிலக்கு மிக்காய், அது தமயந்திக் காயிற்று. இச்செய்யுளில் பல சொற்றொடர்கள், பொருண் முடிபுக்குத்தக இசை யெச்சமாய் வந்தன.

நளன் மாமன் வீட்டிற்குத் தான் செல்லல் தாழ்வென்றுரைத்தல்.

240. சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்.

[இ-ள்.] (தமயந்தி அவ்வாறு கூறியதைக் கேட்டு நளன் அதற்கிசையாமல் அவளை நோக்கி) சினம் கதிர்-கோபத்தையும் பிரகாசத்தையுமுடைய, வேல்-வேலாயுதம்போன்ற, கண்-கண்களையுடைய, மடவாய்-இளம்பெண்ணே!, (ஒரு மனிதன்) செல்வர்பால்-ஐசுவரியமுள்ளவரிடத்தே, சென்று-போய், எனக்கு ஈ என்னும்-எனக்கு ஏதாவது பொருள் கொடு என்றுரைக்கின்ற, இமாற்றம்-இந்தச் சொல்லானது, தனக்கு உரிய-அவனுக்குரிமையான, தானம்-தானத்

தை, துடைத்து-கெடுத்து, தருமத்தை-அறத்தை, வேர்பறித்து-வேரைத் தோண்டி யெடுத்து, (அதாவது வேரோடு பிடுங்கி யெறிந்து) மானம்-கௌரவத்தை, துடைப்பது-அழிப்பதாகிய; ஓர் வாள்-ஒரு வாளாயுதமாகும், கண்டாய்-நீ அறிந்தனையா? [எ-று.]

ஒருவன் செல்வரிடத்தே சென்று, "எனக்கு ஏதாவது பொருள் கொடு" என்று கேட்பானாயின் அவ்வாறு கேட்கும் தன்மையானது அவனுடைய தான தருமங்களை யெல்லாங் கெடுத்துக் கௌரவத்தையும் அழித்துவிடு மென்பது இதன் கருத்தாம்; இங்ஙனம் இரப்பதால் இழிவுண்டாமென்பதை "ஆவிற்கு நீரென் றிரப் பினு நாவிற் கிரவி னிளிவந்த தில்" என்னும் திருக்குறளானுணர்க. இவ்வாறு கூறியதனால் நளன், தன் மாமன் வீட்டிற்கேகி அவன் கொடுப்பதை வாங்கி யுண்டு ஜீவித்தல்-இழிவா மென்பதைக் குறித்தான் என்க. வீரர் சினங்கொண்டேவுதலைத் தான் அடைதலால் வேலானது சினம் என்னும் அடைமொழிபெற்றது. மடம் என்னும் சொல் மவ்வீறுகெட்டு ஆய் விகுதியோடு புணர்ந்து மடவாய் என வந்தது. தானம்-பிறர் வேண்டாது அவர்க்குப் பொருளை யீதல்; தருமம் - இரப்போர்க்கீதல் முதலிய குணங்கள் பொருந்திய செய்கை, யாசிப்போர் வேறு தொழில் செய்து பொருள் தேடாமல் அந்த யாசகத்தையே மேற்கொண்டு திரிவர்; அதனால் அவர்களிடம் பொருள் சேராது; பொருளில்லாமற் போகவே தானம், தருமம், கௌரவம் எல்லாம் போய்விடும்; தானம் என்பதை இடமெனக் கொண்டு அதற்கு நற்பதவியெனப் பொருளுரைப்பினும் பொருந்தும்.

கண்டாய்-என்பது தொனியின் பேதத்தால் வினைப் பொருளைத் தந்து நின்றது; இது அசையெனினும் பொருந்தும். துடைப்பது வினையாலணையும் பெயர். இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் குளகம்; ஆதலின் அடுத்த செய்யுளில் இதன் முடிவு கூறப்படும்.

இதுவுமது.

241. மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பாரேல்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றே
வரும்பேடை மானே யவர்.

[இ-ள்.] அரும்-அருமையாகிய, பேடை-பெட்டையாகிய, மானே-மான் போன்றவளே!, (மனிதர்) மன்னராய்-அரசராயிருந்தும், (தங்கள் ஐசுவரியம் குன்றிய காலத்தில்) மன்னர் தமை அடைந்து-வேறு தம்மைப்போன்ற அரசர்களிடத்தே சேர்ந்து, வாழ்வு எய்தி-வாழ்தலைப் பொருந்தி, இன் அமுதம்-இனிமையான உணவை, தேக்கி-வயிற்றில் நிரப்பிக்கொண்டு, இருப்பாரேல்-இருப்

பார்களேயானால், அவர்-இப்படி யிருப்பவர், சொன்ன-(அறிவுடையவர்களால் இழந்தவராகக்) கூறப்பட்ட, பெரும்பேடிகள்-பெரிய அலிகளாவார்கள், அலரேல்-அப்படிப்பட்டவர்க ளல்லாதவரானால், பித்தரே-பைத்தியம் பிடித்தவரே, (ஆதலின், நான் உன்னுடைய தந்தையிடம் வரமாட்டேன் என்று கூறினான்;) [எ-று.]

"மனிதர் அரசராயிருந்தும், வறுமையுற்ற காலத்தில், தங்களைப்போன்ற வேறு அரசர்களிடத்திற் சேர்ந்து ஜீவிப்பார்களேயானால் அவர்கள் பேடிகளாகவேண்டும், தவறினால் பைத்தியம் பிடித்தவராகவேண்டும்; ஆதலின், நான் இவ்விழிவு சேருமாறு, ஒரு மன்னனாயிருந்தும் நின் தந்தையாகிய அரசனிடத்தில் வரமாட்டேன்" என்று நளன் தமயந்தியிடம் கூறினான் என்பது இதன் கருத்து. பேடி-ஆணுறுப்பிலும் பெண்ணுறுப்பிலும் சேராத மானிட ஜென்மம்; இவ்வடிவமுடையார் ஆணிலும் சாராது பெண்ணிலும் சாராது பலராலும் இகழப்படுவர்; அவ்வாறு இகழப்படும் தங்கள் இழிவைக் கருதாது மானமின்றி எங்கும் சஞ்சரிப்பர்; பைத்தியம் பிடித்தவர்களும் மான அவமானம் தெரியாமல் உலகில் சஞ்சரிப்பர்; ஆதலின், இவ்விருவகையாரும் இழிவு கருதாமல் மன்னரைச் சார்ந்து வாழும் மன்னர்க்கு உவமை கூறப்பட்டார்.

மன்னராய் என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. பித்தரே என்பதில் ஏகாரம் தேற்றப்பொருளது. அன்றே-அசை. மான்-உவமையாகு பெயர். முன்பாட்டில் எழுவாயும் இப்பாட்டில் பயனிலையும் இசை யெச்சங்களாகக்கூட்டி முடிக்கப்பட்டன.

தமயந்தி தன் பிள்ளைகளை மாத்திரம் வீமனிடம்
அனுப்பு மாறு நளனிடம் கூறுதல்.

242. செங்கோலா யுன்றன் றிருவுள்ள மீதாயின்
எங்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்றாள் காதலருக்
கேதிலரைப் போல எடுத்து.

[இ-ள்.] (நளன் அவ்வாறு கூறக்கேட்ட தமயந்தி) காதலருக்கு-அன்புள்ள பிள்ளைகளுக்கு, ஏதிலரைப்போல-பகைவரைப் போல, (அமைந்து அவர் பிரிவுக்கு வருந்தாமல் அந்நளனை நோக்கி) எடுத்து-தொனியை உயர்த்தி, செங்கோலாய்-செம்மையாகிய கோலையுடைய (அதாவது நீதி தவறாத அரசாட்சியையுடைய) மன்னனே!, உன் தன்-உன்னுடைய, திருவுள்ளம்-அழகிய கருத்து, ஈது ஆயின்-இதுவானால், நம்-நம்முடைய, கோலம்-அழகு பொருந்திய, காதலரை-அன்புடைய மக்களை மாத்திரம், எம்-எங்களுடைய,

கோன்-மன்னனாகிய, விதர்ப்பன்-விதர்ப்பதேசாதிபதியினது, எழில்-அழகு பொருந்திய, நகர்க்கே-பட்டினத்துக்கே, போக்கி அருள்-அனுப்பி யருள்வாயாக, என்றாள்-என்று கூறினாள்; [எ-று.]

நளன் விதர்ப்பன் நகர்க்கேக இசையாமற்போகவே, தமயந்தி அவனை நோக்கி "பிள்ளைகளை மாத்திரம் அங்கே அனுப்புவீராக" என்று கூறினாள் என்பது இதன் கருத்து. தமயந்தி தன் நாயகனை விட்டு நீங்காதிருத்தற் பொருட்டுப் பிள்ளைகளைப் பிரியும் விஷயத்தில் சிறிதும் மனங் கலங்காது தைரியமாய்ப் "பிள்ளைகளை யனுப்பு" என்றதை உரத்த தொனியுடன் கூறினாள்; ஆதலின், ஆசிரியர், "ஏதிலரைப்போல எடுத்துக் காதலரைப்போக்கி அருள் என்றாள்" என்று கூறினார். ஒருவர்க்கு விரோதிகள் தாம் அவர் மீது அன்பில்லா திருப்பர்; அவர்களைப் போலவே இங்குத் தமயந்தியும் தன் பிள்ளைகள் மீது அன்பில்லாமல் அவர்களைப் பிரிய நினைந்தாள்; இவ்வாறு கூறினால் நளன் தன்னைப் பிரியானென்பது அவளுடைய எண்ணம்.

நகர்க்கே என்பதில் ஏ-பிரிநிலைப் பொருளது. உள்ளம்-மனம்; அஃதிடவாகுபெயராய் அதிலுண்டாம் எண்ணத்தை யுணர்த்திற்று.

நளன் தன் பிள்ளைகளை வீமன் நகர்க்கழைத்துச்
செல்லுமாறு ஒரு வேதியனிடம் கூறல்.

243. பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—தாதைக்குக்
காட்டுநீ யென்றான் கலங்காத உள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து.

[இ-ள்.] (தமயந்தி அவ்வாறு கூறியவுடனே நளன் அவள் சொற்படி தன் மக்களை அனுப்பத் துணிந்து அவர் பிரிவு குறித்துத் தனக்கு மிக்க விசன முண்டானதால்) கலங்காத-(எத்தகைய துன்பத்திற்கும்) கலக்கத்தையடையாத (வலிமையுள்ள,) உள்ளத்தை-மனத்தை, வாட்டும்-வாடச்செய்கிற, நீர்-ஜலத்தை, கண்ணிலே-நேத்திரங்களிலே, வைத்து-தங்கச் செய்து, (அதாவது கண்ணீர் வடித்து) பேதை-பேதைமையுடைய பெண்ணாகிய தமயந்தி, பிரிய-நீங்கும்படி, பிரியாத-எப்பொழுதும் நீங்காத, பேர் அன்பின்-பெரிய அன்பினையுடைய, காதலரை-ஆசை பொருந்திய மக்களை, கொண்டு போய்-அழைத்துக் கொண்டு சென்று, காதலி தன்-என் விருப்பத்திற் குரியவளாகிய அத்தமயந்தியின், தந்தைக்கு-தந்தையாகிய வீமராஜனுக்கு, நீ காட்டு-நீ காண்பிப்பாய், என்றான்-என்று கூறினான்; [எ-று.]

தமயந்தி சொல்லியதைக் கேட்டவுடன் நளன் ஒரு பிராமணனை அழைத்து அவனிடத்தே தன் பிள்ளைகளை ஒப்புவித்து, "நீ இவர்களை அழைத்துக் கொண்டு போய் வீமராஜனுக்குக் காட்டு" என்றான் என்பது இதன் கருத்து. பிள்ளைகளைக் காட்டின மாத்திரத்திலேயே தன் மாமன் அவர்களின் நிலைமையை நோக்கி அதன் மூலம் தன்னுடைய நிலைமையை உணர்ந்து கொள்வான் என்று கருதிய நளன், வேறொன்றுஞ் சொல்லாமல், 'காதலரைக்கொண்டு போய் வீமராஜனுக்குக் காட்டு' என்று மாத்திரம் கூறினான். இனி அந்த வேதியன் போய்த் தன் மாமனிடத்தில் தன்னுடைய விஷயங்களை யெல்லாம் கூறினால் தனக்கு இழிவுண்டாகுமென்று கருதி நளன் இவ்வாறு அவனிடத்தில், "நீ வீமராஜனுக்கு வேறொன்றும் சொல்லாதே; பிள்ளைகளை மாத்திரம் காட்டு" என்று சொன்னானெனினும் பொருந்தும்.

நளனுடைய பிள்ளைகள் பிரிவுக்கு வருந்துதல்.

244. தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ வென்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீ ரழுது.

[இ-ள்.] (நளன் இவ்வாறு சொன்னவுடனே அந்தப் பிள்ளைகள் தாய் தந்தையரைப் பிரிவதற்கு வருந்தி) தந்தை-தகப்பனாகிய நளனுடைய, திருமுகத்தை-அழகிய முகத்தை, நோக்கி-பார்த்தும், தமை-தங்களை, பயந்தாள்-பெற்றவளாகிய தமயந்தியினுடைய, இந்து-சந்திரன் போன்ற, முகத்தை-முகத்தினை, எதிர் நோக்கி-நேரில் பார்த்தும், விழிவழியே-கண்களினிடத்தில், கண்ணீர் ஆறாக-கண்ணீரானது ஆற்றைப்போல ஒழுக, அழுது-அழுதுகொண்டு, எம்தம்மை-எங்களை, வேறாக-வேறாகும்படி, போக்குதிரோ-அனுப்புகிறீர்களோ, என்றார்-என்று சொன்னார்கள்; [எ-று.]

நளன் அவ்வாறு கூறியவுடனே பிள்ளைகள் அவனையும், தமயந்தியையும் பிரிவதற்கு வருந்தி அழுது அவர்களை நோக்கி, "எங்களை வேறாக அனுப்பிவிடப் போகின்றீர்களோ?" என்று வினவினார்கள் என்பது இதன் கருத்து.

முகத்தை நோக்கி, எதிர் நோக்கி என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. போக்குதிரோ என்பதில் ஓகாரம் இரக்கப்பொருளதாம்; வினாப் பொருள தெனினுமாம். போக்குதிர்-நிகழ்கால முன்னிலைப் பன்மைவினைமுற்று; இதில், போக்கு-பகுதி, திர்-முன்னிலைப் பன்மைவிகுதி; இர்-விகுதியென்றும், த்-எழுத்துப் பேறென்றும் கூறுவது முண்டு.

தமயந்தி பிள்ளைகளைத் தழுவி அனுப்புதல்.

245. அஞ்சனந்தோய் கண்ணி லருவிநீ ராங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட— நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து.

[இ-ள்.] (அவ்வாறு பிள்ளைகள் வருந்திச் சொன்னபோது) வல்லி-கொடியினது தன்மையை, விடா-கைவிடாத, (அதாவது கொடியினது தன்மை பொருந்திய) மெல்-மெல்லிய, இடையாள்-இடையினையுடைய தமயந்தி, (அவர்களை நோக்கி, 'மக்களே! நீங்கள் என் தந்தை வீட்டிற்குப் போதலே நலம்; நல்லகாலம் வந்த பின் நாமெல்லோரும் ஒன்று சேருவோம்; ஆதலின், நீங்கள் மனங் கலங்காமற் போய் வருவீராக' என்று தேறுதல் கூறித் தனக்கு அவர்களைப் பிரிவதால் மிக்க வருத்த முண்டானபடியால்) அஞ்சனம்தோய்-மைபடிந்திருக்கின்ற, கண்ணில்-கண்களில், அருவிநீர்-மலையாறுபோல் வடிகின்ற கண்ணீரானது, ஆங்கு-அவ்விடத்தில், அவர்க்கு-அந்தப் பிள்ளைகளுக்கு, மஞ்சனநீராக-குளிப்பாட்டும் தண்ணீராய், வழிந்துஓட-ஒழுகிப் பாயும்படி, நெஞ்சு உருகி-மனம் கலங்கி, புலர்ந்து-மேனிவாடி, மக்களை-தன் பிள்ளைகளாகிய அவர்களை, தன்மார்போடு-தனது நெஞ்சுடனே, (சேர்த்து) புல்லி-அணைத்து, விடா-விட்டு, நின்றாள்-பிரிந்து நின்றாள், (வழிவிட்டு) நின்றாள்; அதாவது: வழிக்கூட்டி அனுப்பி நின்றாள்; [எ-று.]

பிள்ளைகள் அவ்வாறு கூறி வருந்தியபோது தமயந்தி அவர்களுக்குத் தேறுதல்கூறி வருத்தத்தோடு அவர்களைத் தழுவிக் கொண்டு அனுப்பினாளென்பது இதன் கருத்து. இங்ஙனம் அவர்களைத் தமயந்தி அனுப்பினாளெனவே நளனும் அவ்வாறு கூறியனுப்பினானென்பதும் அமையும். எனினும், தாயே பிள்ளைகள் பிரிவில் மிக்க துக்கமடையக் கூடியவளாதலின், இங்கு அவளை மட்டும் கூறினார் ஆசிரியர். தமயந்தி பிள்ளைகளை மார்போடணைத்துக் கொண்டழுதபோது அவளுடைய கண்ணீர் அவர்களின் உடல் முழுதிலும் வடிந்து ஈரமாக்கியது; ஆதலின் ஆசிரியர், "கண்ணில் அருவி நீர் ஆங்கவர்க்கு மஞ்சன நீராக" என்றார்; மஞ்சனநீர்-ஸ்நானஞ் செய்யும் ஜலம். அவள் அவர்களுக்குத் தேறுதல் கூறியனுப்பினும் துக்கம் சகிக்க முடியாமையால் அங்ஙனம் அழுதாளென்பது பெறப்படும்.

ஆய்-என்னும் எச்சம், ஆக-என வந்தது; போல என்பினுமாம். மார்போடும் என்பதிலுள்ள உம்மை-அசை. ஆங்கு-அசையெனினுமாம்.

வேதியன், தமயந்தியின் குழந்தைகளை
வீமன் நகர்க்கழைத்துச் செல்லல்.

246. இருவ ருயிரு மிருகையால் வாங்கி
ஒருவன்கொண் டேகுவா னொத்து—வருமறையோன்
கோமைந்த னோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீம னகர்க்கே விரைந்து.

[இ-ள்.] (அதன் மேல் அந்த) வரும்-(பரம்பரையாக ஓதப்பட்டு) வருகின்ற, மறையோன்-வேதத்தையுடையவனாகிய (அதாவது வேதத்தை யுணர்ந்த) பிராமணன், இருவர் உயிரும்- (நளன் தமயந்தி ஆகிய) இரண்டு பேர்களின் பிராணன்களையும், இருகையால்-இரண்டு கைகளினாலும், வாங்கி-பற்றி, கொண்டு ஏகுவான்-கொண்டு செல்பவனாகிய, ஒருவன் ஒத்து-ஒருவனை நிகர்த்து, கோமைந்தனோடு-இராஜகுமாரனையும், இளையகோதையை-இளமையாகிய இராஜ குமாரத்தியையும், வீமன் நகர்க்கே-வீமராஜன் நகரமாகிய குண்டின புரத்திற்கே, விரைந்து கொண்டு ஏகினான்-விரைவாக அழைத்துக்கொண்டு சென்றான்; [எ-று.]

அதன்மேல் வேதியன், தமயந்தி நளன் ஆகிய இருவருடைய உயிர்களையும் ஒருவன் பிரித்துக்கொண்டு போவதுபோல், அவர்களின் குழந்தைகள் இருவரையும் குண்டினபுரத்திற்கு அழைத்துக் கொண்டு போனான் என்பது இதன் கருத்து. 'இருவர் உயிரும் இருகையால் வாங்கி' என்றதனால், அப்பிள்ளைகள் தமயந்தி நளன் ஆகிய இருவருக்கும் உயிரைப் போன்றவர்களென்பதும், அவர்களை அவ்வேதியன் இரண்டு கைகளாலும், கரத்திற் கொருவராகப் பற்றி அழைத்துக் கொண்டு போனானென்பதும் பெறப்படும். ஆடவர்க்கு ஆண்மகவின் பேரிலும் பெண்களுக்குப் பெண்மகவின் பேரிலும் பிரியம் அதிகமாயிருத்தல் உலகவியற்கையாதலின், இங்கே ஆண் குழந்தையை நளனுடைய உயிரென்றும், பெண் குழந்தையைத் தமயந்தியின் உயிரென்றும் கொள்ளவேண்டும். 'வருமறையோன்' என்பதற்கு 'அங்கே வந்த வேதியன்' எனப் பொருள் கூறினும் அமையும்.

உயிரும் என்பதிலுள்ள உம்மை முற்றுப் பொருளது. ஒருவன் கொண்டேகுவான், என்பதை, 'கொண்டேகுவான் ஒருவன்' என மாற்றுக; ஏகுவான் ஒருவன்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஓடு-எண்ணும்மைப் பொருளில் வந்தது. கோதையை என்பதில் எண்ணும்மை தொக்கது. இனி ஓடு என்பதை உடனிகழ்ச்சிப் பொருளதாகக்கொண்டு, கொண்டென்னும் வினையிற் சம்பந்தப்பட்டதெனினும் பொருந்தும்; இங்ஙனங் கொள்ளுமிடத்துக் கோதையை என்பதில் உம்மை விரித்தல் அவசியமின்று.

பிள்ளைகள் பிரிந்தபின் நளன் இருந்த நிலைமை.

247. காத லவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை யெனநின் றுயிர்ப்போட—யாதும்
உரையாடா துள்ள மொடுங்கினான் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து.

[இ-ள்.] (வேதியன், நளனுடைய பிள்ளைகளை அவ்வாறு அழைத்துக் கொண்டு போனபின்) வண்டு-வண்டுகள், விரை-தேனில், ஆடும்-(நெருங்கி உண்பதற்கு) ஆடுகின்ற, தாரான்-மாலையை அணிந்தவனாகிய நளன், காதலவர்மேலே-பிரியத்தையுடையவர்களான பிள்ளைகளின் மீது, கண் ஓட-பார்வையானது சென்று கொண்டிருக்கவும், விண் ஓடும்-ஆகாயத்தில் ஓடுகின்ற, ஊதை என-காற்றைப்போல, நின்று-நிலைபெற்று, உயிர்ப்பு-பெருமூச்சானது, ஓட-நாசியில் ஓடிக்கொண்டிருக்கவும், மெலிந்து-தேகம் இளைத்து, உரையாதும் ஆடாது-வார்த்தை யொன்றும் பேசாமல், உள்ளம் ஒடுங்கினான்-மனம் அடங்கினான், [எ-று.]

வேதியன், அந்தப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போன பிறகு நளன் அவர்களைப் பிரிந்த வருத்தத்தால் பெருமூச்சுவிட்டு மேனியிளைத்து, மனமொடுங்கி வருந்தினான் என்பது இதன் கருத்து. பிள்ளைகள் செல்லுங் காலத்தில் நளன், 'அந்தோ! இவர்கள் நம்மைப் பிரிந்து செல்கின்றார்களே' என்று கலங்கி அவர்களையே நோக்கிக் கொண்டு நின்றான்; அப்போது அக்கவலையால் பெருமூச்சுண்டாயிற்று; மனமும் ஒடுங்கி வார்த்தையும் அடங்கிப்போயிற்று. பெருந்துக்க முடையார்க்கு மனம் அசைவற்று நிற்றலும், பேச்சொடுங்கலும், பெருமூச்சு நிகழ்தலும், இயற்கை. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் காற்று, எதுவும் தனக்குத் தடையில்லாதபடியால் வேகமாகச் செல்லும்; ஆதலின், அதைப் போல வேகமாக வெளிப்படும் பெரு மூச்சுக்கு அது உவமை கூறப்பட்டது. மிகுந்த துக்கத்தால் பெருமூச்சு விடுகின்றவர்களுக்கு அச்சுவாசம் இடையில் நின்று நின்று வெளிப்படு மாதலின் 'நின்றுயிர்ப் போட' என்பதற்கு, இடையில் நின்று நின்று சுவாசம் வெளிப்பட, எனவும் பொருள் கூறலாம். நின்று என்பதை அசையெனக் கோடலுமொன்று. விரை ஆடும்-ஏழாம் வேற்றுமைத் தொகை; விரையில் என வரும்.

நளன் தேவியோடும் சென்று பாலை நிலத்தைக் காணல்.

248. சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக்
காலிற்போய்த் தேவியோடுங் கண்ணுற்றான்—ஞாலஞ்சேர்

கள்ளிவே கத்தரவின் கண்மணிக டாம்பொடியாய்த்
துள்ளிவே கின்ற சுரம்.

(இ-ள்.) (அவ்வாறு வருந்தி நின்ற நளன் பின்னர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு) சேல்-கெண்டைமீன்கள், உற்ற-பொருந்தி யிருக்கின்ற, வாவி-தடாகங்களையுடைய, திரு-அழகிய, நாடு-நிடததேசமானது, பின் ஒழிய-தனக்குப் பின்புறத்தே நீங்கும்படி, (அதனைக்கடந்து) தேவியொடும்-மனையாளுடனே, காலின்-பாதங்களாலே, போய்-நடந்துசென்று, ஞாலம் சேர்-பூமியில் சேர்த்திருக்கின்ற, கள்ளிவேகத்து-கள்ளிமரங்களின் கடுமையினாலே, அரவின் கண்-அம்மரங்களினடியில் வசிக்கின்ற சர்ப்பங்களினிடத்துள்ள, மணிகள் - சிரோரத்தினங்கள், துள்ளி - வெடிப்புற்றுக் குதித்து வீழ்ந்து, பொடியாய்-சாம்பலாகி, வேகின்ற-எரிகின்ற, (அவ்வளவு வெப்பந்தங்கிய) சுரம்-பாலைநிலத்தை, கண்உற்றான்-பார்த்தான், [எ-று.]

பிள்ளைகள் செல்வதைக் கண்டு வருந்தி நின்ற நளன், அவர்கள் போன பின்பு தமயந்தியுடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு நிடத நாட்டைக் கடந்து பாலைவனத்தை அணுகிப் பார்த்தான் என்பது இதன் கருத்து. பாலைநிலத்தில் சூரிய வெப்பம் அதிகரித்திருக்கும்; அதனால் அந்நிலத்திலுள்ள பொருள்களெல்லாம் நெருப்புமயமாகவே இருக்கும்; ஆதலின் அங்கே இயற்கையில் வெம்மையுடையதா யிருக்கும் கள்ளி மேலும் அதிகரித்த சூடுள்ளதாயிருக்கும்; அந்த உஷ்ணத்தினால் அதனடியிற் றங்கியிருக்கும் அரவங்களின் சிரோரத்தினங்கள் வெடித்து வீழ்ந்து சாம்பலாயெரியுமென்க. இனி 'பொடியாய்' என்னும் செய்தெனெச்சத்தை, 'பொடியாக' என்னும் செயவெனெச்சம் திரிந்து வந்ததாகக் கொண்டு, "கள்ளி வேகத்து அரவின் கண்மணிகள் தாம் பொடியாய்த் துள்ளிவேகின்ற" தொடருக்கு "கள்ளியின் கடுமையாலே அரவினிடத்தேயுள்ள இரத்தினங்கள் வெந்து பொடியாக (அந்தச் சர்ப்பங்கள்) துள்ளி வீழ்ந்து எரிகின்ற" "கள்ளியினிடத்தே வசிக்கின்ற வேகம் பொருந்திய சர்ப்பங்கள், இனிய கண்ணின் மணிகள் வெந்து பொடியாகத் துள்ளி வீழ்ந்து எரிகின்ற" எனவும் இருவகைப் பொருளுரைக்கலாம்; இவ்விருவகைகளுள் முன்னதில் 'சர்ப்பங்கள்' என்னும் எழுவாய் வருவித்துரைக்க வேண்டியிருத்தலாலும், பின்னதில் எழுவாய் தானே அமைந்திருத்தலாலும், பின்னது சற்றுச் சிறந்ததாகக் கொள்ளப்படும்; பின்னதில் சொன்ன கண்ணின் மணியானது கண்ணின் கருவிழிக்குள்ளிருக்கும் உருண்டை வடிவமான கருமணியாம். இதுவே கண்ணிற்குப் பிரதான அங்கம்; இங்ஙனம் கண்ணிற் குள்ளிருக்கும் மணியும்

தெறித்து வீழ்ந்தெரியு மென்றதனால் பாலைநில வெப்பத்தின மிகுதிப்பாடு விளங்கும். எனினும் பாலை நிலத்தில் தங்கும் பிராணிகள் இயற்கையில் அதன் வெம்மையைச் சகித்து அவ்விடத்திலேயே தங்குவனவாதலின் அவற்றிற்கு அவ்வெம்மையால் சாக்காடுண்டெனக் கூறுதல் பொருந்தாது; ஆதலின், சர்ப்பங்கள் வெந்தனவெனக் கூறியதில் பொருத்த மின்மையும், அவற்றின் மணிகளே வெந்தனவெனக் கூறியதில் பொருத்த முண்மையும் உளவாம். ஆகவே இங்குக் கூறிய இருவகை உரைகளும் அத்துணைச் சிறப்புடையனவல்ல வென்க. பதவுரையில் காட்டிய பொருளினும், வெம்மையைப் பாலை நிலத்தின் மேலேற்றி "கள்ளிவேகத் தரவின் கண்மணிகள் தாம்பொடியாய் துள்ளி வேகின்ற சுரம்" என்பதற்கு, "கள்ளியில் தங்குகின்ற வேகமுள்ள அரவினிடத்தே பொருந்திய இரத்தினங்கள் துள்ளி வீழ்ந்து பொடியாகி வேகின்ற (வெப்பத்தையுடைய) பாலைநிலம்" எனப் பொருள் கூறினும் அமையும்.

தேவியொடும் என்பதில் ஒடு-உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது; உம்-அசை. கண் உறல்-கண்ணிற் பொருந்துதல், அதாவது பார்த்தல். ஞாலல்-தூங்குதல்; ஞாலம்-தூங்குதலை யுடையது; பிராணிகள் உணவுண்டு களித்துத் தூங்குதற்கிடமா யிருத்தலின் பூமி இப்பெயர் பெற்றதென்க. தாம்-அசை. சுரம்-வெம்மை; அஃதாகுபெயராய் அதனையுடைய நிலத்துக்காயிற்று.

கலிபுருஷன், நளனையும் தமயந்தியையும் வஞ்சிப்பதற்கு அப்பாலை வனத்தில் பக்ஷிவடிவமாக வந்திருத்தல்.

249. கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—நன்னெ
றிக்கே அஞ்சிப்பா ரீந்த வரசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து.

[இ-ள்.] நல்நெறிக்கே-நன்மை பொருந்திய நீதி மார்க்கத்துக்கே, அஞ்சி-பயந்து, பார்-பூமியை, ஈந்த-(பகைவனாகிய புஷ்கரனுக்குக்) கொடுத்துவிட்ட, அரசனையும்-மன்னனாகிய நளனையும், தேவியையும்-அவனுடைய மனைவியாகிய தமயந்தியையும், வஞ்சிப்பான்-ஏமாற்றுதற்கு, வேண்டி-விரும்பி, வனத்து-அப்பாலை வனத்தில், கல்நிறத்த-கல்லின் குணமுடைய, (அதாவது கல்லைப்போன்று கடினமான) சிந்தை-மனதையுடைய, கலியும்-கலிபுருடனும், அவன் முன்பாக-அந்நளனுக்கு எதிரில், பொன் நிறத்த-பொன்னின் வர்ணத்தையுடைய, புள்வடிவு ஆய்-பறவையின் வடிவமாகி, போந்து இருந்தான்-போய் ஆங்குத் தங்கியிருந்தான்; [எ-று.]

மேற்கூறியபடி நளனும் தமயந்தியும் பாலை வனத்திற் சேர்ந்த போது கலிபுருஷன் அவர்களை வஞ்சித்து நளனுடைய வஸ்திரத்தையும் பறித்துச் செல்லக் கருதி ஓர் அரிய பறவை வடிவமாய் அந் நளனுக்கு முன்னே போயிருந்தான் என்பது இதன் கருத்து. நளனுடைய ஐசுவரியங்களை யெல்லாம் புஷ்கரனிடத்தே சேரும்படி செய்து அந்நளனை மனைவி மக்களோடு வெளியேற்றி வருத்திய கலி புருஷன் மேலும் துன்பத்திற்குள்ளாக்கி அவனுடைய ஆடையையும் அபகரித்துச் செல்லக் கருதி அங்கே மாயப் பறவையாய் வந்திருந்தான். இவ்வாறு வஸ்திரத்தை அபகரித்துச் செல்லுதல் மேல்வருஞ் செய்யுட்களால் உணரப்படும். இச்செய்கையைக் கலி, சிறிதும் இரங்காமல் செய்யத் துணிந்தானாதலின், அவனை, 'கல் நிறைந்த சிந்தைக்கலி' என்றார் ஆசிரியர். உலகத்திலில்லாத நூதனப்பிராணி யொன்றைக் காணின் அதனைப் பிடித்துப்பார்க்க விரும்புதல் மனிதரின் இயற்கை. ஆதலின், கலியும், "நாம் ஓர் அதிசயப் பிராணியாகச் சென்றால் மாத்திரந்தான் அவர்கள் நம்மை விரும்பிப் பிடிக்க ஆரம்பித்து நமது மாயவலைக்குட் சிக்குவார்கள்; அதிலும் பெண்கள் விரும்பத்தக்க வடிவத்தையே எடுத்துச் செல்லவேண்டும்; ஏனெனில் பெண்கள் தாம் வேடிக்கைப் பிராணிகளில் மிக விருப்பமுடையவர்கள்; அதனால் அவர்கள் விரும்பித் தூண்டுதல் செய்த பின்னரே ஆடவர் அவற்றைப் பிடிக்கச் செல்வார்கள்; ஆபத்திலும் சிக்கிக்கொள்வார்கள்" என்று தமயந்தி விரும்பத்தக்க பொன்னிறப் பறவையாய்ச் சென்றான்; இதுபற்றியே ஆசிரியர் 'பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்' எனவுங் கூறினார். நளன் சூதாட்டத்தில் தோல்வியடைந்தாலும், பின்னர் புஷ்கரனோடு போர் செய்து, அரசைக் கைப்பற்றிக் கொள்ளும் ஆற்றலுடையவன்; அப்படி யிருந்தும் அவன், நாமே மனமொப்பிச் சூதாடித் தோற்றுவிட்ட அரசை, வேறு வகையாற் கைப்பற்றுதலும் நீதிக்கு விரோதமென்று கருதியே அதனை அவனிடம் விட்டு வந்து விட்டான்; இது பற்றியே அந் நளனை 'நன்னெறிக்கே அஞ்சிப்பாரீந்த அரசன்' என்றார் ஆசிரியர்.

கலியும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவியது; 'நளன் முன்னே சென்றதோடு கலியும் இவ்வாறு சென்றிருந்தான்' என்ற பொருளைத் தரும். முன்பாக என்பதில், ஆக-என்பது ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபாகக் கொள்ளப்படும்; இது (நன். பெ- 44-ம்) சூத்திரத்தில் 'ஆதி' என்றதிலடங்கும்; இங்ஙனமே, நேராக, பின்னாக, பக்கமாக என்பன போன்றவைகளில் வருதல் காண்க; இனி, 'முன்பாக' என்பதற்கு, 'முன்னே தான் செய்யும் அச் செய்கை நிகழ' எனவும் பொருள் விரிக்கலாம். போந்து என்பது புகுந்து என்பதன் திரிபெனவும், போ என்பதன் புடை பெயர்ச்சி

யெனவும் கொள்ளப்படும். நெறிக்கே என்பதன் ஏகாரம் பிரிநிலை; இதனால், நளன் நீதிக்கே அஞ்சினு னென்றும், மற்றவற்றிற்கு அஞ்சவில்லை யென்றும் கொள்ளப்படும். அரசனையும் தேவியையும் என்பவற்றி லுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன; சிறப்புப் பொருளன வெனக் கோடலு மொன்று; உயர்வாவது நன்னெறிக்கஞ்சிப் பாரிந்ததாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து 'இத்தகைய நற்குணமுள்ள அரசனையும் தேவியையும் கூட வஞ்சிப்பான் வேண்டிப் போந்திருந்தான்' எனப் பொருள் விரிக்கப்படும்; இதனால் நளன், தமயந்தி ஆகியவர்களின் உயர்வும், கலியின் கடின சித்தத்தின் இழிவும் விளங்கும்.

பறவையைப் பிடித்துத் தருமாறு தமயந்தி நளனை வேண்டல்.

250. தேன்பிடிக்கும் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான்பிடிக்க
பொற்புள்ளைப் பற்றித்தா வென்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது.

[இ-ள்.] (கலிபுருஷன் அவ்வாறு பறவை யுருக்கொண்டு போயிருந்த போது) புது-புதுமையான (அதாவது: ஆச்சரியம் பொருந்திய), மழலைச் சொல்-மழலை வார்த்தைகளைப் பேசுகின்ற, கிள்ளை-கிளியின் மொழிபோன்ற, வாயாள்-வாய்ச் சொற்களை யுடையவளாகிய தமயந்தி, (அப் பறவையைக் கண்டு விரும்பித் தன் கணவனை நோக்கி) தொழுது-வணங்கி, (முற்காலத்திலே) தேன்-வண்டுகள், பிடிக்கும்-(மது வுண்ணும் பொருட்டுப்) பற்றியிருக்கின்ற, தண்-குளிர்ச்சி பொருந்திய, துழாய் - துளபமாலையை அணிந்த, செங்கண்-சிவந்த கண்களையுடைய, கருமுகில்-கரிய மேகம் போன்ற நிறம் பொருந்திய இராமபிரானை, மான் பிடிக்கச் சொன்ன-மாயமானைப் பிடித்துத் தரச் சொல்லிய, மயிலே போல்-மயிற்சாயலுள்ள பெண்ணாகிய சீதாபிராட்டியைப் போல, தான் பிடிக்க-தான் கையிற் பற்றி அழகு பார்க்கும்படி, பொன் புள்ளை-பொன்னிறம் பொருந்திய அப் பறவையை, பற்றித்தா-பிடித்துத் தருவாயாக, என்றாள்-என்று கூறினாள்; [எ-று.]

கலிபுருஷன் மேற் கூறியபடி நளனையும் தமயந்தியையும் ஏமாற்றுதற்குப் பொன்னிறப் பறவையாகப் போயிருந்த போது தமயந்தி அதனைப் பார்த்துக் கையிற்பற்றி அதன் அழகை நோக்க விரும்பி, நளனிடம் வணங்கிப் பிடித்துத் தருமாறு கூறினாள் என்பது இதன் கருத்து. இத்தகைய தொழில் ஆடவர்க்கே உரியதாதலின் அவள், தான் அதனைப் பிடிக்கத் துணியாமல் நளனையே பிடித்துத் தருமாறு வேண்டினாள்; அதனோடு தன் சொற்படி அவன் தட்டாமல் அதனைச் செய்தற் பொருட்டு, அவ

னுக்கு வணக்கமுஞ் செய்தாள். இராமபிரான் சீதையுடனே வனத்திலிருக்குங்காலத்தில் அவளைக் கவர நினைந்த இராவணன் தன் செய்கைக் கனுகூலமாக இராமனையும் இலக்குமணனையும் அவளை விட்டு நீங்கும்படி உபாயஞ் செய்ய மாரீசனை அனுப்பினான்; அவன் உலகத்திலில்லா அழகு பொருந்திய மாய மானாக அவர்களுக்கு முன் வந்துலாவினான். அப்போது சீதை அம்மானைப் பிடித்துத் தனக்குத் தருமாறு இராமரிடம் வேண்டினாள்; அவர் அவ்வாறே அதனைப் பிடிக்கத் துரத்திச் சென்று அகப்படாமற் போனபடியால் அதன் மீது பாணத்தை யேவி அதனுயிரைப் போக்கினார்; உயிர் போகும் காலத்தில் அம்மானுயிருந்த மாரீசன் தானிட்ட கூதான தொனியால் இலக்குமணனையும் சீதையை விட்டு நீங்கச் செய்தான்; அத்தருணம் இராவணன் வந்து சீதையை அபகரித்துச் சென்றான்; பின் இராமரும் இலக்குமணனும் வருந்தினார்கள். அந்தச் சீதைபோலவே தமயந்தி பறவையைப் பிடித்துத் தரும்படி நளனிடம் வேண்ட, அவன் அவ்வாறே பிடிக்கப் போய்த் தன் வஸ்திரத்தை இழந்து தன் மனைவியுடன் துன்பத்தை யடைந்தான்; ஆதலின் இச்செய்கைக்கு, 'தேன் பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை, மான்பிடிக்கச்சொன்ன மயிலே போல்' என்று அக்கதையை உவமை கூறினார் ஆசிரியர். இதனால், "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" என்றபடி ஸ்திரீகள் பின்வரும் நன்மை தீமைகளைப் பகுத்தறிய முடியாத இயற்கை வாய்ந்த பேதைய ரென்பதும் அவர்கள் மடமையால் விரும்பும் எதையும் யோசியாமல் செய்பவர்க்குத் துன்பம் வருமென்பதும் உணரப்படும். இவர்கள் மிக்க துயரடைந்த இக்காலத்தில் தமயந்தி இங்ஙனம் பறவையைப் பிடித்து விளையாடக் கருதியது தீய ஊழாலும் நேர்ந்ததென்க.

'தேன் பிடிக்கும்' என்பதற்கு 'மதுசேர்ந்த' எனினும் அமையும். முகில், மயில் என்பன உவமையாகு பெயர்கள் கிளிளை. வாய் என்பன ஆகுபெயர்களாய் அவற்றினிடமாக உண்டாம் வார்த்தைகளை யுணர்த்தும்.

நளன் பறவையைப் பிடிக்கப் போதலும், அது
அவனிடமகப்படாமல் அவனை ஏமாற்றுதலும்.

251\. பொற்புள் ளதனைப் பிடிப்பா னளன்புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றேடி—எய்க்கும்
இளைக்குமா போல விருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணினான் மன்.

[இ-ள்.] (தமயந்தி அவ்வாறு கூறியவுடனே) மன்-அரசனாகிய நளனென்பான், பொன்புள் அதனை-பொன்னிறப் பறவையாகிய

அதை, பிடிப்பான்-பிடிக்கும் பொருட்டு,புகுத-(அதன் சமீபத்திற்) போக, (அது) கைக்குள் வரும் ஆறுபோல்-கைக்குள்ளே அகப்பட்டுக் கொள்வதைப்போல, (நளன் கிட்டும் வரை பேசாமலிருந்து பாவனை காட்டி அவன் நெருங்கியவுடன்) கழன்று ஓடி-(அவ்விடத்தைவிட்டுப்) பெயர்ந்து ஓடிப்போய், (வருந்தியிளைப்பது போன்றிருந்தது; அவ்வாறு அது) எய்க்கும் ஆறுபோல-நடை ஓயும் விதத்தைப்போலவும், இளைக்கும் ஆறுபோல-தளரும் விதத்தைப் போலவும், இருந்தது கண்டு-இருந்ததைப் பார்த்து, அன்றே-அப்பொழுதே, (அதனை) வளைக்கும் ஆறு-வளைத்துப் பிடிக்கும் விதத்தை, எண்ணினான்-நினைத்தான்.

தமயந்தி கூறியதைக் கேட்டவுடனே நளன் அந்தப் பொன்னிறப் புள்ளைப் பிடிக்கப் போனான்; அப்போது அது அவனது கைக்குள் அகப்படுவதைப் போல் பாவனை காட்டியிருந்து அவன் நெருங்கியவுடன் அவனைவிட்டோடி மீண்டும் நடை ஓய்ந்து தளர்ந்து போனது போன்றிருந்தது. அங்ஙனமிருக்கவே அந்நளன், 'இது ஓடும் சத்தி யற்று நின்றுவிட்டது; இனி இதனை எளிதாகப் பிடித்துக் கொள்ளலாம்' என்று துணிந்தான் என்பது இதன் கருத்து. அது மாயப்பறவை யாதலால் இவ்வாறு நளனுக்கு ஆசையை யுண்டாக்கி, அவன் கைக்கு அகப்படுவது போல் நடித்தது. நளன் தன்னுடைய கெட்ட காலத்தால் அதன் வஞ்சனையை உணராமற் போயினான்; ஒரு தீங்குமடையாமல் சாதாரணமாக விருக்கும் ஒரு பறவை இவ்வாறு தளர்ந்து பிடிபடும் நிலைமையில் இருக்குமா வென்று அவன் சிறிதும் சிந்திக்கவில்லை.

புள் அதனை - இருபெயரொட்டுப் பண்புத் தொகை; இதனை 'புள்ளை' என்று ஒரு பெயராகவுங் கொள்ளலாம்; அங்ஙனங்கொள்ளுமிடத்து; 'அதனை' என்பதில் அது, அன் என்பவற்றைச் சாரியைகளாகக் கொள்ளவேண்டும். புக-என்னும் வினையெச்சம் 'புகுத' என வந்தது; இதில் த்-சாரியை. வருமாபோல், இளைக்குமாபோல் என்பவற்றில் ஆறு என்பது ஈறு குறைந்து ஆ என நின்றது. பின்னுள்ள 'ஆறு போல' என்பது தீபகமாக்கி எய்க்கும், இளைக்கும் என்னும் இரண்டு வாக்கியங்களிலும் கூட்டப்பட்டது. எய்க்குமா போல, இளைக்குமா போல என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. இனி எய்க்கும் என்பதை வினைமுற்றாகக் கொண்டு, 'எய்க்கும் இளைக்குமா போலவிருந்ததுகண்டு' என்ற தொடருக்கு, 'அது இளைத்திருக்கும்; அவ்வாறு இளைப்பது போல இருந்ததைப் பார்த்து' எனவும் பொருள் விரிககலாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து, 'எய்க்கும்' என்பதை இறந்தகாலம் எதிர்காலமாக மாறி வந்த காலவழுவமைதியாகக் கொள்ளவேண்டும். அன்றே என்பதை அசை யெனவும் கொள்ளலாம். வளைத்தல்-ஒரு பொருளைத் தனக்குள்ளடங்கச் செய்தல்.

நளன் வஸ்திரத்தால் அப்பறவையைப் பிடிக்கலா மென்று தமயந்தியிடம் கூறுதல்

252. கொற்றக் கயற்கட் கொடியே இருவோரும்
ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்றுரைத்தான்
பற்றகலா உள்ளம் பரிந்து.

[இ-ள்] (அவ்வாறு அப்பறவையைப் பிடிக்கக் கருதிய நளன் வஸ்திரத்தால் பிடிக்கலாமென்று துணிவு கொண்டு,) பற்று- (தமயந்தியினிடத்தில்) ஆசையானது, அகலா-நீங்காத, உள்ளம்-மனத்தில், பரிந்து-அன்பு மிகுந்து, (அத்தமயந்தியை நோக்கி) கொற்றம்-வெற்றி பொருந்திய, கயல் - சேற் கெண்டைமீன்போன்ற, கண் - கண்களை யுடைய, கொடியே-கொடிபோன்ற பெண்ணே!, (இந்தப் பறவையோ மிக இளைத்துப் பறக்க முடியாம லிருக்கின்றது; அதனால் எளிதில் அகப்படும்; எனினும், இதைக் கையினாற் பிடிப்பது அருமையாகும்; ஏனெனில், நான் நெருங்க நெருங்க இது சற்று விலகி விலகிச்சென்று கொண்டேயிருக்கும்; இதன்மேல் ஒரு வஸ்திரத்தை விரித்தெறிந்தால் இது அதற்குட் சிக்கி எளிதாக நம்மிடம் அகப்பட்டுக் கொள்ளும்; ஆதலின்,) இருவோரும்-நாம் இருவரும், ஒற்றைத் துகிலால்-ஒரு வஸ்திரத்தினால், உடைபுனைந்து - ஆடை கட்டிக்கொண்டு, (நளன் கட்டியிருக்கும்) இந்தப் பொன் துகிலால்-இந்த அழகிய வஸ்திரத்தினால், (அதாவது; இந்த அழகிய வஸ்திரத்தை விரித்தெறிந்து) புள்-இந்தப் பறவையை, வளைக்க-வளைத்துப் பிடிப்பதற்கு' போதுவோம் - செல்வோம், என்று உரைத்தான்;

அந்த மாயப்பறவை அவ்வாறு அகப்படுவது போலவும், ஓடுவதுபோலவும் நடிக்கக் கண்ட நளன், 'இது ஓடச் சக்தியற்று அகப்படுவதுபோ லிருந்தாலும் இதனைக் கையினாற் பிடிப்பது அருமையாகும்; ஆதலின், இதன்மேல் வஸ்திரத்தை விரித்துப் போட்டால் இஃதெளிதில் அகப்பட்டுக்கொள்ளும்' என்று கருதித் தமயந்தியை நோக்கிப் 'பெண்ணே! நீ கட்டியிக்கும் ஒரு வஸ்திரத்தை இருவரும் புனைந்து கொண்டு, நான் கட்டியிருக்கும் வஸ்திரத்தால் இதனை நாம் பிடிப்போம் வா' என்று கூறினன் என்பது இதன் கருத்து. அப்பறவை ஓட முடியாததுபோ லிருப்பினும், நளன் நெருங்கிய போது அகப்படாமல் ஓடிக்கொண்டிருந்த படியால் அவன் இவ்வாறு வஸ்திரத்தாலாவது பிடிக்கலாமென்று கருதிக் கூறினன். இவ்வாறு அந்நளன் கூறவே தமயந்தியும் அதற்கிசைந்தாள்; அதன் மேல் நளன் தமயந்தியின் மேல் வஸ்திரத்தைத் தான் உடுத்துக் கொண்டு தன் வஸ்திரத்தை அவிழ்த்துக் கையில் வைத்துக்கொண்டு புட் பிடிக்க ஆரம்பித்தான். இங்கே தமயந்தியின் மேலாடையை

நளனும் புனைந்து கொண்டான் என்றதனால், அவ் வஸ்திரத்தை இரண்டாகத் துண்டித்து அவ்விரண்டி லொருதுண்டை நளன் உடுத்திக் கொண்டானெனக் கொள்ளலாகாது; ஒரே வஸ்திரத்தைத் துண்டியாமல் நளன் பாதியும், தமயந்தி பாதியுமாக அணிந்துகொண் டார்களென்று கொள்ளவேண்டும். நளனுக்கும் தமயந்திக்கும் எப் படியேனும் பறவையைப் பிடிக்கவேண்டு மென்னும் விருப்பம் அதி கரித்திருந்தமை யானும், தமயந்தி நளன் விருப்பப்படியே எதையும் தட்டின்றி முடிக்கத் தக்கவளாதலானும், 'நளன், புள்வளைக்கப் போ துவோ மென்றுரைத்தான்' என்றதனாலேயே அவள் இதற்கிசைந் தாளென்பதும், நளன் கூறியபடியே செய்கை நிகழ்ந்த தென்பதும் சொல்லாமலே அமையும்.

கொற்றம் என்பதைக் கண்ணுக்கேற்றுக; கண்ணுக்கு வெற்றி யாவது ஆடவரை மயக்கி வெல்லுதலாம். கொடி - உவமையாகு பெ யர். 'இருவேமும்' எனத் தன்மைப் பன்மையில் வருதற்பாலது, 'இருவோரும்' எனப்படர்க்கையில் வந்தது இடவழுவமைதி யெனப் படும்; "ஒருமையிற் பன்மையும் பன்மையினொருமையும், ஓரிடம் பிறவிடந் தழுவலுமுளவே" என்பது (நன்-பொ.29)ஆம் சூத்திரம். 'உள்ளம் பரிந்து' என்னும் சினைவினை, 'நளன்' என்னும் முதலொடு சேர்ந்து முடிந்தது.

நளன் ஆடையை எறிந்து பறவையைப்
பிடித்தல்.

253. எற்றித் திரைபொரநொந் தேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ்—முத்தீன்று
வெள்வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா னுடையாற் போந்து.

[இ-ள்.] திரை-அலைகள், எற்றி-(தங்களை மேலாக) வீசி, பொர-தங்கள் மேல் மோத, நொந்து-வருந்தி, இளமணலில்-(கரை யோரத்தி லிருக்கும்) மென்மையான குறுமணலிலே, ஏறி-ஊர்ந்து சென்று, பற்றி-பூமியைச் சார்ந்து, பவளம்-பவளக்கொடிகள், படர்-படர்ந்ததனாலேற்பட்ட, நிழல் கீழ்-நிழலினிடத்தே, முத்து ஈன்று-முத்துக்களைப் பெற்று, வெள்வளை-வெண்மை நிறம் பொருந் திய சங்குகளாகிய, தாய்-தாய்கள், ஓடும்-மீண்டும் நீருக்குள் ஓடு கின்ற, வேலை-சமுத்திரஞ் சூழ்ந்த, திரு-அழகிய, நாடன்-நிடத நாட்டையுடைய நளன், (மேற்கூறியபடியே தமயந்தியின் ஆடை யைப் புனைந்துகொண்டு தன் வஸ்திரத்தை அவிழ்த்துக் கையில் வைத்துக் கொண்ட பின்) போந்து-முன்னே போய், ஆடையால்- அவ்வஸ்திரத்தினாலே. புள்-அந்தப் பறவையை, வளைத்தான்-(ஓடா

மல்) தடுத்தான், (அதாவது அவ் வஸ்திரத்தை மேலே எறிந்து அப்பறவை அதற்குட் சிக்கும்படி செய்தான்.)

மேற்கூறியபடி தமயந்தியின் வஸ்திரத்தைப் புனைந்து கொண்டு தன் ஆடையை அவிழ்த்து வைத்துக்கொண்ட நளன் அதை விரித்து அப்பறவை மேலெறிந்து அதனை அவ் வஸ்திரத்தால் வளைத்தானென்பது இதன் கருத்து. சமுத்திரத்தின் அலைகள் சங்குகளை மோதிக் கரையிலெறியும்; அச்சங்குகள் கருப்ப முதிர்ந்தன வாதலின், அதனால் வருந்தி அச்சமுத்திரக் கரையின் இளமணலிலிருக்கும் பவளக்கொடிகளின் நிழலில் முத்துக்களை யீன்று மீண்டும் அக்கடல் நீரில் ஓடும். அலை மோதியதா லேற்பட்ட உடலசைவு சூற்கொண்ட சங்குகள் முத்தை யீனுதற் கேது வாயிற்று. இங்ஙனம் கூறியதனால் நிடதநாடு கடல்வளமுடைய தென்பது பெறப்படும். நிடதநாடு மத்திய இந்துஸ்தானத்தின் கீழ்ப்புறமாக வங்காள விரிகுடாவை அடுத்துள்ளது; ஆதலின் அதற்குக் கடல்எல்லையுமுண்டென்க.

எற்றுதல்-வீசுதல், அடித்தல். "அல்வழி இஐ முன்னராயின், இயல்புமிகலும் விகற்பமுமாகும்" என்ற (நன்-உயி-பு-36-ஆம்) சூத்திரவிதிப்படி வளைத்தாய் என்னும் பண்புத்தொகையில் வலிமிக்கது. வேலை-வேலா; வடசொல்.

நளனுடைய வஸ்திரத்தைப் பறவை
அபகரித்துச் செல்லல்.

254. கூந்த லிளங்குயிலும் கோமானுங் கொண்டணைத்த
பூந்துகில்கோண் டந்தரத்தே போய்நின்று—வேந்தனே
நன்னாடு தோற்பித்தோ னனேகா ணென்றதே
பொன்னாடு மாணிறத்த புள்.

[இ-ள்.] (அவ்வாறு நளன் வஸ்திரத்தை அப்பறவையின் மேற்போட்டவுடன்) கூந்தல் - குழலையுடைய, இளம் - இளமை பொருந்திய, குயிலும்-குயிலை நிகர்த்த தமயந்தியும், கோமானும்- அந்நள மகாராஜனும், கொண்டு-கைக்கொண்டு, அணைத்த-(பின் நளன் அப்பறவையின் மேலெறிந்து அதனை) வளைத்த, பூ-அழகிய, துகில்-வஸ்திரத்தை, கொண்டு-தூக்கிக்கொண்டு, அந்தரத்தே- விண்ணிலே, போய்நின்று-பறந்து சென்று நின்றுகொண்டு, பொன்- பொன்னும், நாடு-அதனை யடைதற்கு எண்ணுகின்ற, மால்-பெருமைதங்கிய, நிறத்த-நிறத்தினையுடைய, புள்-அந்தப் பறவையானது (நளனை நோக்கி) வேந்தனே-அரசனே! நல்நாடு-உன்னுடைய நல்ல நாட்டை, தோற்பித்தோன்-(உன்னைத்) தோற்கும்படி செய்தவன்,

நானே-நானே யாவன், காண்-நீ அறிந்து கொள்வாய், என்றது-என்று கூறிற்று; [எ-று.]

நளன் அவ்வாறு வஸ்திரத்தை மேலே யெறிந்தவுடன் அந்தப் பறவையானது அதனைத் தூக்கிக்கொண்டு மேலே பறந்து போய் நின்று நளனை நோக்கி, 'மன்னனே! உன்னை நாட்டை விட்டு வெளியேறும்படி செய்தவன் நானே' என்று கூறிற்று என்பது இதன் கருத்து. கலிபுருஷனே இவ்வாறு பறவை வடிவாக வந்து நளனை ஏமாற்றினனாதலின், 'நன்னாடு தோற்பித்தேன் நானே காண்'' என்று அப்பறவை கூறியதை உயர்திணை யாண்பால் முடிபாகக் கூறினார் புலவர். "நன்னாடு தோற்பித்தேன் நானே காண்'' என்றதனால், 'அவ்வாறு நாட்டை யிழக்கச் செய்ததுமன்றி இப்போது உன்னுடைய ஆடையையும் கவர்ந்து செல்ல வந்தேன்' என்பது வெளிப்படும்.

இது கலிபுருஷன் செருக்காற் கூறியதாம். நளன் முதலில் தன் ஆடையைக் களைந்து தமயந்தியின் கையிற் கொடுத்துவிட்டுப் பின்னர் அவளுடைய ஆடையின் ஒரு பாகத்தைக் கட்டிக்கொண்டான். அவன் அவ்வாறு கட்டிக்கொள்ளும் வரை தமயந்தி அவனுடைய ஆடையை வைத்துக்கொண்டிருந்தாள்; அதன்மேல் நளன் அவள் கையிலிருந்த அவ் வஸ்திரத்தை வாங்கிப் பறவையின் மேல் விரித்தெறிந்தான். ஆகவே நளனுடைய ஆடையை இருவரும் கைக்கொண்டவராகிறார்கள்; அங்ஙனம் கைக் கொண்டாலும் பின்னர் நளன் ஒருவனே வஸ்திரத்தை அப்பறவையின் மீது எறிந்தவனாகிறான்; ஆதலின், "குயிலுங்கோ மானுங் கொண்டணைத்த பூந்துகில்'' என்ற தொடருக்குத் "தமயந்தியும் நளனும் முதலிற் கைக்கொண்டு பின்னர் நளன் அப்பறவையின் மேலெறிந்து அதனை வளைத்த துகில்'' என்று பொருள் விரிக்கப்பட்டது. இங்ஙனங் கொள்ளாமல் இருவருமே அவ்வஸ்திரத்தைக் கொண்டு பறவையை அணைத்தார்களெனின், மேலைச் செய்யுளில், "திருநாடன் புள் வளைத்தான் ஆடையாற் போந்து'' என்றுரைத்ததற்கு மாறுபடுமென்க.

குயில்-தமயந்திக்கு உவமையாகு பெயர். அணைத்த-பெயரெச்சம் "பொன்நாடு, மால்நிறம்'' என்றதனால், அப்பறவையின் நிறம் பொன்னிறத்தினும் உயர்ந்ததென்பது பெறப்படும். 'பொன்நாடு' என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. இனி, "பொன்னாடுமாணிறத்த'' என்பதை, "ஆடுபொன்மால் நிறத்த'' எனமாற்றி "மேலே பறந்து நின்று ஆடுகின்ற பொன்போன்ற பெருமைதங்கிய நிறத்தினையுடைய'' எனப் பொருள் விரிப்பினும் அமையும். பறவைகள் மேலே பறந்தபடியே நிற்கும்போது சிறகுகளை அசைத்

தாடுவது இயற்கை. அந்தரத்தே-என்பதில் ஏகாரம் பிரிநிலை; என்றதே-என்பதில் ஏ-அசை, காண்-என்பதை அசை யெனக் கோடலு மொன்று.

நளனுடைய ஆடையைப் பறவை அபகரித்துச்
சென்றபின் அந்நளனும் தமயந்தியும் இருந்த
நிலைமை.

255. காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கும்
ஆவிபோ லாடையுமொன் றானதே—பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது.

(இ-ள்.) பூ-மலர்கள், விரிய-மலர, கள்-அவற்றிலுள்ள தேனை, வேட்டு-(பருக) விரும்பி, வண்டு-வண்டுகள், உழலும்-(அங்கு மிங்கும்) திரிகின்ற, கானத்திடை-அக்காட்டினிடத்திலே, கனகம்-பொன்னிறமாகிய, புள்-பறவையின், வேட்டை-வேட்டையை, (அதாவது: அந்தப் பறவையைப் பிடிப்பதை) ஆதரித்த போது-(நளனும் தமயந்தியும்) விரும்பிய காலத்தில், (அப்பறவை மேற் கூறியபடி நளனது வஸ்திரத்தை அபகரித்துச் செல்ல) காவி போல்-நீலோற்பலம் போன்ற, கண்ணிக்கும்-கண்களையுடைய அத் தமயந்திக்கும், கண்ணி-மாலையைத் தரித்த, அம்-அழகிய, தோள்-புயங்களையுடைய, காளைக்கும்-காளைபோன்ற குமரனாகிய அந் நளனுக்கும், ஆவிபோல்-(ஒன்றாயிருக்கும்) உயிரைப்போல, ஆடையும்-வஸ்திரமும், ஒன்று ஆனது; [எ-று.]

நளனும் தமயந்தியும் அம்மாயப் பறவையைப் பிடிக்க விரும்பி நளன் அதன் மீது வஸ்திரத்தை யெறிய அஃது அதனைக் கொண்டு சென்ற போது அவ்விருவருக்கும் ஆவி ஒன்றாயிருப்பது போல ஆடையும் ஒன்றாய் விட்டது என்பது இதன் கருத்து. வேட்டை-பறவை, மிருகம் முதலியவற்றைப் பிடித்தற்கும், கொல்லுதற்கும் உள்ள பெயர்; இத்தொழில் வேடர்களால் செய்யப்படுவது ஆதலின், இதற்கிப் பெயர் ஏற்பட்டது; இது வேடர் தொழி லெனினும், தேசக்ஷேமத்தின் பொருட்டும், வேறுகாரணமாகவும் அரசர்களும் இதனைச் செய்வது இயல்பு; ஆதலின், நளனும் இங்கு இதனைச் செய்தான் என்க. நளன் தமயந்தியாகிய இருவரும் ஒருவர்மீ தொருவர் மிக்க அன்புடையவர்; ஆதலின், அவ்விரு வரில் ஒருவருடைய உயிர் போனால் மற்றவருடைய உயிரும் போய் விடும். ஒருவருடைய உயிர் நிலைத்தால் மற்றவருடைய உயிரும் நிலைக்கும்; இதுபற்றி அவ்விருவரின் உயிரும் ஒரு தன்மைத்தாம். இவ்வாறு இருவர்க்கும் உயிர் ஒன்றாயிருப்பதுபோல அத்தருணத்

தில் வஸ்திரமும் ஒன்றாய் விட்டது; அதாவது இருவரும் ஓரே ஆடையை அணிந்து கொண்டிருந்தார்கள். அதனால், ஆசிரியர், "காவிபோற் கண்ணிக்கும் கண்ணியந்தோட் காளைக்கும் ஆவிபோல் ஆடையுமொன்றானதே" என்றார்.

ஆடையும் என்பதிலுள்ள உம்மை-இறந்தது தழுவிய எச்சவும்மை; முன்னே ஒன்றாயிருக்கும் ஆவிபோல இப்போது ஆடையும் ஒன்றானது என்று பொருள் விரிக்கப்படும். கண்ணிக்கும் காளைக்கும் என்பவற்றின் உம்மைகள் எண்ணுப் பொருளன. காளை-நளனுக்கு உவமையாகு பெயர். ஆனதே-என்பதில் ஏ-அசை. விரிய-வினையெச்சம். இடம்-ஏழாம் வேற்றுமைச்சொல் லுருபு. சோலையில் மலர்கள் பற்பல விடங்களில் மலர்ந்திருக்குமாதலானும் வண்டுகள் தேனை விரும்பி ஒவ்வொரு மலரிடத்தும் போய்ப் போய் மொய்த்துக் கொண்டிருக்குமாதலானும், "பூவிரியக் கள்வேட்டு வண்டுழலுங் கானத்திடை" என்று சிறப்பித்துக் கூறினார் ஆசிரியர்.

தமயந்தி கலியை நிந்தித்தல்.

256. அறம்பிழைத்தார் பொய்த்தா ரருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வ மிகழ்ந்தார்—புறங்கடையில்
சென்றார் புகுநரகஞ் சேர்வாய்கொ லென்றழியா
நின்றாள் விதியை நினைந்து.

[இ-ள்.] (அத்தருணத்தில் தமயந்தி அவ்வாறு ஆகாயத்தில் பறவைவடிவமாய்ப் பறந்து நின்று சொன்ன கலிபுருஷனை நோக்கி, 'நீ எங்கட்கு இத்தகைய தீங்கைச் செய்தபடியினாலே உலகத்தில்) அறம்-தருமத்தினின்றும், பிழைத்தார்-தவறினவர்களும், பொய்த்தார்-பொய்பேசினவர்களும், அருள்-கிருபையை, சிதைத்தார்-கெடுத்தவர்களும், மானத்திறம்-கௌரவத்தின் உயர்வினின்றும், பிழைத்தார் தப்பினவர்களும், தெய்வம்-தெய்வத்தை, இகழ்ந்தார்-நிந்தித்தவர்களும், புறங்கடையில்-ஒருவருடைய வீட்டின் வெளிவாயிலில், சென்றார்-யாசிக்கும் பொருட்டுச் சென்றவர்களும், (ஆகிய இவர்கள்) புகு-சேர்கின்ற, நரகம்-நரகத்தில், சேர்வாய்-அடைவாய், என்று-என்று நிந்தித்துச்சொல்லி, விதியைநினைந்து-(தனக்கும் தன் நாயகனுக்கும் நேர்ந்த கெட்ட) விதியை எண்ணி, அழியா-மனங்கலங்கி, நின்றாள்-வருந்தி நின்றனள்.

கலிபுருஷன் அவ்வாறு இறுமாந்து கூறியதைக் கேட்டவுடனே, "ஒரு பகையுமில்லாத நமக்கு இவன் ஏன் இத்தீங்கினை இயற்ற வேண்டும்; இவ்வாறு நல்லோர்க்குத் தீமை செய்தபடி

யால் இவன் மகா பாதகனே" என்று தமயந்தி அவன்மீது வெறுப்புற்றாள்; அதனால் அவனை, "நீ, அறம்பிழைத்தார் முதலியவர்கள் சேரும் நரகத்தை அடைவாய்" என்று நிந்தித்துப் பேசினாள்; அவ்வாறு பேசிய அவளுக்கு "எல்லாம் தலை விதிப்படியே நடக்கும்; ஆதலின் அவ்விதியால் நமக்கேற்பட்ட துன்பத்திற்கு அவனை பழிப்பதிற் பயனில்லை" என்னும் அறிவு தோன்றிற்று. அதனால் அவள், பின்னர் அவனை நிந்தித்ததை நிறுத்தி விட்டு விதியை நினைந்து மனங்கலங்கி நின்றாள் என்பது பெறப்படும். அறம்பிழைத்தல், பொய்த்தல், அருள் சிதைத்தல், மானங் கெடல், முதலியன போலவே பிறர்க்குத் தீங்கு செய்தலும் மகா பாதகச் செயலாதலின், 'அவற்றைச் செய்வார் அடையும் நரகத்தை எமக்கு இத்தகைய தீங்கு செய்த நீயும் சேர்வாய்' என்றாள்.

அறம் பிழைத்தார், திறம் பிழைத்தார் என்பன நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத்தொகைகள். பிழைத்தல்-தவறுதல். அறம், மானத்திறம் இவற்றினின்றும் பிழைத்தலாவது இவற்றை விட்டு நீங்குதலாம்; அதாவது இவற்றைச் செய்யாதிருத்தலாம். பிழைத்தார், பொய்த்தார், சிதைத்தார், இகழ்ந்தார், சென்றார் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. புறம்-வெளி; கடை-வீட்டின் கடைப்பாகம், அதாவது வாயில்; இவ்விடம் வெளியிலிருந்து உட்செல்வார்க்கு முதற்பாகமாயினும் வீட்டினுள்ளிருந்து வெளிச் செல்வார்க்குக் கடைப்பாகமாம். வெளியிலிருப்பாரினும் உள்ளிருப்பாரே சிறந்தாரும் வீட்டிற்குரியாருமாதலின் அவர் பொருட்டேற்பட்ட கடையென்பதே சிறந்ததாகும். இக்காரணம் பற்றியே வாயிலுக்குக் கடையென்னும் பெயர் வழங்கலாயிற்று; ஆகவே 'புறக்கடை' என்பது 'வெளிவாயில்' எனப் பொருள்பட்டு நின்றது; வீட்டின் பிற்பக்க வாயிலுக்கும் இப்பெயரே வழங்கும்; அதற்கும் இதுவே காரணமாகக் கொள்ளப்படும். யாசகத்தின் பொருட்டுச் செல்வோரே தங்கள் இழிவு குறித்து உட்புக அஞ்சி வெளியில் நிற்பர்; மற்றையர் உட்புகும் உரிமை பூண்டவராவார்; இக்காரணத்தால் 'புறங்கடையில் சென்றார்' என்பது யாசகரையே குறிக்கும்; ஆதலின் இத்தொடரோடு, 'யாசிக்கும் பொருட்டு' என்னுஞ் சொற்கள் இசையெச்சமாகக் கூட்டியுரைக்கப்பட்டன. புகு-பெயரெச்சம், கொல்-அசை. அழியா-செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

தமயந்தி நளனுக்குத் தேறுதல் கூறி அவ்விடத்தை விட்டுச் செல்லுதற்கு அவனை அழைத்தல்.

257. வையந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செயலுண்டோ—மெய்வகையே

சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றாள் புலர்ந்து.

[இ-ள்.] (அவ்வாறு கலிபுருஷனை நிந்தித்துக் கூறிய தமயந்தி நளனை நோக்கி) புலர்ந்து-துக்கத்தால் மேனி வெதும்பி, மெய்வகையே-உண்மையின் விதத்தையே; சேர்ந்து-அடைந்து, அருளி-எவர்க்கும் கிருபையைச் செய்து, நின்ற-நிலைபெற்ற, தனி-ஒப்பற்ற, செங்கோலாய்-செங்கோலையுடைய மன்னனே, (இத்துன்பம் நமக்குத் தெய்வ கட்டளைப்படியே நேர்ந்தது; ஆதலின் பிறரை நோவதில் பலனில்லை; இதற்கு நம்மாற் செய்வதி யாது?) வையம்-இப்பூமியிலுள்ளவர்கள்; துயர்-உழப்ப-துன்பத்தால் வருந்தும்படி, பன்மாயம்-பலவஞ்சனைகளை, சூழ்ந்து-எண்ணிச் செய்து, தெய்வம்-தெய்வமே, கெடுத்தால்- (இவ்வாறு நம்மைக்) கெடுக்குமானால், (அச் செய்கைக்கு) செயல்-நம்மால் செய்யத்தக்க எதிர்ச்செய்கை, உண்டோ-உளதோ, (இல்லை; இனி) இங்கு-இவ்விடம், ஒழிய-நம்மைவிட்டு நீங்கும்படி, போந்தருளுக-வருவீராக, என்றாள்-என்று கூறினாள்; [எ-று.]

மேற்கூறியபடி கலியை நிந்தித்துப் பேசிய தமயந்தி, 'இது நம்முடைய பழைய தீவினைக்கீடாகத் தெய்வக் கட்டளையால் நேர்ந்ததாகும்; இதற்காக அக்கலியை நோவதிற் பயனில்லை' என்று கருதி அச்சமயத்தில் வருந்தி நின்ற நளனை நோக்கி, 'நாதா! நீர் இப்பிறப்பில் நீதியோடு அரசு புரிந்து வந்திருப்பினும் முற்பிறப்பில் தீவினை செய்திருக்கக்கூடும்; அதற்காகவே தெய்வ கட்டளையால் இத்துன்பங்கள் நேர்கின்றன; இவ்வாறு தெய்வமே நம்மைப் பார்த்துக் கெடுக்கும்போது அச்செய்கைக் கெதிராக நம்மால் என்ன செய்யவியலும்; ஆதலால் நீர் வருந்தாமல் இவ்விடத்தை விட்டு வருவீராக'' என்று அழைத்தாளென்பது கருத்து. நளன் கெட்டதற்கு உலகத்தார் மிகுதியும் வருந்தினார்களாதலின், தமயந்தி, "வையந் துயருழப்ப மாயம் பல சூழ்ந்து தெய்வம் கெடுத்தால்'' என்றாள். மனிதர்க்குத் தெரியாமலே தெய்வம் விதிப்பயனை அவரிடம் சேர்ப்பதால் அஃதொரு மாயச் செயலாம்; அது பற்றியே 'மாயம் பல சூழ்ந்து' என்றாள். தெய்வங் கெடுத்தலை வையத்தின் மேலேற்றித் 'தெய்வம் உலகத்தாரைக் கெடுத்தால் அவர்களால் என்ன செய்ய முடியும்' எனப் பொருளுரைப்பினும் அமையும்.

வையம் இடவாகுபெயர். துயர் உழப்ப மூன்றாம் வேற்றுமைத் தொகை. வகை-பகுப்பு, விதம்; மெய்யின் விதமாவது உண்மை வகுப்பைச் சேர்ந்த காரியமாம். வகை என்பதில் ஏகாரம் பிரிநிலை.

அருளுக என்றாள் என்பது அகரந் தொகுத்து அருளுகென்றாள் என வந்தது.

சூரியன் அஸ்தமித்தல்.

258 அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவான் மேல்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை
யொளிப்பான்போற் பொற்றே ருடன்.

[இ-ள்] (தமயந்தி அவ்வாறு கூறிய பின்பு அவளும் நளனும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப்போனார்கள்; அவ்வாறு அவர்கள்) அந்த நெடுஞ்சுரத்தின் மீது-அந்த நீண்ட பாலைவனத்தின் மேல், ஏக-போக, (அத்தருணத்தில்) ஆங்கு-அவ்விடத்திலே, அழலும்-தகிக்கின்ற, வெம்தழலை-வெப்பமான அக்கினியின் சூட்டை, ஆற்றுவான்-தணித்துக் கொள்வதற்கு, மேல்கடற்கு-மேற்குச் சமுத்திரத்தில், குளிப்பான்போல்-மூழ்குகின்றவனைப்போலவும், (இந்தப் பூமி வெளிப்படையாகத் தோற்றிக் கொண்டிருப்பதனால் நளனுக்குத் துன்பத்தையே விளைவித்துக் கொண்டிருக்கின்றது; இதனை மறைத்து விட்டால் அவனுக்கு இத்தகைய துன்பம் விளையாது; ஆதலால், இப்பூமியை மறைத்துவிடவேண்டும் என்று நளன்மீது இரக்கங்கொண்டு) கூர் இருளால்-மிகுந்த இருட்டினாலே, பாரை-இப் பூமியை, ஒளிப்பான்போல்-மறைப்பவனைப்போலவும், எந்தை-என் தந்தையாகிய சூரியன், பொன்தேருடன்-அழகிய இரதத்துடனே, சென்று-(மேற்குச் சமுத்திரத்தில்) போய், அடைந்தான்-சேர்ந்தான்; [எ-று.]

தமயந்தியும் நளனும் அவ்விடத்தை விட்டு அப்பாலை வனத்தில் புறப்பட்டுப் போகுங் காலத்தில், சூரியன் அப்பாலை வனத்தின் வெம்மையால் தனக்கேற்பட்ட உஷ்ணத்தைத் தணித்துக்கொள்ள மேற்குக் கடலிற் போய்க் குளிப்பவன் போலவும், நளனுக்குத் துன்பஞ் செய்யும் பூமியை அவனுக் கிரங்கி இருட்டால் மறைப்பவன் போலவும் மேற்றிசைக் கடலிற் போய் மறைந்தான் என்பது இதன் கருத்து. இங்குச் சூரியன் அஸ்தமித்ததை, பாலை நிலத்தாலேற்பட்ட வெம்மையை ஆற்றிக்கொள்ள மேற்குக் கடலிற் குளிக்கப் போனது போலவும், நளனுக்கிரங்கிப் பூமியை இருட்டால் மறைத்தது போலவும் கூறினார் ஆசிரியர். சூரியன் மறைந்தவுடன் உலகத்தில் இருள் சூழ்வது இயற்கையாதலின், அவ்விருள் பூமியை மறைக்கும் பொருட்டுச் சூரியனால் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறப்பட்டது. பகற்காலத்தில் உலக காரியங்கள் நடைபெறும்; இராக் காலத்தில் ஒடுங்கும்; ஆதலின், உலகத்தில் இருள் பரவும்படி

சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றாள் புலர்ந்து.

[இ-ள்.] (அவ்வாறு கலிபுருஷனை நிந்தித்துக் கூறிய தமயந்தி நளனை நோக்கி) புலர்ந்து-துக்கத்தால் மேனி வெதும்பி, மெய்வகையே-உண்மையின் விதத்தையே; சேர்ந்து-அடைந்து, அருளி-எவர்க்கும் கிருபையைச் செய்து, நின்ற-நிலைபெற்ற, தனி-ஒப்பற்ற, செங்கோலாய்-செங்கோலையுடைய மன்னனே, (இத்துன்பம் நமக்குத் தெய்வ கட்டளைப்படியே நேர்ந்தது; ஆதலின் பிறரை நோவதில் பலனில்லை; இதற்கு நம்மாற் செய்வதி யாது?) வையம்-இப் பூமியிலுள்ளவர்கள்; துயர்-உழப்ப-துன்பத்தால் வருந்தும்படி, பலமாயம்-பலவஞ்சனைகளை, சூழ்ந்து-எண்ணிச் செய்து, தெய்வம்-தெய்வமே, கெடுத்தால்- (இவ்வாறு நம்மைக்) கெடுக்குமானால், (அச் செய்கைக்கு) செயல்-நம்மால் செய்யத்தக்க எதிர்ச்செய்கை, உண்டோ-உளதோ, (இல்லை; இனி) இங்கு-இவ்விடம், ஒழிய-நம்மைவிட்டு நீங்கும்படி, போந்தருளுக-வருவீராக, என்றாள்-என்று கூறினாள்; [எ-று.]

மேற்கூறியபடி கலியை நிந்தித்துப் பேசிய தமயந்தி, 'இது நம்முடைய பழைய தீவினைக்கீடாகத் தெய்வக் கட்டளையால் நேர்ந்ததாகும்; இதற்காக அக்கலியை நோவதிற் பயனில்லை' என்று கருதி அச்சமயத்தில் வருந்தி நின்ற நளனை நோக்கி, 'நாதா! நீர் இப்பிறப்பில் நீதியோடு அரசு புரிந்து வந்திருப்பினும் முற்பிறப்பில் தீவினை செய்திருக்கக்கூடும்; அதற்காகவே தெய்வ கட்டளையால் இத்துன்பங்கள் நேர்கின்றன; இவ்வாறு தெய்வமே நம்மைப் பார்த்துக் கெடுக்கும்போது அச்செய்கைக் கெதிராக நம்மால் என்ன செய்யவியலும்; ஆதலால் நீர் வருந்தாமல் இவ்விடத்தை விட்டு வருவீராக'' என்று அழைத்தாளென்பது கருத்து. நளன் கெட்டதற்கு உலகத்தார் மிகுதியும் வருந்தினார்களாதலின், தமயந்தி, "வையந்துயருழப்ப மாயம் பல சூழ்ந்து தெய்வம் கெடுத்தால்'' என்றாள். மனிதர்க்குத் தெரியாமலே தெய்வம் விதிப்பயனை அவரிடம் சேர்ப்பதால் அஃதொரு மாயச் செயலாம்; அது பற்றியே 'மாயம் பல சூழ்ந்து' என்றாள். தெய்வங் கெடுத்தலை வையத்தின் மேலேற்றித் 'தெய்வம் உலகத்தாரைக் கெடுத்தால் அவர்களால் என்ன செய்ய முடியும்' எனப் பொருளுரைப்பினும் அமையும்.

வையம் இடவாகுபெயர். துயர் உழப்ப மூன்றும் வேற்றுமைத் தொகை. வகை-பகுப்பு, விதம்; மெய்யின் விதமாவது உண்மை வகுப்பைச் சேர்ந்த காரியமாம். வகை என்பதில் ஏகாரம் பிரிநிலை.

அருளுக என்றாள் என்பது அகரந் தொகுத்து அருளுகென்றாள் என வந்தது.

சூரியன் அஸ்தமித்தல்.

258 அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவான் மேல்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை
யொளிப்பான்போற் பொற்றே ருடன்.

[இ-ள்] (தமயந்தி அவ்வாறு கூறிய பின்பு அவளும் நளனும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப்போனார்கள்; அவ்வாறு அவர்கள்) அந்த நெடுஞ்சுரத்தின் மீது-அந்த நீண்ட பாலைவனத்தின் மேல், ஏக-போக, (அத்தருணத்தில்) ஆங்கு-அவ்விடத்திலே, அழலும்-தகிக்கின்ற, வெம்தழலை-வெப்பமான அக்கினியின் சூட்டை, ஆற்றுவான்-தணித்துக் கொள்வதற்கு, மேல்கடற்கு-மேற்குச் சமுத்திரத்தில், குளிப்பான்போல்-மூழ்குகின்றவனைப்போலவும், (இந்தப் பூமி வெளிப்படையாகத் தோற்றிக் கொண்டிருப்பதனால் நளனுக்குத் துன்பத்தையே விளைவித்துக் கொண்டிருக்கின்றது; இதனை மறைத்து விட்டால் அவனுக்கு இத்தகைய துன்பம் விளையாது; ஆதலால், இப்பூமியை மறைத்துவிடவேண்டும் என்று நளன்மீது இரக்கங்கொண்டு) கூர் இருளால்-மிகுந்த இருட்டினாலே, பாரை-இப்பூமியை, ஒளிப்பான்போல்-மறைப்பவனைப்போலவும், எந்தை-என் தந்தையாகிய சூரியன், பொன்தேருடன்-அழகிய இரதத்துடனே, சென்று-(மேற்குச் சமுத்திரத்தில்) போய், அடைந்தான்-சேர்ந்தான்; [எ-று.]

தமயந்தியும் நளனும் அவ்விடத்தை விட்டு அப்பாலை வனத்தில் புறப்பட்டுப் போகுங் காலத்தில், சூரியன் அப்பாலை வனத்தின் வெம்மையால் தனக்கேற்பட்ட உஷ்ணத்தைத் தணித்துக்கொள்ள மேற்குக் கடலிற் போய்க் குளிப்பவன் போலவும், நளனுக்குத் துன்பஞ் செய்யும் பூமியை அவனுக் கிரங்கி இருட்டால் மறைப்பவன் போலவும் மேற்றிசைக் கடலிற் போய் மறைந்தான் என்பது இதன் கருத்து. இங்குச் சூரியன் அஸ்தமித்ததை, பாலை நிலத்தாலேற்பட்ட வெம்மையை ஆற்றிக்கொள்ள மேற்குக் கடலிற் குளிக்கப் போனது போலவும், நளனுக்கிரங்கிப் பூமியை இருட்டால் மறைத்தது போலவும் கூறினார் ஆசிரியர். சூரியன் மறைந்தவுடன் உலகத்தில் இருள் சூழ்வது இயற்கையாதலின், அவ்விருள் பூமியை மறைக்கும் பொருட்டுச் சூரியனால் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறப்பட்டது. பகற்காலத்தில் உலக காரியங்கள் நடைபெறும்; இராக் காலத்தில் ஒடுங்கும்; ஆதலின், உலகத்தில் இருள் பரவும்படி

செய்துவிட்டால் நளனுக்குத் துன்பமில்லாதிருக்குமென்று சூரியன் நளன் பொருட்டிரங்கினு னென்க. சூரிய வெப்பத்தால் உடல் வியர்த்தவர்கள் நீரில் குளித்தல் இயல்பு. ஆதலின் இங்குச் சூரியனும் குளிக்கச் சென்றுனென்க. சூரியன் உலகத்தை ஆதரிக்கும் முக்கிய கர்த்தாவாதலின் அவனை, 'எந்தை' என்றார் ஆசிரியர்.

மீது-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. அந்த-அகரச் சுட்டின் விகாரம். நெடுமையீறு கெட்ட பண்புச் சொல்லடி. ஏக-வினையெச்சம். ஆற்றுவான்-வினையெச்சம். கடற்கே-ஏழாம் வேற்றுமை நான்காம் வேற்றுமையாக மயங்கிவந்த உருபு மயக்கம். எந்தை-என் தந்தை என்பதன்மரூஉ.

நளன் தமயந்தியுடனே இருளில் செல்லல்.

259. பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான மடம்பின் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கு நன்னுடன் கோதையோடுஞ் சென்றுன்
இளம்பேய்க்குந் தோன்று விருள்.

(இ-ள்.) (மேற்கூறியபடி) பானு - சூரியனுடைய, நெடும் தேர்-உயர்ந்த தோானது, படு-(தினந்தோறும் தான்) மறைகின்ற, கடலில்-மேற்குக் கடலினிலே, பாய்ந்ததன்பின்- புகுந்த பிறகு, கானம்-காட்டில், அடம்பின், அடப்பங்கொடிகளின், கவடு-இருபிளவாகிய, இலைகள்-இலைகளானவை, மானின் -மானினது, குளம்பு ஏய்க்கும்-குளம்புகளை நிகர்த்திருக்கின்ற, நல் நாடன் - நல்ல நாட்டையுடையவனுகிய நளன், கோதை யொடும்-கூந்தலையுடைய பெண்ணாகிய தமயந்தியுடனே, (மேற்கூறியபடி நடந்து) இளம் பேய்க்கும்-இளமையான பைசாசங்கட்கும், தோன்று-ஒன்றுந் தெரியாத, (அதாவது ஒன்றுந் தோன்றுதிருப்பதற் கேதுவாய்ச் சூழ்ந்திருந்த) இருள்- இருட்டிலே, சென்றுன்-போனுன்; [எ-று.]

சூரியன் மறைந்தவுடன் நளன் தமயந்தியுடனே இருட்டில் நடந்து சென்றுன் என்பது இதன் கருத்து. படுதல்-கெடல், அஃதிங்கே மறைதற் பொருளில் வந்தது. சூரியன் மேற்குக் கடலுக்கப்பாற் செல்லுதல், இங்கு அதற்குள் மறைந்ததாகக் கூறப்பட்டது. அடம்பு-ஒருவகைக்கொடி; இதன் இலை இருபிளவாய் மான் குளம்பைப் போன்றிருக்கும். குளம்பு-மான் முதலிய மிருகங்களின் பாதத்தினடிப்பாகம் 'காட்டில் அடம்பிலை மான் குளம்பை நிகர்க்கும் நாடு' என்றதன் மூலம் நிடத தேசத்தின் உயர்வை விளக்கினார் ஆசிரியர். 'இளம் பேய்க்குந் தோன்று இருள்' என்றதனால் இருளின் மிகுதிப்பாடு விளங்கும்; முதிர்ந்த பேயினும் இளம் பேய்

வன்மையுடையதாம்; 'அதற்கும் தோன்றா இருள்' எனவே மேலும் விசேஷமாம்.

படுகடல்-வினைத்தொகை. 'பாய்ந்ததன் பின்' என்பது 'பாய்ந்ததற் பின்' என னகரம் றகரமாய் விகாரப்பட்டு வந்தது; இதில், தன்-சாரியை. கானம் அடம்பின் ஏழாம் வேற்றுமைத்தொகை. "நெடிலோடுயிர்த் தொடர்க் குற்றுகரங்களுட், டற வொற்றிரட்டும் வேற்றுமை மிகவே" என்னும் (நன்- உயி-பு. 33 ஆம்) சூத்திர விதிப்படி 'கவடு இலை' என்பது கவட்டிலை என டகர வொற்றிரட்டி வந்தது. கோதை-ஆகுபெயர். ஒடும் என்பதிலுள்ள உம்மை-அசை; பேய்க்கும் என்பதிலுள்ள உம்மை-உயர்வு சிறப்புப் பொருளது. பேய்க்கு உயர்வாவது இருளில் மயக்கமின்றிச் சஞ்சரித்தலாம்.

நளன் ஒரு பாழ்மண்டபத்தைக் காணல்.

260. எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேலைதனில்—அங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து.

(இ-ள்.) (அவ்வாறு நளன் செல்லுங்காலத்தில் ஏதேனுமோரிடமகப்பட்டால் அங்குத் தங்கிச் செல்லலாமென்று தங்குமிடத்தைத் தேடிக்கொண்டே போயினன்; அங்ஙனம்) எங்கு-எவ்விடத்தில், புகல்இடம்-புகுந்து தங்கும்படியான இடம், ஆம்-கிடைப்பதாகும், என்று எண்ணி-என்று நினைத்து, இருள் வழி-அவ்விருள் சூழ்ந்த மார்க்கத்திலேயே, போய்- சென்று, வெம் கானம்-வெப்பமான அக்காட்டிலே, திரியும் வேலைதனில்-அலையுங்காலத்தில், வந்து-இப்பூமியிற்பிறந்து, பால்-பால்போன்ற, வெண் குடைநிழற்கீழ்-வெள்ளைக் குடையின் நிழலடியிலே, (இருந்து அரசாட்சி புரிந்து) வாழ்-வாழ்கின்ற, மண்டபம்-சிறந்த கொலுமண்டபத்தை, கண்டான்-முன்னே மகிழ்ச்சியோடு பார்த்திருந்தவனாகிய அந்நளன், (இப்போது கெட்டகாலம் வந்தபடியால், அதனை இழந்து தனக்குத் தங்குமிடமாக) அங்கே-தான் தேடிச்சென்ற அவ்விடத்திலே, ஓர் பாழ் மண்டபம்-ஒரு பாழான (அதாவது மனித சஞ்சாரமில்லாது கெட்ட) மண்டபத்தை, கண்டான்-பார்த்தான்; [எ-று.]

முன் கூறியபடி தமயந்தியுடனே இருட்டில் நடந்து சென்ற நளன் அவ்விரவில் தங்குவதற்கு ஓரிடத்தைத் தேடிக்கொண்டே போய் ஒரு பாழ் மண்டபத்தைக் கண்டான் என்பது இதன் கருத்து. இருட்டில் தமயந்தியை அழைத்துக்கொண்டு போவது நளனுக்குக் கஷ்டமாயிருந்தபடியால், தங்கியிருந்து அவ்விரவைக்

கழிப்பதற்கு ஓரிடத்தைத் தேடினான். அப்போது அப்பாழ் மண்டபம் அகப்பட்டது. ஓர் சிறந்த கொலுமண்டபத்திற் குடை நிழற்கீழிருந்து அரசு புரிந்த மன்னன் கெட்டகாலத்தால் அப் பதவியை இழந்து ஓர் பாழ்மண்டபஞ் சேர்தல் எவரும் இரங்கத் தக்க விஷயமாதலின், ஆசிரியர் அவன் பொருட்டிரங்கி, "பால் வெண்குடை நிழற் கீழ் வாழ் மண்டபங் கண்டான் பாழ்மண்டபங் கண்டான் வந்து" என்று கூறினார். இதனால், "எத்தகைய ஐசுவரியத்திலிருந்தவர்களும் கெட்டகாலத்தால் அந்நிலைமை மாறித் தாழ்ந்த நிலைமையை அடைதல் இயற்கை; ஆதலின் உலக வாழ்வைச் சதமென நினைக்கலாகாது" என்னும் உலக நிலையாமை உணரப்படும். இனிப் "பால் வெண்குடை நிழற்கீழ் வாழ் மண்டபங் கண்டான்" என்பதற்கு, பால் போலும் வெள்ளிய குடை நிழற்கீழ் வாழும்படியான பூமியின் தவப்பயனைக் கண்டவன்" எனப் பொருளுரைத்தலுமொன்று; இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்து 'மண்டபம்' என்பதை மண்-தபம் எனப் பிரிக்கவேண்டும்; தபம்-தவம்; இது தவப்பயனை உணர்த்தும்; பூமியின் தவப்பயனாவது பூமியை அடைதற்குரிய தவத்தின் பயனாகிய அரசாட்சியாம். இஃதன்றி, எத்தகைய தவத்தையும் செய்தற்குப் பூமியே உரியவிடமாதலின், மண்தபம் என்பதற்குப் பூமியிற் செய்யத்தக்க தவப்பயன் எனக்கூறினும் பொருந்தும். ஆகவே இப் பொருள்களாலும் 'அரசாட்சியை அடைந்திருந்தவன்' என்பதே பெறப்படும்; ஆதலின், இதற்குப், முன்னுரைத்த பொருளுக்கும் வேறுபாடின்றாம்; எனினும், பாழ்மண்டபம் என்றதற்குத் தக, கொலுமண்டபம் எனக் கோடலே சிறப்பு.

ஆம்-என்பது கிடைத்தற் பொருளில் நின்றது. கீழ் - ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. கானகம் - கான் + அகம்; இருபெயரொட்டுப் பண்பு.

நளன் பாழ்மண்டபத்தில் தங்குமாறு தமயந்தியை அழைத்தல்.

261. மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து.

[இ-ள்.] (இவ்வாறு நளன் அப்பாழ் மண்டபத்தைக் கண்ட பின் தமயந்தியை நோக்கி) புலர்ந்து - வாடி, சோர் - அவிழ்ந்து தொங்குகின்ற, கூந்தல் - கூந்தலையுடைய, மாதராய் - அழகுள்ள தமயந்தியே, மூரி இரவும்போய்-மந்தமான முன்னிரவும் கழிந்து,

முற்று இருள் ஆய்-நிறைந்த இருளுண்டாகி, மூண்டதால்-கூடிய படியால், (இனி இந்த இருளில் நடந்து செல்லுதல் நம்மால் இயலாது;எங்கேனும் நாம் ஓரிடத்தில் தங்கவேண்டுமென,எதிரேகண்ட மண்டபத்தைக் காட்டி)மற்று-வேறே, (இது தவிர இங்கே) சாரும் இடம் இல்லை-தங்கும் இடம் இல்லை, (நாம் இதிற்றான் தங்க வேண்டும்; ஆதலின்) நாம்—, இந்த மண்டபத்தே - இந்தப்பாழ் மண்டபத்தில், கண் துயில-நித்திரைசெய்ய, போதராய்-வருவாயாக, என்றான்-என்று கூறினான். [எ-று.]

நளன் அப்பாழ் மண்டபத்தைக் கண்டவுடன், அதனைத் தமயந்திக்குக் காட்டி, அவளை நோக்கி, "பெண்ணே! இருள் அதிகமாயிருப்பதால் இதில் நாம் செல்லுதல் முடியாது; எங்கேனும் தங்கித்தான் செல்லவேண்டும்; அவ்வாறு தங்குதற்கு இங்கே இந்தப் பாழ் மண்டபத்தைத் தவிர வேறே இடமில்லை; ஆதலின், இதில் நாம் நித்திரை செய்து விடிந்தபின் செல்வோம் வருவாயாக" என்று அழைத்தான் என்பது இதன் கருத்து. முன்னிரவு கழிந்து நள்ளிரவு வந்தது; அப்போது இருள் மிகுந்தது; எப்பொழுதும் முன்னிரவு நேரத்தில் இருள் குறைவா யிருத்தலும், நள்ளிரவு நேரத்தில் இருள் அதிகரித்தலும் இயற்கை; ஆதலினாலேயே நளன், 'மூரியிரவும் போய் முற்றிருளாய் மூண்டதால்" என்றான். அந்தப் பாழ் மண்டபம் அவர்கள் தங்குவதற்குச் சிறிதும் பொருந்தாததா யிருந்தது; எனினும்; அது தவிர அங்கே வேறிடமின்மையால் அதிலேயே தங்கவேண்டியதாயிற்று; ஆதலின், "சாருமிடம் மற்றுத் தானில்லை; சோர்கூந்தல் மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்போதராய்" என்றுங் கூறினான். நளன் எவ்வகை யிருளினும் செல்லும் வல்லமையுடையவனெனினும், தமயந்தி வருந்துவா ளென்பதைக் கருதியே அம்மண்டபத்தில் தங்கக் கருதினான். அவன் அச்சமயத்தில் வாடியதும் அவள் பொருட்டே யாம். இவ்வாறு நளன் கூறினான் எனவே, அவள் இசைதலும், இருவரும் ஆங்குப் படுத்தலும் அமையும். ஆகவே இருவரும் அம்மண்டபத்திற் படுத்தார்கள் என்க.

மூரி-சோம்பல்; இது மந்தத்தைக் குறிக்குமாதலின், 'மூரி இரவு' என்பதற்கு 'மந்தமான முன்னிரவு' என்று பொருள் கூறப்பட்டது; மந்த இரவாவது குறைந்த இருளுள்ள இரவாம்; மந்தம் குறைவைக் குறிக்கும். இரவும் என்பதிலுள்ள உம்மை-அசை; தான்-அசை. மாதர் - அழகு, அதனை யுடையவள் மாதராள். போதராய்-ஏவல் வினைமுற்று; இதில், போ என்பதனோடு தா என்பது துணைவினையாகச் சேர்ந்து போதா-எனப் பகுதியாயிற்று.

நளன் அம்மண்டபத்திற் படுத்திருக்கும் நிலைமையை நோக்கித் தமயந்தி வருந்திக் கூறுதல்.

262. வைய முடையான் மகரயாழ் கேட்டருளுந்
தெய்வச் செவிகோதுகின் சில்பாடல்— இவ்விரவில்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து.

[இ-ள்.] (மேற் கூறியபடி தமயந்தியும் நளனும் அப்பாழ் மண்டபத்தில் படுத்தபின்) தோட்ட-பூவிதழ்களையுடைய, வார்-நீண்ட, கோதையாள்-மாலையையணிந்தவளாகிய தமயந்தி,(அங்கே கொசுகுகள் பறந்தொலிக்கக்கேட்டுத்தன் நாயகனுக்கு அவ்வொலி துயரைச் செய்யுமென்று கருதி) வையம் உடையான்-பூமியை (அதாவது பூமியாளுகையை) உடையவனாகிய மன்னனது, மகரயாழ்-மகர வீணையின் நாதத்தை, கேட்டருளும்-இராக்காலத்தில் கேட்டருளுகின்ற, தெய்வச் செவி-தெய்வீகத்தன்மை பொருந்திய காதுகள், இரவில்-இந்த இராத்திரியில், கொதுகின்-கொசுகுகளினுடைய, சில்-அற்பமான, பாடல்-பாடலை, கேட்ட-கேட்டன, ஆ-ஐயோ!, என்று-என்று சொல்லி, சோர்ந்து-தளர்ந்து, கெண்டை-சேல் மீனையொத்த, அம்-அழகிய, கண்-கண்களிலே, நீர் சோர-நீர்வடிய, அழுதாள் - புலம்பினாள்;[எ-று.]

அந்தப் பாழ்மண்டபத்திற் படுத்தவுடன் அங்கே கொசுகுகள் பறந்தொலிக்கக் கேட்ட தமயந்தி, அவ்வொலி தன் நாயகனுக்குத் துயரத்தைச்செய்யுமென்றுகருதி, “மகரயாழின் நாதத்தைக்கேட்ட இம்மன்னனுடையசெவிகள் இந்த அற்பமான கொசுகுகளின் பாடலைக் கேட்க இசைந்தனவே” என்று சோர்ந்து கண்ணீர் விட்டழுதாளென்பது இதன் கருத்து. அக்கொசுகுகளின் உபத்திரவம் தமயந்திக்கு அதிகமாயிருந்தது; அதனால் அவள் மன்னனுக்கும் இவ்விதமே கஷ்டமேற்பட்டிருக்குமென்றுணர்ந்தாள், அவள் பதிவிரதையாதலின், தனக்கு கஷ்டமிருந்த அச்சமயத்திலும் தன் துன்பத்தைப் பெரிதாகக் கருதாமல் கணவன் துன்பத்திற்கே இரங்கினாள்.

மகரயாழ்-பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் என்னும் நால்வகை வீணைகளிலொன்று; இசைஞானம் தெய்விகத்தன்மை வாய்ந்தவர்க்கே அமையுமாதலின், இங்கு வீணை நாதத்தைக் கேட்டற்குரிய நளன் செவிகளைத் தமயந்தி, ‘தெய்வச்செவி’ என்றாள்.

கொதுகு-கொசுகு என்பதன் போலி. கேட்டவா என்பதில், ஆ-இரக்கக் குறிப்பிடைச் சொல். தோட்டது என்பது, துவ்விகுதி

குறைந்து, தோட்ட-என வந்தது; இது, தோடு என்பதிற் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்.

மேற்கூறியபடி வருந்திய தமயந்தியை நோக்கி நளன் கூறுதல்.

263. பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்ட னிழலிற் குழைதடவுங்—கெண்டை
வழியனீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்றா னரசு.

[இ-ள்] (அவ்வாறு வருந்திய தமயந்தியை நோக்கி) அரசு-நள மகாராஜன், பண்டை-பழமையான, வினைப்பயனை-தீவினையின் விளைவை, பாரிடத்தில்-இப்பூமியில், ஆர்கடப்பார்-எவர் விலக்கிச் செல்பவர், (ஒருவருமில்லை ஆதலின்) கொண்டல்-கூந்தலாகிய மேகத்தின், நிழலில்-சாயையிலே (தங்கி) குழை-(காதுகளில அணியப்பட்டிருக்கும்) குண்டலங்களை, தடவும்-தடவுகின்ற, கெண்டை-கண்களாகிய சேல்மீன்களினின்று, நீர்வழியல்-நீரை வடிக்காதே (அதாவது கண்ணீரை வடிக்காதே) என்றான்-என்று கூறினான், (மேலும்) மனம் நடுங்கி-மனம் நடுக்கமுற்று, வெய்துஉற்று-மேனி வெதும்பி,நீ அழியல்-நீ வருந்தாதே, என்றான்-என்றும் கூறினான்; [எ-று]

நளன் மேற்கூறியபடி வருந்திய தமயந்தியை நோக்கிப் "பெண்ணே! இது நம்பழவினைப் பயனால் நேர்ந்தது; இதனைக் கடத்தல் உலகத்தில் எவராலும் முடியாது; ஆதலின், நீ இதன் பொருட்டு வருந்திக் கண்ணீர் வடிக்காதே" என்று கூறினான் என்பது இதன் கருத்து. பழவினைப்பயனால் நேர்ந்த துன்பத்தை மனிதர் அனுபவித்தே தீரவேண்டுமாதலின் நளன் அவளிடத்தில் 'இதனை விலக்குதல் அரிதாம்; ஆதலின் இதற்காக வருந்துவதிற் பயனில்லை' என்று இவ்வாறு கூறினான். பெண்களின் முகத்தில் கூந்தல் மேலும் அதனடியிற் கண்களும் இருப்பனவாம்; அக்கண்கள் புரளும்போது அவற்றின் சாயல் பக்கத்திலுள்ள செவிகளில் அணியப் பட்டிருக்கும் காதணிகளின் மீது பாயும்; ஆதலின், 'கொண்ட னிழலிற் குழைதடவுங் கெண்டை' என்று விழியைச் சிறப்பித்துக் கூறினார் ஆசிரியர்.

'பாரிடத்தில் ஆர் கடப்பார்' என்பது எதிர்மறை யெச்சம்; ஒருவருங் கடக்க மாட்டார் என்ற பொருளைத் தரும். கொண்டல்-கூந்தலுக்கு உவமை யாகுபெயர். கெண்டை-கண்ணுக்கு உவமை யாகு பெயர். 'வழியல் நீர் என்றான்' என்பதை 'நீர்வழியல் என்றான்' என்றும், 'அழியல் நீ என்றான்' என்பதை, 'நீ அழியல் என்றான்' என்றும் மாற்றிக்கொள்ளவேண்டும். 'கெண்டை வழியல் நீர்'

என்பதில், கண்ணீர் வடித்தலாகிய சினைவினை முதலொடு முடிந்தது. வழியல், அழியல் என்பன எதிர்மறையேவல் ஒருமைவினை முற்றுக்கள். அரசு என்னும் எழுவாய், வழியல் என்றான் அழியல் என்றான் என்னும் இரண்டு பயனிலைகளைக் கொண்டன.

தமயந்தி மேலும் வருந்துதல்.

264. விரைமலர்ப்பூ மெல்லணையு மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும்—அரசேநான்
காணேனிங் கென்றுக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணேர் முலையாள் புலர்ந்து.

[இ-ள்.] (மேற்கூறியபடி நளன் தேறுதல் கூறியும் மனந்தேறாமல் மீண்டும்) பூண்-ஆபரணங்களை யணிந்த, ஏர்-அழகுபொருந்திய, முலையாள்-தனங்களையுடைய தமயந்தி, (நளனை நோக்கி) அரசே-அரசனே!, (நாம் அரண்மனையில் எவ்வளவோ சௌகரியங்களோடு நித்திரை செய்வோம்; அத்தகைய நமக்கு இப்போது) விரை-வாசனை தங்கிய, மலர்-புஷ்பங்களினாலாகிய, பூ-அழகிய, மெல்-மெல்லிய, அணையும் மெத்தையையும், மெய்காவல்-நமது தேகத்தைக் காக்குந் தொழிலை, பூண்ட-கொண்ட, பரிசனமும்-ஏவலாளர்களையும், பள்ளி அறையும்-படுக்கை அறையையும், இங்கு-இவ்விடத்தில், நான் காணேன்-நான் பார்க்கின்றிலேன், என்று-என்று சொல்லி, கண்பனிப்ப-கண்ணீர் வடிய, புலர்ந்து-மேனிவாடி, கலங்கினாள்-மனந்தளர்ந்தாள்.

நளன் முன்னுரைத்தபடி தேறுதல் கூறியும் தமயந்திக்கு வருத்தம் நீங்காமையால், அவள், அவ்வாறு தானும், நளனும் அப்பாழ்மண்டபத்தில் படுத்திருந்த பரிதாப நிலைமையை நோக்கி, "அந்தோ! அந்தப் புரத்தில் அழகிய பள்ளியறையில் மலர்ச்சயனத்தின் மீது, மெய் காப்பாளர் காவலுக்குள் படுத்துச் சுகமாக நித்திரை செய்யும் நமக்கும் இக்கதி நேர்ந்ததே" என்று சிந்தித்து அரசனை நோக்கி, "நாதா! நமக்கு முன்னே ஏற்பட்டிருந்த மலரணையும், மெய்காப்பாளரும் பள்ளியறையும் இப்போது காணப்படவில்லை; நாம் இப்பாழ் மண்டபத்தில் தரையில் படுத்திருக்கிறோம்" என்று கூறி மீண்டும் கண்ணீர் வடித்துக் கலங்கினாள் என்பது இதன் கருத்து. மிகுந்த துக்கமுடையார் விரைவில் மனந்தேறாமல் அடிக்கடி தங்கள் நிலைமையை நோக்கி வருந்துதல் இயற்கை; ஆதலின் தமயந்தியும் இவ்வாறு மனந் தேறாமல் மீண்டும் கலங்கி அழுது கூறினாளென்க.

மெய்காவல்-தேகப் பாதுகாப்பு; அரசர்களிடத்தில் விசுவாசமுள்ள சில பணியாட்கள் எப்பொழுதும் அகலாதிருந்து அவர்க

ளின் தேகத்திற்கு எத் தீங்கும் நேராதபடி பாது காப்புச் செய்வது வழக்கம்; வெளியில் ஆடவரும் அந்தப்புரத்தில் பெண்களும் இத் தொழிலை இயற்றுவார்கள்; இவர்கள் மெய்காப்பாளர் எனப்படுவார்; மெய்காப்பாளர் என்பதற்குத் தேகத்தைக் காக்கும் ஆட்கள் என்று பொருள். பரிசனம்-காவல் புரியும் ஜனங்கள்; பரித்தல்-காத்தல். அரசு-உலகத்தை ஆளுந்தன்மை; அஃதாகுபெயராய் அத்தொழிற் குரிய மன்னனை யுணர்த்திற்று. (ந-பத-18-ஆம்.) சூத்திரத்தில், 'எதிர்மறை மும்மையும் ஏற்கும்'' என்றபடி எதிர்மறை ஆகார விகுதி முக்காலங்களையும் ஏற்கக்கூடியதாதலின், 'காணேன்' என்பதில் இடம் நோக்கி நிகழ்காலங் கொள்ளப்பட்டது; இதில் எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது. பனித்தல்-துளித்தல்; அஃது இங்கே கண்ணீர் வடித்தற் பொருளில் வந்தது. 'பூணேர்' என்பதை, பூண்-நேர் எனவும் பிரிக்கலாம்; இங்ஙனம் கொள்ளுமிடத்து, 'பூண் நேர்' என்பதற்கு 'ஆபரணம் இசைந்திருக்கின்ற' எனப் பொருளுரைத்தல் வேண்டும் பூண் ஏர்; இதில் அணிந்த-இசை யெச்சம்.

நளன் தமயந்தியை நித்திரை செய்யுமாறு வேண்டல்.

265. தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து.

[இ-ள்.] (தமயந்தி அவ்வாறு வருந்தியபோது நளன், மேலும் அவளுக்குத் தேறுதலான பலவார்த்தைகளைக் கூறி) மண்மேல்-பூமியின்மீது, திருமேனி-அழகிய தேகத்தை, வைத்து-சேர்த்துப் படுத்துக்கொண்டு, (அவ்விருளில் மிகவும் பயமடைவாளென்று தமயந்திக்கு) கைகொடுத்து-தன்கையைத் துணையாகக் கொடுத்து, (அவளை நோக்கி, பெண்ணே! இவ்விரவில் நீ மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு நித்திரை கொள்ளாம லிருப்பது அழகன்று; ஆதலால்) பேர்யாமம் இந்தப் பெரிய ராத்திரியில் (அதாவது இந்த நடு ராத்திரியில்), தீய-கொடுமையாகிய, வனமும்-காடும், துயின்று-உறங்கி, திசையும்-மற்றதிக்குகளும், துயின்று-தூங்கி, பேயும்-இராக்காலத்தில் உறக்கமின்றிச் சஞ்சரிக்கும்) பைசாசமும், துயின்றது-உறங்கிற்று, (ஆதலின்) இனி-இனிமேல், நீயும்-கண்மேல்-கண்ணால், துயில்கை-நித்திரை செய்வது, கடன் உன்னுடைய கடமையாகும், என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

மேற்கூறியவாறு தமயந்தி ஓயாமல் துக்கப்பட்டு அழுது கொண்டிருப்பதை நளன் பார்த்து, "இவள் இப்படியே விடியும் வரையிலும் தூங்காமல் துயரமான வார்த்தைகளையே சொல்லிக்

கொண்டிருப்பாள்; ஆதலின் இவளுக்குத் தேறுதல் கூறி இவளைத் தூங்கச் செய்யவேண்டும்'' என்று கருதி அவளை நோக்கி, "கண்மணி! நீ இவ்வாறு தூயாமல் துயரமடைந்து அழுது கொண்டிருப்பது அழகன்று; எல்லாம் பழவினைப்படியே நடக்கும் என்று மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டும்; இப்பொழுதோ நடுச்சாமமாய் விட்டது; இந்த நள்ளிரவில் வனமும் துயின்றது; திக்குகளும் துயின்றன; ஆதலின் இனிநீயும் நித்திரை செய்யவேண்டும்'' என்று கூறினான் என்பது இதன் கருத்து. உலகத்தில் எப்பேர்ப்பட்டவர்களும் நடுச்சாமத்தில் சிறிது நேரமாவது நித்திரை செய்யவேண்டுமென்பது விதி; ஆதலின், "யாவும் உறங்கும் இந்நள்ளிரவில் நீ மாத்திரம் நித்திரை கொள்ளாதிருப்பது தகுதியன்று'' என்று இங்ஙனம் நளன் தமயந்திக்குக் கூறினான். கீழே விரித்துக்கொள்வதற்குக் கூடத் துணியில்லாமல் தமயந்தியின் மேல் வஸ்திரத்தை அரையிற்சுற்றிக் கொண்டிருந்தபடியால் நளன், மண்மேல் தேகத்தைவைத்துப் படுத்திருந்தான்; அதனாலேயே ஆசிரியர், "மண்மேற் றிருமேனி வைத்து'' என்றார். இராக்காலத்தில் பயந்த ஸ்திரீகள் புருஷன் கரத்தைப் பற்றிக் கொள்வது இயற்கை; இதன்படியே தமயந்தியும் இங்கே நளன் கரத்தைப் பற்றிக்கொண்டு படுத்திருந்தாள்; ஆதலின், "கைகொடுத்து'' என்றார் புலவர். அந்தவனம் தமயந்திக்கும் நளனுக்கும் துன்பத்தைக் செய்ததாலின், அதனைத் 'தீயவனம்' என்றும் இருளின்கொடுமை விளங்கப் 'பேர்யாமம்' என்றும் கூறினார் ஆசிரியர். நளன், உறங்கும்படி தமயந்தியை வேண்டினான் என்றதனால் அவள் அவ்வாறே இசைந்து நித்திரைகொண்டாளென்பதாம்.

வனம், திசை என்பன இடவாகு பெயர்களாய் அவற்றிலுள்ள ஜீவவர்க்கங்களை யுணர்த்தும். வனமும் பேயும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. திசை என்பதில் எண்ணும்மை தொக்கது. துயின்று என்பதைச் செயவெனெச்சமாகக் கொண்டு 'துயில' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும்; இவ்வினையெச்சம் 'பேயுந்துயின்றது' என்பதனோடுமுடியும். இரவில் பெரிது நள்ளிரவே யாதலின், 'பேர்யாமம்' என்பதற்கு, 'நடுச்சாமம்' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'துயின்றதால்' என்பதில், ஆல்- அசை. நீயும் என்பதிலுள்ள உம்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருளது. கண்ணால் என வருதற்பாலது, 'கண்மேல்' என வந்தது உருபு மயக்கம். துயில்கை-தொழிற் பெயர். என்றான்-சொல்லெச்சம். கொடுத்து, வைத்து என்பன வினையெச்சங்கள்; இவை, 'கடனென்றான்' என்ற முற்றொடு முடிவனவாம். 'மண்மேல்' என்பதில்-மேல் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு.

மண்மேற் படுத்து நித்திரை செய்த தமயந்தியைப் பார்த்து நளன் வருந்திக் கூறுதல்.

266 புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றன்படுத்துத்
தன்கண் டுயில்வாளைத் தான்கண்டு— மேன்கண்
பொடியாதா லுள்ளாவி போகாதா னெஞ்சம்
வெடியாதா லென்றான் விழுந்து.

[இ-ள்.] (நளன் கூறியபடியே தமயந்தி நித்திரை செய்ய அவ்வாறு) புன் கண் கூர்-துன்பமிகுந்த, யாமத்து - நடுச்சாமத்திலே, பூமிமேல்-மண்ணின் மேலே, படுத்து-சயனித்து, தன் கண்-தன் உடைய கண்களினால், துயில்வாளை-தூங்குகின்ற அத்தமயந்தியை, தான் கண்டு-(நளன்) தான் பார்த்து, விழுந்து-மனம் இற்று, (அந்தோ! இவ்வாறு படுத்திருக்கின்ற இவளுடைய நிலைமையைக் காணும்) என்கண்-என்னுடைய கண், பொடியாது-சாம்பலாகாம லிருக்கின்றது, உள் ஆவி-எனக்குள்ளே யிருக்கின்ற உயிரானது, போகாது-போகாமலிருக்கின்றது, நெஞ்சம்-என்னுடைய மனமானது வெடியாது-வெடித்துப் போகாம லிருக்கின்றது, என்றான்-என்று கூறிப் பல பல நினைந்து வருந்தினான்; [எ-று.]

நளன் கூறியபடியே மண்ணிற் படுத்துறங்கின தமயந்தியை அவன் பார்த்து, "அந்தோ! அந்தப் புரத்தில் மெல்லிய மலரணையிற் படுத்திருந்த இவள் இப்போது இவ்வாறு மண்மேற் படுத்திருக்கின்றனள்; இவளுடைய இந்தப் பரிதாபமான நிலையைக் கண்டும் என்கண் பொடியாகாம லிருக்கின்றதே; நெஞ்சம் வெடியாம லிருக்கின்றதே" என்று வருந்தினான் என்பது இதன் கருத்து. நளன் முன்னே கூறியபடி தமயந்தி இசைந்து சிறிது அயர்ந்து நித்திரை செய்தாள்; அத்தருணத்தில் நளன் விழித்திருந்த படியால் அவளுடைய நிலைமையைப் பார்த்து இவ்வாறு வருந்தினானென்க. இவன் இவ்வாறு கூறியதனால், இந்தப்பரிதாபமான நிலைமையைப் பார்ப்பதிலும் இறந்து போதல் நலமென்று அவன் கருதினான்.

தான்படுத்து என்பதில், தான்-அசை. நித்திரை செய்தலுக்குக் கண் கருவியாதலால், 'கண்துயில்வாளை' என்பதை கருவிப் பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'கண்ணால் துயில்வாளை' என்று பொருளுரைக்கப்பட்டது; கண் நித்திரைக்கு முதற்கருவி. தான் என்னும் அசை யிடைச்சொல் நளனை யுணர்த்தி எழுவாயாய் நின்றது; முன்னே ஒரு பெயர் வந்து பின்னே தனித்துத் தானுவது தாமாவதுவரின் அப்பெயரையே யுணர்த்தும்; அப்பெயரோடு சேர்ந்து வரும்போது அசையெனக் கொள்ளப்படும். உம்-அசை. பொடியாது, போகாது, வெடியாது

என்பவற்றில் நிகழ்காலம் எதிர்காலமாக மாறி வந்தது. இங்ஙனம் வருதல் கால வழுவமைதி யெனப்படும். ஆல் மூன்றும் அசைகள். விழுதல்-சாதல்; அஃதிங்கே மனமிறுதற் பொருளில் வந்தது. துயில்வாளை-வினையாலணையும் பெயர்.

நித்திரை செய்த தமயந்தி துயரத்தால் சிறிது நேரத்திற்குள் விழித்தெழுந்து மீண்டும் நளனைப் பார்த்து வருந்துதல்.

267. முன்றிறனின் மேற்படுக்க முன்ரு னையுமின்றி
இன்று துயில் விறைவனுக்கே—என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர.

(இ-ள்.) (நளன மேற்கூறியபடி வருந்திப் பின்னர்ச் சிறிது நித்திரை கொண்டான்; அத்தருணத்தில் தமயந்தி தூக்கத்தால் மீண்டும் விழித்துக் கொண்டு நளன் தரைமேற் படுத்திருப்பதை நோக்கி) இறைவனுக்கு-நம் மன்னனுக்கு, இன்று-இப்பொழுது, துயில்-தூங்குவதற்கு, முன்றில் தனில்-இந்தப் பாழ்மண்டபத்தின் முன்புறத்தில், மேல்படுக்க-தரையின் மேல் பாயலாக விரிப்பதற்கு, முன்தானையும் இன்றி-முன் வஸ்திரமு மில்லாமல், என் தனது-என்னுடைய, கை புகுந்தது-கரமே விரிப்பாக பிரவேசித்தது, என்னுடைய கால் புகுந்தது-எனது காலே பாயலாகப் பிரவேசித்தது, என்று-என்று சொல்லி, மைபுகுந்த-அஞ்சனம் பிரவேசித்த (அதாவது அஞ்சனம் தீட்டப் பெற்ற), கண்-கண்ணிலே, நீர்வர - நீர் ஒழுக, அழுதாள்-அரற்றினாள்.

மேற் கூறியபடி நளன் வருந்தச் சிறிது நித்திரை கொண்ட தமயந்தி சிறிது நேரத்திற்குள் விழித்து, அச்சமயத்தில் சிறிது கண்மூடிப் படுத்திருந்த நளனை நோக்கி, 'அந்தோ! மன்னனுக்கு விரிப்பதற்கு முன்றானைகூட இல்லாமல் என் கையும் காலுமே பாயலாயின' என்று வருந்தினாள் என்பது இதன் கருத்து. இருவரும் ஒரு துகிலை அணிந்து கொண்டிருந்த படியால் கீழே விரிப்பதற்கு முன்றானைகூட இல்லாமற் போயிற்று. அதனால் தமயந்தி நளனுடைய தேகம் சிறு கற்களால் உறுத்தப்பட்டு வருந்துமென்று கருதி அவனது உடம்பின் பாகத்தில் தன்னுடைய கையையும், காற்புறத்தில் தன் காலையும் பரப்பி அவனுக்குச் சிறிது சிரம பரிகாரஞ் செய்து கொண்டு சயனித்திருந்தாள்; ஆதலின், 'இன்று துயில இறைவனுக்கே என்றனது கைபுகுந்த தென்னுடைய கால் புகுந்தது'' என்றாள்.

இல்முன் என்பது-முன்றில் எனவும், தானை முன் என்பது-முன்றானை எனவும் வந்தது இலக்கணப் போலி. இறைவனுக்கே

என்பதில், ஏ-அசை, முன்றுனையும் என்பதிலுள்ள உம்மை-இழிவு சிறப்புப் பொருளது. என்றனது என்பதில், தன்-அசை. இப் பாட்டில் சொன்னபடி 'அழுது பின் தமயந்தி நித்திரை போய் விட்டாள்' என்பது பெறப்படும்.

மேற் கூறியபடி நித்திரை செய்த தமயந்தியை நோக்கி நளன் வருந்திக் கூறல்.

268. வீமன் றிருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாம மெனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் டுயின்றுள்மற்
றூரே துயரடையா ராங்கு.

(இ-ள்.) (முன் பாட்டிலுரைத்தபடி தமயந்தி நளன் பாயலின்றிப் படுத்திருப்பதைப் பார்த்து வருந்தியழுது பின்னர் அச் சோபத்துடனேயே நித்திரை போய் விட்டாள்; அச்சமயத்தில் நளன் விழித்துக்கொண்டு அவளை நோக்கிச் சொன்னதாவது:) வீமன்-வீமராஜனுடைய, திரு-இலக்குமியே என்னும், மடந்தை-பெண்ணும், விண்ணவரும்-தேவர்களும், பெற்றிலா-பெறாத, தாமம்-மணமாலையை, எனக்கு அளித்த-எனக்குத்தந்த, (அதாவது என் கழுத்திற் சூட்டிய) தையலாள்-அழகினையுடையவளுமாகிய தமயந்தி, யாமத்து-இந்த நள்ளிரவில், பாரே-பூமியே, அணையா-பஞ்சணையாக, (அதன் மேற் படுத்து), படை-வேலாயுதத்தை நிகர்த்த, கண் துயின்றாள்-கண் உறங்கினாள், (அதாவது நித்திரை செய்தாள். எவ்வளவோ உயர்ந்த அந்தஸ்திலிருந்த இவளே இவ்வாறு துன்பத்திற் குள்ளாகிப் படுத்தாளெனின்) மற்று-பின்னர், (இவ்வுலகில்) ஆரே-எவர்தாம், துயர் அடையார்-துன்பத்தை அடையார்கள்?, (சகலரும் ஒரு காலத்தில் துன்பத்தை அடைவர்); [எ-று.]

தமயந்தி முன்னுரைத்தபடி நளனை நோக்கி வருந்தியழுது தூங்கியபின், நளன் விழித்துக்கொண்டு அவளை நோக்கி, "இராணியாய் உயர்ந்த பதவியிலிருந்தவளும், மகா பதிவிரதா சிரோன்மணியுமாகிய தமயந்தியே இவ்வாறு வறுமையுற்று மண்மேற் படுத்திருக்கும்போது வேறு எவர்கள் தாம் உலகத்தில் துன்பத்தை அடையாமலிருப்பவர்கள்? எல்லோருமே இவ்வித நிலைமையை அடையத்தக்கவர்கள் தாம்" என்று உலக இயற்கையைக் கூறித் தானே தன் மனதைத் தேற்றிக்கொண்டா னென்பது இதன் கருத்து. இவ்வாறு கூறியதனால், "உலகத்தில் இன்ப துன்பங்கள் நிலையானவையல்ல" என்பதை விளக்கிக் காட்டினனென்க. தமயந்தி பிறந்த விடத்தும் புகுந்தவிடத்தும் சிறந்தவளென்பதும், கணவனைக் குறித்தவளே

யன்றி மற்றையர் எத்தகைச் சிறப்புவாய்ந்தவரெனினும் அவரை நோக்காத மகா உத்தமி என்பதும் தோன்ற, "வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத் தாம மெனக்களித்த தையலாள்" என்று கூறினன்.

திரு-தமயந்திக்கு உவமையாகுபெயர், திருமடந்தை தையலாள்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. விண்ணவரும் என்பதிலுள்ள உம்மை-உயர்வு சிறப்புப் பொருளது. தையல்-அழகு; அதனையுடையவள் தையலாள், மற்று-அசை யெனினுமாம். ஆரே என்பதிலுள்ள ஏகாரம் வினாப் பொருளைச் சிறப்பிக்க வந்தது; அசையெனினுமாம். 'ஆரே துயரடையார்' என்பது எதிர்மறை யெச்சம்; 'எவருமில்லை' என்ற பொருளைத்தரும். ஆங்கு-அசை; இச்செய்யுள் பொருண் முடிபின்றி நிற்பினும் கதைத் தொடர்ச்சி நோக்கி முன்பின் முடிக்குஞ் சொற்களும், எழுவாய், பயனிலை களும் சேர்த்து இதற்குப் பொருண் முடிபு கூறப்பட்டது.

நளன் தமயந்தியைப் பிரிப்பதற்குக் கலி
அவனுடைய மனத்தைக் கலக்குதல்.

269. பெய்ம்மலர்ப்பூங் கோதை பிரியப் பிரியாத
செம்மை யுடைமனத்தன் செங்கோலான்—பொய்ம்மை
விலக்கினா னெஞ்சத்தை வேறாக்கி நின்று
கலக்கினான் வஞ்சக் கலி.

[இ-ள்.] (நளன் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் சமயத்தில்) பெய்-சூட்டப்பெற்ற, மலர்-மலர்களையுடைய, பூ-அழகிய, கோதை-கூந்தல் பொருந்திய தமயந்தி, பிரிய-நளனை விட்டு நீங்கும் படி, பிரியாத-எப்பொழுதும் அகலாத, செம்மை உடை-செவ்விய குணமுடைய; மனத்தன்-மனமுள்ளவனும், செங்கோலான்-அரசாட்சியை உடையவனும், பொய்ம்மை-பொய்யை, விலக்கினான்-நீக்கினவனுமாகிய அந்நளனுடைய, நெஞ்சத்தை-மனத்தை, வஞ்சம்-வஞ்சனை பொருந்திய, கலி-கலிபுருஷன், வேறு ஆக்கி-(இருந்த நிலைமையினின்றும்) வேறாகச் செய்து, நின்று-(அவன் மனத்திற் புகுந்து) நின்று, கலக்கினான்-கலங்குமாறு செய்தான்; [எ-று.]

மேற்கூறியபடி தமயந்தியின் பொருட்டு வருந்திக்கொண்டிருந்த நளனைக் கலிபுருஷன் அவளை விட்டுப் பிரிக்கக் கருதி நளனுக்கு அவள் மீதேற்பட்டிருந்த பற்று நீங்கும்படி அவனுடைய மனத்தைக் கலக்கினானென்பது இதன் கருத்து. நளன் எப்பொழுதும் தமயந்தியை விட்டுப் பிரியாதவன் என்பதும் சத்தியவந்தனென்பதும் தோன்ற, "பிரியாத செம்மையுடை மனத்தன், செங்

கோலான், பொய்ம்மை விலக்கினான்'' என்று ஆசிரியர் அவனைச் சிறப்பித்துக் கூறினார். இப்பேர்ப்பட்டவனுடைய மனத்தையும் கலி கலக்கினான் என்றதனால் அவனுடைய வஞ்சகத்தின் வன்மை தெள்ளிதிற் புலப்படும். நளனுடைய உறுதிபெற்ற மனத்தை வஞ்சனையினால் வேறாக்க லாமேயன்றி மற்றெவ்வகையினாலும் அஃதிய லாதாதலின் கலி புருஷன் அவ்வஞ்சனையினாலேயே வேறாக்கினா னென்பது தோன்ற அவனை 'வஞ்சக்கலி' என்று இழிவு படுத்திக் கூறினார் ஆசிரியர்.

வேறாக்குதல்-தமயந்தியின்மீது பற்றியிருக்கும் நளனுடைய மனத்தை வேறுபடுத்தல். மனத்தன், கோலான், விலக்கினான் என்பன ஒருபொருள் குறித்ததன்மேல் நின்ற பல பெயர்கள். நின்று-வினையெச்சம்.

கலிபுருஷனுடைய வஞ்சனையால் நளன் மனத்தில்
தமயந்தியைப் பிரியும் எண்ணம் உதித்தல்.

270. வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்குஞ்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்த னெஞ்சத்
துதித்ததே வேறோ ருணர்வு.

(இ-ள்.) (நளன் மனத்தை அவ்வாறு கலிபுருஷன் கலைத்த வுடனே) வஞ்சம் - சூது பொருந்திய, கலி - அந்தக் கலிபுருஷ னுடைய, வலியால்-வல்லமையினாலே, மாகத்து-ஆகாயத்தில், அரா-இராகு வென்னும் பாம்பினால், வளைக்கும்-சூழ்ந்து பற்றப் படுகிற, செம்சுடரின்-சிவந்த பிரகாசத்தையுடைய சூரியனிடத்தில், வந்து-வந்துசேர்ந்த, கருஞ்சுடர்போல் - கருமையான பிரகாசத் தைப் போல, விஞ்ச-அதிகமாக, மதித்த-நினைக்கப்பட்ட, தேர்த் தானை-தேர்ப்படையினுலாகிய, வயம்-வெற்றி பொருந்திய, வேந் தன்—நளமகாராஜனுடைய, நெஞ்சத்து-மனத்தில், வேறு-தன் நிலைமையி லிருக்கும் வேறாகிய, ஓர் உணர்வு-ஒரு எண்ணம், உதித்தது-தோன்றியது; [எ-று.]

மேற்கூறியபடி கலிபுருஷன் நளனுடைய மனத்தைக் கலக்கிய வுடனே அவ்வஞ்சனையால் அந்நளனுக்குத் தமயந்தியைப் பிரிந்து விட வேண்டுமென்ற ஒரு எண்ணம் உண்டாயிற்றென்பது இதன் கருத்து. சிவந்த பிரகாசத்தையுடைய சூரியனை இராகு பற்றிய வுடனே அதனுடைய பிரகாசம் மறைந்து கரிய பிரகாசம் தோன்று வது இயற்கை. அதேபோல் நளனுடைய களங்கமற்ற இருதயத்தில் கலிபுருஷனுடைய வஞ்சனை புகுந்தவுடனே தமயந்தியைப் பிரியு

வேண்டுமென்ற கெட்ட எண்ணம் உதித்தது. இவற்றையேஆசிரியர், "மாகத்தராவளைக்கும் செஞ்சுடரின்வந்த கருஞ்சுடர் போல் வஞ்சக் கலிவலியான் வேந்தன் நெஞ்சத்து வேறோருணர்வு உதித்தது" என்று உதாரணங் காட்டிக் கூறினார்.

அராவளைக்கும்-மூன்றாம் வேற்றுமைத்தொகை;வளைக்கப்படும் என்னும் செயப்பாட்டு வினை, வளைக்கும் எனச் செய்வினையாக மாறி வந்தது. வளைக்கும்-பெயரெச்சம். சுடரின் என்பதில் இன்-ஏழாம் உருபு; வந்த-பெயரெச்சம், உதித்ததே என்பதில் ஏ-அசை. உதித்தது என்பதில் உதி-பகுதி; இது உத் என்னும் வடமொழித் தாதுவின் வழியாகப் பிறந்தது,வடமொழியில் எந்த ஈற்றையுடைய தாயினும் தமிழில் வினைபகுதியாம் பொழுது இகர வீறு பெற்றே வரும்; அதுபற்றியே உத என்பது இகரவீறு பெற்று உதியென வந்தது; பட-படி, கடாக்ஷ-கடாக்ஷி என்பன உதாரணம்.

நளன் தமயந்தியைப் பிரிந்து போவதற்குத் தனக்கும் அவளுக்கும் ஒன்றாயமைந்திருக்கும் ஆடையை அரிய நினைத்தல்.

271. காரிகைதன் வெந்துயரங் காணாம னீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கு மோருயிர்போ லெய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னங்கு.

(இ-ள்) (மேற்கூறியபடி நளனுடைய மனதில் அந்த எண்ணம் உதித்தவுடன்) காரிகை தன் - அழகையுடைய தமயந்தியினது, வெம்துயரம்-கொடிதாகிய துன்பத்தை, காணாமல்-பார்க்காமல் (இருக்கும்படி), நீத்து-அவளை விட்டு நீங்கி, அந்தக் கூர் இருளில்-அந்த மிகுந்த இருட்டிலே, போவான்-போவதற்கு, குறித்து எழுந்து-எண்ணி எழுந்திருந்து, (தான் செல்வதற்குத் தடையாக) நேரே-நேராக, இருவர்க்கும்-தான் தமயந்தி ஆகிய இருவர்களுக்கும், ஓர் உயிர்போல்-ஒரே உயிரைப்போல, எய்தியது-சேர்ந்திருப்பதாகிய, ஓர் ஆடை-ஒற்றை வஸ்திரத்தை, அவன்-அந்த நளமகாராஜன், ஆங்கு-அவ்விடத்தில், அரிதற்கு-நடுவில் அறுப்பதற்கு, நினைந்தான்-எண்ணினான்.

கலியின் வஞ்சனையினாலே நளனுக்குத் தமயந்தியைப் பிரிந்து போக வேண்டுமென்ற எண்ணம் உதித்த மாத்திரத்தில் அவன், 'இவள் நம்முடனேயே பிரியாதிருப்பாளாயின் பல துன்பங்களை அடைவாள்; அத்துன்பத்தைப் பார்த்துச் சகித்தல் நம்மாலியலாது; ஆதலின் நாம் நினைத்தபடியே இவளை விட்டு நீங்கிச் செல்

வதே நலம்" என்று உறுதிகொண்டு எழுந்து அவ்வாறு போவதற்குத் தடையாய்த் தனக்கும் தமயந்திக்கும் ஒன்றாக அமைந்திருந்த ஆடையை அறுத்து விடுவதற்கு நினைத்தான் என்பது இதன் கருத்து. ஒரு பெண்ணை நடுக்காட்டில் மிக்க இருளில் விட்டுச் செல்லுதல் மகா கொடிய காரியமெனினும் கலியின் வஞ்சனையால் நளனுக்கு அது தோன்றாமல் நாம் இவளுடைய துன்பத்தைக் காணாமலிருக்கும்படி இவளை விட்டு நீங்கிப் போதலே தகுதி என்ற எண்ணம் உதித்து அது நலம்போல் தோன்றிற்று. அதனாலேயே அவன் ஆடையை அரிதற்கு நினைத்தான்.

நீத்து-வினையெச்சம்; இது, போவான் என்னும் வினையடியோடு முடியும்; இதில் நீ - பகுதி; போவான் - வினையெச்சம்; எழுந்து-வினையெச்சம்; இது நினைந்தான் என்பதனோடு முடியும். ஆங்கு-அசை எனினுமாம்.

நளன் எண்ணியதறிந்து தக்கபடி கலி வாளாய்
வந்து எதிரில் கிடந்தல்.

272. எண்ணிய வெண்ண முடிப்ப விகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து.

[இ-ள்.] இகல்-போர் செய்தலில் வலிமையையுடைய, வேந்தன்-நளமகாராஜன், எண்ணிய-ஆடையை அறுப்பதற்கு நினைத்த, எண்ணம்-நினைவை, முடிப்ப-முடிப்பதற்கு, கண்ணியதை-நினைத்ததை, காய்-(தனக்கு ஆகாதவரைக்) கோபிக்கின்ற, கலியும்-கலிபுருஷனும், அறிந்து-தெரிந்து, பண்ணினுக்கு-இசைப்பாடலுக்கு, கேளான-உறவாகிய, தேம்மொழியை-இனிய வார்த்தைகள் பொருந்திய தமயந்தியை, நீக்க-நளன் ஆடை அரிந்து நீக்கிவிடும் பொருட்டு, கிளர்-விளங்கா நின்ற, ஒளிசேர்-பிரகாசம் பொருந்திய, வாளாய்-வாளாயுதமாக, வந்து-அங்கு வந்து சேர்ந்து, மருங்கு-பக்கத்தில், இருந்தான்-தங்கினான்; [எ-று.]

ஆடையை அரிவதற்கு நினைத்த நளனுடைய குறிப்பை உணர்ந்த கலிபுருஷன் அவ்வாறே அவன் ஆடையை அரிந்துகொண்டு தமயந்தியைவிட்டு நீங்குதற்கு உதவியா யிருக்கும் பொருட்டு அவனுக்குப் பக்கத்தில் ஒருவாள் வடிவமாக வந்திருந்தா னென்பது இதன் கருத்து. எப்படியாவது தமயந்தியைவிட்டு நளனைப் பிரித்துவிட வேண்டுமென்று கலிபுருஷன் கருதினைதலின் அங்ஙனம் வாளாய் வந்திருந்தா னென்க. கத்தி யில்லாவிடில் நளன் ஆடையை

அரிதற்கு இயலாமல் வாளாவிருந்து விடுவான். ஆதலின் நாம் ஒரு கத்திவடிவமாகச் சேர்ந்தால் அதைக் கொண்டு ஆடையை அரிந்து தமயந்தியைவிட்டு நீங்கிப் போய்விடுவான் என்று கருதியே கலி இவ்வாறு செய்தான். ஆடையை அரிதலே நளன் தமயந்தியை விட்டு நீங்குதற்கு முக்கிய ஏதுவாதலின் ஆடை அறுக்க என்பதை, தேமொழியை நீக்க என்று கூறினார் ஆசிரியர். மருங்கிருந்தான் என்பதற்கு நளனுடைய இடுப்பில் வந்திருந்தான் என்று பொருள் கூறுவாருமுளர். நளன் இடுப்பில் வாள்வைக்காதிருக்கும்போது அஃதங்கே இருக்குமானால் சந்தேகப்பட்டு இதுகலியின் சூதோ வென்று அக்காரியத்தைச் செய்வதற்கு அஞ்சுவானாதலின் அவ்வுரை பொருந்தாமை யுணர்க. காய்கலி என்பதற்கு, "அறிஞர் கோபிக்கும்படியானகலி" என்று பொருள் கோடலுமொன்று; பண்ணினுக்குக் கேளாதலாவது வார்த்தை அந்தப் பண்ணை நிகர்த்திருத்தலாம்.

கலியும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சப் பொருளது. நளன் அவ்வாறு நினைத்திருந்த தன்றிக் கலியும் வாளாய் வந்திருந்தான் என்று இவ்வும்மையின் பொருள் விரிக்கப்படும். இதனை அசைஎனக் கோடலுமாம். தேமொழி-தமயந்திக்கு ஆகுபெயர்; இனி, வாள் அங்குதானே கிடந்த தெனக் கொண்டு அது கலியின் செய்கைக்கு உரித்தா யிருந்த படியால் அதனையே கலிபுருஷன் வந்திருந்ததாகக் கூறினாரெனினும் அமையும்.

இதில் நளன் ஆடையை அரிந்து தமயந்தியின் நிலைமை
தறிந்துத் திகைத்திருந்தமை கூறப்படுகின்றது.

273. ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக
முற்றுந்தன் னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவணிலைமை நெஞ்சில்
தெரிந்தா னிருந்தான் திகைத்து.

[இ-ள்.] (அவ்வாறு வாள் கிடக்கவே நளன் அதனை எடுத்துக் கொண்டு) ஒற்றைத் துகிலும்- (தானும் தமயந்தியும் சேர்த்துக் கட்டிக் கொள்ளும்படியாக அமைந்திருந்த) ஒற்றை வஸ்திரமும், உயிரும்-(இருவருக்கும் ஒன்றாய் அமைந்திருந்த) பிராணனும், இரண்டாக-இரண்டிரண்டாகும்படி, தன் அன்பை-தன்னுடைய ஆசையை, முதலோடும்-வேருடனே, பற்றி-பிடித்து, முற்றும்-முழுதும், அரிந்தான்-அறுத்தவனாகி, அரிந்திட்டு-ஆடையை அறுத்து விட்டு, (தமயந்தியினின்றும் வேறாகி) அவள் நிலைமை-

அந்தத் தமயந்தியினுடைய நிலைமையை, நெஞ்சில்-மனத்தில், தெரிந்தான்-சிந்தித்து அறிந்தவனாய், (இவளை எப்படி விட்டுப் பிரிந்து போவதென்று) திகைத்து இருந்தான்-பிரமித்து ஒன்றுஞ் செய்யாமலிருந்தான்; [எ-று.]

கத்தியையெடுத்து ஆடையை அறுத்துத் தனிப்பட்டிருந்த நளன் தமயந்தி நிலைமையை நோக்கி இவளை நாம் எப்படி விட்டுப் பிரிந்து போவதென்று திகைத்திருந்தானென்பது இதன் கருத்து. முன் 255 ஆம் செய்யுளில் "காவிபோற் கண்ணிக்கும் கண்ணியந் தோட் காளைக்கும் ஆவிபோலாடையு மொன்றானதே" என்று கூறிய தற்கேற்ப ஆசிரியர் இக்கவியில் "ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக" என்றார். உயிர் ஒன்றாயிருப்பதற்கு அன்பு காரணமாயிருந்தது; ஆடை ஒன்றாயிருப்பதற்குத் துண்டுபடாமை காரணமாயிருந்தது. இவ்விரண்டுவகைச் சேர்க்கைகளையும் வேறு பிரித்தற்கு நளன் அன்பையும் ஆடையையும் அறுத்தான். ஆதலின் 'ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாகத் தன் அன்பை முதலோடும் பற்றி முற்றும் அரிந்தவனாய் அரிந்திட்டு" என்று கூறினார் ஆசிரியர். துகில் ஒன்றாயிருத்தற்கும் உயிர் ஒன்றாயிருத்தற்கும் அன்பே காரணமாதலின் அதனை முதலில் அரிந்தான் என்றார் ஆசிரியர். அன்பை அறுத்தல் கூறவே அவ்விரண்டும் வேறுபட்டனவென்பது தானே போதரும். அவள் நிலைமையாவது: இராஜ்ஜியத்தையும் மக்களையும் பிரிந்து வருந்தி யிருந்ததும், அவ்வாறு வருந்தி யிருப்பினும் தன் கணவனுக்கு நேர்ந்த துன்பத்திற்கே கலங்கி அவனைவிட்டுப் பிரியாதிருத்தலே தனக்குப் பெரும்பேறென்று எண்ணியிருந்ததும், நளன் அவளைவிட்டுப் போய்விட்டால் பலவிதமான ஆபத்துக்களையும் அடையக்கூடியவளா யிருந்ததுமாம். ஆடையை அறுத்துக் கொண்டு பிரிந்து போக நினைத்த அவனுக்குத் தமயந்தியினுடைய இந்நிலைமைகளையெல்லாம் நோக்கியவுடனே இவளை எவ்வாறு பிரிந்துபோவதென்ற கலக்க முண்டாயிற்று; அதனால் ஒன்றுஞ் செய்யாமல் சற்றே நின்றபடியே நின்று திகைத்திருந்தான்.

முதலோடும் என்பதில் உம்மை-அசை. அரிந்தான், தெரிந்தான் என்பன முற்றெச்சங்கள். அரிந்திட்டு என்பதில் இடு-பகுதிப் பொருள் விகுதி; துணிபுப் பொருள் பற்றி வந்த துணைவினை எனினுமாம்.

நளன் தமயந்தியை விட்டுப் பிரியமுடி
யாமல் கலங்குதல்.

274. போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கோணர்ந்த அடுபாலின்—தோயல்

கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்.

[இ-ள்.] (அப்படி யிருந்த) காலன் வடிவு ஆய-எமனுடைய உருவமான, வேலான்-வேலாயுதத்தையுடைய நளன், ஒருகால்-ஒரு முறை, போய்-(தமயந்தியைவிட்டுப் பிரிந்து சிறிது தூரம்) சென்று, மீளும்-(அவளைப் பிரியத் தன்மனம் இசையாததனால்) திரும்பி அவளிடத்தே வருவான், புகுந்து-(அவ்வாறு அவள் சமீபத்தில் வந்து) சேர்ந்து, (தன் மனத்தில் நாம் பிரிந்து போதலே நலம் என்று துணிவுண்டாவதால்) ஒருகால் மற்றொரு முறை, மீண்டு ஏகும்-திரும்பிச் செல்லுவான், (இப்படி அவன் போவதும் வருவதுமாயிருக்க) மனம்-அவனுடைய மனமானது, ஆயர்-இடையரால், கொணர்ந்த-கொண்டு வரப்பட்டதும், அடு-காய்ச்சப் பட்டதுமாகிய, பாலின்-பாலினது, தோயல்-தோய்வாகிய தயிரை, கடைவார்தம்-கடைகின்ற ஆய்ச்சியர்களுடைய, கைபோல கரங்களைப்போல, ஆயிற்று-(அவனுடைய போவதும் வருவதுமாகிய செய்கைக்குப் பொருத்தமாய் அங்கு மிங்கும்) அலைபப்பெற்றது; [எ-று.]

முன்னுரைத்தபடி தமயந்தியின் நிலைமை குறித்து அவளை விட்டு எப்படிப்பிரிவதென்று கலங்கியிருந்த நளன் பின்னர்த் துணிந்து புறப்பட்டு அப்பொழுதும்போக முடியாமல் போவதும் வருவதுமாய் அலைந்து கொண்டிருக்க அவன் மனமும் அவ்வாறே அலைந்து கொண்டிருந்ததென்பது இதன் கருத்து. அவன் தனக் கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை உத்தேசித்துப் போகத் துணிந்தாலும் அவள் மீது அவனுக் குண்டாயிருக்கும் அன்பானது அவனைப் போகவொட்டாது தடுத்துக் கொண்டிருந்தபடியால் இவ்வாறு போவதும் வருவதுமாய் அலைவுற்றான். போதல்-மீளுதல் ஆகிய செய்கைகளை மனத்திற் கேற்றினும் அமையும். ஆயர்-இங்கு இடையரில் ஆடவரைக் குறித்து நின்றது. தோயல்-கெட்டியாதல்; அது தொழிலாகுபெயராய்த் தயிரை உணர்த்தி நின்றது. ஏ-அசை. தயிர்கடைவார் கைகள் போதலும் வருதலுமாயிருக்கும்; ஆதலின் இவை போக்கு வரவான மனத்திற்குவமையாயின.

தமயந்தியைப் பிரிவதற்கு முடியாமல் அலைந்து கொண்டிருந்த நளன் மனம் கலி வஞ்சனையால் பிரிவதற்குத் துணிதல்.

275. சிந்துரத்தாற் றெய்வ முனிவர் தெரிந்துரைத்த
மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்—முந்த
ஒலித்ததேர்த் தானை உயர்வேந்த னெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து.

[இ-ள்.] (மேற்கூறியபடி நளன் அலைச்சற்பட்டுக் கொண்டிருக்கும்போது) சிந்துரத்தால்-ஐராவத மென்னும் தெய்வயானையால், தெய்வமுனிவர்-தெய்வத்தன்மையுள்ள நாரதமுனிவர், தெரிந்து-(கங்கையின் அகங்காரச் செய்கையை) உணர்ந்து, உரைத்த-சொல்லிய, மந்திரத்தால்-மந்திரத்தின் மகிமையினாலே, தம்பித்த-(வேகமொடுங்கி) அசையாமல் நின்றுவிட்ட, மா-சிறந்த, நீர்போல்-கங்கா ஜலப் பெருக்கைப்போல, முந்த-முதன்மையாக, ஒலித்த-சப்தித்த, தேர்த்தானை-தேர்ச்சேனையையுடைய, உயர்-மேன்மையான, வேந்தன்-அந்நளமகாராஜனுடைய, நெஞ்சம்-மனமானது, தீக்கலியால்-தீமையுள்ள கலிபுருஷனுடைய வஞ்சனையால், வந்து-அவன் வயமாய் வந்து, வலித்தது-(தமயந்தியின் மேலிருந்த அன்பு முதலியவற்றை யெல்லாமிழந்து) கடினமுடையதாயிற்று; [எ-று.]

முன்னுரைத்தபடி தமயந்தி மீதேற்பட்ட அன்பினால் அவளை விட்டு நீங்குதற்கியலாமல் கலங்கிக் கொண்டிருந்த நளனுடைய மனமானது, கலிபுருஷனுடைய வஞ்சனையால் அவ்வன்பு நீங்கிக் கடினமுடையதாகி அவளைப் பிரிதற்குத் துணிவுகொண்டது என்பது இதன் கருத்து. தமயந்தியைப் பிரியமுடியாமல் நளன் அன்பினால் தயங்குவதைப் பார்த்துக் கலிபுருஷன், அது தன்னுடைய எண்ணத்திற்கு விரோதமாயிருந்தபடியால் அதனை நீக்கி விரைவில் அவனைத் தமயந்தியினிடமிருந்து பிரித்தற்கு அவனுடைய மனத்தைக் கடினமாக்கினான்; மனம் கடினமாதலாவது இரக்கக் குணத்தை இழத்தல். அவ்வாறு மனம் கடினமாகவே நளனுக்குத் தமயந்தியை விட்டுப்பிரிந்து போய்விடலாமென்று துணிவு பிறந்தது. கெட்டிப்பட்ட மனம் அசையாதிருக்குமாதலின், அதற்கு அசைவற்று நின்ற கங்கை நீரை உவமை கூறினார் ஆசிரியர். "நாரதர் ஒரு காலத்தில் முனிவர் கூட்டத்துடனே சென்று கங்கைக் கரை சார்ந்து அக்கங்கையைப் பணியாமல் நிஷ்டை கூடியிருந்தனர். கங்கை அப்போது அவர் தன்னைப் பணியவில்லை யென்ற கோபத்தால், அவரையும் முனிவர் கூட்டத்தையும் அழித்துவிடத் துணிவு கொண்டு பெரு வெள்ளமாய்ப் புரண்டு வந்தனள். அச்செய்கையை நாரதர் உணராதிருந்தார். அப்போது ஐராவதம் என்னும் யானை கங்கையின் செய்கையையும், முனிவர் அதனை அறியாதிருப்பதையும் உணர்ந்து, நாரதருக்கு அவ்வபாயத்தைத் தெரிவிக்கக் கருதி தண்ணீர் பருகும் பாவனையாகத் தும்பிக்கையினால் ஜலத்தைவாரி அம்முனிவர் மீதிறைத்தது; அதனால் முனிவர், நிஷ்டை கலைந்து கங்கையின் அடாச்செய்கையை யுணர்ந்து அவளுடைய வீறொடுங்கும்படி ஒரு மந்திரத்தை ஜபிக்க, அக்கங்கை வலியொடுங்கி ஸ்தம்பித்து முனிவரை வணங்கி அவரிடம் மன்னிப்புப் பெற்றுத் தன் இயற்கைப்படி யாயினள்" என்று ஒரு கதை, ஜைமினி பாரதத்தி

விருப்பதாகப் பௌராணிகர்கள் கூறுவர்; இது பற்றியே ஆசிரியர், 'சிந்துரத்தாற் றெய்வமுனிவர் தெரிந்துரைத்த, மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்'' என்றார்.

இனி, 'சிந்துரத்தாற் றெய்வமுனிவர்' என்ற பாடத்தை, 'சிந்துரத்தாட்டெய்வ முனிவர்' எனமாற்றிச் சிவந்த பாதங்களையுடைய தெய்வத் தன்மை பொருந்திய முனிவர்' எனப்பொருள் கொண்டு இதற்கு, வசிஷ்டர் சிலவுணவுகளை விசுவாமித்திரர்க்குச் சேர்ப்பிக்கும் பொருட்டுத் தம் சிஷர்களிடம் கொடுத்தனுப்ப, அவர்கள் செல்லுங்காலத்தில் இடையில் வந்த ஆற்றுவெள்ளத்தைத் தாண்ட முடியாமல் கலங்கியபோது அத்தண்ணீர் தம்பித்து நிற்கும்படி அவ்வசிஷ்டர் ஓர் மந்திர முரைக்க அது தம்பித்தது' என்று கதை கூறுவதுமுண்டு. இக்கதைக்குத் தக்க ஆதாரமின்மையால் இவ்வகையாகப் பொருளுரைத்தல் அத்துணைச் சிறப்பின்றாம். நாரதர் மற்ற முனிவர்களினும் சிறந்தவராதலின் அவரை, 'தெய்வமுனி' என்றார் புலவர். சிறப்புநோக்கிக் கங்கை நீரை, 'மாநீர்' என்றார். நளனுக்குத் தேர்த்தானை இருந்தது முன்பேயாதலின் அதனை யுரைத்தற்கு 'ஒலித்த' என இறந்த காலத்தாற் கூறினார். வலித்ததே என்பதிலுள்ள ஏகாரம்-இரக்கக் குறிப்பில் வந்தது; அசை யெனினுமாம்; வருதல்-இசைந்து ஒரு வழியிற் புகுதல்; ஆதலின், வந்து-என்பதற்கு 'அவன் வயமாய் வந்து' எனப்பொருளுரைக்கப்பட்டது. வந்து என்பதையும் அசையென உரைத்தலுமுண்டு.

நளன் தமயந்தியை விட்டு நீங்கிப் போதும்போது கூறுவது.

276. தீக்கா னகத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான்.

[இ-ள்.] (அவ்வாறு துணிந்த நளன் வனதேவதைகளை நோக்கி) தீக்கானகத்து-தீமை பொருந்திய வனத்திலே, உறையும்-தங்கியிருக்கின்ற, தெய்வங்காள்-தெய்வங்களே!, நீக்காத-விலக்க முடியாத, காதல்-ஆசையும், அன்பு-பக்தியும், மிக்காளை-மிகுந்தவளாகிய என் மனைவியை, கார்-கருமையாகிய, இருளில்-இவ்விருளிலே, கைவிட்டு-இழந்து, இன்று-இப்பொழுது, யான்-நான், ஏதிலன்போல்-இவளுக்குச் சத்துருவைப்போல, போகின்றேன்-செல்கின்றேன், (இவளுக்கு வேறே எவரும் ஆதரவானவர் இங்கில்லை. ஆதலின்) வீமன் தன்-வீமராஜனுடைய, கோ-சிறந்த, காதலியை-

குமாரத்தியாகிய இவளை, குறிக்கொண்மின்- (இரக்ஷிப்பதற்கு உங்களுடைய) கருத்தில் வைத்துக் கொள்ளுங்கள் (என்று கூறினன்); [எ-று.]

நளன் தான் பிரிந்து போகின்ற காலத்தில் வனதேவதைகளை நோக்கி "நான் இத்தமயந்திக்குப் பகைவனைப்போல் இவளை இழந்து செல்கின்றேன்; இவளோ இந்தக் காரிருளில் தனிப்பட்டாள்; இவளுக்கோ ஆதரவானவர் இங்கெவருமிலர்; ஆதலின், நீங்களே இவளைக் காத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினன் என்பது இதன் கருத்து அவன் துணிந்து பிரிந்து செல்லினும், "அந்தோ! இவளை நாம் தீமை மிகுந்த காட்டில் இவ்விருளில் விட்டுச் செல்கின்றோமே; நாம் சென்ற பிறகு இவளுக்கென்ன தீங்கு நேருமோ! இவள் என்ன பாடுபடுவாளோ" என்று வருத்தமுண்டாயிற்று; அதனாலேயே 'வனதேவதைகளாயினும் இவளைக் காத்துக் கொள்ளட்டும்' என்று இவ்வாறு கூறினன். காடு, மிருகங்கள் முதலியவற்றால் தீங்குண்டாகக்கூடிய விடமாதலின் அதனை, 'தீக்கானகம்' என்றான் நளன். ஒருவர் மீது அன்பில்லாத பகைவரே அவர்க்குத் தீங்கு செய்து செல்வர்; உறவோர் அவ்வாறு செய்யார்; அந்தப் பகைவரைப் போல் இங்கு நளன், தன்மீது அன்புடைய தமயந்தியைவிட்டு நீங்கி, அவளுக்குத் தீங்கு செய்து செல்வதால் 'ஏதிலன்போல் செல்கின்றேன்' என்றான். இவன் பிரிந்தவுடனே அவளுக்கு மிக்க துன்பமுண்டாகுமாதலின், அங்ஙனம் பிரியும் இவனே துன்பத்திற்குக் காரணமாகின்றான். அதுபற்றி இவன் தீங்கு செய்தவனாகவும் குறிப்பிடப்பட்டான். காதல்-ஆசை; அது பிரதி பலன் குறித்தோ, அனுபவத்தைக் குறித்தோ ஏற்படுவது. அன்பு-அருள், பக்தி; இது பிரதி பலன் கருதாது ஏற்படுவது. "நீக்காத காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின் றேதிலன் போல் போகின்றேன்" என்றதனால் அவன் தன்னை வன்னெஞ்சுடையவனென்று விளக்கினன் என ஆசிரியர் குறிப்பிட்டார்.

குறி-கருத்து; அன்றிக் காத்தற்கு இலக்ஷியமான விடமெனவும் கொள்ளலாம். கைவிடல்-கையினின்றும் போக்கி விடுதல்; பெண்கள் ஆடவர்க்குப் பொருள் போன்றவர்களாதலின், இங்குத் தமயந்தியை நளன் கையிலுள்ள பொருளாகக் குறித்து அதினின்றும் நழுவிவிட்டதாகக் குறித்தான்; இனி, கை-என்பதைப் பக்கமெனக் கொண்டு 'இவள் பக்கத்திலிருப்பதை விட்டேன்' (அதாவது, இவளைப் பிரிந்தேன்) என்று பொருளுரைப்பினுமாம். ஈற்றில் 'என்று சொன்னான்' என்பது இசை யெச்சமாக வருவிக்கப்பட்டது.

இதில், நளன் தமயந்தியை விட்டுப் பிரிந்து போயினமை கூறப்படுகின்றது.

277. ஏந்து மிளமுலையா ளின்னுயிருந் தன்னருளும்
பூந்துகிலும் வேறாகப் போயினான்—தீந்தேன்
தொடைவிரவு நாண்மாலை சூட்டினா டன்னை
இடையிருளிற் கானகத்தே இட்டு.

[இ-ள்.] (அவ்வாறு கூறிய நளன் அதன் மேல்) தீந்தேன்-மதுரமாகிய தேனினது, தொடை-பற்றுதல் (அதாவது: சேர்ந்திருக்குந் தன்மை) விரவு-கலந்திருக்கின்ற, நாள்மாலை-புதிய மாலையை, சூட்டினாள் தன்னை-(தனக்குச்) சூட்டிய தமயந்தியை, இடை இருளில்-நள்ளிரவில், (அதாவது:நடுச்சாமத்தில்), கானகத்தே-காட்டில், இட்டு-போட்டுவிட்டு, ஏந்தும்-மார்பினிடமாகத் தாங்கும்படியான, இளமுலையாள் - இளமையான தனங்களையுடையவளாகிய அத்தமயந்தியின், இன் உயிரும்-இனிமையான ஆவியும், தன் அருளும் - தன்னுடைய கிருபையும், பூந்துகிலும்-(தானும் தமயந்தியும் அணிந்திருந்த) அழகிய வஸ்திரமும், வேறாக-(முன்னே சொன்னவாறு) வெவ்வேறாகும்படி, போயினான் - (அவ்விடத்தை விட்டு நீங்கிப்) போனான்; [எ-று.]

வனதேவதைகளை நோக்கி 'நீங்கள் தமயந்தியைக் காத்துக் கொள்ளுங்கள்' என்று கூறிய நளன் அவளை அப்பாழ் மண்டபத்திலேயே போட்டு விட்டு அவ்விடத்தை நீங்கிப் போயினான் என்பது இதன் கருத்து. நளன் இவ்வாறு போதற்குத் துணியவே அவனுக்கும் தமயந்திக்கும் ஒன்றாயிருந்த உயிரும் ஆடையும் இரண்டாகப் பிரிந்தன; நளன் தமயந்தியின் மீது வைத்திருந்த அன்பும் அவளை விட்டு நீங்கி வேறாயிற்று; இவை குறித்தே ஆசிரியர், "இளமுலையாள் இன்னுயிரும் தன்னருளும் பூந்துகிலும் வேறாகப் போயினான்" என்றார்; 273 ஆம் செய்யுளில், 'ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக' என்றதுபோல் இச்செய்யுளிலும் அக்கருத்தே அமைந்தது.

தொடை-தொடுதல் எனப் பொருள்படும் தொழிற் பெயர்; இஃது இங்கே பற்றுதல் என்னும் பொருளில் நின்றது. நாள் மாலை-அன்றலர்ந்த மலரினால் தொடுக்கப்பட்ட புதிய மாலை.

இதில், அவ்வாறு சென்ற நளன் காட்டிற்போயினமை கூறப்படுகின்றது.

278. தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரிருளில்

சேங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து.

[இ-ள்.] (அவ்வாறு சென்று,) வேந்து-நளமகாராஜன், தாரு என-கற்பக விருக்ஷத்தைப்போல, பார்மேல்-இப்பூமியில், (உள்ள மனிதர்க்கு விரும்பியவற்றையெல்லாம்) தரு-கொடுக்கின்ற, மேரு வரை-மேருமலையை நிகர்த்த, தோளான்-புஜங்களையுடையவனாகிய, சந்திரன் சுவர்க்கி-சந்திரன் சுவர்க்கியென்னும் அரசனுடைய, விரவார்போல்-பகைவர்களைப்போல, கூர்-மிகுதியாகிய, இருளில்-இருளுள்ள இராத்திரியில், தேவியை-தன் நாயகியாகிய தமயந்தியை, விட்டு-தனியாகப் பாழ்மண்டபத்தில்விட்டு, வெங்கானகந்தனிலே-வெவ்விதாகிய காட்டிலே, செங்கால்-சிவந்த காலிலுள்ள, நகஞ்சிதைய-நகமானது சிதையும்படி, ஏகினான்-போனான்; [எ-று.]

மேற்கூறியபடி தமயந்தியைப் பிரிந்து நளன், சந்திரன் சுவர்க்கியென்னும் அரசனுடைய பகைவர்களைப்போல் மிகுந்த இருளுள்ள அவ்விரவில் காட்டிலே போயினான் என்பது இதன் கருத்து. வீரம் பொருந்திய அரசர்களுடைய பகைவர்கள் அபஜெயப்பட்டு, எல்லாவற்றையும் இழந்து, தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு இருள் சூழ்ந்த கானகத்தில் மறைந்தோடுவது இயற்கை. ஆதலின், இங்ஙனம் யாவற்றையும் இழந்ததோடு மனைவியையும் இழந்து நள்ளிரவில் காட்டில் தனித்துச் சென்ற நளனுக்கு அவர்களை உவமையாகக் கூறினார் ஆசிரியர். சந்திரன் சுவர்க்கி என்பவன் இந்நூலாசிரியரை ஆதரித்து இந்நூல் செய்வித்த ஓர் அரசன்; ஆதலின், அவனை இங்குச் சிறப்பித்துக் கூறினார் ஆசிரியர்; இவ்வாறு நூலாசிரியர்கள் தங்களை ஆதரித்த பிரபுக்களைத் தாங்கள் செய்யும் நூற்களினிடையிடையில் புகழ்ந்து எடுத்துக் காட்டாகக் கூறிக் கொள்ளுதல் இயற்கை. அது பற்றியே புலவரும் இங்ஙனம் கூறினார்; இவ்வாறே கம்பரும் சடையப்பவள்ளலைத் தமது இராமாயணத்தில் புகழ்ந்து கூறியிருத்தல் காண்க. கற்பகத்தரு இந்திரனுக்குச் சொந்தமாய்த் தெய்வலோகத்திலிருக்கும் ஒரு வகைத் தேவ விருக்ஷம்; இது தன்னிடம் வருவார் விரும்பியவற்றையெல்லாம் தருவது. நளன் மிகுந்த இருளில் சென்றதனால் பூமியிற் கிடக்கும் கல், முள் முதலியவை தெரியாமல் காலால் அவற்றை இடறிக்கொண்டே போனான்; அவற்றால் அவனுடைய கால் நகங்கள் மோதுண்டு சிதைந்தன.

தரு என்னும் வடசொல் தாரு என முதல் நீண்டது. தரு வென்பது மரங்களுக்கெல்லாம் பொதுப்பெயராயினும், "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பது போலச் சிறப்பு நோக்கி

எல்லாவற்றினும் சிறந்த கற்பகத்தை உணர்த்தி நின்றது. மேல்-ஏழனுருபு. வரைத்தோளான்-உவமைத்தொகை. விரவுதல்-கலத்தல்; அதாவது: உறவாதல்; அஃதில்லாதார் விரவார்; பகைவர்க்கு உறவில்லையாதலின் அவர் இப்பெயர் பெற்றார். கூர் இருள்-அன்மொழித் தொகையாய் இரவை உணர்த்தி நின்றது; இதற்கு மிகுந்த இருளில் எனப்பொருள் கொள்ளினும் அமையும்; அங்ஙனங் கொள்ளுமிடத்து இது வினைத்தொகையின் பாற்படும்.

தமயந்தி விழித்து நளனைத் தேடுதல்.

279. நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—வேல்வேந்தே
எங்குற்றா யென்று வினவளைக்கை நீட்டினாள்
அங்குத்தான் காணா தயர்ந்து.

[இ-ள்.] (மேற் கூறியபடி நளன் சென்ற பிறகு) மலரின்-மலரையுடைய, கொடி-கொடியை நிகர்த்த, இடையாள்-இடையினையுடைய தமயந்தி, (தனக்கேற்பட்டிருந்த கலக்கத்தால் நித்திரை கொள்ளாமல் திடுமென விழித்துக்கொண்டு) அங்கு-அவ்விடத்தில், தான் காணாது-தான் அரசனைக் காணாமல், (திகிற்பட்டுக் கண் கலங்கி) நிரை-வரிசையாகிய, முத்தின் கோலம்-முத்துக்களின் வடிவம், (அதாவது! முத்துக்களின் வடிவம் போன்ற கண்ணீர்த் துளிகள்) நீலம்-நீலோற்பல மலர்போன்ற கண்களின், அளவே-அளவாக, (அதாவது: கண்கள் முழுதும் நிறைந்து) நெகிழ-கலங்கிச் சொரிய, அயர்ந்து-அயர்ச்சியுற்று, வேல் வேந்தே-வேலாயுதத்தைத் தரித்த அரசனே!, எங்குற்றாய்-எங்கே சென்றாய்?, என்று-என்று பதறிக்கூறி, இனம்-கூட்டமாகிய, வளை-வளையல்களை யணிந்த, கை-கரங்களை, நீட்டினாள்-எட்டின மட்டில் நீட்டி அங்குமிங்கும் தடவிப்பார்த்தாள்; [எ-று.]

நளன், மேற்கூறியபடி போய்விட்டவுடனே நித்திரை செய்து கொண்டிருந்த தமயந்தி விழித்து அவனைக் காணாமல் வருந்திக் கண்கலக்கத்துடனே கையை நீட்டி 'மன்னனே! எங்குச் சென்றாய்?' என்று தடவிப் பார்த்தாள் என்பது இதன் கருத்து. தமயந்தி சிறிது அயர்ந்து நித்திரை செய்தாலும் தனக்கேற்பட்டிருந்த மனத் துயரத்தால் அதிக நேரம் உறங்காமல் சீக்கிரம் விழித்துப் பார்த்துப் பக்கத்தில் நளனைக் காணாதபடியால் திடுக்கிட்டுக் கண்ணீர் விட்டுக் கலங்கி, இருட்டாதலால் கையை நீட்டி எட்டின மட்டில் அவனைத் தடவிப் பார்த்தாள். திடுமெனத் தனக்குண்டாகிய கலக்கத்தால் அவள் தன் வஸ்திரம் துண்டாக அரியப்பட்டிருப்பதை அத்தருணம் கவனித்திலள். நளன் தன்னைவிட்டுப் பிரியமாட்டா

னென்னும் நம்பிக்கை அவளுக்கேற்பட்டிருந்தாலும் அச்சமயம் பக்கத்தி லில்லாமலிருந்ததற்குக் கலக்க முண்டாயிற்று. அவ்வாறு கலங்கிய அவள், அவன் ஏதேனும் காரியத்தைக் கருதி எழுந்து வெளியிற் சென்றிருக்கக்கூடுமென்று நினைத்தாள்; அதனாலேயே "வேந்தே எங்குற்றாய்" என்று கையை நீட்டித் தடவிப் பார்த்தாள்.

நீலம்-கண்ணுக்கு உவமையாகு பெயர்; கண்நிறைய நீர்கலங்கிற்று; அதனாலே 'நீலமளவே நெகிழ' என்றார் ஆசிரியர். முத்தின் கோலம்-அன்மொழித் தொகையாய்க் கண்ணீரை யுணர்த்திற்று. காணாது-எதிர்மறை வினையெச்சம். தான்-அசை. தான்காணாது-இதில் அரசனை என்பது இசை எச்சம்.

தமயந்தி நளனைக் காணாமல் வருந்துதல்.

280. வெய்ய தரையென்னு மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்துங் காணாமல்—ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தா ளினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் திரு.

[இ-ள்.] இனம்-கூட்டமாகிய, மேதி-எருமைகள், மெல்-மெல்லிய, கரும்பை-கரும்புகளை, தின்ன-தின்னுதற்கு, போம்-செல்கின்ற, (மருத நிலவளம் பொருந்திய) நாடன்-நாட்டையுடைய வீமராஜனது, (மகளாகிய) திரு-இலக்குமியே யென்னுந் தமயந்தியானவள், (அவ்வாறு) வெய்ய-வெவ்விதாகிய, தரை யென்னும்-நிலமென்கின்ற, மெல் அமளி-மெல்லிய படுக்கையை, தடவி-தடவிப் பார்த்து, கையரிக்கொண்டு-தேடி, எவ்விடத்தும்-எந்தவிடத்திலும், காணாமல்-நளனைப் பார்க்காமல், ஐயகோ-ஐயோ, என்ன-என்று கூவிக்கொண்டு, போய்-ஒரு பக்கமாகச் சென்று, வீழ்ந்தாள்-நிலத்தில் வீழ்ந்தாள்.

மேற்கூறியபடி கையை நீட்டித் தடவிப்பார்த்த தமயந்தி மேலும் பற்பல விடங்களிலும் தேடிப்பார்த்து அவனைக் காணாததால் ஐயோ! வென மயங்கி வீழ்ந்தாளென்பது இதன் கருத்து. அவள் முதலில் நளன் எழுந்து ஏதேனும் ஒரு காரியார்த்தமாகப் பக்கத்திற் போயிருப்பானென்று நினைத்தாள். பின்னர் எங்குந் தடவிப் பார்த்தாள்; ஓரிடத்திலும் அவன் அகப்படாமல் போகவே, தன்னைவிட்டு நீங்கியே போய்விட்டானென்று உறுதி கொண்டு இவ்வாறு மயங்கி விழுந்தாளென்க. 'நாடன்' என்பதை நளனுக்கேற்றி 'நாடன் திரு' என்பதற்கு 'நாட்டையுடையவனாகிய நளனது இலக்குமி போன்ற மனைவி' எனவும் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

வெய்ய-குறிப்புப் பெயரெச்சம்; இது வெம்மை யென்னும் பண்படி விகாரம்; வெம்மையின் மைவிகுதிபோய் மகரம் யகரமாகி அகர விகுதி பெற்று இங்ஙனம் வந்தது. கையரிக் கொள்ளல்-கையினால் சில வஸ்துக்களை வாரியெடுத்துக் கெட்டவற்றைத் தள்ளி நல்லவற்றை ஆராய்ந்தெடுத்தல்; இஃதிங்கே தேடுதற் பொருளில் வந்தது; அரித்தல்-கொழித்தல்; கொழித்தலாவது பல வஸ்துக்களில் சில வற்றை ஒரு பக்கமாகவும் வேறு சில வற்றை மற்றொரு பக்கமாகவும் ஒதுக்குதல். ஐய, கோ-இரண்டும் இரக்கக் குறிப்பிடைச் சொற்கள்; ஒரு சொன்னீர்மைத்தாய் வந்தன; இவற்றில் 'ஐய' என்பதை நளனுக்கு விளியாக வந்ததெனக்கொண்டு 'கோ' என்பதை மட்டும் இரக்கக் குறிப்பிடைச் சொல்லாகக் கொள்ளினும் அமையும். 'என்று' என்பது 'என்ன' எனத்திரிந்துவந்தது. திரு-தமயந்திக்கு உவமையாகுபெயர்.

இதுவுமது.

281. அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்று
துழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி.

[இ-ள்.] (அப்படி வீழ்ந்து உடனே எழுந்து) வீமன்-வீமராஜனுடைய, கொடி-பூங்கொடி போன்ற குமாரத்தியாகிய தமயந்தி, அழல்-அக்கினியை நிகர்த்த, வெம்-வெவ்விய, சிலை-வில்லையுடைய, வேடன்-வேடனது, அம்பு-பாணமானது, உருவ - தேகத்திற் பாய்ந்து ஊடுருவிச் செல்ல, (அதனால் ஏற்பட்ட துன்பத்தை) ஆற்றாது-சகிக்கமுடியாமல், உழலும்-வருந்தி அங்கு மிங்கும் ஓடித்திரிகின்ற, களிமயில்போல்-முன்னே களிப்புடனிருந்த மயிலே போல, குழல்-தன்னுடைய கூந்தலில், (மலர்த்தேனை யுண்ண விரும்பித் தங்கியிருக்கின்ற,) வண்டு-வண்டுகள், எழுந்துஓட-அதிர்ச்சியினால் பயந்து எழுந்து ஓடவும், இருகுழைமேல்-காதுகளில் அணியப்பட்டிருக்கும் இரண்டு காதணிகள் மீதும், கண்ணீர் கொழுந்து-கண்ணீர் ஒழுக்கின் துளிகள், ஓட-பாய்ந்தோடவும், ஓடி-அங்கு மிங்கும் ஓடி, வீழ்ந்தாள்-மீண்டும் நிலத்தின் மேல் மூர்ச்சையடைந்து விழுந்தாள்; [எ-று.]

மேலைச்செய்யுளில் கூறியபடி நிலத்தில் விழுந்த தமயந்தி உடனே எழுந்து வேடனம்புபாய வருந்தி அங்கு மிங்கும் ஓடும் மயிலைப்போல் தனக்கேற் பட்டதுயரத்தைச் சகிக்க முடியாமல் கண்ணீர் விட்டழுது கொண்டு அங்கு மிங்கும் ஓடி மோதி மீண்டும் தரையில் வீழ்ந்தாளென்பது இதன் கருத்து. தமயந்தி மிகுந்த

துக்கத்தால் மனச்சாந்தி யடையாமல் பைத்தியம் பிடித்தவள் போல் ஆய்விட்டபடியால் இவ்வாறு ஒரு நிலைக்கொள்ளாமல் கண்ணீர் வடித்துப் புலம்பி நிலத்தில் வீழ்வதும், எழுந்திருப்பதும் தலையால் தரையில் முட்டுவதும் மோதுவதுமாயிருந்தா ளென்க. கொடி-உவமையாகு பெயர்.

இதுவுமது.

282 வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்—ஏனம்
குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைதலைமே லிட்டு.

[இ-ள்.] (*அவ்வாறு வீழ்ந்து மீண்டும் எழுந்து பலவிதமாகப் புலம்பி*) ஏனம்-*பன்றிகள்*, குளம்பால்-*பாதக்குளம்புகளால்*, மணி-*இரத்தினங்களை*, கிளைக்கும்-*கிண்டுகின்ற*, (*சிறப்பினையுடைய*) நீர்-*நீர்நிறைந்த*, குண்டு-*குளங்களையுடைய*, நாடன்-*நாட்டிற்கதிபனாகிய வீமனது*, இளம்பாவை-*இளமைபொருந்திய பதுமைபோன்ற குமாரத்தியாகிய அத்தமயந்தி*, தனி-*ஒன்றியாய்*, கை-*தன்னுடைய கரங்களை*, தலைமேல்-*சிரசின்மேல்*, இட்டு-*வைத்துக் கொண்டு*, வான்-*சிறந்த*, முகிலும்-*மேகமும்*, மின்னும்-*மின்னலும்*, வறுநிலத்து-*வெறுந்தரையில்*, வீழ்ந்ததுபோல்-*வீழ்ந்துகிடப்பதுபோல*, தானும் குழலும்-*தானும்தன் கூந்தலுமாக*, வீழ்ந்தாள்-*மீண்டும் வீழ்ந்து சோக முற்றுக் கிடந்தாள்*; [எ-று.]

முன் கவியிற் கூறியவாறு நிலத்தில் வீழ்ந்த தமயந்தி பின்னரும் எழுந்து கைகளால் தலையி லடித்துக்கொண்டு அக்கரங்களைக் கூந்தலிற் சேர்த்தபடியே மீண்டும் வெறுந்தரையில் வீழ்ந்து சோக முற்றுக் கிடந்தா ளென்பது இதன் கருத்து. அவள் பன்முறை வீழ்ந்து வீழ்ந்து எழுந்து புலம்பிக்கொண்டிருந்தபடியால் தளர்ச்சியுற்று முடிவில் தலையில் கரங்களை வைத்தபடியே வெறுந்தரையில் வீழ்ந்து சோகமுற்றுக் கிடந்தாளென்க. முகில் தமயந்தியின் கூந்தலுக்கும் மின்னல் அவளுடைய தேகத்திற்கும் உவமைகளாம். அவள் கூந்தல் சோரத் தரையிற் படுத்திருந்த தோற்றமானது ஒரு மேகம் மின்னலோடுவந்து கிடந்தது போன்றிருந்தது. 'வான்முகிலும் மின்னும் வறு நிலத்து வீழ்ந்தது போல் தானும் குழலும் தனி வீழ்ந்தாள்' என்பது எதிர் நிரனிறைப் பொருள் கோள்; "களிறுங் கந்தும்போல நளிகடற் கூம்புங் கலனுந்தோன்றும்" என்பது போலக் கொள்க. (நன்-பொ-63.) ஆம் சூத்திரம் பார்க்க. (நன்-பொ-27,) ஆம் சூத்திரவிதிப்படி

"தானும் குழலும்" என்பன 'வீழ்ந்தாள்' என்னும் ஒரு முடிபைக் கொண்டன.

இதில் இரவு நீங்கி விடிந்தமை கூறப்படுகின்றது.

283. தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாங்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம்.

[இ-ள்] (அத்தருணத்தில்) தையல்-தமயந்தியாகிய பெண்ணினது, துயர்க்கு-துன்பத்திற்கு, தரியாது-சகியாமல், தம்-தங்களுடைய, சிறகு ஆம்-இறகுகளாகிய, கையால்-கரங்களினால், வயிறு அலைத்து-வயிற்றிலடித்துப் பிசைந்து கொண்டு, கார்-கரிய, இருள்வாய்-இருட்டில், (அவள் துயரத்தை விரைவில்வந்து தீர்க்கும் பொருட்டு) வெய்யோனை-சூரியனை, வாவு-தாவுகின்ற, பரி-குதிரைகள் பூட்டப்பெற்ற, தேர்-தேரில், ஏறி-ஆரோகணித்து, வாவென்று-விரைந்துவரக்கடவாயென்று, அழைப்பனபோல்-கூப்பிடுகின்றவைகளைப்போல, கோழிக்குலம்-கோழிச்சேவலின் கூட்டங்கள், கூவின-பலமுறை கூச்சலிட்டன; [எ-று.]

மேற்கூறியபடி தமயந்தி தரையில் வீழ்ந்து வருந்திக் கொண்டிருக்குஞ் சமயத்தில் இரவு நீங்கி விடியற்காலநேரம் வந்துவிட்டபடியால், கோழிச்சேவல்கள், தமயந்தியின் துயர்க்காற்றாது விரைந்துவந்து அதனைத் தீர்க்கும் பொருட்டுச் சூரியனைக் கூப்பிடுகின்றவைகளைப் போலக் கூவின வென்பது இதன் கருத்து. கோழிச்சேவல்கள் கூவின எனவே விடியற்காலம் வந்ததென்பது தானே அமையும். கோழிச்சேவல்கள் கூவும்போது சிறகுகளால் வயிற்றில் அடித்துக்கொண்டு கூவுவது இயற்கை. அங்ஙனம் கூவியதை, சூரியனை அழைத்ததாகக் குறித்தார் ஆசிரியர். கோழிச்சேவல் கூவியபின்னர் சூரியன் உதிப்பது இயற்கை ஆதலின் இங்கு அவை அவனை அழைத்ததாக ஆசிரியர் கூறியது மிகவும் பொருத்தமுடைத்தே. இக்கருத்தை அனுசரித்துச் சூரிய உதயமும் இவைகளின் அழைப்புக்காக ஏற்பட்டதெனக் கொள்ளப்படும். ஒருவர் கேட்டுக்கு இரங்குவோர் கைகளால் வயிற்றிலடித்துக்கொண்டு புலம்புதல் இயற்கை. ஆதலின் இங்குத் தமயந்தியின் துயருக்கு இரங்கின கோழிச் சேவல்களும் வயிற்றிலடித்துக்கொண்டதாகக் குறித்தார் ஆசிரியர். ஒரு அபாயத்தை நீக்குவதற்கு மற்றொருவரை அழைப்பவர் விரைந்து வருமாறு கூப்பிடுதல் இயற்கையாதலின் இங்கே கோழிகள் விரைந்தழைத்ததாகக் குறித்ததற்கேற்ப

"வாவுபரித்தேரேறி வாவென்றழைப்பன போல்" என்றும் ஆசிரியர் அமைத்துக் கூறினர்.

வெம்மையோன் என்பது வெய்யோன் எனத்திரிந்து வந்தது. கூவினவே என்பதில் ஏ-அசை. கோழியென்பது கோழிக்குலத்தில் ஆண் பெண் ஆகிய இரண்டிற்கும் பொதுப் பெயர். அவற்றுள் கூவுவது சேவலே ஆதலின் கோழியென்பதற்குக் கோழிச் சேவல் என்று பொருள் கூறப்பட்டது.

இதில் சூரியோதயம் கூறப்படுகின்றது.

284. வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று.

[இ-ள்.] (அவ்வாறு கோழிச்சேவல்கள் கூவியபின்பு) வானம்-ஆகாயமாகிய, நெடுவீதி-நீண்டதெருவில், செல்லும்-போகின்ற, மணி-இரத்தினங்களினாலாகிய, தேரோன்-தேரையுடையவனாகிய சூரியன், அம்மடந்தைக்கு-துன்பப்பட்டுக் கொண்டிருந்த பெண்பாலாகிய அத்தமயந்திக்கு, தார்-மாலையையணிந்த, வேந்தன்-நளமகாராஜான், போனநெறி-சென்ற மார்க்கத்தை, காட்டுவான்போல்-சுட்டிக் காட்டித் தெரிவிப்பான் போல, இருள்போய்-இருளானது புகுந்து, கைவாங்கு-இருக்க இடம் பெற்றுக்கொள்கின்ற, (அதாவது இடம்பெற்றுக் குடியாயிருக்கின்ற) அக்கான் ஊடே-அந்தக் காட்டின் நடுவிலே, செங்கரத்தை-தன்னுடைய சிவந்த கிரணங்களாகிய கரங்களை, நின்று-உதயகிரியின்மேல்நின்று, நீட்டுவான்-நீட்டினான்; [எ-று.]

முன்னுரைத்தபடி கோழிச்சேவல்கள் கூப்பிட்டவுடன் சூரியன் அவ்வழைத்தனுக்காகவே தோன்றி நளன் சென்ற மார்க்கத்தைத் தமயந்திக்குச் சுட்டிக்காண்பிப்பவன்போல இருள்மிகுந்த அக்காட்டினூடே கிரணங்களாகிய கைகளை நீட்டினு னென்பது இதன் கருத்து. இங்ஙனங் கூறியதனால் சூரியன் உதயமாகிக் கிரணங்களை எங்கும் பரப்பினு னென்பது பெறப்படும். அக்காட்டிற்குள் பரவிய சூரிய கிரணங்களை அவன் தமயந்திக்கு அரசன் சென்றவழியைச் சுட்டிக் காட்டிய கைகளாகக் குறித்தார் ஆசிரியர். கரம் என்ற வடசொல் கையையும் கிரணத்தையும் உணர்த்து மாதலின் அதற்குக் கிரணமாகிய கைகள் என்று பொருள் விரிக்கப்பட்டது. இது சிலேடைபற்றிய உருவக மெனப்படும். கை-இடம்; 'இருள்போய் கைவாங்குகான்' என்பதனால் அக்காடு எப்பொழுதும்

இருள் சூழ்ந்திருப்பதென்பது பெறப்படும். அதனால் அது எவர்க்கும் எப்பொழுதும் வழியறிய முடியாத இயல்பினை யுடையதாம். ஆதலின் அத்தகைய காட்டிற்குள் அந்த இருள் நீங்கித் தமயந்திக்கு வழிதெரியும் பொருட்டுச் சூரியன் கிரணங்களாகிய கைகளை அதற்குள் நீட்டினனென்க. அம்மடந்தை யென்பது இடையே மகரந் தொகுத்தலாய் நின்றது. தான் அசை. நின்று என்பதையும் அசையெனக் கோடலும் ஒன்று. மணித்தே ரென்பதை அழகிய தேரெனவுங் கொள்ளலாம். நீட்டினன் என இறந்தகாலத்தில் வருதற்பாலது, நீட்டுவான் என எதிர்காலத்தால் வந்தது இயல்பினால் வந்த காலவழுவமைதி யெனப்படும்.

விடிந்தபின் தமயந்தி நளனை நினைத்துப் புலம்புதல்.

285. செய்தபிழை யேதென்னுந் தேர்வேந்தே என்றழைக்கும்
எய்துதுய ரக்கரைகா ணேனென்னும்—பையவே
என்னேஎன்று தென்னேன்னு மிக்கானில் விட்டேகு
மன்னேஎன்று வாடு மயர்ந்து.

(இ-ள்.) (அங்ஙனம் சூரிய உதயமான பின்பு முன்னுரைத்தபடி கீழே விழுந்து கிடந்த தமயந்தி எழுந்து) செய்தபிழை-(அரசன் இவ்வாறு என்னை விட்டுப் பிரிந்து போவதற்கு நான்) இயற்றிய குற்றம், ஏது என்னும்-யாது என்று சொல்வாள், தேர் வேந்தே-இரதத்தையுடைய அரசனே, என்று அழைக்கும்-என்று கூப்பிடுவாள், எய்து-என்னிடத்தே சேர்ந்திருக்கின்ற, துயரக்கரை-துக்கத்தின் எல்லையை, காணேன்-நான் காண்கிலேன், என்னும்-என்று உரைப்பாள், (இவ்வாறு வருந்துகின்ற என்னிடத்தில்) பைய-மிருதுவாக, என்-(உனக்கு வந்த துயரம்) யாது, என்று-என்று வினவாதது, என் என்னும்-என்னகாரணம் என்று சொல்வாள், இக்கானில் - இந்தக்காட்டிலே, விட்டு-என்னைத் தனியாக விட்டு, ஏகும்-செல்கின்ற, மன்-அரசனே!, என்று-என்று கூவியழைத்து, அயர்ந்து-தளர்ச்சி யடைந்து, வாடும்-வாடுவாள்.

சூரிய உதயமான பின்பு தமயந்திக்கு நளன் நிச்சயமாகத் தன்னை விட்டு நீங்கிப்போனானென்பது விளங்கியபடியால் அவள், 'என் நாயகர் இவ்வாறு பிரிந்து போவதற்கு நான் என்னபிழை செய்தேன்,' என்பது முதலிய வார்த்தைகளைக் கூறிப் புலம்புவாளாயினள் என்பது இதன் கருத்து. துயரக்கரை காணலாவது துன்பத்தின் எல்லையைக் கடந்து சுகத்தை அடைதலாம்; அதாவது இவ்வளவென்று ஏற்பட்ட துன்பத்தை அனுபவித்து விட்டுப் பிறகு சௌக்கியத்தை யடைதலாம்; அதன் கரை காணாததாவது அதன் எல்லையை எப்பொழுதும் கடக்க முடியாதிருத்தலாம்;

அதாவது இவ்வளவென்று வரையறுக்கப்படாது எப்பொழுதும் விலகாதிருக்கும் துன்பத்தை எந்நாளும் அனுபவித்துக் கொண்டிருத்தலாம்; இங்குத் தமயந்திக்கு ஏற்பட்ட துன்பம் இத்தன்மையதாதலின் அவள் "துயரக்கரை காணேன்" என்றாள் என்க. "என்னுதது" என்பது தகரம் தொகுத்தலாய் 'என்னுது' என வந்தது. இச்செய்யுளில் என்பாள், என்பாள், வாடுவாள், என எதிர்காலத்தால் வந்த முற்றுக்களையெல்லாம் இறந்தகால வழுவமைதியாய் வந்தனவாகக் கொள்ளவேண்டும்.

தமயந்தி நளனுடைய அடிச்சுவட்டைக் கண்டு
வருந்திப் புலம்புதல்.

286. அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவடன்
நல்லுயிரு மாசையும்போ னறுதலும்—மல்லுறுதோள்
வேந்தனே யென்னு விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான்.

(இ-ள்.) (மேற்கூறியபடி பலவாறு புலம்பிய தமயந்தி விடிந்த பின்னர் வெளியிற் சென்று நளனைத்தேடிப் பார்க்கலாமென்ற எண்ணத்துடன் அம்மண்டபத்தை விட்டுச் சிறிது தூரம் நடந்து போயினாள். அப்போது நளன் சென்றவழியில் அவனுடைய பாதச்சுவடு தோற்றிற்று. அவ்வாறு) அல்லி - அல்லிமலரினால் தொடுக்கப்பட்ட, அம்-அழகிய, தார்-மாலையை அணிந்த, மார்பன்-மார்பை யுடையவனாகிய நளனது, அடித்தாமரை-பாதங்களாகிய தாமரை மலர்கள், அவள் தன்-அத்தமயந்தியினுடைய, நல் உயிரும்-நல்லபிராணனும், ஆசையும்-விருப்பமும், போல்-போல, நாறுதலும்-தோன்றின மாத்திரத்திலே, மல் உறு-மல் யுத்தம் பொருந்திய, தோள் - புயங்களையுடைய, வேந்தனே - அரசனே, என்னு-என்றுகதறி, விழிவேலை-கண்ணாகிய சமுத்திரத்தினின்றும், சாய்ந்த-பெருகி வந்த, நீர் வெள்ளத்தே-ஜலப் பெருக்கிலே, விழுந்தாள்-சுழன்று வீழ்ந்தாள்; [எ-று.]

நளனைத்தேடிக்கொண்டு அம்மண்டபத்தைவிட்டு வெளியேறிப்போன தமயந்தி வழியில் அவனுடைய அடிச்சுவடு தோற்றக் கண்டு அவன் மீதேற்பட்ட ஞாபகமும், துக்கமும் அதிகரித்ததனால், ஐயோ! அரசனே! என்று கதறிக் கண்ணீர்விட்டு அழுது கொண்டு கண்ணீர் வடிந்த இடத்திலேயே வீழ்ந்தாளென்பது இதன் கருத்து. நளனுடைய பாதச்சுவட்டைப் பார்த்தவுடனே தமயந்திக்கு அவனுடைய ஞாபகமும் அதனால் ஏற்பட்ட துக்கமும் அதிகரித்ததனால் இவ்வாறு புலம்பி வீழ்ந்தாள். அந்த அடிச்சுவடானது அவளுக்குத் தன்னுடைய உயிரைப் போலவும்

ஆசையே உருவெடுத்தாற் போலவும் தோற்றிற்றாதலின் ஆசிரியர் "நல்லுயிரும் ஆசையும் போல் நாறுதலும்" என்றார்.

நளன் எதற்கும் அஞ்சாத தோள் வல்லமை பெற்றவனாயிருந்தும் இந்தத் துயரத்தை சகிக்க முடியாமல் தமயந்தியைப் பிரிந்து சென்றது ஆகாதென்பது தோன்ற அவள் அவனை "மல்லுறுதோள் வேந்தனே" என்று கூவிக் கதறினாள். அல்லியந்தார் என்பதற்கு அகவிதழ்களையுடைய மலர்களினால் தொடுக்கப்பட்ட மாலையெனப் பொருள் கோடலும் அமையும். நாறுதல் என்பதற்குப் பரிமளித்தல் என்ற பொருளே விசேஷித்து நிற்கும். ஆதலின் அடித் தாமரை யென்பதற்கேற்ப நாறுதலும் என்றார் ஆசிரியர். தாமரை பரிமளித்தல் இயல்பு. வேலை-கண்ணுக்கு உபமானம். அவள் மிகுதியாக அழவே கண்ணீர் நிலத்தில் வடிந்து சரமாகி இருந்தது; அதன் மீதே வீழ்ந்தாள் அவள்; அதனால் "சாய்ந்தநீர் வெள்ளத்தே வீழ்ந்தாள்" என்றார் ஆசிரியர். நாறுதலும், என்னா- என்பன வினையெச்சங்கள்.

அவ்வாறு வீழ்ந்த தமயந்தி எழுந்து
புலம்புதல்.

287. வெறித்த விளமான்காள் மென்மயில்கா ளிந்த
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
போனாரைக் காட்டுதிரோ வென்னாப் புலம்பினாள்
வானாடர் பெற்றிலா மான்.

(இ-ள்.) (அங்ஙனம் வீழ்ந்து உடனே எழுந்து) வான் நாடர்-தேவர் நாட்டிலுள்ள தேவர்கள், பெற்றிலா-பெறாத, மான்-மானை நிகர்த்தவளாகிய தமயந்தி (அங்கு நின்ற மான்மயில் முதலியவற்றை நோக்கி), வெறித்த-என்னைக்கண்டு பயந்து நிற்கின்ற, இளமான்காள்-இளமை பொருந்திய மான்களே! மெல்மயில்காள்-மென்மைத் தன்மையையுடைய மயில்களே!, எம்மை-எங்களை, (அதாவது: என்னையும் என் மக்களையும்) பிறித்து-வேறாக்கி, போனாரை-சென்ற அரசரை, (நீங்கள் அறிந்திருப்பீர்களாதலின்) காட்டுதிர்-எனக்குக் காட்டுங்கள், (அவ்வாறு காட்டுவீர்களானால்) இந்த நெறிக்கண்-இந்த வழியிலேயே, ஊழி-யுகமுடிவு வரையிலும், நெடிது-நீட்சியாக, வாழ்வீர்-வாழக்கடவீர், ஓ-ஐயோ!, என்னா என்று புலம்பினாள்; [எ-று.]

முன்னுரைத்தபடி நிலத்தில் வீழ்ந்தெழுந்த தமயந்தி துக்க மிகுதியினால் மனமருண்டு அங்கு நின்ற மான் மயில் முதலியவற்றை நோக்கி 'என்னைப் பிரிந்து சென்ற அரசனை நீங்கள் காட்டுவீர்களானால் இங்கே நெடுங்காலம் வாழ்வீர்கள்' என்று கூறிப்புலம்

பினுளென்பது இதன் கருத்து; அவைகள் அவ்வழியில் சஞ்சரிக்கக் கூடியனவாதலின் அங்குச் சென்று களனை அறிந்திருக்கக் கூடுமென்று நினைத்து அவைகளிடம் தமயந்தி இவ்வாறு கூறினுளென்க. துக்க மிகுதி யுடையவர்கள் தங்களுக் கேற்பட்ட மருட்சியால் இன்னதைச் சொல்லலாம், இன்னதைச் செய்யலாம் என்ற நியதி யின்றிச் சில காரியங்களைச் செய்தலும் பேசலும் இயற்கையாதலின் துக்க மிகுந்த தமயந்தியும் இவ்வாறு ஒன்றையும் அறியாத மிருகம் பட்சி முதலியவைகளிடத்தில் கூறினுள். "வானுடர் பெற்றிலா மான்" என்றது, இந்திரன் முதலிய தேவர்களும் மனைவியாக அடைய முடியாதவள் என்ற பொருளில் நின்றது. காட்டில் வாழும் மிருகம் பட்சி முதலியவைகள் மனிதரைக்கண்ட மாத்திரத்தில் பயந்து மருள்வது இயற்கையாதலின் அப்போது தமயந்தியைக் கண்ட அம் மான் முதலியவைகள் அச்சங்கொண்டு மருண்ட பார்வையோடு நின்றன. அது பற்றியே அவள் "வெறித்த இள மான்காள் மென்மயில்காள்" என்று அவற்றை அழைத்தனள்.

நெடிது-நெடுமை என்னும் பண்படி விகாரம். இதில் நெடு-பகுதி, து-விகுதி, இடையுகரம் இ ஆயிற்று. ஊழி-நாசஞ் செய்தலை யுடையது. இக்காலம் எல்லாவற்றையும் நாசஞ்செய்து உலகத்தை அழித்துவிடக்கூடியதாதலின் இப்பெயர் பெற்றது. இதில் ஊழ்-பகுதி, இ-கர்த்தாப் பொருள்விகுதி, ஊழ் என்பதற்கு, நாசஞ் செய்தல் என்பது பொருளாம். காட்டுதிர்-நிகழ்கால முன்னிலைப்பன்மை வினைமுற்று; இதில் காட்டு பிறவினைப்பகுதி; இர்-முன்னிலைப் பன்மை விகுதி, த்-எழுத்துப் பேறு; காட்டு என்பதில் காண்-பகுதி, டு-பிறவினை விகுதி. ஓ-இரங்குதற் பொருளில் வந்தது.

தமயந்தி ஓர் பாம்பினிடம் சேர்தல்.

288. வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால்
மோட்டு வயிற்றரவு முன்றேன்ற—மீட்டதனை
ஓரா தருகணைந்தா ளுண்டே னறற்கூந்தற்
போரார் விழியாள் புலர்ந்து.

[இ-ள்] (அவ்வாறு புலம்பி நடந்துகொண்டே போய்ப்பின்னர்) உண்தேன்-(மலர் மாலையிலிருக்கின்ற மதுவை) உண்ணுகின்ற வண்டுகள் மொய்க்கப்பெற்ற, அறல்-கருமணலை நிகர்த்த, கூந்தல்-குழலையும், போர் ஆர்-(காதணிகளோடு மோதச் செய்யும்படியான) போர்பொருந்திய, விழியாள்-கண்களையு முடையவளாகிய அத் தமயந்தி, புலர்ந்து-வாட்டமுற்று, பெரும் பசியால்-பெரிய பசியினுல், வேட்ட-தான் விரும்பின, கரியை-ஒரு யானையை, விழுங்கி-உட்கொண்டு, மோட்டு வயிற்று-பொருமி யிருக்கின்ற வயிற்றினை

யுடைய, அரவு-ஒரு மலைப் பாம்பானது, முன்தோன்ற-அவளுக் கெதிரில்வர, மீட்டு-திரும்பிப் பார்த்து, அதனை ஓராமல்-அதை அறியாமல், அருகு-அதன் பக்கத்தில், அணைந்தாள்-அவள் சேர்ந் தாள்; [எ-று.]

மேற்கூறியவாறு வருத்தத்தோடு தளர்ந்து சென்ற தமயந்தி தனக்கு முன்னே பசியினால் ஒரு யானையை விழுங்கி விட்டு வந்து கிடந்த ஒரு மலைப் பாம்பை யறியாதவளாய் அதன் சமீபத்திற் போய்ச் சேர்ந்தாள் என்பது இதன் கருத்து. அவள் தன்னிடம் அதிகரித்த துயரத்தால் புத்தி கலங்கி யிருந்தபடியால் அந்தப் பாம்பு தனக்கு முன்னே கிடந்தும் அதனைத் திரும்பிப் பார்த்து உணரக் கூடாதவளாயினாள். பாம்பு அவள் செல்லும் வழியில் அவளுக்கு முன்னே ஒரு பக்கமாகக் கிடந்தது; அவள் புத்தி மயக் கத்தால் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. அது குறித்தே ஆசிரியர், "மீட்டதனை ஓராதரு கணைந்தாள்" என்றார். "மோட்டு வயிற்றரவு கரியை விழுங்கி முன் தோன்ற" என்று அப்பாம்பின் பெரிய உருவத்தை விளக்கிக்காட்டி 'அதனையும் ஓராது சென்றாள் தமயந்தி" என்றதனால் அவளுடைய அறிவு அதிகமாகக் கலங்கிப் போயிருந்த தென்பது தானே அமையும்.

'உண்' என்பதற்கு முன், 'மலர் மாலையிலிருக்கின்ற மதுவை' என்னுஞ் சொற்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. 'உண்தேன்' என்பதற்கு 'அணியப்பட்ட மலரில் உள்ள வண்டுகள் உண்ணக்கூடிய மதுவையுடைய' என்று பொருள் கொண்டு, 'அத்த கைய தேன் தங்கி யிருக்கின்ற கூந்தல்' எனினும் பொருந்தும். 'தேன் அறற்கூந்தல்' என்பதற்கு, 'வண்டையும் கருமணலையும் நிகர்த்த கூந்தல்' எனவும் பொருளுரைக்கலாம்; கூந்தலின் உவமைப் பொருள்களுள் நிறம் பற்றி வண்டும் ஒன்றாம். கண்கள், காதணி களுக்கு நேராகப் புரண்டு பாய்தல் இயல்பு; அதனையே இங்குக் கண்களுக்குப் போராகக் குறித்தார் புலவர்; இனி, 'போரார்விழி' என்பதற்கு, 'ஆடவரோடு போர்புரியுங் கண்கள்' எனவும் பொரு ளுரைக்கலாம். ஆடவரோடு போர் செய்தலாவது, தங்கள் பார்வையின் விதத்தால் அவர்களைக் கலங்கச் செய்தலாம்; பெண் களின் பார்வையால் ஆடவர் காதல்கொண்டு மனக்கலக்க மடைதல் இயல்பு. வேட்ட-பெயரெச்சம்; இதில் வேள்-பகுதி அ-பெயரெச்ச விகுதி, ட்-இடைநிலை, ளகரம் டகரமானது சந்தி. மீண்டு என்பது வலித்தல் விகாரத்தால் மீட்டு என வந்தது; இதில், மீள்-பகுதி, உ-விகுதி, ட்-இடைநிலை, ளகரம் டகரமானதுசந்தி. விழுங்கி, தோன்ற, ஓராது என்பன வினையெச்சங்கள்; அததன் முற்றுக் களைத் தழுவின.

இதில் தமயந்தியை மலைப்பாம்பு விழுங்கியது கூறப்படுகின்றது.

289. அங்கண் விசும்பி னவிர்மதிமேற் சென்றடையும்
வெங்க ணரவுபோன் மெல்லியலைக்—கொங்கைக்கு
மேலெல்லாந் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாந் தீயுமிழும் பாம்பு.

[இ-ள்.] (அவ்வாறு தமயந்தி அப்பாம்பின் அருகிற் சேரவே) அம்-அழகிய, கண்-இடமகன்ற, விசும்பின்-ஆகாயத்தில், அவிர்-பிரகாசத்தால் விளங்குகின்ற, மதிமேல்-சந்திரன்மீது, சென்று அடையும்-போய்ச் சேர்ந்து அதனை விழுங்குகின்ற, வெம்-வெவ்விதாகிய, கண்-கண்களையுடைய, அரவுபோல்-இராகுவென்னும் பாம்பைப் போல, வெம்கானில்-வெப்பம் பொருந்திய அக்காட்டிலே, பால் எல்லாம்-தான் செல்லும் பக்கங்களிலெல்லாம், தீ உமிழும்-விஷாக்கினியைக் கக்குகின்ற, பாம்பு-அந்த மலைப்பாம்பானது, மெல் இயலை-மெல்லிய தன்மையையுடைய அத்தமயந்தியை, கொங்கைக்குமேல் எல்லாம்-தனங்களுக்கு மேற்பட்ட பாகங்களெல்லாம், தோன்ற-வெளியில் தெரியும்படி, விழுங்கியது-உட்கொண்டது; [எ-று.]

தமயந்தி முன்னே கிடந்த மலைப் பாம்பை அறியாமல் அதன் சமீபத்திற் சேரவே, அது அவளுடைய தனங்களுக்கு மேற்பட்ட அவயவங்களெல்லாம் தெரியவும் அவற்றிற்குக் கீழ்ப்பட்ட பாகங்களெல்லாம் உட்செல்லவும் அவளை விழுங்கிற்றென்பது இதன் கருத்து. பாம்பு முதலிய பிராணிகள் மற்றப்பிராணிகளைப்பிடித்து விழுங்கும் போது அவற்றின் பாதிப் பாகத்தை மாத்திரம் முதலிற் பற்றிக்கொண்டு பின்பு சிறிது சிறிதாக அவற்றின் வலியொடுங்கிய பின் மற்றப் பாகத்தையும் உட்கொள்ளுதல் இயற்கை. பிடிக்கும் பொழுதே அவற்றின் முழுப்பாகத்தையும் விழுங்கிவிட்டால் அவைகள் உயிருடன் தம் வயிற்றிற்குட் செல்வதால் அவற்றின் மூலம் தமக்கு உபத்திரவ முண்டாகு மென்பது இத்தகைய பிராணிகட்குத் தெரியும். ஆதலின், இப்பாம்பும் தமயந்தியை அவ்வாறு பற்றியது. இராகு சிலசமயங்களில் சந்திரனுடைய முழுப்பாகத்தையும் விழுங்குவதா யிருந்தாலும் பெரும் பான்மையும் அரைப் பாகத்தையேயா அதற்குக் குறைந்த பாகங்களையேயா தான் விழுங்கும்; ஆதலின், அது போலவே இங்குத் தமயந்தியின் பாதிப்பாகத்தை விழுங்கிய மலைப் பாம்பின் செய்கையை அந்த இராகுவினுடைய செய்கைக்கு இணையாகக் கூறினார் புலவர். இராகு மலைப் பாம்பிற்கும், சந்திரன் தமயந்திக்கும் உவமைகளாம்; தமயந்தி

யின் தேக நிறம் சந்திரனைப்போன்று பிரகாசிப்பதாதலின் அவளை அதற்குவமையாகக் கூறியது மிகவும் பொருத்த முடைத்தென்க.

அவிர்மதி - வினைத்தொகை. மெல்லியல் - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. விழுங்கியது-அஃறிணை யொன்றன்பாற்படர்க்கை வினைமுற்று; இதில், விழுங்கு - பகுதி, இன் - இடைநிலை; இதன் ஈற்று னகரம் கெட்டது, அ- சாரியை, து-விகுதி, ய்-உடம்படுமெய்; இடைநிலை ஈறுகெடாத போது அச்சாரியை வராது; உதாரணம்: விழுங்கிற்று; இவ்விடை நிலை முதல் கெட்டு வருதலு முண்டு; உதாரணம்: போனான். பால்-ஏழாம் வேற்றுமை யிடப்பொருளில் வந்த சொல்லுருபாகவும் கொள்ளப்படும்.

பாம்பு விழுங்கியவுடன் தமயந்தி நளனைக்
கூவிப் புலம்புதல்.

290. வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளால்
விலக்காயோ வென்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்றா ளெடுத்து.

[இ-ள்.] (அவ்வாறு மலைப்பாம்பு விழுங்கிய வுடனே) இங்கு-இவ்வனத்தில், வெம் அரவின் வாய்க்கு-வெவ்விதாகிய அம்மலைப் பாம்பின் வாய்க்கு, இலக்கு ஆகிநின்றாள்-பற்றும் இலக்கியமாகி நின்றவளாகிய அத்தமயந்தி, (அதாவது: பாம்பினால் விழுங்கப் பட்ட தமயந்தியானவள்,) மன்னவ-என் கணவனாகிய அரசனே!, (நான்) வாள் அரவின்-வாள்போல் என்னைச் சேதிக்கும் இப்பாம்பி னுடைய, வாய்ப்பட்டு-வாயில் அகப்பட்டு, மாயாமுன்-இறவாத தற்கு முன்னமே, நின் தாள் அடைந்து-உன்னுடைய பாதங்களைச் சேர்ந்து, வாழும்-ஜீவிக்கத்தக்க, தமியேனை-துணையற்ற என்னை, (நீ வந்து) தோளால்-உன்னுடைய புயவல்லமையினாலே, விலக்கா யோ-இப்பாம்பின் வாயினின்றும் நீக்கிக் காக்கமாட்டாயோ, என்று-என்று சொல்லி, எடுத்து-குரலை உயர்த்தி, அழுதாள்-அழுது புலம் புவாளானாள்; [எ-று.]

பாம்பின் வாய்ப்பட்டவுடனே தமயந்தி தன்னைக் காப்பவர் அங்கெவருமில்லையாதலின், தன் கணவனாகிய நளனையே கூவி யழைத்து 'நீ என்னை இவ்வாபத்தினின்றும் நீக்கிக்காக்கமாட்டாயா' என்று அழுதாள் என்பது இதன் கருத்து. பெண்களை ஆபத்துக் காலத்தில் காப்பவர் புருஷரே ஆதலின், இங்குத் தமயந்தி இச்சம யத்தில் தன்னைக் காக்க வருமாறு தன் நாயகனையே கூவியழைத்

தாள். பதிவிரதைகள் எந்த ஆபத்திலும் தம் கணவரையே நினைத்தல் முறைமையாதலின் நளன் தன்னை விட்டுப்பிரிந்து போயிருந்தும் இவள் அவனை நினைத்துக் கூவியழைத்தாள். ஆபத்துக்குள்ளான வர்கள் இன்னது கூறுவதென்றுணராமல் அச்சமயத்தில் ஆகாத காரியங்களையும் பதறிக்கூறுதல் இயற்கை யாதலின், இவளும் கலக்கத்தால் சமீபத்திலில்லாத நளனைப் பக்கத்திலிருப்பதாக நினைத்து இவ்வாறு கூறினாள் எனினும் பொருந்தும். இவ்வாறு கூறுவதிலும் கணவனையே இவள் நினைத்துக் கூறினாளாதலின் இவளிடத்துக் கற்பிலக்கணம் அமைந்ததென்பது பெறப்படும். இப்பொழுது அரவு தன் பாதிப் பாகத்தை விழுங்கியிருப்பினும் முழுப்பாகமும் உட்சென்ற பிறகே உயிர்போகுமாதலின் அவ்வாறு மடிவதற்கு முன், வருவாயென்பது தோன்ற, இவள், "வாய்ப்பட்டுமாயாமுன்" என்றாள்; இவ்விடத்தில், 'வாய்ப்பட்டு' என்பதற்கு 'என்னுடைய முழுத்தேகமும் வாய்க்குளகப்பட்டு' என்று பொருள் கொள்ள வேண்டும். தமயந்தி எப்பொழுதும் நளன் பாதத்தைச் சேர்ந்து வாழக்கூடியவளாயிருந்தும் இப்பொழுது தனிப்பட்டுப் போயினாளாதலின், "நான் நின்பாதத்தைச்சார்ந்து வாழக்கூடியவளாயிருந்தும் இப்பொழுது தனிப்பட்டு வருந்துகின்றேன்; ஆதலின் இத்தருணத்தில் வந்து நீ என்னைக் காப்பாற்றவேண்டும்' என்பது தோன்ற, "நின்தாளடைந்து வாழும் தமியனை" என்றாள். ஆடவர் தோள் வலிமையினாலேயே எதையும் செய்யக்கூடியவர்களாதலின், 'தோளால் விலக்காயோ' எனவும் கூறினாள்.

'வாளரவு' என்பதற்குப் 'பிரகாசம் பொருந்திய பாம்பு' எனப் பொருள் கோடலுமொன்று; பாம்புகளின் உடம்பில் ஒருவகை மினுமினுப்புத்தோன்றுதல் இயற்கை. தமி-தனிமை, விலக்காயோ என்பதில் ஓ-வினாப்பொருளில் வந்தது; இரங்குதற் பொருளில் வந்ததெனலுமாம். வெவ்வரவு என்பதில் வெம்மை, மையீறுகெட்டு மகரவொற்று வகரவொற்றாகத் திரிந்து நின்றது. இலக்கு-குறியிடம்; அதாவது: ஒன்றைச் சாரவைக்குமிடம்; இங்குத் தமயந்தி பாம்பின் வாய் சேர்தற்கிடமாயினளாதலின் அவளை 'வாய்க்கு இலக்காகி நின்றாள்' 'வாளரவின் வாய்ப்பட்டு'என்றார் ஆசிரியர். வாய்ப்பட்டு-வாயிற்பட்டு; ஏழாம் வேற்றுமைத் தொகை. தமியேன் என்பதில், ஏன்-ஒருமைத் தன்மை விகுதி.

இதுவுமது.

291. வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் தேர்வேந்தே என்றாள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து.

[இ-ள்.] (மேலும்) பொரும்முகம்-போர்செய்கின்ற கூரியமுகமுள்ள, வேல்-வேலாயுதத்தை நிகர்த்த, கண்ணாள்-கண்களையுடையவளாகிய அத்தமயந்தி, புலர்ந்து-கலக்கத்தால்வாடி, தேர்வேந்தே-இரதத்தையுடைய அரசனே!, வென்றி-வெற்றியையுடைய, சினம்-கோபம் பொருந்திய, அரவின்-இந்தப் பாம்பினுடைய, வெவ்வாய் இடைப்பட்டு-வெவ்விய வாயினிடத்தே சிக்கி, வன்துயரால்-வலிய துன்பத்தினாலே, ஆவிபோய்-பிராணன்நீங்கி, மாள்கின்றேன்-இறக்கின்றவளாகிய நான், இன்று-அப்படியிறக்கும் இப்பொழுது, உன்-உன்னுடைய, திருமுகம்-அழகியமுகத்தை, காண்கிலேன்-காணாதிருக்கின்றேன், என்றாள்-என்றுகூறியும் புலம்பினாள்; [எ-று.]

தனக்கு உயிர்போகும் தருணமாயிருந்த படியால் தமயந்தி 'இச்சமயத்திலேனும் நமது நாயகர் வந்து அவருடைய முகதரிசனத்தை நமக்குக் காட்டமாட்டாரா' என்று மிக ஆவலோடு நினைத்தபடியால், "போயாவி மாள்கின்றேன், இன்றுன் திருமுக நான் காண்கிலேன்" என்றாள். அவள் அச்சமயத்தில் இறவாதிருந்தும் சிறிதுநேரத்திற்குள் உயிர்போய்விடும் என்னுந் துணிவுபற்றி அப்பொழுதே இறப்பதாக 'மாள்கின்றேன்' என்று நிகழ் காலத்தாற் கூறினாள். தமயந்திஇவ்வாறு கூறியதனால், நளனை, "நீவந்து என்னைக் காவாவிடினும் நின்திருமுக தரிசனமாவது காட்டமாட்டாயா?" என்று வினவினாளென்பது குறிப்பாலேற்படும். பாம்புக்கு வென்றியாவது தன்னைத் தடுப்பாரின்றித் தான் அச்சமயத்தில் தமயந்தியைப் பிடித்து விழுங்குதலாம்.

இடை-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. மாள்கின்றேன் - வினையாலணையும் பெயர்; வினைமுற்றெனினுமாம். நான்-தன்மை யொருமைப்பெயர். பொரும்முகம்-வினைத்தொகை. காண்கிலேன்-தன்மை யொருமை வினைமுற்று. இதில் காண்-பகுதி, ஏன்-தன்மை யொருமைவிகுதி, கில்-ஆற்றற்பொருண்மையை யுணர்த்தும் விகுதி; இதுமுதற்பகுதியோடு சேர அனைத்துமொருபகுதியாம்; எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது, 'கில்' என்பதை கு-இல் எனப் பிரித்துக் கு-சாரியை என்றும், இல்-எதிர்மறையைக் குறிக்கும் பண்படி யென்றும் கொள்ளலாம். என்றாள்-சொல்லெச்சம்.

தமயந்தி தன்பிள்ளைகளை நினைத்து விளித்து
அவரிடம் நீரேனும் நம் தந்தையைக் காண்பீரோ
என்று வினவி வருந்துதல்.

292. மற்றெடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகுங்—கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ வென்றழுதாள் நீள்குழற்குக்
காரேனு மொவ்வாள் கலுழ்ந்து.

[இ-ள்.] (பின்னரும் தன்மக்களை விளித்து) நீள் குழற்கு-தன்னுடைய நீட்சிபெற்ற கூந்தலின்சிறந்திற்கு, காரேனும்-மேகமாயிருந்தாலும், ஒவ்வாள்-சமத்துவமாகப் பெறுதவளாகிய தமயந்தி, கலுழ்ந்து-கலங்கி, மல் தொடுத்த தோள்-மல்யுத்தம்பொருந்தியநளமகாராஜனதுதோளை; பிரிந்தும்-நீங்கியும், மாயாத- இறந்துபோகாமலிருக்கின்ற, வல்வினையேன்-வலிமையாகிய பாவவினையுடையநான், பெற்றுஎடுத்த-ஈன்று கையிலேந்திய, மக்காள்-பிள்ளைகளே! பிரிந்து ஏகும்- (என்னை இந்தரூபத்தில் சிக்கவைத்துவிட்டு) நீங்கிச்செல்கின்ற, கொற்றவனை-மன்னனை, நீர் ஏனும்-நீங்களாயினும், காண்குதிரோ-பார்ப்பீர்களோ, என்று அழுதாள்-என்று கூறிப் புலம்பினாள்; [எ-று.]

தமயந்தி,சாகுந்தறுவாயிலிருந்ததால்,"ஐயோ! நாம்இறந்துவிடப் போகின்றோமே, நாயகரும் எங்கோ சென்றனரே; இனி நம்மக்களை ஆதரிப்பாரெவர்? ஒருவாறு நம்நாதர் அவர்களிடம்சேர்ந்தால் அவர்களை ஆதரித்துக்கொள்வார்; அப்படி அவர் ஆதரிக்கும்படி நம் பிள்ளைகள் அவரைப் பார்த்தனரோ பார்க்க வில்லையோ" என்று மக்களைப்பற்றிய ஞாபகத்தையும் துயரத்தையும் அடைந்தபடியால் மக்களை மனத்தால் நோக்கிவிளித்து "நீரேனும் காண்குதிரோ?" என்று வினவிப் புலம்பினாள். பதிவிரதைகளுக்குப் பதியே சிறந்தவனாதலின், தமயந்தி முதலில் நாயகனை நினைத்துப் புலம்பிப் பின்னர்ப் பிள்ளைகளை நினைத்து வருந்தினாள். கற்புடையமங்கையர் நாதனைப்பிரிந்த மாத்திரத்தில் அத்துயரத்தால் உயிர் துறக்கவேண்டும்; தமயந்தி அங்ஙனம் மாளாதிருந்தமையால்,"தோள் பிரிந்தும்மாயாதவல்வினையேன்" என்று தன்னைத்தானே நிந்தித்துக் கூறிக்கொண்டாள். தமயந்தி நளனைப் பிரிந்தவுடனேயே இறக்கவேண்டியவளாயிருந்தாலும், ஏதேனும் நல்வினையிருந்தால் ஒரு சமயம் அவனைப் பார்த்தல் கூடுமென்றும், தன் பிள்ளைகளுக்கு ஆதரவில்லையென்றும் நினைத்து மரணமடையாமலிருந்தாள்; அப்படியிருந்தும் இறத்தலே சிறப்பென்பது தோன்ற இங்ஙனம் கூறினாள்.

மக்காள் என்பதில் ஈற்றயல் ஆகாரம் விளியுருபு. ஏகும்-பெயரெச்சம். 'மற்றொடுத்த தோள்' என்பதை அன்மொழித் தொகையாகக் கொண்டு அரசனுக்குக் கூறினும் பொருந்தும்; ஏன்-ஒருவகை யிடைச் சொல்; இஃதும்மையோடு கூடியேவரும். 'காரேனும் என்பதிலுள்ள உம்மை-சிறப்புப்பொருளது; 'நீரேனும்' என்பதிலுள்ளது விகற்பப்பொருளது; இது பிரிநிலைப் பொருளில் வந்ததாகவும் கொள்ளப்படும்; காண்குதிரோ-எதிர் கால வினை; இதில் கு-சாரியை; இது உகரச் சாரியை பெற்றுக் காணுதிர் எனவும் வரும். கொற்றவன்-வெற்றியை உடையவன்; கொற்றம்-வெற்றி.

தமயந்தி, தான் இறந்துபோகப் போகிறதாக நிச்சயித்து நாயகனுக்கு வணக்கஞ் செய்தல்.

293. அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே ஓகோ—விடையெனக்குத்
தந்தருள்வா யென்றுதன் றாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து.

[இ-ள்.] (அவ்வாறு கூறி அதன் மேலும்) செம்துவர்-சிவந்த பவளம் போன்ற, வாய்-வாயையும், மெல் மொழியாள்-மிருதுவான வசனங்களையு முடையவளாகிய அத்தமயந்தி, தேர்ந்து-தான் எவ் வகையிலும் மரணத்தினின்றும் மீளமுடியா தென்பதை உணர்ந்து, (இனி நமக்கு நற்கதிகிடைக்கும் பொருட்டு நாயகரை வணங்கிக் கொள்வோம் என்று துணிந்து தன் கணவனை மனத்திற் றியானித்து) அடையும்-நான் சேர்ந்த, கடும் கானில்-கடுமை பொருந்திய காட்டில், ஆடு-ஆடுகின்ற, அரவின் வாய்ப்பட்டு-பாம் பின் வாயிற் சிக்க, உடையும்-சிதைந்து இப்பொழுது என் தேகத்தை விட்டு நீங்கிச் செல்கின்ற, உயிர்-எனதுயிர்க்கு, நாய கனே-நாதனே, ஓகோ-ஐயோ! எனக்கு விடைதந்து அருள்வாய்- நான் இவ்வுலகத்தை விட்டுச்செல்லுதற்கு எனக்கு உத்தரவு கொடுத்தருள்வாயாக, என்று-என்று சொல்லி, தன்-தன்னுடைய, தாமரைக்கை-தாமரை மலர் போன்ற கரங்களை, கூப்பினாள்- குவித்து அவனுக்கு வணக்கஞ் செய்தாள்; [எ-று.]

தான் (தமயந்தி) இறந்து போவதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டபடியால் தமயந்தி தன் நாயகனுக்கு வணக்கம் செய்து அவனிடம் விடைபெற்றுக்கொள்ளக் கருதி இவ்வாறு கூறிக் கை கூப்பினாள். பதிவிரதைகள் உயிர் நீங்குங்காலத்திலும் நாயகனையே தெய்வமாகக் கருதி வணங்கிச்செல்லுதல் கற்பிலக்கண மாதலின் தமயந்தியும் இவ்வாறு செய்தாளென்க. அப்பொழுது அவ ளுடைய உயிர் பாம்பினால் மிக்க வாதனையடைந்து தேகத்தைவிட்டு நீங்கிச் செல்ல ஆபத்தமா யிருந்தது; ஆதலின், அவள், 'அரவின் வாய்ப்பட்டு உடையுமுயிர்' என்றும், அவ்வுயிரை எப்பொழுதும் காக்கக்கூடியவன் நளனே யாதலின் அவனை 'உயிர் நாயகனே' என்றுங் கூறினாள்.

ஓகோ-இரங்கற் குறிப்பிடைச் சொல். தாமரை-முதலாகு பெயராய் அதன் மலரை உணர்த்திற்று. கடுங்கான்-உரிச்சொற் றொடரென் பினுமாம்.

பாம்பின் வாயிற்பட்டு வருந்தும் தமயந்தியை ஒரு வேடன் பார்த்தான்.

294. உண்டோ ரழுதரலென் றேற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்

கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயின்
முழுகுவா டெய்வ முகம்.

(இ-ள்.) (அவ்வாறு தமயந்தி கை கூப்பிப் புலம்புந் தருணத்தில் அவளுடைய அழுகுரலைக் கேட்டு அவளிருக்கும் திசையை நோக்கி, (அங்ஙனம்) ஓர் அழுகுரல்-(இவ்வனத்தில் ஒருபெண் தனிப்பட்டு) அழுகின்ற ஒரு குரலோசையானது, உண்டு என்று-ஏற்பட்டிருக்கின்ற தென்று, ஒற்றி-நெருங்கி, வருகின்ற-வருகின்றவனும், வெள் தோடன்-தந்தத்தாற் செய்யப்பட்ட வெண்மையாகிய குண்டல மென்னும் காதணியையுடையவனும், செம்பங்கி-செம்பட்ட மயிருள்ளவனும், வில்-கரத்தில் வில்லைத் தரித்தவனும், (ஆகிய) வேடன்-அவ்வேடனானவன், கழுகுவாழ்-கழுகுகள் வாழுகின்ற, கானகத்து-அக்காட்டில், கார்-கரிய, அரவின்-பாம்பினுடைய, வாயின்-வாயிலே, முழுகுவாள்-அமிழ்கின்ற அத்தமயந்தியின், தெய்வமுகம் - தெய்வத்தன்மை பொருந்திய முகத்தை, கண்டான்-பார்த்தான்; [எ-று.]

தமயந்தி மேற்கூறியபடி பாம்பின் வாயிலிருந்து புலம்பும் தருணத்தில் வேட்டையின் பொருட்டு அக்காட்டிற்குள் வந்த வேடன் ஒருவன் அவ்வழுகைக் குரலைக்கேட்டு 'இஃதேது இங்கே ஒற்றை யழுகுரல் கேட்கின்றது,' என்றதிசயித்து அக்குரல் வந்தவழியே சென்று தமயந்தியைக் கண்டான். நற்குணமுடையார்க்கு எத்தகைய ஆபத்தும் விலகுதல் இயற்கையாதலின், மகா உத்தமியாகிய தமயந்தியின் ஆபத்து நீங்குதற்கு ஆங்கு வேடன் வருகை ஏற்பட்டது. அவள் முன் ஜன்மத்திற் செய்த ஏதோசிறிது தீவினையால் அவளைப்பாம்பு விழுங்கிற்று; எனினும் இப்பிறப்பில் அவள் நன்மையையே புரிபவளாயிருந்தபடியால் அத்துன்பம் நீங்குதற்கேதுவுண்டாயிற்று. இனி அவளைப் பாம்பு விழுங்கியது கலியின் வஞ்சனையால் ஏற்பட்ட தெனவுங் கூறலாம் அங்ஙனமாயின் அத்துன்பம் நீங்குதற் கேதுவுண்டாகாதே யெனின், கலிக்கு, நளனையும் தமயந்தியையும் உயிருடன் வைத்துக்கொண்டே வருத்த வேண்டு மென்னும் எண்ணம் ஏற்பட்டதாலும், அவர்களை அடியோடு அழித்துவிட வேண்டுமென்னும் எண்ணம் இல்லை யாதலாலும் தமயந்திக்குத் துன்பத்தை ஏற்படுத்திய அவன் உடனே நிவர்த்தி மார்க்கத்தையும் ஏற்படுத்தினான்; அதனால் இவ்வேது உண்டாயிற் றென்க. இங்ஙனமே பின் நிகழும் ஒவ்வொன்றும் நடைபெறுவதால் இது துணியப்படும்.

'ஒற்றிவருகின்ற' என்பதற்கு 'மறைந்து மறைந்து வருகின்ற' எனவும் பொருளுரைக்கலாம்; ஒன்றுதல்-மறைதல்; வேடர் மிருகங்களைக் கொல்வதற்குக் காட்டில் பதுங்கிப் பதுங்கி அவற்றி னுறை

விடங்களைப் பார்த்துக் கொண்டு வருதல் இயல்பு. யானைத்தந்தம், வேறுவகை எலும்புகள் முதலிய வற்றால் வேடர் ஆபரணங்களைச் செய்து அணிந்துகொள்வது இயற்கை; ஆதலின், அவனை, 'வெண் டோடன்' என்றார் புலவர். தமயந்தியின் முகத்திற்குத் தெய்வத்தன் மையாவது தேவரில் ஒருவனாகிய சந்திரனுடைய தேஜஸைப் பெற் றிருத்தலாம். தோடன்-குறிப்பு வினையாலணையும் பெயர்.

தமயந்தி தன்னைப் பாம்பின் வாயினின்றும்
விடுவிக்கும்படி வேடனை வேண்டுதல்.

295. வெய்ய அரவின் விடவாயி னுட்பட்டேன்
ஐயன்மீ ருங்கட் கபயம்யான்—உய்ய
அருளீரோ வென்று வரற்றினா ளஞ்சி
இருளீரும் பூணா ளெடுத்து.

[இ-ள்.] (அவ்வாறு வேடன் அங்கே வந்தவுடன் அவனைப் பார்த்து) இருள்-இருட்டை, ஈரும்-பிளந்துநீக்குகின்ற, பூணாள்-ஆபரணங்களை அணிந்தவளாகிய தமயந்தி, அஞ்சி- (தன்உயிர் நீங் குவதற்குப்) பயந்து, வெய்ய-வெவ்விதாகிய, அரவின் - பாம்பினு டைய, விடவாயினுள்-விஷம்பொருந்திய வாய்க்குள்ளே, பட் டேன்-சிக்கினேன், (இப்பொழுது என்னைக் காப்பாரெவருமில்லை; ஆதலின்) ஐயன்மீர்-ஐயன்மாரே!, யான்-நான், உங்கட்கு-உங்களுக் கு, அபயம்-அடைக்கலமாகின்றேன், உய்ய-(இத்தகையவள்)பிழைக் கும்படி, அருளீரோ-கிருபைசெய்யமாட்டீர்களா?, என்று-என்று, எடுத்து-குரலை உயர்த்தி, அரற்றினாள்-கதறினாள்; [எ-று.]

நிச்சயமாக உயிர்நீங்கிவிடப் போகின்றதென்று நினைத்து நாய கனுக்கு வணக்கஞ்செய்த தமயந்தி,வேடனைக்கண்டவுடன், 'நீ என் னைக் காப்பாற்று' என்று வேண்டினாள் என்பது இதன்கருத்து. பதி விரதைகள் எத்தருணத்திலும் தம் நாயகரைத் தவிர மற்றவர் உத வியை விரும்பாதவர்களெனினும், ஏதேனும் ஓர் ஆபத்து நேர்ந்த சமயத்தில், தம் நாயகர் இல்லாவிடின், எதிர்ப்பட்டவரை அவ்வா பத்தை நீக்கும்படி வேண்டுதல் உலக வியற்கை யாதலின், அவ்வி யற்கைப்படி இங்குத் தமயந்தியும் வேடனை வேண்டினாள். பதிவிர தைகள் தம் நாயகரைப் பிரிந்தகாலத்தில் உயிரைப் பெரிதாக நினை யாமல் இறக்கவேண்டியது நியாயமாயிருக்க, இவள் உயிர் போவதற் கஞ்சி இங்ஙனம் வேடனைத் துணை செய்யுமாறு வேண்டல் நியாயமா குமோ வெனின் நளன் உயிருடனேயே பிரிந்து சென்றானாதலினா லும்,மீண்டும் அவனைக்காணுதல் கூடுமென்றஎண்ணம் இவளுக்கிருந் தமையாலும், நளன் பின்னொரு காலத்தில் தன்னைத் தேடிக்காண வரும் பக்ஷத்தில் தான் இறந்ததை யுணர்ந்தால் அவனும் உயிர்விடு வானென்ற எண்ணம் உண்டானமையாலும் அதனால் தான்,உயிருட

னிருந்து அவனைக் காணுதலே நலமென்று தோற்றியபடியானும், 'நாம் இப்பொழுது எப்படியேனும் உயிரைக் காபாற்றிக் கொள்ள வேண்டும்; நாம் நாதனைக் காணாவிடில் பின்னர் வேண்டுமானால் உயிர்விடத் துணியலாம்' என்று இவ்வாறு தன் உயிர்போவதற் கஞ்சித் தனக்குத் துணை செய்யுமாறு வேடனை வேண்டினாளென்க. எனினும் ஸ்திரீகள் தனிப்பட்ட சமயத்தில் அன்னியனுடைய உதவியை விரும்புவதில் நன்மை யுமுண்டு, தீமையுமுண்டு; உதவிசெய்வோர் நல்லோராயின் நன்மையுண்டாகும், தீயோராயின் தீமையுண்டாகும் தமயந்தியால் வேண்டப்பட்ட வேடன் தீயோனாதலின் தீமையே செய்யத்துணிந்தான்; ஆயினும் தமயந்தியின் கற்பின் மகிமையால் அது உடனே நீங்கிற்று; அது பின்வரும். இதனால் ஸ்திரீகள் தனிப்பட்ட சமயத்தில் அன்னிய ஆடவனுடைய உதவியை விரும்பலாகாதென்பதும், அப்படி ஒருசமயம் விரும்பினாலும் நல்லோரென்று துணியப்பட்டவரிடமே உதவி பெறவேண்டு மென்பதும் உணரப்படும்.

'ஐயன்' என்பது 'ஆர்யன்' என்னும் சொற்றிரிபு; 'ஆர்யன்' என்பதற்கு, 'மரியாதை செய்யத்தக்கவன்' என்பது பொருள். வேடன் ஒருவனை 'ஐயன்மீர்' எனப் பன்மையாகக் கூறியது, உயர்வினால் ஒருமையிற் பன்மை வந்த பால்வழுவமைதி "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை யிழுக்கினு மியல்பே" என்பது (நன்-பொ-28) ஆம் சூத்திரம். "அன் ஆன்" (நன்-பத-13) என்னும் சூத்திரத்தில் கூறப்பட்ட விகுதிகளை,"பெயரினுஞ் சிலவே" என்று கூறியதனால் 'ஐயன்' என்னுஞ் சொல்லின் மேல் பலர்பாலுக்கு, மார்விகுதி வந்தது. "ரவ்வீற்றுயர்பெயர்க்களபெறல்" (நன்-பொ-52) என்னும் சூத்திரத்தில் "ஆண்டையா ஈஆதல்" என்றதால் ஈற்றயல் ஆகாரம் விளியில் ஈகாரமாயிற்று.

வேடன் தமயந்தியைப் பாம்பின் வாயினின்றும் வெளிப்படுத்துதல்.

296. சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலக மீட்டாற்போல்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு.

[இ-ள்.] (அவ்வாறு தமயந்தி வேண்டியவுடனே) சங்கநிதி போல்-சங்கவடிவமாகிய குபேர நிதியைப்போல, தரு-கொடுக்கின்ற, சந்திரன் சுவர்க்கி-சந்திரன் சுவர்க்கி யென்பவன், உலகம்-உலகத்தை, வெம்கலிவாய் நின்று - வெப்பமான கேட்டினிடத்திலிருந்து, மீட்டாற் போல்-மீட்டதைப்போல, பகைகடிந்த-சத்துருவைக் கோபித்து வருத்தி நீக்கிய, காம்பின்-மூங்கிலினாலே, வாய்-

அமைந்த, (அதாவது செய்யப்பட்ட) வில்-வில்லை யுடைய, வேடன்-வேடுவன், கண்டு-தமயந்தியைப் பார்த்து, மங்கையை-அத் தமயந்தியாகிய பெண்ணை, வெம்-கொடுமையாகிய, பாம்பின் வாய் நின்று-பாம்பின் வாயினிடத்திலிருந்து, பறித்தான்-வெளிப் படுத்தினன்; [எ-று.]

தமயந்தி மேற்கூறியவாறு வேண்டவே வேடன் அவளுடைய ஆபத்தான நிலைமையை யுணர்ந்து உடனே அவளை அப்பாம்பின் வாயினின்றும் மீட்டான்; இங்ஙனம் கூறியதனால் அவன் அப்பாம் பைக் கொன்று அதன் வாயைப் பிளந்து தமயந்தியை அதனின்றும் வெளிப்படுத்தின னென்பது வருவித்துப் பொருள்கொள்ளத் தக்க தாகப் பெறப்படும் இதனை,

"போங்கழல்வெங் கானகத்துப் பூவை யழுங்குரல்கேட்
டங்கோர் சிலைக்கை யடல்வேடன் வந்தணுகி
வெங்க ணரவெறிந்து வெவ்வா யிடைநின்றுங்
கோங்கவிழ மென்கூந்தற் கோதைதனை நீக்கினனால்"

என்பதனால் உணர்க. பறித்தான் என்பதற்குப் 'பிடுங்கினன்' என் பது நேர் பொருள்; அதாவது ஒருவன் ஓரிடத்திலுள்ள பொருளைக் கையாற்பற்றி இழுத்துப் பற்றுதலாம்; எனினும் இஃதிங்கே வெளிப்படுத்துதலாகிய பொருளில் நின்றது; சிலர், பறித்தான் என் பதற்கு வேடன், தமயந்தியைப் பாம்பின் வாயினின்றும் இழுத்து வெளியிற் போட்டான், என்று பொருள் கூறுவர்; ஒரு பெரிய மலைப்பாம்பு தனக்கு இரையாக வாயிற் பற்றிய ஒரு பொருளை அஃதுயிருடன் இருக்கும்போதே அதன் வாயினின்றும் பறித்து வெளிப்படுத்துதல் ஒரு மனிதனால் இயலாததாதலாலும், பதிவிரதை யாகிய ஓர் இராஜஸ்திரீயை, இழிந்த வேடன் தீண்டுதல் அசம்பா வித மாதலாலும் அவ்வுரை பொருந்தாமையை யுணர்க. ஆசிரியர் சந்திரன் சுவர்க்கியை இந்நூலில் பலவிடங்களில் புகழ்வதுபோலவே இதிலும் புகழ்ந்தார். சந்திரன் சுவர்க்கி யென்பவன் தன்னால் ஆளப்பட்ட நாட்டில் வந்த பஞ்சம் முதலிய துன்பங்களை நீக்கி அந் நாட்டிலுள்ளவர்களைப் பாதுகாத்தான் ஆதலின், அச்செய்கை இங்குப் பாம்பின் வாயினின்றும் தமயந்தியை மீட்ட வேடன் செய் கைக்கு உவமையாகக் கூறப்பட்டது.

சங்கநிதி-குபேரனுடைய இரு நிதிகளிலொன்று; சங்கவடிவமா னது; தன்னிடம் வருவார் விரும்பியவற்றை யெல்லாம் கொடுக்கத் தக்கது. கலி-சனி; இவன் மிகுதியும் கெடுதியைச் செய்பவனாதலின் இவனுடைய இப்பெயர் ஆகுபெயராய் அக்கேட்டை யுணர்த்திற்று. வாய்-வாய்த்த வென்னும் பெயரெச்சந் திரிந்த வினைத்தொகை.

வாய் நின்று-ஐந்தாம் வேற்றுமை விரி; இதில் இன் உருபு தொக்கிச் சொல்லுருபு மட்டும் விரிந்து நின்றது; நின்று என்னும் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு நீக்கப் பொருளில் வந்தது.

தமயந்தி வேடனுக்கு நன்றி கூறல்.

297. ஆருயிரு நானு மழியாம லையாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றான் பெற்ற விளக்கு.

(இ-ள்) (அவ்வாறு பாம்பின் வாயினின்றும் வெளிப்பட்டவுடனே தனக்குதவி செய்த வேடன் மீது நன்றியுள்ளவளாய் அவனை நோக்கி) வென்றி-வெற்றி பொருந்திய, விதர்ப்பன்-விதர்ப்ப தேசத்துக்கதிபதியாகிய வீமராஜன், பெற்ற-புத்திரியாக அடைந்த, விளக்கு-தீபத்தைப்போல் புகழினால் பிரகாசிப்பவளாகிய தமயந்தியானவள், ஐயா-ஐயனே!, ஆர் உயிரும் நானும்-அருமையான பிராணனும் என் உடலும், அழியாமல்-அழிந்து போகமல், இப்பேரரவின்-இந்தப் பெரிய பாம்பினுடைய, வாயில்-வாயினின்றும் நீக்கி, பிழைப்பித்தாய்-என்னைப் பிழைக்கும்படி செய்தாய், தேரில்-ஆராயுமிடத்தில், இதற்கு-நீ செய்த இவ்வுதவிக்கு, கைம்மாறு-பிரதியுபகாரம், உண்டோ-உளதோ, (இல்லை) என உரைத்தாள்-என்று சொன்னாள்; [எ-று.]

உலகத்தில் ஒரு நன்மையான காரியத்தைச் செய்தவர்களை எவருங் கொண்டாடுதல் இயற்கையாதலின் இங்குத்தன் உயிரைக் காப்பாற்றிப் பெரிய நன்மையைச் செய்த வேடனைத் தமயந்தி இவ்வாறு புகழ்ந்தாள்.

கைம்மாறுதல் என்னுந் தொழிற் பெயரானது தல்லீறு கெட்டுக் கைம்மாறு என நின்றது; கை-உபகாரம், மாறு-மாறுதல், அதாவது உபகாரந்திரும்புதல் என்பதாம்; உபகாரம் திரும்புதலாவது ஒருவர் செய்த நன்றிக்குப் பிரதி நன்றி ஏற்படுவதாம். கைம்மாறு-செயப்படு பொருள் விகுதி தொக்கது எனினும் ஆம். (நன்-உயி-பு-8) ஆம் சூத்திரத்தில் "தனியைந்நொது முன்மெலி மிகலுமாம்" என்றதனால் கை-மாறு; கைம்மாறு என்பதாக மகரம் மிக்கது. தான்-அசை.

வேடன் தமயந்தியின் மீது கெட்ட சிந்தை
வைத்துக் கூறுதல்.

298. இந்து நுதலி யெழிலேக்கி யேதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடி நீ

போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றா னெடுத்து.

[இ-ள்.] (தமயந்தி அவ்வாறு வேடனைப் புகழ்ந்தவுடனே) இந்து-சந்திரன் போன்ற, நுதலி-நெற்றியை யுடையவளாகிய அத் தமயந்தியினது, எழில்-அழகை, நோக்கி-பார்த்து, புலை-ஈனமாகிய, நரகுக்கு-நரகத்துக்கு, ஏதுவாய்-காரணமாக, (அதாவது: நரகத்தையடைவதற் கேதுவாகிய பாபச் செய்கை தன்னிடத்தில் உண்டாக), நின்றான்-நின்றவனாகிய, சிலை-வில்லைத் தாங்கிய, வேடன்-அவ்வேடனானவன், தன் சிந்தை-தன்மனதில், ஏதோ கருதி-ஏதோ ஒன்றை நினைத்து, எடுத்து-தொனியை உயர்த்தி, பைந்தொடி-பசுமையாகிய வளையல்களை அணிந்த பெண்ணே!, நீ-, என்னுடனே-என்னோடு, போதுவாய்-வருவாயாக, என்றான்-என்று கூறினான்; [எ-று.]

தமயந்தி அவ்வாறு வேடனைப் புகழ்ந்து கூறினவுடனே அவன், தன் மீது அவள் அன்புடையவளா யிருக்கிறாளென்றும், அதனால் தான் விரும்பும் எதற்கும் இணங்குவாளென்றும் கருதினான். அக்கருத்துக் கொண்டதனால் அவளுடைய கற்பை அழிக்க விரும்பி அதன் பொருட்டு, 'நீ என்னுடன் வருவாயாக' என்று அவளை அழைத்தான். இதனால் அவன், தமயந்தியைப் பாம்பின் வாயினின்று மீட்டதும் இரக்கத்தால் ஏற்பட்ட தன்றென்பதும், மீட்டால் அவளை மணந்து கொள்ளலாமென்ற துர் எண்ணத்தாலேயே ஏற்பட்டதென்பதும் பெறப்படும். இவன் துராத்மாவாகையினாலே இவ்வாறு கருதினான். உத்தமர்கள், தனிப்பட்டு ஓராபத்திற் சிக்கிய பெண்களைக் காப்பாற்றினாலும் மேலும் அவர்கட்கு நன்மையே புரிய நாடுவர்; துர்த்தர்கள் அவ்வாறு காப்பாற்றும் போதும் கெட்ட எண்ணத்துடனேயே காப்பாற்றுவார்கள்; பின்னர், அவர்களைக் கற்பழிக்க நாடுவர்; அப்பெண்களின் கற்பழித்தலே தாங்கள் செய்த உதவிக்குப் பிரதியுபகாரமென்பது இவர்கள் கருத்து; இத்தகையினர்க்கு நரகம் சித்திப்பது திண்ணம். இதுபற்றியே ஆசிரியர் இவ்வேடனை, "புலை நரகுக் கேதுவாய் நின்றான்" என்றார். இவன் நினைத்த தீச்செயல் வாயினால் கூறத்தகாத தாதலின் அதனை, 'ஏதோ தன் சிந்தைகருதி' என்றார் புலவர். இங்ஙனம் கூறுதல் இடக்கரடக்கல் எனப்படும்.

பைந்தொடி-பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; இதில் பசுமையென்னும் பண்படி மையீறு கெட்டு, அடி அகரம் ஐ ஆகி, சு-கெட்டுப் பை-எனநின்று வருமெழுத்துக்கு இனவெழுத்தாகிய ந்-மிக்கு, வருமொழியாகிய தொடி என்பதோடு புணர்ந்தது. பைந்தொடி யென்பது அண்மைவிளி யாதலின், உரு

பேற்காமல் இயல்பாயிற்று. போதுவாய் என்பதில், புகுது என்பது போது என்றாயிற்று; ஆய் ஏவலொருமை விகுதி. அன்றிப் போதா-பகுதி, ஆய்-விகுதி, போதா-வா எனப்பொருள். சிந்தை-சிந்தித்தலுக்குக் கருவியாகவுள்ளது; இதில், சிந்தி-பகுதி, ஐ-கருவிப் பொருள் விகுதி, பகுதி யிற்றிகரக்கேடு சந்தி. ஏதுவாக-என்பது ஏதுவாய் எனத்திரிந்து வந்தது. இங்கு ஏது-வேடனுடைய தூர்த்த எண்ணங்கள்.

வேடனுடைய கெட்ட குறிப்புணர்ந்த தமயந்தி கலங்குதல்.

299. வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போ லலமரா----ஓடினாள்
தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது.

(இ-ள்.) வேடன்-அவ்வேடுவன், அழைப்ப-அவ்வாறு கூப்பிட, சுரி குழல்-சுருண்ட கூந்தலையுடைய தமயந்தி, (அவனுடைய உள்ளத்தி லுண்டாகிய தீய குறிப்பை யுணர்ந்து, அந்தோ! இக்கொடியவன் என்செய்வானோ என்று பயந்து), விழிபதைத்து-கண்கள் துடிக்க, வெய்து உயிரா-வெப்பமாகப் பெருமூச்சுவிட்டு, ஆடல் மயில்போல்-ஆடுதலையுடைய ஒருமயிலைப்போல, அலமரா-சுழன்று, வேல்-வேலாயுதத்தை நிகர்த்த, கண்ணின் நீர்-கண்களிலிருந்து வடியும் ஜலமானது, ஆறெல்லாம் ஆக - வழியெல்லாம் சொரிவதாக, அழுது-அரற்றி, தூறெல்லாம்-சிறு செடிகளிலெல்லாம், ஓடினாள் - ஓடி மறைய முயன்றாள்; [எ-று.]

வேடனை, நல்லவனென்று கருதிப் புகழ்ந்த தமயந்தி, அவன் மேற்கூறியபடி தன்னை அழைத்தவுடனே, அவனுடைய கெட்ட எண்ணத்தை யுணர்ந்து, "அந்தோ! நாம் இவனை உத்தமனென்று நினைத்தோமே; இவனோ தூர்த்தனாயிருக்கின்றானே; இவன் செய்யும் தீமைக்குள்ளாவதைக் காட்டினும் பாம்பின் வாய்க்கு இரையாவது நன்றாகுமே; இவனுடைய குணம் தெரியாதிவனை உதவிக் கழைத்தது தவறாய் முடிந்ததே; எத்தகைய ஆபத்து நேர்ந்த காலத்திலும், தனிப்பட்ட ஒரு ஸ்திரீ ஓர் ஆடவனைத் துணைக்கோடல் தீங்காய் முடியுமென்பதை இப்பொழுது நாம் உணர்ந்து கொண்டோம்; இனி இவன் நம்மை என் செய்வானோ" என்று பயந்து கதறியழுது தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுச் சிறு செடிகள் நிறைந்த விடங்களில் ஓடினாள். ஆடுகின்ற மயில் வட்டமிட்டுச் சுழலும்; அதைப் போலத் தமயந்தியும் சுழன்றாளாதலின், 'ஆடல் மயில்போல் அலமரா' என்றார் ஆசிரியர். அவளுடைய கண்ணீர் அவள் ஓடிய வழி யெல்லாம் வடிந்தது; ஆதலின், புலவர், 'கண்ணீர் ஆறெலாமாக அழுது' என்றுங் கூறினார்.

பதைக்க வென்பது பதைத்து எனத்திரிந்து வந்தது. உயிரா, அலமரா என்பன-செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். அலமரல்-சுழலல்; இதில் அலமரு-பகுதி. தூறு-சிறுபற்றை, அதாவது சிறுசெடி. சுரிகுழல்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தமயந்தி வேடனைக் கோபித் தெரித்தல்.

300. தீக்கட் புலிதொடரச் செல்லுஞ் சிறுமான்போல்
ஆக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீறு விழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீறாய் விழுந்தா னிலத்து.

(இ-ள்.) (அவ்வாறு ஓடிய அத்தமயந்தி, வேடன் விடாமல் தொடர்ந்து தன்னைத் துரத்திக் கொண்டு வந்தபடியால்,) தீ-அக்கினியைப்போன்ற, கண்-கண்களையுடைய, புலி-புலியானது, தொடர-தன்னைப் பிடித்துக் கொல்லத் தொடர்ந்து வர, (அதற்குப் பயந்து) செல்லும்-ஓடுகின்ற, சிறுமான் போல் - சிறிய (அதாவது: இளமையான) மானைப்போல, ஆக்கை-தேகமானது, தளர-பயத்தினால் தளர்ச்சியடைய, அலமந்து-அங்கு மிங்கும் சுழன்று, போக்கற்று-பின்னர் செல்லுதல் முடியாமல், சீறு-சீறி, (அதாவது: வேடனைக் கோபித்து) விழித்தாள்-கண்களைத் திறந்து பார்த்தாள், அவ் வளவில்-அப்படிப் பார்த்த மாத்திரத்தில், சிலைவேடன்-வில்லைத்தரித்த அவ்வேடனானவன், நீறு ஆய்-எரிந்து சாம்பலாக வெந்து, நிலத்து-பூமியில், விழுந்தான்-அப்படியே வீழ்ந்து மடிந்தான்; [எ-று.]

வேடன் துஷ்டச் செய்கையை யுணர்ந்த தமயந்தி முதலில் அவன் கைக்கு அகப்படாமல் தவறி ஓடிவிட வேண்டுமென்று கருதிச் சிறு செடிகளுக்குள் ஓடினாள்; அவன் அவளைவிடாது தொடர்ந்து சென்றான்; அதன்மேல் தமயந்தி மிகவும் பயந்து புலிக்கஞ்சி யோடும் சிறு மானைப்போல விரைந்தோடி அங்கு மிங்குஞ் சுழன்றாள்; முடிவில் அவளுக்கு வேடன் தன்னைவிட மாட்டானென்பதும், தான் அவன் கையினின்றும் தவற முடியாதென்பதும் தோன்றின; அதனால் அவள் களைத்து ஓட முடியாமல் நின்றுவிட்டாள். அப்படி நின்ற சமயத்தில் அவள் மனத்தில், "நம்மிடத்தில் பதிவிரதா தர்மம் இருக்கும்போது நாம் ஏன் அஞ்சவேண்டும்; அது நம்மைக் காத்துக்கொள்ளும்; இவன் நம்மைத் தொட்டால் எரிந்து போவான்" என்று ஓர்தைரியம் பிறந்தது. அங்ஙனமாகவே அவள் வேடனைக் கோபித்துப் பார்த்தாள்; உடனே அவன் எரிந்து சாம்பராயினான். இத்தகைய மகிமை தன்னிடத்திலிருந்தும் அவள் ஏன் அஞ்சி ஓடினாளெனின், ஸ்திரீகளுக்கு இயற்கையாக ஏற்பட்ட

பேதமையாலும் அச்சத்தாலும் ஓடினளென்க. உலகத்தில் மனிதர்க்கு மிக்க ஆபத்து நெருங்கிய காலத்தில் துணிவு பிறப்பது இயற்கையாதலின் அவ்வாறு பயந்தோடிய தமயந்திக்குப் போக்கிடமற்றுப்போகவே வேடனை அழித்துவிடலாமென்ற துணிவு பிறந்தது; அத்துணிவினாலேயே பின்னர் அஞ்சாமல் அவள் கோபித்துப் பார்த்தாள்.

சிறுமான் என்பதில் சிறுமை இளமையை யுணர்த்தி நின்றது. அலமந்து என்பதில், அலமா-பகுதி; இது, நிகழ்கால எதிர் காலங்களில் அலமரு எனத் திரிந்துவரும்; அலமரு-பகுதியெனக் கொண்டால் இங்கு இறந்த காலப்புடை பெயர்ச்சி அமையாது. சீறு-செய்யாவென்னும் வாய் பாட்டு வினையெச்சம். போக்கு-தொழிற்பெயர்.

தமயந்தி முன்னிலைமையை யெண்ணி அழுதல்.

301. வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோற் றீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடிருந்து—பண்டையுள
வாழ்வெல்லாந் தானினைந்து மற்றழுதாள் மன்னிழைத்த
தாழ்வெல்லாந் தன்றலைமேற் றந்து.

[இ-ள்] (அவ்வாறு வேடன் எரிந்த பின்பு தமயந்தி சிறிது தூரஞ்சென்று) வள் தமிழ்-வளப்பம் பொருந்திய தமிழால், வாணர்-வாழ்கின்றவர்களாகிய வித்வான்களுக்கு, பிழைத்த-தவறுசெய்த, வான்-சிறந்த, குடிபோல்-வமிசத்தைப்போல, தீத்தழல்-அக்கினியின் வெப்பமானது, மீ-மேலே, மண்டு-நெருங்கி யிருக்கின்ற, கொடும்-கொடுமையாகிய, சுரத்து-பாலைவனத்திலே, ஓர் மாடு இருந்து-ஒரு பக்கத்தில் உட்கார்ந்து, பண்டை-முற்காலத்தில், உள-உள்ளனவாகிய, வாழ்வு எல்லாம்-வாழ்க்கைகளை யெல்லாம், நினைந்து-எண்ணியும், மன்-நளமகாராஜன், இழைத்த-செய்த, தாழ்வு எல்லாம்-குறைவுகளையெல்லாம், தன் தலைமேல்-தன் தலைவிதியின் மேல், தந்து-வைத்தும், (அதாவது: சேர்த்தும்) அழுதாள்-அழுபவளானாள், [எ-று.]

அவ்வாறு வேடன் எரிந்த பின்னர்த் தமயந்தி சிறிது தூரஞ் சென்று ஒரு பாலை வனத்தைச் சேர்ந்து ஓரிடத்தில் களைத்து உட்கார்ந்தாள். அவ்வாறு இருக்கும்போது அத் தருணம் அவள் அடைந்திருந்த பரிதாபகரமான நிலைமையும், முன்னிலைமையும் அவளுடைய மனதிற் றோன்றி மிகவும் வேதனையைச் செய்தன. அதனால் அவள், "அந்தோ! நாம் முன்னே எவ்வளவோ சௌக்கியத்தோடிருந்தோமே; அப்படி இருந்தும் நம்மன்னனுடைய சூதாட்டத்தால் தாழ்மையடைந்தோம்; மேலும் அவர் நம்மையும் வனத்தில் தனியே விட்டுப் பிரிந்து போயினர்; அதனால் இத்துன்பங்கள்

சேர்ந்தன; ஆயினும், மன்னன்மேற் றவறில்லை; நம் தலைவிதிப்படியே இவை நடந்தன; எனினும் திக்கற்றிருக்கும் நாம் இனி என் செய்வோம்" என்று கண் கலங்கி அழுதாள். வித்வான்களுக்கு அபசாரம் செய்த வமிசமானது தீமைக்குட் பட்டதாய்த் தீப்பற்றி யெரிந்த வீடுபோல் எப்பொழுதும் நசித்துப்போயிருக்கும்; பாலைவனமும் எப்பொழுதும் நீங்காத வெப்பமுடையதாய்ப் பாழடைந்திருக்கும்; ஆதலின், அவ்வமிசம் பாலை நிலத்துக்குவமை கூறப்பட்டது; இதனால் தமிழ் வித்வான்களுக்குத் தீங்கு செய்பவர் நிச்சயமாக அழிந்தே போவர் என்பதும், தமிழின் மகிமையும் உணரப்படும்; இங்கே வமிசமென்றது ஒருவனுடைய பரம்பரையில் வந்தவர்களை உணர்த்தும்; ஆகவே, தீங்கு செய்த ஒருவனும் அவன் வழி வந்தாரும் இதில அடங்குவர்.

தமிழுக்கு வளப்பமானது:- சொன்னயம், பொருணயம், தொடைநயம் முதலியனவாம். தமிழ்வாணர்-தமிழினால் வாழக்கூடியவர்கள்; அதாவது : தமிழ்க்கவிபாடி அதனால் கிடைக்கும் பரிசைப் பெற்று வாழ்பவர்கள்; வாழ்நர்-வாணர் என்றாயது; இதனை, "வாழ்நாள்" என்பது 'வாணாள்' என வந்ததுபோல வந்ததெனக் கொள்க; இனி, வாள்நர் வாணர் என்றாயது எனக்கோடலுமொன்று; இதற்குத், 'தமிழால் விளங்குவோர்' என்பது பொருளாம். வாள்-ஒளி; இதில், வாள்-பகுதி, நர்-உடைமைப் பொருளில் வந்த பலர்பால் விகுதி, சந்தியால் ளகர நகரங்கள் ணகரமாகி முன் ணகரம் கெட்டது; முதலில் உரைத்ததற்கும் இங்ஙனமே பகுதி விகுதிபிரித்து 'வாழ்வை யுடையார்' எனப் பொருள் கூறுக. இவையன்றி, வடநூலார் 'கீர்வாணர்' என்பதற்கு 'வாக்கைப் பாணமாகவுடையவர்' என்று பொருளுரைத்தது போல் 'தமிழ் வாணர்' என்பதற்கு 'தமிழைப்பாணமாக உடையவர்' எனவும் மற்றொரு பொருளுரைக்கலாம். கீர்-வாக்கை, வாணர்-பாணமாக வுடையவர்; புலவர் தமிழைப் பாணமாகவுடைத்தாயிருத்தலாவது: தமிழ்க் கவிகளைப் பாணம் போலப் பிரயோகித்துத் தம்மை அவமதிப்போரை வெல்வதாம்; வித்வான்களை அவமதித்தவர்களை அப்புலவர்களுடைய சொற்கள் பாணங்களைப் போன்று பாய்ந்தழிப்பது உலகப் பிரசித்தம்; இதனைப் பண்டைத் தமிழ்ப் புலவர் சரிதைகளால் நன்குணரலாம். வாணர்ப் பிழைத்த-நான்காம் வேற்றுமைத் தொகை. கெட்ட குடியை, 'வான்குடி' என்றது முன்னிருந்த நிலைமை நோக்கி யென்க. பண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகரம் ஐகாரச் சாரியை பெற்று, 'பண்டை' என வந்தது. வாழ்வு-போகங்களை யுணர்த்தி நின்றது. தான், மற்று-அசைகள். 'மன் இழைத்த தாழ்வெல்லாம் தன் தலைமேல் தந்து' என்பதற்கு, 'மன்னன் செய்து விட்டுப் போன தாழ்வுகளை யெல்லாம் தன்

தலைமேல் சுமந்து' எனவும் பொருள் கூறலாம்; அத்துன்பங்களை யெல்லாம் இவள் தாங்கிக் கொண்டிருந்த படியால் இதுவும் பொருந்தும். தமிழை, திரமிடமென்பர் வடநூலார். 'வாணர்ப் பிழைத்த' என்பதை இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'வாணரை விட்டு நீங்கிய' எனவும் பொருள் கூறலாம்; அவர்களை விட்டு நீங்குதலாவது தம்மை அண்டி வந்த வித்வான் களை ஆதரியாமல் கடின மொழி கூறித் துரத்தி விடுதலாம்.

வழியில் வந்த ஒரு வணிகன் தமயந்தியைக்
காணுதல்.

302. அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிகன்
இவ்வளவு தீவினையே னென்பாடன்—மெய்வடிவைக்
கண்டானை யுற்றான் கமலமயி லேயென்றான்
உண்டாய வெல்லா முணர்ந்து.

(இ-ள்) அவ்வளவில்-(தமயந்தி அவ்வாறு அழுதுகொண் டிருக்கும்) அத்தருணத்தில், ஆதி-முற்காலத்திலிருந்தே ஏற்பட்ட, பெருவழியில்-பெரியமார்க்கத்தில் சென்ற, ஆய்-ஆராயுந் தன்மை யுடையவனான, வணிகன்-செட்டி யொருவன், இவ்வளவு தீவினை யேன்-இவ்வளவு கெட்ட கர்மஞ்செய்தவளாயினேன் நான், என் பாள்-என்று சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்த அத்தமயந்தி யினது, மெய்வடிவை-தேகத்தின் உருவத்தை, கண்டான்-பார்த் தான், (அங்ஙனம் பார்த்து இவ்வளவு அழகமைந்த இவள் யாரோ? தெய்வமாதோ பூமடந்தையோ என்று) ஐயுற்றான்-சந்தேகித்தான்; (பின்னர் தெளிந்து) கமலம்-தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, மயிலே-மயில்போன்ற சாயலையுடைய இலக்குமியே, என்றான்-என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான், (பின்னர்) உண்டாய வெல்லாம்-அவளுக்குண்டானகாரியங்களை யெல்லாம், உணர்ந்து-தெரிந்து; [எ-று.]

தமயந்தி அவ்வாறு அழுது கொண்டிருக்கும்போது, அவ்வழி யில் வந்த ஒரு வணிகன், அவளைக்கண்டு அவளுடைய உருவத்தை நோக்கினான்; அப்போது அவனுக்கு 'இவ்வளவு அழகோடு கூடி யிருக்கும் இப்பெண் தெய்வமாதோ பூவுலக மங்கையோ' என்னும் ஐயம் நிகழ்ந்தது; பின்னர் இவள் இலக்குமிதேவியே என்ற ஓர் துணிவு பிறந்தது; எனினும் அவளுக்கு அச்சமயத்தில் உண்டாகி யிருந்த துன்பங்களை யெல்லாம் அவன் தன் ஆராய்ச்சியாலுணர் ந்து, "இவள் இலக்குமியன்று; அப்படியாயின், இவள் 'இவ் வளவு தீவினையேன்' என்று சொல்லிப் புலம்புக்கொண்டிருக்கக் காரணமில்லை; ஆதலின் இவள் மானிட மகளே" என்று துணிந்து

அவளுடைய தன்மைகளை விசாரித்துணரத் தொடங்கினான். அவ் விவரம் அடுத்த செய்யுளில் வரும். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்; ஆதலின், உணர்ந்து என்னும் வினையெச்சம் அடுத்த செய்யுளில், 'என்றான்' என்பதனோடு முடியும். குளகமாவது பல செய்யுட்கள் ஒரு முடிபாக வருவது; தனியே முடிவது முத்தக மெனப்படும். தமயந்தி மிக்க அழகுடையவளாயும், இராஜலட்சணம் பொருந்தியவளாயு மிருந்தும் 'இவ்வளவு தீவினையுடையவளா யினேன்' என்று புலம்பிக்கொண்டிருந்ததைப் பற்றி அவ்வணிகன், 'இவ்வளவு வடிவத்தோடு விளங்குகின்ற இவள் ஏன் இவ்வாறு சொல்லிப் புலம்புகின்றாள்' என்று சந்தேகப்பட்டான் எனினும் பொருந்தும்.

அளவு-மாத்திரை; அஃதிங்குக் காலத்தையுணர்த்திற்று. அவ் வணிகன் சென்றவழி பண்டைக்காலத்தி லிருந்தே ஏற்பட்டுப் பெரிய மார்க்கமாயிருந்தபடியால் அதனை 'ஆதிப்பெருவழி' என்றார் ஆசிரியர். தமயந்தியின் நிலைமைகளை அவ்வணிகன் எளி தில் உணர்ந்துகொள்ளக்கூடிய சூக்ஷுமபுத்தி யுடையவனா யிருந்த படியால் புலவர் அவனை, 'ஆய் வணிகன்' என்றார். தமயந்தியின் துன்பங்களுக்குக் காரணம் தீவினையே யாகுமாதலின், அதன் காரி யங்களாகிய துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த அவள் தன்னை, 'இவ்வளவு தீவினையேன்!' என்று சொல்லிக்கொண்டாள். 'உண்டாயவெல்லாம்' என்றது அவளுக்கப்போ தேற்பட்டிருந்த அழுகை, முகவாட்டம் முதலியவற்றை. ஆய்வணிகன்-வினைத் தொகை. ஐயம் என்பது ஈறு கெட்டு ஐ என நின்று வருமொழி யோடு புணர்ந்து, 'ஐயுற்றான்' என்றாயது.

வணிகன் தமயந்தியை நீ யாரென்று
வினவுதல்.

303. எக்குலத்தா யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம்—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து.

(இ-ள்.) கார் வண்டு-கரியவண்டுகள், காந்தாரம்-இசையை, விட்டு - வாயிலிருந்து வெளிப்படுத்தி, உரைக்கும்-சொல்லுகின்ற (அதாவது: பாடுகின்ற), தார்-மாலையை அணிந்த, வணிகர் வேந்து-செட்டிகளுக்குத் தலைவனாகிய அவன், (மேற்கூறியபடி உணர்ந்து, தமயந்தியின் வரவலாற்றை விசாரிக்கத் தொடங்கி அவளை நோக்கி) மை - மேகத்தை நிகர்த்த, குழலாய் - கூந்தலையுடையவளே!, நீ—, எக்குலத்தாய்-எந்த வமிசத்தில் உதித்தவள்?, யார் மடந்தை-எவ

ருடைய புத்திரி?, உன் ஊர் யாது-உன்னுடைய ஊர் எது?, உன் பேர் யாது-உன்னுடைய பெயர் என்ன?, நெக்கு-நெகிழ்ந்து, உருகி-மனங்கரைந்து, அழுதற்கு-நீ அழுவதற்கு, நிமித்தம் என்-காரணம் யாது?, கட்டு-மெய்யானவற்றை, (அதாவது: உனக்கு நேர்ந்த உண்மையான விஷயங்களை) உரைத்து-சொல்லி, காண்-(பிறகு என்னாலுண்டாகும் நன்மையை நீ) தெரிந்து கொள், என்றான்-என்று கூறினான். [எ-று.]

மேற்கூறியபடி தமயந்தியின் வரலாற்றை விசாரிக்கத் தொடங்கிய அவ்வணிகன், அவளிடத்தில் அவளுடைய குலம், ஊர், பெயர் முதலியவற்றை விசாரித்தான். தமயந்தியின் உருவமானது அவள் எவ்விதத் துன்பத்தையும் அடையக் கூடாதவளென்பதை விளக்கிக் கொண்டிருந்தது; அதனால் அவனுக்கு, இப்பேர்ப்பட்டவளுக்கும் ஏன் இந்தத் துன்பம் நிகழ்ந்தது என்னும் வியப்புண்டாயிற்று; அது பற்றியே அவன் "நெக்குருகி நீயழுதற்கென்னிமித்தம்" என்று அவளிடம் வினவினான். இன்னும் அவ்வணிகனுக்கு அவளுடைய வரலாற்றை விசாரித்து அவளுக் கேற்பட்ட துன்பங்களை நீக்கித் தன்னாலியன்ற உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று; அதனாலேயே அவன், தமயந்தி உண்மையைக் கூறினால் தன்னாலியன்ற உதவியை அவளுக்கு நிச்சயமாகச் செய்யக் கூடுமென்பது தோன்ற, "கட்டுரைத்துக் காண்" என்றான்; "உரைத்துக் காண்" என்றதனால் அவன் தன்னுடைய உபகார குணத்தை விளக்கினான். ஒருவர் உண்மையைக் கூறினால் மாத்திரமே மற்றொருவர் அவர்க்கு உதவி செய்ய ஏதுவா மாதலின் அவன், 'நீ உண்மை கூறி அதன் பயனைப்பார்' என அவளிடம் சொன்னான்.

'மைக்குழல்' என்பதற்குக் 'கரிய கூந்தல்' எனினுமாம். கட்டு உறுதி; அஃதிங்கே மெய்யை உணர்த்தி நின்றது; அஃதாகு பெயராய் மெய்யான விஷயங்களின் மேனின்றது; 'உரைத்துக் காண்' என்பதற்குச் 'சொல்வாய்' எனப் பொருள் எழுதி அதிலுள்ள 'காண்' என்பதை அசை யென்பாருமுளர்; 'காண்' என்பதை அசையாகத் தள்ளிவிடும்போது 'உரைத்து' என்பது மட்டுமே நிற்கும்; அங்ஙனம் நிற்பது வினையெச்ச மாகுமேயன்றி ஏவலாகாது; இவ்விரண்டுமே சேர்ந்து ஏவற்பொருளை யுணர்த்தி நின்றனவெனக் கொள்ளலாமெனிலோ இத்தகைய வாக்கியங்களில் அசை நீங்கினும் நின்ற வாக்கியம் குறித்த பொருளை யுணர்த்தல் வேண்டும்; எங்ஙனமெனில், 'எவன் கொல்' என்ற சொற்கள் சேர்ந்து நிற்கும்போது கொல்-அசையாகத் தள்ளப்பட்டு எவன் என்பது மட்டும் தனித்து நிற்கும் போதும் இத்தொடர் வினாப்பொருளையே

தந்து நிற்றல்போல. 'உரைத்துக் காண்' என்பது அங்ஙனமாகாமை யின் அவ்வுரை பொருந்தா தென்க; இனி, இங்ஙனம் பொருள் கொள்ள வேண்டுமாயின், 'உரைத்திகாண்' என்றிருத்தல் வேண் டும்; அங்ஙனமிருப்பின் 'காண்' அசையாகும்போது 'உரைத்தி' ஏவலாகிவிடும். ஆனால், புலவர் இவ்வாறேதான் அமைத்திருத்தல் கூடும். பிற்காலத்தில் எழுதுவோர் பிழையால் சுவடிகளில் 'உரைத் துக் காண்' என மாறுபட்டிருத்தல் கூடும்; இந்த மாறுதலை வைத் துக்கொண்டே உரையாசிரியர்கள் மூலத்தைத் திருத்தாமல் இதற் குப் பற்பல விதங்களாக உரைகளை வரைந்திருக்கின்றனர். நாமும் அவற்றுள் ஒருவகையைப் பின்பற்றியே உரை வரைந்திருக்கின் றோம்; எனினும், 'உரைத்தி காண்' என்பதே உண்மைப் பாடமா யிருத்தல் வேண்டுமென்பதே எமது துணிபு. குழலாய்-விளி; (நன்-பெய. 51) ஆம் சூத்திர விதிபற்றி ஈற்றில் வரும் ள்-ய்-ஆயிற்று; தனிக் குறிலணையாதயகரம், யகரம் வருமொழியாகவரக்கெடுமாதலின், எக் குலத்தாய் யார் என்பன யகரங் கெட்டு 'எக்குலத்தாயார்' எனப் புணர்ந்து நின்றன.

தமயந்தி வணிகனிடம் தன் வரலாறு
கூறுதல்.

304. முன்னை வினையின் வலியால் முடிமன்னன்
என்னைப் பிரிய விருங்கானில்—அன்னவனைக்
காணா தழுகின்றே னென்றாள் கதிரிமைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து.

[இ-ள்.] (அவ்வணிகன் அவ்வாறு வினவியவுடன்) கதிர்-கிர ணங்கள், இமைக்கும்-பிரகாசியாநின்ற, பூண் ஆபரணமாகிய, ஆரம்-முத்துமாலையை, பூண்டாள்-அணிந்தவளாகிய தமயந்தி, புலர்ந்து-வாடி, (அவ்வணிகனை நோக்கி) முன்னை-முந்தின ஜென்மத்திலேற் பட்ட, வினையின்-கெட்ட கர்மத்தின், வலியால்-வல்லமையினாலே, முடி-கிரீடத்தைத் தரித்த, மன்னன்-அரசனாகிய என் நாயகன், இரும்-பெரிய, கானில்-இக்காட்டினிடத்தே, என்னைப்பிரிய-என்னை விட்டு நீங்க, (நான்) அன்னவனை-அப்பேர்ப்பட்ட நாயகனை, காணாது-காணாமல், அழுகின்றேன்-தனியே பிரிந்து அழுது புலம்புகின் கின்றேன், என்றாள்-என்று தமயந்தி கூறினாள்; [எ-று.]

வணிகன் அவ்வாறு வினவியவுடன் தமயந்தி, 'நான் முன் ஜன் மத்தில் செய்த தீவினையால் எனது நாதனாகிய மன்னன் இக்காட் டில் என்னை விட்டுப் பிரிய, அவனைக் காணாமல் அழுகின்றேன்' என்று கூறினாள். இவள் வணிகன் வினாவிற்குத்தக, தான் இன் னான் மனைவி, அல்லது இன்னான் மகள், அல்லது இன்னவூர் என்பன

முதலிய விவரங்களைக் குறிப்பாலுணர்த்தினாள்; அவற்றை ஆசிரியர் இங்குச் சுருக்கிக் கூறினார். "கதிரிமைக்கும் பூணாரம் பூண்டாள்" என்றது தமயந்தியின் முன்னிலைமை குறித்தென்க. பூணாரம் என்பதற்கு அணியத்தக்க மாலை எனப் பொருள் கூறினும் அமையும். "பூணார் முலையாள்" என்றும் பாடபேத முண்டு.

பிரிய, காணாது என்பன வினையெச்சங்கள். அழுகின்றேன்-நிகழ்காலத்தன்மை ஒருமை வினைமுற்று. இமைக்கும்-பெயரெச்சம். பூண்டாள் என்பது எழுவாயாகவும், என்றாள் என்பது பயனிலையாகவும் முடியும்.

வணிகன் தமயந்தியைச் சேதி நகரில்
சேர்ந்துச் செல்லுதல்.

305. சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான்—நீதி
கிடத்துவான் மன்னவர்தங் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து.

[இ-ள்.] (தமயந்தி கூறியவற்றை யெல்லாம் கேட்ட பின்பு அவள்மீது இரக்கமுற்றுச் சேதிநகரத் தரசனது மனைவியை அவளுக்குச் சிற்றன்னை என்பதை யுணர்ந்து அந்நகர், தான் செல்லும் வழியிலிருந்ததால் அங்கே அவளைச் சேர்த்துவிட்டால் எவ்வகையிலாயினும் அவளுக்குத் துணை ஏற்படுமென்று துணிந்து) அப்போதில்-அந்தக் காலத்தில், பார்மேல் - இப்பூமியின்மேல், நீதிகிடத்துவான்-நீதியை நிலைக்கச் செய்பவனும், மன்னவர்தம்-அரசர்களுடைய, கீர்த்தியினை-புகழை, நடத்துவான்-செல்லச்செய்பவனும், (ஆகிய) கொடை -யாசிப்பவர்களுக்குப் பொருளைக் கொடுத்தலென்னும் ஈகைத்தன்மையுள்ள,வணிகன்-அந்தச்செட்டி, திருவை-இலக்குமியை நிகர்த்த தமயந்தியை, சேதிநகர்க்கு-சேதி தேசத்தைச் சார்ந்த பட்டணத்தில், செலவிட்டு-போகச் செய்து, (அதாவது: அங்கே அழைத்துக் கொண்டு போய்விட்டு) வட்டை-மேலே தான் செல்லும் வழியில், நடந்துபோயினான்-தான் போக வேண்டிய ஊருக்கு நடந்து சென்றான்; [எ-று.]

தமயந்தியைச் சேதி நகரத்தில் சேர்த்தால் அவளுக்குத் தேறுதல் உண்டாகுமென்று வணிகன் உணர்ந்தபடியால் இவ்வாறு செய்தான்; அல்லது மேற்கூறிய விஷயங்களை உணராமலே இவளை எங்கேனும் ஒரு நகரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் இவள் நீங்கின்றிப் பிழைத்துப் போவாள் என்னும் எண்ணம் அவனுக்கு உதித்தமையால் அவன் தான் செல்லும் மார்க்கத்திலிருந்த சேதி

நகரத்தில் அவளைச் சேர்த்துச் சென்றான் எனினும் அமையும். "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம்போற் செயின்" என்னும் நீதிப்படி இவ்வணிகன் சத்தியத்தோடு வியாபாரஞ் செய்பவனாதலின் இவனை "நீதி கிடத்துவான்" என்றும், இவன் பற்பல தேசங்களிலும் சென்று வியாபாரஞ் செய்பவனாதலின் இவனைப் பல நாட்டினரும் இன்ன அரசனுடைய நகரத்திலுள்ளவன் என்று கொண்டாடுவதன் மூலம் இவன் குடியிருக்கும் நகரத் தரசனது புகழ் எங்கும் வியாபிப்பதனால் இவனை "மன்னவர் தங்கீர்த்தியினை நடத்துவான்" என்றுங் கூறினார் ஆசிரியர்; நல்ல வணிகர் நாட்டிலிருப்பது அந்நாட் டரசர்க்குச் சிறப்பென்ப.

வட்டை யென்பது வாட்டை யெனவும், பாட்டை யெனவும் இக்காலத்தில் வழங்குகிறது. நகரில் என்பது நகர்க்கு என வந்தது உருபு மயக்கம். ஏ-அசை; பிரிநிலை என்பினுமாம்; திரு-தமயந்திக்கு உவமையாகு பெயர்.

இவ்வாறு வணிகன் தமயந்தியைச் சேதி நகரில் சேர்த்துப் போயின பின்பு அவள் அந்நகரத் தெருக்களின் வழியாகப் போய்க் கொண்டிருந்தாள்.

சேதி மன்னனுடைய மனைவியின் பணிப் பெண்கள்
தமயந்தியைக் கண்டு போய் அவளிடங்
கூறுதல்.

306. அற்ற துகிலு மறாதொழுகு கண்ணீரும்
உற்ற துயரு முடையளாய்—மற்றொருத்தி
நின்றாளைக் கண்டோம் நிலவேந்தன் பொற்றேவீ
என்றார் மடவா ரெடுத்து.

(இ-ள்) (அவ்வாறுசென்ற தமயந்தியைச் சேதி ராஜன் மனைவியினுடைய பணிப்பெண்கள் பார்த்து உடனே தங்கள் அரசியிடஞ் சென்று) மடவார்-அந்தப் பெண்கள், எடுத்து-குரலை யுயர்த்தி, நிலவேந்தன்-இப்பூமியை ஆளுகின்ற அரசனுடைய, பொன் தேவி-இலக்குமியை நிகர்த்த மனையாளே!, அற்ற துகிலும்-பாதி அறுபட்ட ஆடையும், அறாது-நீங்காமல், ஒழுகு-வடிகின்ற, கண்ணீரும்—, உற்ற-மிகுதியாகிய, துயரும்-துன்பமும், உடையளாய், நின்றாள்-நின்றவளாகிய, ஒருத்தியை-ஒரு பெண்ணை, கண்டோம்-இந்நகரத் தெருக்களில் பார்த்தோம், என்றார்-என்று கூறினார்கள்; [எ-று.]

இப்பெண்கள் இவ்வாறு தெரிவித்ததனால் "அப்பெண்ணோ மிகப் பரிதாப நிலைமையி லிருக்கின்றாள்; ஆதலின் அவளை ஆதரித்

தால் மிக்க புண்ணிய முண்டாகும்'' என்பதை அரசன் தேவிக்குக் குறிப்பாக உணர்த்தினார்கள்.

அற்ற, ஒழுகு, உற்ற என்பன பெயரெச்சங்கள். அறாது வினையெச்சம் 'ஒருத்தி நின்றாளை' என்பதை 'நின்றாள் ஒருத்தியை' என மாற்றுக. நின்றாள்-வினையாலணையும் பெயர். என்றார்-சொல்லெச்சம்.

சேதி ராஜன் மனைவி, தமயந்தியை அழைத்து
வருமாறு ஒரு பெண்ணை
அனுப்புதல்.

307. போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலை
ஆய மயிலை அறியவே—நீயேகிக்
கொண்டுவா வென்றாடன் கோவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில்.

[இ-ள்.] (அப்பெண்கள் அவ்வாறு கூறியதைக் கேட்டவுடனே அவர்களுள் ஒருத்தியை நோக்கி) வண்டு-வண்டுகள், வாழ்-வாழ்கின்ற, கூந்தல்-குழலையுடைய, மயில்-மயிலை நிகர்த்தவளாகிய சேதிராஜன் மனைவி, தன்-தன்னுடைய, கொவ்வைக்கனி-கோவைப் பழத்தை நிகர்த்தவாயை, திறந்து-, புனை-அலங்காரமாகச் செய்யப்பட்ட, இழையாய்-ஆபரணங்களை அணிந்தவளே, போய்-விரைந்து சென்று, (அவள்) அகலா முன்னம்-இந்நகரத்தைவிட்டு நீங்காததற்கு முன்னே, பூங்குயிலை-அழகிய குயில் போன்ற அப்பெண்ணை, ஆய-இவ்வுலகத்தில் அவதரித்த, மயிலை-மயில்போன்ற சாயலையுடைய அம்மடந்தையை, அறிய நான் பார்த்தறிந்து கொள்ளும் பொருட்டு, நீஏகி-நீ போய், கொண்டுவா-அழைத்துக் கொண்டுவா, என்றாள்; [எ-று.]

பணிப் பெண்கள் கூறிய மாத்திரத்தில் அவர்களால் கூறப்பட்ட தமயந்தி மிகுந்த துயர்க்குட் பட்டவளாயும், அதனால் ஒரு நிலைக் கொள்ளாமல் விரைந்து எங்கேனும் சென்று விடக்கூடியவளாயும் சேதிராஜன் மனைவியினுடைய மனதில் விளங்கினாள். அதனால் உடனே அத்தமயந்தியை அழைத்துவந்து அவளுக்கு துணை செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவ்வரசியின் மனத்தில் உதித்தது. அதனாலேயே அவள் அப்பெண்ணை விரைவில் அழைத்துவா என்று தன் பணிப் பெண்ணுக்குக் கூறினாள்.

குயில், மயில் என்பன தமயந்திக்கு உவமையாகு பெயர். கொவ்வைக் கனி-வாய்க்கு உவமையாகு பெயர். கூந்தலில் வண்டுகள் வாழ்தல், அதிலுள்ள மலர்த்தேனை உண்ணும் பொருட்டுச்

சேர்வதால் நேருமென்க. 'ஆயமயிலே' என்பதை 'ஆய் அம்மயிலே' எனவும் பிரிக்கலாம். அங்ஙனம் பிரிக்குமிடத்து 'ஆராயக்கூடிய அந்த மயிலே' எனப் பொருள் விரிக்க வேண்டும். இவ்வாறு அரசி கட்டளையிட்ட மாத்திரத்தில் அப்பெண் சென்று தமயந்தியை அழைத்து வந்து அவள் சமுகத்தில் விட்டாள்.

சேதி அரசி தமயந்தியைக் கண்டு அவளிடம்
அவளுடைய வரலாற்றை
வினவுதல்.

308. அந்தா மரையி லவளேயேன் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதால்—பைந்தொடியே
உள்ளவா றெல்லா முரையென்று ளொண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு.

[இ-ள்] (அவ்வாறு பணிப்பெண் தமயந்தியை அழைத்துவந்த போது) ஒள் மலரின்-பிரகாசம் பொருந்திய புஷ்பங்களின், கள்ள-தேனையுடையதாகிய, வார்-நீட்சிபெற்ற, கூந்தலாள்-கூந்தலையுடைய சேதியரசி, கண்டு-அவளைப்பார்த்து, அம்-அழகிய, தாமரையிலவளே என்று-தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியே என்று, ஐயுற்று-சந்தேகங்கொண்டு, (இத்தகைய இவளுக்கு ஏன் இத்துன்பம் வந்ததென்று வருந்தி) பைந்தொடியே-பசுமையாகிய வளையல்களை யணிந்த பெண்ணே!, (உன்னுடைய நிலைமையைப் பார்த்ததும் எனக்கு மிக்க கவலை யுண்டாகிறது; உன் வரலாற்றை விசாரித்து விரைவில் உனக்குதவி செய்யாவிடில் இப்போ தேற்பட்டிருக்கும்), சிந்தாகுலம்-மனக்கவலையானது, எனக்குத் தீராது - எனக்குத்தீர மாட்டாது (ஆகையினாலே), உள்ளவாறு-உள்ளபடியே, (அதாவது: நடந்தவிதமாகவே மெய்யாக) எல்லாம்-உனக்கு நேர்ந்தவற்றை யெல்லாம், உரை என்றாள்-சொல்வாயாக வென்று கூறினாள்; [எ-று]

தமயந்தியைப் பார்த்தவுடனே அவளுடைய தோற்றத்தால் சேதி ராஜன் மனைவி, முதலில் அவளை இலக்குமியே என்று சந்தேகங்கொண்டாள்; பின்னர் அவளுக்கு, 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்பதற் கிணங்கப் பொதுவாக, 'இத்தகைய இப்பெண் மணிக்கு ஏன் இத்துயர முண்டாயிற்று,' என்று அவள் விஷயத்தில் இரக்க முண்டாயிற்று; அதனால் அவள் தமயந்தியினுடைய வரலாற்றை விசாரித்து விரைவில் அவளுக்குதவி செய்யவேண்டுமென்று நினைத்தாள். அது பற்றியே அவ்வரசி, 'சிந்தாகுலமெனக் குத் தீராது, உள்ளவாறெல்லா முரை' என்றாள். இனிச் சேதியரசிக்குத் தமயந்தியைப் பார்த்தவுடன் மனக்கவலை ஏற்பட்டது உதிர சம்பந்தத்தால் உண்டானதெனினும் அமையும். உதிரக்

கலப்புடையவர்கள் ஒருவரை யொருவர் அறியாதிருக்குங் காலத்திலும் அவர்க்குள் ஒருவர்மீ தொருவர்க்குத் தானே பாசமுண்டாவது உலக இயற்கை.

சிந்தா ஆகுலம்-சிந்தாகுலம்; இது வடமொழிப் புணர்ச்சியாகிய தீர்க்க சந்தியெனப்படும். ஆல்-அசை. பைந்தொடி-பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. எல்லாம் என்பதில் தமயந்தியின் வரலாறும், துயரம் முதலானவைகளும் அடங்கும். கள்ளவார்-தேனை உடையதாகியவார். கள்ளது என்பது துவ்விகுதி குறைந்து நின்றது.

தமயந்தி சேதி யரசியிடம் தன் வரலாறு கூறல்.

309. என்னைத் தனிவனத்திட் டெங்கோன் பிரிந்தேக
அன்னவனைக் காணா தலமருவேன்—இந்நகர்க்கே
வந்தே னிதுவேன் வரவென்றாள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறிச் சேர்ந்து.

[இ-ள்.] (அவள் அவ்வாறு வினவியவுடனே தமயந்தி அவளை நோக்கி) வாய்புலரா-வாயுலர்ந்து, செந்தேன்-சிவந்த தேன்போன்ற, மொழிபதறி-சொல் தடுமாறி, சேர்ந்து-அவ்வரசியின் முன் அடைந்து, (அதாவது: முன்னே நின்று) என்னை-என்றனை, தனி-தனியாய, வனத்து-காட்டில், இட்டு-தூங்குங் காலத்தில் படுக்க வைத்துவிட்டு, எம்கோன்-எம்முடைய தலைவன், பிரிந்து ஏக-நீங்கிச் செல்ல, அன்னவனை-அத்தகைய நாயகனை, காணாது-காணாமல், அலமருவேன்-வருந்தித்தேடி அங்கு மிங்குஞ் சுற்றுபவளாகி, இந்நகர்க்கு-இந்தப் பட்டணத்துக்கு, வந்தேன்-நான் வந்து சேர்ந்தேன், இதுஎன் வரவு-இது என் வரலாறாகும், என்றாள்-என்று கூறினாள்; [எ-று.]

அவ்வரசி அன்புடன் வினவியும் தமயந்திக்கு அவள் சிற்றன்னை யாதலின் அவளிடத்தே தன் தாய் தந்தையர் கணவன் முதலியவர்களை உரைக்க நாணி அத்தமயந்தி அவர்களைக் கூறாது தனக்குத் துன்பமுண்டான காரணத்தை மட்டும் ஒருவாறு சுருக்கிக் கூறினாள். உலகத்தாரில் மிகுந்த தாழ்மைக்குள்ளானவர்கள், தங்களுடைய இனத்தாரிடத்தில் தங்களை இன்னாரென்று காட்டிக் கொள்ள நாணுவது இயற்கை ஆதலின், தமயந்தியும் இங்குச் சேதியரசி தனக்குச் சிற்றன்னையா யிருந்தும் அவளிடத்தும், வறுமையடைந்த தன்னை இன்னவளெனக் காட்டிக் கொள்வதற்கு வெட்கினாள்.

நளன் தனக்கும் நிடத நாட்டிலுள்ள மற்றையர்க்கும் தலைவனாதலின் தன்னையும் மற்றவர்களையும், சேர்த்துப் பன்மையாக, 'எங்கோன்' என்று அவனைக் கூறினாள் தமயந்தி. இடுதல்-வைத்தல், போடுதல்; நளன் தமயந்தியைத் தூங்கப்போட்டுவிட்டுச் சென்றானதலின், அதற்கேற்ப அவள், "என்னைத்தனிவனத்திட்டு" என்றாள். அலமருவேன்-முற்றெச்சம். நகர்க்கே என்பதில் ஏ-அசை. வரவு-தொழிற்பெயர். புலரா, பதறா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்; இவை சினைவினைகள்; என்றாள் என்னும் முதல் வினையோடு முடிந்தன; (நன்-வினை 26.) ஆம் சூத்திரம் பார்க்க. சேர்ந்து-செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

சேதியரசி, தமயந்தியைத் தன்னுடன் இருக்கும்படி வேண்டல்.

310. உன்றலைவன் றன்னை யொருவகையா னாடியே
தந்து விடுமளவுந் தாழ்குழலாய்—என்றனுடன்
இங்கே இருக்க வினிதென்றா ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து.

(இ-ள்..) (தமயந்தி கூறியதைக் கேட்டு) கொங்கு-வாசனையானது, ஏயும்-பொருந்தி யிருக்கின்ற, தாராள்-மாலையை அணிந்தவளாகிய சேதியரசி, ஏந்திழையை-தாங்கப்படும் ஆபரணங்களையணிந்தவளாகிய தமயந்தியை, (அதாவது: அவளுடைய நிலைமைகளை) குறித்து-மனத்தி லெண்ணி, (அவளைத் தன்னிடத்திலேயே வைத்துக் கொள்ள நினைத்து அவள் முகத்தை நோக்கி) தாழ்குழலாய்-தொங்குகின்ற கூந்தலையுடையவளே!, உன்-உன்னுடைய, தலைவன் தன்னை-நாதனை, ஒருவகையால்-ஏதாவதோர் விதத்தினால், நாடி-தேடி, தந்துவிடும் அளவும்-(நானும் உன்னைச்சார்ந்தவர்களும் உன்னிடம்) சேர்ப்பிக்கும் வரையிலும், இங்கே-இந்நகரத்திலேயே, என்றனுடன் - என்னுடனே, இனிது - இனிமையாக, இருக்க - இருக்கக் கடவாய், என்றாள்-என்றுரைத்தாள்; [எ-று.]

தமயந்தியின் வார்த்தைகளைக் கேட்டவுடனே சேதியரசி, அவளுடைய நிலைமையை நன்றாக ஆலோசித்து, "இவளை நாம் இங்கேயே வைத்துக் கொண்டு, தூதுவரைப் பற்பலவிடங்களுக்கும் அனுப்பி இவளுடைய நாயகனைத் தேடி அழைத்து வரும்படி செய்து இவளிடத்தே சேர்ப்பிக்கலாம்; இன்னும் இவளைச் சார்ந்தவர்களும் அவனைத் தேடிக்கண்டு அழைத்துவரக்கூடும்; எவ்வகையினாலாவது இவளுடைய நாயகன் அகப்பட்ட பின்னர் இவ

ளைத் தன் சொந்த நகர்க்குச் செல்லுமாறு அனுப்பலாம்'' என்று கருதினாள். அதனாலேயே "உன்றலைவன் றன்னை யொருவகையால் நாடியே தந்து விடுமளவுந் தாழ்குழலாய், என்றனுடன் இங்கே யிருக்க வினிது'' என்றாள். 'நாடித்தந்து விடுமளவும்' என்றதில் நளனைச் சேதியரசி தூதுவரால் தேடுவிப்பதும், தமயந்தியைச் சார்ந்தோர் தேடி யழைத்து வருதலும் அமையும்; சேதியரசி இவ்வாறு கூறியதற் கிசைந்து தமயந்தி அவ்விடத்தி லிருந்தாள்.

நாடியே என்பதில், ஏ-அசை. தாழ்குழல்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனிது-குறிப்புமுற்று; இஃதிங்கே வினையெச்சமாகி வினையுரியாய் நின்றது. ஏந்திழை-வினைத்தொகைப் புறத்ததாகிய அன்மொழித் தொகை.

தமயந்தியையும் நளனையும் தேடிக்காணுமாறு
வீமனால் அனுப்பப்பட்ட ஓர் அந்தணன் சேதிநகரில்
வந்து தமயந்தியைக் காணுதல்.

311. ஓடும் புரவித்தேர் வெய்யோ னொளிசென்று
நாடு மிடமெல்லா நாடிப்போய்க்—கூடினான்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாஞ்
சேதித் திருநாடு சென்று.

(இ-ள்) (மேற்கூறியபடி தமயந்தி சேதி நகரத்திலிருக்கும் போது அவளுடைய குழந்தைகளை அழைத்துச் சென்ற வேதியனால், நளன், தமயந்தி ஆகியவர்களுடைய நிலைமையை யறிந்த வீமராஜன் அவர்களைத் தேடும் பொருட்டனுப்பிய ஒரு பிராமணன்) ஓடும்-விரைந்து செல்கின்ற, புரவி-குதிரைகள் பூட்டிய, தேர்-தேரையுடைய, வெய்யோன்-சூரியனது, ஒளி-பிரகாசமானது, சென்று-போய், நாடும்-விரும்புகின்ற, (அதாவது: சூரியன் ஒளி சென்று வியாபிக்கின்ற) இடம் எல்லாம்-இடங்களி லெல்லாம், நாடிப்போய்-தேடிச் சென்று, போதில்-தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, திரு-இலக்குமியானவள், நாடும்-எப்பொழுதும் குடியிருக்க எண்ணும், பொய்கை - தடாகங்களையுடைய, திருநாடாம்-அழகிய தேசமாகிய, திரு-செல்வம் பொருந்திய, சேதி நாடு-சேதி நாட்டில், சென்று-போய், கூடினான்-சேர்ந்தான்; [எ-று.]

தமயந்தியின் குழந்தைகளை அழைத்துச் சென்ற வேதியனால், வீமராஜன் நளன், தமயந்தி ஆகியவர்களுடைய பரிதாப நிலைமையை உணர்ந்து உடனே சென்று அவர்களைத் தேடி அழைத்துவரும்படி சில மனிதர்களைப் பற்பல விடங்களுக்கும் அனுப்பி இருந்தான்; அம்மனிதருள் ஒருவனாகிய வேதியன், தமயந்தி மேற்கூறிய

படி சேதி நகரத்திற் சேர்ந்திருக்கும்போது பற்பல விடங்களிலும் சென்று தேடி முடிவாகச் சேதிநாட்டில் வந்து சேர்ந்தான். நாட்டில் சேர்ந்தான் என்றதனால் நகரத்திலும் புகுந்து அரண்மனையிற் பிரவேசித்துத் தமயந்தி இருக்குமிடத்தைச் சார்ந்தான் என்பது பெறும்.

பிராமணன் என்பது தோன்றா எழுவாயாக வருவித்துரைக்கப் பட்டது; அது அடுத்த செய்யுளில், 'அருமறையோன்' என வருவதால் கொள்ளப்படும். 'வெய்யோன் ஒளி சென்று நாடுமிடமெல்லாம்' என்றதனால் அவன் பூமி முழுவதும் தேடினான் என்பது பெறப்படும்.

தேடி வந்த வேதியன், தமயந்தியைக் கண்டு
வருந்துதலும், தமயந்தி வருந்துதலும்.

312. தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றாளை
ஆமென் றறியா வருமறையோன்—வீமன்
கொடிமேல் விழுந்தழுதான் கொம்புமவன் செம்பொன்
அடிமேல் விழுந்தாள் அழுது.

(இ-ள்.) (அவ்வாறு சேதி நகரத் தரண்மனையிற் சேர்ந்தபின்) அருமறையோன்-அருமையான வேதத்திற் குரியவனாகிய அந்தப் பிராமணன், நின்றாளை-அங்கு நின்றவளாகிய தமயந்தியை, தாமஞ்சேர் ஓதி-மாலைசேர்ந்த கூந்தலையுடைய, தமயந்தி ஆம் என்று-தமயந்தியே ஆவள் என்று, அறியா-அறிந்து, வீமன்-வீமராஜனது, கொடிமேல்-பூங்கொடி போன்ற பெண்ணாகிய அத்தமயந்தியின் முன்னே, விழுந்து அழுதான்-வீழ்ந்து புலம்பினான், கொம்பும்-பூங்கொம்புபோன்ற தமயந்தியும், அழுது-அழுதுகொண்டு, அவன்-அப்பிராமணனுடைய, செம்பொன் அடிமேல்-சிவந்த பொன் போன்ற பாதங்களின் முன்னே, விழுந்தாள்-வீழ்ந்தாள்; [எ-று.]

அந்தப் பிராமணன், தன்னை யாதரித்து வரும் வீமராஜன் குடும்பத்தின் மீது மிக்க விசுவாசமுடையவனாதலின், தமயந்தியைப் பார்த்த மாத்திரத்தில் அவளுடைய பரிதாப நிலைமை குறித்து அவ்வாறு வீழ்ந்தழுதான்; தமயந்தியும், தன்மீது அவன் விசுவாசமுடைய பிராமணனென்பதையும், தன் தந்தையிடமிருப்பவனென்பதையும் அறிந்தாளாதலின் அவனுக்கு முன்னே தன் குறையை வெளிப்படுத்துதற் கறிகுறியாக அங்ஙனம் வீழ்ந்து புலம்பினாள்; துக்கத்துக்குள்ளாகி யிருக்கும் ஒருவர், தமக்குரியாரைக் கண்டவுடன் அத்துயரத்தை வெளிப்படுத்தி யழுதல் உலக வியற்கை. தமயந்தி தன் வடிவம் வேறு பட்டிருந்தாலும், பிராம